**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 19-10-2013 Issued : 19-10-2013

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள் செயலக வெளியீடு

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES OFFICIAL REPORT

**புதன்கிழமை, மார்ச் 27, 2013—தொகுதி 40—எண் 1**

**Wednesday the 27th March, 2013—Volume 40—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

11-164

**27–3–2013**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் v-x

Governor and Council of Ministers xi-xv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xvii-xx

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxi-xxxi

**1. வினாக்கள்–விடைகள்—** 1-48

உடுக்குறியிட்ட வினாக்கள்

**2. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

இலங்கை அரசின் தமிழின அழிப்பினைக் கண்டித்து, சர்வதேச பொது விசாரணை கோரியும் மத்திய அரசின் நிலைப்பாட்டைக் கண்டித்தும் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் போராட்டம் 48-84

முனைவர் கோவி. செழியன் 49-51, 53-54

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 50, 61,

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 50, 51, 52, 54, 56, 57

*திரு. க. பாலகிருஷ்ணன் 52, 53, 56, 57, 61-63

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 55

திரு. மு.க. ஸ்டாலின் 58, 60

திரு. எம். ஆறுமுகம் 63-65

பக்கங்கள்

**2. சிறப்புக் கவன ஈர்ப்பு—**தொடர்ச்சி

இலங்கை அரசின் தமிழின அழிப்பினைக் கண்டித்து, சர்வதேச பொது விசாரணை கோரியும் மத்திய அரசின் நிலைப்பாட்டைக் கண்டித்தும் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் போராட்டம்—தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. அ. கணேஷ்குமார் | 65-66 |
| முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 66-68 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 69-71 |
| திரு. ரா. சரத்குமார் | 71-73 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 73-85 |

**3. அரசினர் தனித் தீர்மானம்—**

| | |
|---|---|
| இலங்கையை 'நட்பு நாடு' என்று கருதாமல், தமிழினப் படுகொலையை போர்க் குற்றமாகக் கருதி, குற்றம் புரிந்தவர்களுக்கு உரிய தண்டனை கிடைக்கவும், பொருளாதாரத் தடை விதித்திடவும், 'தனி ஈழம்' குறித்து பொது வாக்கெடுப்பு நடத்திடவும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தைக் கொண்டு வர மத்திய அரசை வலியுறுத்துதல் | 84-86 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 84-85 |

| | |
|---|---|
| **4. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்—**தொடர்ச்சி | 86-203 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 86-94 |
| திரு. உ. தனியரசு | 94-105 |





பக்கங்கள்

**4. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்—**தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 98-100, 103, 123, 124, 132-133, 167, 192, 193 |
| திரு. ப. டில்லி பாபு | 102 |
| *திரு. பி.வி. கதிரவன் | 105-113 |
| திரு. ரா. சரத்குமார் | 113-123 |
| திரு. சு. குணசேகரன் | 123-124 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 124-127, 129-133, 135-138 |
| *மாண்புமிகு திரு. செ. தாமோதரன் | 126 |
| *மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம் | 128-129,157, 201 |
| *மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 133-134, 147-148, 153 |
| *மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 135, 155 |
| *மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 136, 137, 198 |
| *திரு. க. பாலகிருஷ்ணன் | 138 |
| முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 139-147, 149-153 |
| மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான் | 144-146, 149 |
| திரு. அ. அஸ்லம் பாஷா | 148 |
| *மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன் | 150, 201-202 |
| திரு. அ. கணேஷ்குமார் | 154-164, 166 |
| மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் | 156, 171 |

| | பக்கங்கள் |
|---|---|
| **4. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்—***தொடர்ச்சி* | |
| *மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜீ* | 158, 173, 194-196 |
| **மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்* | 159-162,164 |
| *திரு. என்.ஆர். ரெங்கராஜன்* | 165-174 |
| **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்* | 169-170, 180 |
| *திரு. எம். ஆறுமுகம்* | 174-186 |
| **மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்* | 183 |
| **திரு. அ. சவுந்தரராசன்* | 186-203 |
| *மாண்புமிகு திரு. ப. மோகன்* | 188-189 |
| **மாண்புமிகு திரு. பி.வி. ரமணா* | 190 |
| **மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்* | 197 |
| *மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்* | 200 |
| **5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 203-204 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – முனைவர் கே. ரோசய்யா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

   *பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை*

2. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

   *நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள்*

3. **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:**

   *மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு*

4. **நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:**

   *நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு*

5. **வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

   *வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்*

**6. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**

குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**7. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

**9. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**10. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்



**11. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:**

வனம்

**12. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

**13. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**14. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:**

பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**15. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

**16. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:**

*கால்நடை பராமரிப்பு*

18. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

*தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்*

19. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:**

*கைத்தறி மற்றும் துணிநூல்*

20. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*

21. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:**

*வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்*

22. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:**

*ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

23. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:**

*போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்*

24. மீன் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:**

*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*



25. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:**

*தகவல் தொழில்நுட்பம்*

26. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மற்றும் தேர்தல் அறிக்கை செயலாக்கம்*

27. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:**

*தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*

28. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:**

*பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், வக்ஃபு உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன்*

29. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:**

*இந்து சமய மற்றும் அறநிலையங்கள்*

30. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:

வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு

31. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி:

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்

32. பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்:

பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல், விளையாட்டுகள், இளைஞர் நலன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு

33. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – Dr. K. ROSAIAH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home

2. **Minister for Finance** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

Finance, Planning, Legislative Assembly, Elections and Passports

3. **Minister for Electricity & Prohibition and Excise** .. **The Hon. Thiru Natham R. Viswanathan:**

Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses

4. **Minister for Municipal Administration & Rural Development, Law, Courts and Prisons** .. **The Hon. Thiru K.P. Munusamy:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Law, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption

5. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

6. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru P. Mohan:**

Rural Industries including Cottage Industries and Small Industries

7. **Minister for Social Welfare and Nutritious Noon Meal Programme** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms and Nutritious Noon Meal Programme

8. **Minister for Higher Education** .. **The Hon. Thiru P. Palaniappan:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology

9. **Minister for Agriculture** .. **The Hon. Thiru S. Damodaran:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development

10. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Sellur K. Raju:**

Co-operation, Statistics and Ex-Servicemen Welfare

11. **Minister for Forests** .. **The Hon. Thiru K.T. Patchaimal:**

Forests





12. **Minister for Highways & Minor Ports** .. **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**

Highways & Minor Ports

13. **Minister for Food** .. **The Hon. Thiru R. Kamaraj:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

14. **Minister for Milk and Dairy Development** .. **The Hon. Thiru V. Moorthy:**

Milk and Dairy Development

15. **Minister for Environment** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Environment and Pollution Control

16. **Minister for Public Works** .. **The Hon. Thiru K.V. Ramalingam:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works

17. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru T.K.M. Chinnayya:**

Animal Husbandry

18. **Minister for Industries** .. **The Hon. Thiru P. Thangamani:**

Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives

19. **Minister for Handlooms & Textiles** .. **The Hon. Dr. S. Sundararaj:**

Handlooms & Textiles

20. **Minister for Tourism** .. **The Hon. Thiru P. Chendur Pandian:**

Tourism, Tourism Development Corporation

| | | |
|---|---|---|
| 21. Minister for Commercial Taxes & Registration | .. | **The Hon. Thiru B.V. Ramanaa:**<br>Commercial Taxes & Registration and Stamp Act |
| 22. Minister for Adi Dravidar & Tribal Welfare | .. | **The Hon. Thiru N. Subramanian:**<br>Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 23. Minister for Transport | .. | **The Hon. Thiru V. Senthil Balaji:**<br>Transport, Nationalised Transport, Motor Vehicles Act |
| 24. Minister for Fisheries | .. | **The Hon. Thiru K.A. Jayapal:**<br>Fisheries and Fisheries Development Corporation |
| 25. Minister for Information Technology | .. | **The Hon. Thiru N. Subramanian:**<br>Information Technology |
| 26. Minister for Information and Special Programmes Implementation | .. | **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:**<br>Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press and Implementation of Special Programmes and Implementation of the Election Manifesto |
| 27. Minister for Labour | .. | **The Hon. Thiru S.T. Chellapandian:**<br>Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment |



| | | |
|---|---|---|
| 28. Minister for Backward Classes and Minorities Welfare | .. | **The Hon. Thiru A. Mohammedjan:**<br>Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf |
| 29. Minister for Hindu Religious and Charitable Endowments | .. | **The Hon. Thiru M.S.M. Anandan:**<br>Hindu Religious and Charitable Endowments |
| 30. Minister for Revenue | .. | **The Hon. Thiru N.D. Venkatachalam:**<br>Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies |
| 31. Minister for Khadi and Village Industries | .. | **The Hon. Thiru T.P. Poonachi:**<br>Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan |
| 32. Minister for School Education and Sports & Youth Welfare | .. | **The Hon. Dr. Vaigaichelvan:**<br>School Education and Archaeology, Sports and Youth Welfare, Tamil Official Language and Tamil Culture |
| 33. Minister for Health | .. | **The Hon. Thiru K.C. Veeramani:**<br>Health, Medical Education and Family Welfare |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

## மாற்றுத் தலைவர்கள்#

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ஆர்.பி. உதயகுமார்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. பி.ஜி. நாராயணன்

திரு. சு. குணசேகரன்

## செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்

---

#5-2-2013 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. க. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல். | துணைச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | குழு அலுவலர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |



| | |
|---|---|
| திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். | குழு அலுவலர் |
| திரு. தி.ஜெ. ஸ்ரீதர், பி.எஸ்சி. | குழு அலுவலர் |
| திரு. ந. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | குழு அலுவலர் |
| திரு. க. சங்கர், பி.காம்., பி.ஜி.எல். | தலைமை நிருபர் |
| திருமதி கோ.மு. வனஜா, எம்.ஏ. | தலைமை நிருபர் |
| திரு. வே. ரவிசங்கர், எம்.ஏ., பி.எஸ்சி., பி.ஜி.எல். | தலைமை நிருபர் |
| திரு. கி. சீனிவாசன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.ஜி.எல்., சி.எல்.ஐ.எஸ். | பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| திரு. ப. மனோகரன், எம்.ஏ., பி.எட்., | சார்புச் செயலாளர் |
| திருமதி க. செந்தாமரை, பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| திரு. மா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. விஜயகுமார், பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| திரு. து. கணேசன், எம்.ஏ., பி.ஜி.எல். | தலைமை நிருபர் |
| திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. | தலைமை நிருபர் |
| திரு. கு. தண்டபாணி, பி.காம். | செயலாளரின் தனிச் செயலர் |
| திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். | தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. சுரேஷ் குமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. வெ. கலைராஜன், எம்.ஏ., பி.எட்., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. | .. | கலசப்பாக்கம் |
| 2. | அசோக், திரு. எம்.கே. | .. | வேளச்சேரி |
| 3. | அண்ணாதுரை, திரு. இரா. | .. | மதுரை தெற்கு |
| 4. | அப்துல் ரஹீம், திரு. எஸ். | .. | ஆவடி |
| 5. | அரங்கநாதன், திரு. ஆ.க. | .. | கீழ்பெண்ணாத்தூர் |
| 6. | அருண் சுப்பிரமணியன், திரு. மு. | .. | திருத்தணி |
| 7. | அருண் பாண்டியன், திரு. செ. | .. | பேராவூரணி |
| 8. | அருள்செல்வன், திரு. ஆர். | .. | மயிலாடுதுறை |
| 9. | அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. | .. | சேலம் வடக்கு |
| 10. | அழகுவேலு, திருமதி க. | .. | கள்ளக்குறிச்சி (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. க. | .. | கும்பகோணம் |
| 13. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 14. | அன்பழகன், திரு. ஜெ. | .. | சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி |
| 15. | அஸ்லம் பாஷா, திரு. அ. | .. | ஆம்பூர் |
| 16. | ஆறுக்குட்டி, திரு. வி.சி. | .. | கவுண்டம்பாளையம் |
| 17. | ஆறுமுகம், திரு. எம். | .. | வால்பாறை (செ.வ.) |
| 18. | ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம். | .. | திருப்பூர் வடக்கு |
| 19. | இந்திராகாந்தி, திருமதி த. | .. | துறையூர் (செ.வ.) |

20. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
21. இராமச்சந்திரன், திரு. ச. .. ஆலந்தூர்
22. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
23. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு
24. இராஜி, திரு. வி.எஸ். .. செய்யூர் (செ.வ.)
25. இராஜேந்திரன், திரு. இரா. .. குறிஞ்சிப்பாடி
26. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
27. உதயகுமார், திரு. ஆர்.பி. .. சாத்தூர்
28. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
29. எடப்பாடி கே. பழனிசாமி, திரு. .. எடப்பாடி
30. கடம்பூர் ராஜு, திரு. .. கோவில்பட்டி
31. கணிதா சம்பத், திருமதி எஸ். .. மதுராந்தகம் (செ.வ.)
32. கணேசன், திரு. பா. .. உத்திரமேரூர்
33. கணேஷ்குமார், திரு. அ. .. செஞ்சி
34. கதிரவன், திரு. பி.வி. .. உசிலம்பட்டி
35. கந்தன், திரு. கே.பி. .. சோழிங்கநல்லூர்
36. கருணாநிதி, திரு. மு. .. திருவாரூர்
37. கருப்பசாமி, திரு. ஏ.ஏ. .. அவினாசி (செ.வ.)
38. கருப்பையா, திரு. பழ. .. துறைமுகம்
39. கருப்பையா, திரு. மு.வீ. .. சோழவந்தான் (செ.வ.)
40. கலை அரசு, திரு. ம. .. அணைக்கட்டு
41. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
42. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்



43. காமராஜ், திரு. என்.வி. .. வேதாரண்யம்
44. காமராஜ், திரு. செ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
45. கார்த்திக் தொண்டைமான், திரு. .. புதுக்கோட்டை
46. கிட்டுசாமி, திரு. ஆர்.என். .. மொடக்குறிச்சி
47. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
48. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.எ. .. பர்கூர்
49. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஆலங்குடி
50. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்
51. குணசீலன், திரு. வே. .. வந்தவாசி (செ.வ.)
52. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
53. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
54. குப்பன், திரு. கே. .. திருவொற்றியூர்
55. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை
56. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஜெயங்கொண்டம்
57. கோகுல இந்திரா, திருமதி எஸ். .. அண்ணா நகர்
58. கோபால்சாமி, திரு. க. .. ராஜபாளையம்
59. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
60. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
61. சக்தி, திருமதி ம. .. சீர்காழி (செ.வ.)
62. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
63. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்
64. சண்முகவேலு, திரு. சி. .. மடத்துக்குளம்
65. சந்திரகுமார், திரு. வி.சி. .. ஈரோடு கிழக்கு

66. சந்திரசேகர், திரு. ஆர். .. மணப்பாறை
67. சம்பத், திரு. எம்.சி. .. கடலூர்
68. சம்பத்குமார், திரு. கோவி. .. வாணியம்பாடி
69. சம்பத்குமார், திரு. ப. .. திருச்செங்கோடு
70. சரத்குமார், திரு. ரா. .. தென்காசி
71. சவுந்தரராசன், திரு. அ. .. பெரம்பூர்
72. சாந்தி, திருமதி ஆர். .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
73. சாமி, திரு. ஆர். .. மேலூர்
74. சிவக்கொழுந்து, திரு. ப. .. பண்ருட்டி
75. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்
76. சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். .. நெய்வேலி
77. சிவபதி, திரு. என்.ஆர். .. முசிறி
78. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்
79. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
80. சின்னையா, திரு. டி.கே.எம். .. தாம்பரம்
81. சீனிவாசன், திரு. ஆர். .. ஆற்காடு
82. சுந்தரம், திரு. பி.எல். .. பவானிசாகர் (செ.வ.)
83. சுந்தரராஜ், டாக்டர் ச. .. பரமக்குடி (செ.வ.)
84. சுந்தர்ராஜன், திரு. ஆர். .. மதுரை மத்தி
85. சுபா, திருமதி ர. .. கெங்கவல்லி (செ.வ.)
86. சுப்பிரமணியன், திரு. ந. .. செய்யாறு
87. சுப்பையா, திரு. இ. .. அம்பாசமுத்திரம்
88. சுப்ரமணியன், திரு. ந. .. கந்தர்வகோட்டை (செ.வ.)



89. சுரேஷ்குமார், திரு. டி. .. செங்கம் (செ.வ.)
90. செங்குட்டுவன், திரு. டி. .. வேப்பனஹள்ளி
91. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
92. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
93. செந்தில்குமார், திரு. எஸ். .. திருவெறும்பூர்
94. செந்தில்பாலாஜி, திரு. வி. .. கரூர்
95. செந்தூர் பாண்டியன், திரு. பூ. .. கடையநல்லூர்
96. செல்லப்பாண்டியன், திரு. சி.த. .. தூத்துக்குடி
97. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு
98. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
99. செல்வராஜு, திரு. எம்.கே. .. சேலம் தெற்கு
100. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி
101. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)
102. சேகர், திரு. சி.எச். .. கும்மிடிப்பூண்டி
103. சோமசுந்தரம், திரு. வி. .. காஞ்சிபுரம்
104. சோழன் சித. பழனிச்சாமி, திரு. .. காரைக்குடி
105. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
106. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
107. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
108. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
109. தங்கவேலன், திரு. சுப. .. திருவாடனை
110. தங்கவேல், திரு. கே. .. திருப்பூர் தெற்கு
111. தமிழரசன், திரு. கா. .. மதுரை கிழக்கு

112. தமிழரசன், முனைவர் செ.கு. .. கீழ்வைத்தினான்குப்பம் (செ.வ.)
113. தமிழழகன், திரு. க. .. திட்டக்குடி (செ.வ.)
114. தமிழ்ச்செல்வன், திரு. இரா. .. பெரம்பலூர் (செ.வ.)
115. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி
116. தனபால், திரு. ப. .. ராசிபுரம் (செ.வ.)
117. தனியரசு, திரு. உ. .. பரமத்தி வேலூர்
118. தன்சிங், திரு. ப. .. பல்லாவரம்
119. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
120. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)
121. தினகரன், திரு. க. .. சூலூர்
122. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்
123. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. .. கோயம்புத்தூர் தெற்கு
124. துரைமுருகன், திரு. .. காட்பாடி
125. துரையப்பா, டாக்டர் ச. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
126. நஞ்சப்பன், திரு. ந. .. பெண்ணாகரம்
127. நடராஜ், திரு. என்.எஸ்.என். .. காங்கேயம்
128. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்
129. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
130. நல்லதம்பி, திரு. கு. .. எழும்பூர் (செ.வ.)
131. நாகராஜன், திரு. கே.பி. .. மயிலம்
132. நாகைமாலி, திரு. வீ.பி. .. கீழ்வேளூர் (செ.வ.)
133. நாஞ்சில் முருகேசன், திரு. அ. .. நாகர்கோவில்
134. நாராயணன், திரு. ஆ. .. நாங்குநேரி



135. நாராயணன், திரு. பி.ஜி. .. பவானி
136. நீலகண்டன், திரு. வ. .. திரு. வி.க. நகர் (செ.வ.)
137. பச்சைமால், திரு. கே.டி. .. கன்னியாகுமரி
138. பரஞ்ஜோதி, திரு. மு. .. திருச்சிராப்பள்ளி மேற்கு
139. பரமசிவம், திரு. கே.பி. .. பல்லடம்
140. பவுன்ராஜ், திரு. சு. .. பூம்புகார்
141. பழனிசாமி, திரு. கே.சி. .. அரவக்குறிச்சி
142. பழனிச்சாமி, திரு. ச. .. வேடசந்தூர்
143. பழனியப்பன், திரு. பி. .. பாப்பிரெட்டிப்பட்டி
144. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்
145. பாண்டியராஜன், திரு. க. .. விருதுநகர்
146. பாபு முருகவேல், திரு. ர.ம. .. ஆரணி
147. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
148. பார்த்தசாரதி, திரு. ப. .. விருகம்பாக்கம்
149. பார்த்திபன், திரு. எஸ்.ஆர். .. மேட்டூர்
150. பாலகிருஷ்ணன், திரு. க. .. சிதம்பரம்
151. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்
152. பாஸ்கர், திரு. அ. .. தருமபுரி
153. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்
154. பிரபாகர், திரு. ஜே.சி.டி. .. வில்லிவாக்கம்
155. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்
156. பீம்ராவ், திரு. க. .. மதுரவாயல்
157. புத்திசந்திரன், திரு. .. உதகமண்டலம்

158. புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) .. பத்மநாபபுரம்

159. பூனாட்சி, திரு. தோ.பெ. .. மணச்சநல்லூர்

160. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்

161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

162. பெருமாள், திரு. இரா. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

163. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ஆ.வா.)

164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. உடுமலைப்பேட்டை

165. பொன்னுசாமி, திரு. கே. .. தாராபுரம் (செ.வ.)

166. பொன்னுப்பாண்டி, திரு. வெ. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)

167. போஸ், திரு. ஏ.கே. .. மதுரை வடக்கு

168. மணிமாறன், திரு. இரா. .. பூந்தமல்லி (செ.வ.)

169. மணிவேல், திரு. துரை. .. அரியலூர்

170. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் வடக்கு

171. மனோகரன், திரு. ஆர். .. திருச்சிராப்பள்ளி கிழக்கு

172. மனோகரன், திரு. க. .. திருப்போரூர்

173. மனோகர், திரு. பி.ஆர். .. சோளிங்கர்

174. மனோரஞ்சிதம், திருமதி .. ஊத்தங்கரை (செ.வ.)

175. மாதேஸ்வரன், திரு. சு. .. ஆத்தூர் (செ.வ.)

176. மார்க்கண்டேயன், திரு. கு.வ. .. விளாத்திகுளம்

177. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. .. பொள்ளாச்சி

178. முத்துக்குமார், திரு. வி. .. விருத்தாசலம்



179. முத்துசெல்வி, திருமதி ச. .. சங்கரன்கோவில் (செ.வ.)

180. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்

181. முருகன், திரு. மு. .. முதுகுளத்தூர்

182. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

183. முருகேசன், திரு. து. .. செங்கல்பட்டு

184. முனுசாமி, திரு. கே.பி. .. கிருஷ்ணகிரி

185. முஹம்மத்ஜான், திரு. அ. .. இராணிப்பேட்டை

186. மூர்த்தி, திரு. வி. .. மாதவரம்

187. மைக்கேல் ராயப்பன், திரு. சி. .. ராதாபுரம்

188. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

189. மோகன், திரு. ப. .. சங்கராபுரம்

190. ரமணா, திரு. பி.வி. .. திருவள்ளூர்

191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. அந்தியூர்

192. ரமேஷ், திரு. கா.கோ. .. திருப்பத்தூர்

193. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)

194. ராமசாமி, திரு. ஆ. .. நிலக்கோட்டை (செ.வ.)

195. ராமச்சந்திரன், திரு. கா. .. குன்னூர்

196. ராமமூர்த்தி, திரு. ஆர். .. விக்கிரவாண்டி

197. ராஜநாயகம், திரு. மு. .. அறந்தாங்கி

198. ராஜலட்சுமி, திருமதி ஆர். .. மயிலாப்பூர்

199. ராஜா, திரு. ஏ.கே.டி. .. திருப்பரங்குன்றம்

200. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

201. ராஜா, திரு. பொன். .. பொன்னேரி (செ.வ.)

202. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி

203. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்

204. ரெங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

205. ரெத்தினசாமி, திரு. மு. .. திருவையாறு

206. லாசர், திரு. ஏ. .. பெரியகுளம் (செ.வ.)

207. லிங்கமுத்து, திரு. கு. .. குடியாத்தம் (செ.வ.)

208. வளர்மதி, திருமதி பா. .. ஆயிரம் விளக்கு

209. விஜயகாந்த், திரு. .. ரிஷிவந்தியம்

210. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு

211. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

212. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. .. சங்கரி

213. விஜய், டாக்டர் வி.எஸ். .. வேலூர்

214. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை

215. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை

216. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

217. வெங்கடேசன், திரு. எல். .. திருக்கோவிலூர்

218. வெற்றிவேல், திரு. பு. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

219. வேணுகோபாலு, திரு. கே.எஸ்.என். .. பழனி

220. வேதாச்சலம், திரு. எஸ். .. அம்பத்தூர்

221. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்



223. வைகைச்செல்வன், முனைவர் .. அருப்புக்கோட்டை

224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

225. வைரமுத்து, திரு. பி.கே. .. திருமயம்

226. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. இராமநாதபுரம்

227. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்

228. ஜானகிராமன், திரு. ஐ. .. வானூர் (செ.வ.)

229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

230. ஜெயசுதா, திருமதி எல். .. போளூர்

231. ஜெயபால், திரு. கே.ஏ. .. நாகப்பட்டினம்

232. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஸ்ரீரங்கம்

233. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

234. ஹரிதாஸ், டாக்டர் த. .. திண்டிவனம் (செ.வ.)

235. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி) .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஏ.எல். சோமையாஜி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நந்தன, பங்குனி 14, திருவள்ளுவர் ஆண்டு—2044

## 2013 மார்ச் 27, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

“இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் வுலகு.”

எளிய மக்களிடம் இனிமையாகப் பேசித் தேவையானதைக் கொடுத்து உதவி செய்யும் ஆட்சியாளருக்குப் புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம்போல் குடிமக்களும் அமைவார்கள்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**76—**

### துணை மின் நிலையம்

***7957—திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், செல்லூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 மார்ச் 27

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம், செல்லூரில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் 12–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைப்பதற்கு மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான நிலம் கண்டறியப்பட்டுள்ளது. நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், துணை மின் நிலையம் நிறுவுவதற்கு, வாரிய ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை செல்லூர் பாலம் ஸ்டேஷன் சாலை அருகே அமைந்துள்ள பிளாக் எண் 115–ல், மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான 15 சென்ட் இடத்தை, 28–5–2008–ல் தீர்மானம் நிறைவேற்றி துணை மின் நிலையம் அமைப்பதற்கு வழங்கி இருக்கிறார்கள். 33/11 கி.வோ. துணை மின் நிலையம் என்பது, 5 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு மின் பகிர்வு செய்து, மின் தடங்கல், மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு பெரிய உதவியாக அமையும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கக்கூடிய பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளும் அதே நேரத்தில், இதில் மிகுந்த காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, எப்போது இந்தத் துணை மின் நிலையம் தன்னுடைய பணியைத் துவங்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாநகராட்சிக்குச் சொந்தமான அந்த 15 சென்ட் இடமே போதுமானது. நகரப்புறப் பகுதியாக இருந்தால், indoor sub station என்று சொல்வார்கள் – அந்த indoor sub station



2013 மார்ச் 27]

முறையிலே அமைக்கப்படவிருப்பதால், 15 சென்ட் இடமே போதுமானது என்று கண்டறியப்பட்டு, அந்த நிலம் மாநகராட்சியிடம் கேட்கப்பட்டுள்ளது. மாநகராட்சி இன்னும் ஒப்படைக்கவில்லை. மாநகராட்சி முறைப்படி ஒப்படைக்க வேண்டும். தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் அந்த நிலம் ஒப்படைக்கப்பட்டவுடன், உடனடியாக காலதாமதமின்றி செல்லூரிலே அந்தப் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. இந்தத் துணை மின் நிலையம் சம்மந்தமான கோப்பு நகராட்சி நிருவாகத் துறையிடம் இருப்பதாகத் தெரிய வருகிறது. இதை விரைந்து செயல்படுத்த வேண்டும். அதேபோல, புதூரிலே தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும், மதுரை அனுப்பானடி சூசை மைக்கேல் தெருவில் உள்ள குடிசைப் பகுதியில் ஒயர்கள் கடந்த 40 ஆண்டுக் காலமாக மிகவும் தாழ்வாக இருந்து வருகின்றன. இவற்றை மாற்ற வேண்டுமென மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்கள். அதேபோல, அனுப்பானடியிலே 12 மின் கம்பங்கள் பழுதடைந்து இருக்கின்றன. அவற்றையும் மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செல்லூர் பகுதிக்கு ஆறு கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கின்ற கே.புதூர் 33/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையத்திலிருந்தும், அண்ணா நகர் பேருந்து நிலையத்திற்கு அருகிலே இருக்கின்ற 33/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையத்திலிருந்தும் அங்கே மின் சப்ளை வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால், இப்போது வளர்ந்துவரும் பெருநகரமான மதுரையிலும், செல்லூர் பகுதிக்கு மின்சாரம் வழங்குகின்ற பகுதிகளிலும் மின் சுமை, மின் பளு கூடுதலாகிவிட்டது. ஆகையால், கே.புதூர்

[2013 மார்ச் 27

பகுதியிலும் மின் தேவை அதிகரித்துவிட்டது. அண்ணா நகர் பகுதியிலும் அதிகரித்துவிட்டதால், அங்கிருந்து வருவதிலே சற்று மின் பற்றாக்குறை, தடங்கல் பிரச்சினைகளெல்லாம் ஏற்படுகின்றன என்பதால் செல்லூரிலேயே புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், கே. புதூரில் உள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்தவும், 2X8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியை 2X16 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றியாக ஆக்கி கூடுதல் திறன் கொண்ட துணை மின் நிலையமாக செல்லூரையும், கே. புதூரையும் மாற்றியமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–05*

அதேபோல, அண்ணா நகர் குடிசைப் பகுதியில் மின் கம்பிகள் தாழ்வாக இருக்கின்றன என்பதை ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் எனது கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே அதிகாரிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதற்கு வேண்டிய பணிகளும் விரைவாக செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர், முத்துப்பேட்டை ஆகிய இரண்டு ஊராட்சிகளிலும் துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடமெல்லாம் சென்ற ஆட்சிக் காலத்தில் தேர்வு செய்தார்கள். அது இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் என்பதால் கிடப்பில் கிடக்கிறது. ஆகவே, முத்துப்பேட்டையில் 110/11 கே.வி. திறனும் மற்றும் கோட்டூரில் 33/11 கே.வி. திறனும் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக துணை மின் நிலையம் அமைக்கின்றபொழுது, அதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நிலம் கண்டறியப்படுவதுதான் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நிலம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஒருவேளை, நிலம் கண்டறியப்பட்டால் அதற்கு பல்வேறு தடைகள் ஏதோ ஒருவகையில் வந்தவண்ணம் இருக்கின்றன. அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதில் பிரச்சினையாகி காலதாமதமாகிறது. வேறு எந்தக் காரணமும் கிடையாது. இந்தப் பிரச்சினையில், நிலம் கையகப்படுத்தும் பணிகளை எந்த அளவிற்கு விரைவாக முடிக்க முடியுமோ அந்த அளவிற்கு விரைவாக முடிப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. சில இடங்களில் பொதுமக்களின் எதிர்ப்புகள்கூட இருக்கின்றன. அந்த இடத்தைக் கையகப்படுத்தக் கூடாது என்று எதிர்ப்புகளும் வருகின்றன. மாற்று இடம் தேடுகின்றபொழுது அதிலும் காலதாமதமாகின்றது. துணை மின் நிலையம் அமைக்க ஏற்படும் காலதாமதத்திற்கு நிலப் பிரச்சினைதான் காரணமாக இருக்கிறதே தவிர, நிருவாகப் பிரச்சினை காரணமல்ல. என்னதான் பிரச்சினை இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் பகுதியில், காலதாமதத்திற்கு என்ன பிரச்சினை என்பதைக் கண்டறிந்து, அதனைப் போக்குவதற்கு வேண்டிய உரிய நடவடிக்கைகளை எடுத்து, மிக விரைவாக அந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**77—**

## குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

***1377—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம்,

[2013 மார்ச் 27

நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பம் நகரில் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன், திருத்திய விடையை அளிக்கிறேன்.

தேனி மாவட்டம், கம்பம் நகராட்சிக்கு முல்லைப் பெரியாற்றை நீராதாரமாகக் கொண்டு சுமார் 70,000 மக்கள் பயன்பெறும் வகையில் 18.80 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றினை செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கான பணி ஆணை 27–12–2012 அன்று வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 30–6–2013–க்குள் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்குண்டான நகர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கம்பம் நகரில் வாழும் மக்களின் குடிநீர் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்டுள்ள 18 கோடியே 80 இலட்சம் ரூபாய் திட்டத் தொகையில் மத்திய அரசின் மானியம் எவ்வளவு? மாநில அரசின் மானியம் எவ்வளவு? நகராட்சியின் பங்குத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கொடுக்கின்ற நிதியும், மாநில



2013 மார்ச் 27]

அரசு கொடுக்கின்ற நிதியும் மக்களால் செலுத்தப்படுகின்ற வரிப் பணத்திலிருந்துதான் வந்து கொண்டிருக்கிறது. அப்படி மத்திய அரசு கொடுக்க வேண்டிய நிதியைக் கொடுக்காதபட்சத்தில், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாநில அரசின் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்துவதற்காக தீவிரமாக நடவடிக்கை எடுத்து, அந்தத் திட்டத்தின் பயனாக இதுவும் நிறைவேற்றப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் மானியத் தொகை ரூ.13.12 கோடி. மாநில அரசின் மானியத் தொகை ரூ.1.64 கோடி. நகராட்சியின் பங்குத் தொகை ரூ.4.4 கோடி. ஆய்வின் மூலமாக நிறைவேற்றக்கூடிய இந்தத் திட்டச் செயல்பாடுகள் பின்விளைவை ஏற்படுத்தி விடாமல், தரம்வாய்ந்த திட்டமாக மக்களைச் சென்றடைய எவ்வளவு காலத்திற்குள் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவருக்குத் தெரிந்ததையே நம்மிடத்திலே கேட்க வேண்டுமென்பதற்காக அந்தக் கேள்வியைக் கேட்டு, பொன்னான நேரத்தை அவர் வீணடிக்கிறார். அவர் கேட்ட கேள்விக்கு 30–6–2013–க்குள் அந்தத் திட்டப் பணி முடிக்கப்படும் என்று ஏற்கெனவே, முதல் கேள்வியிலேயே நான் பதில் சொல்லிவிட்டேன். எனவே, இரண்டாவது கேள்வி எழுவதற்குரிய வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

[2013 மார்ச் 27

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 9 ஊராட்சிகளில் மேட்டுப்பாளையத்திலிருந்து திருப்பூர் செல்கிற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக, வழியோர கிராமங்கள் என்ற அடிப்படையிலே தண்ணீர் வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது, இந்த 9 ஊராட்சிகளில் மக்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தினாலே, வளர்ந்து வருகிற மக்கள் பெருக்கத்திற்கு ஏற்றவாறு, அந்தக் குடிதண்ணீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று ஏற்கெனவே நான் இந்த அவையிலே தெரிவித்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னார்கள். இந்த ஆய்வுப் பணிகள் இப்போது முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆய்வு முடிக்கப்பட்டிருக்கிற அந்தப் பணிகளுக்கு, இந்த நிதியாண்டிலே நிதி ஒதுக்கீடு செய்து, அந்தத் திட்டத்தை விரைவிலே முடித்துக்கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று அறிவிக்கப்பட்டு, அதைச் செயல்படுத்துகின்றபொழுது, அது வரைமுறைப்படுத்தப்படுகிறது. ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் 160 எம்.எல்.டி.யோ, 200 எம்.எல்.டி.யோ அல்லது 100 எம்.எல்.டி.யோ தண்ணீர் வழங்கப்படுகின்ற அளவிலேதான் அந்தப் பாதைகள் அமைக்கப்பட்டிருக்கும்; அந்த பைப் லைன்கள் போடப்பட்டிருக்கும். கூடுதலாக மக்கள்தொகை அதிகப்படும்போது, அவர்களுக்கும் தேவையான குடி தண்ணீரைக் கொடுக்கின்றபோது, ஏற்கெனவே இருக்கின்ற பாதைகள் சரியாக இருக்கின்றபட்சத்தில் கூடுதலாக அனுப்பக்கூடிய நீர்க் கொள்ளளவை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே பைப் லைன்கள் இருந்தால் அது உடனடியாக செயல்படுத்தப்படும். அவ்வாறு செயல்படுத்தப்பட முடியவில்லையென்று சொன்னால், புதிதாக ஒரு திட்டத்தைத் தீட்டித்தான் அதை நிறைவேற்ற முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்



2013 மார்ச் 27]

அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஏற்கெனவே அந்தத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தினால், அந்த ஆய்வில் என்ன முடிவு வந்திருக்கிறதோ அந்த முடிவின்படி நிறைவேற்றப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.

**திரு. என்.எஸ்.என். நடராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு பொதுவான கேள்வி. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். காங்கேயம் காளைகள் இந்தியாவில், குறிப்பாக, தமிழ்நாட்டில் பெயர்பெற்றவை. காங்கேயம் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான, காங்கேயம் நகராட்சியின் மையப் பகுதியில் காங்கேயம் காளைச் சின்னத்தை, நகராட்சியின் மூலமாக அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய இடங்களில் நிறைய பொருட்களுக்கு patent right உள்ளன. ஒருசில இடங்களில்தான் அந்தப் பொருள் கிடைக்கும். இப்போது மதுரை மல்லி என்று சொன்னால், அதற்கு ஒரு patent right கிடைத்திருக்கிறது. அதேபோல், காங்கேயம் என்பது பாரம்பரியமாக காளைகளுக்குப் பெயர்பெற்றது. நமது உறுப்பினர் திரு. நடராஜ் அவர்கள்தான் weak ஆக இருக்கிறார். ஆனால், அந்தக் காளைகளைப் பார்த்தீர்களென்றால் மிகப்பெரிய அளவில், நல்ல வளமாக, பலமாக இருக்கும். இதுபோன்று குறிப்பிட்ட இடங்களில் கிடைக்கக்கூடிய பொருட்களுக்கு பல இடங்களில், முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. அதுபோன்ற சிலை அங்கு வைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அதற்கு நகர் மன்றக் கூட்டத்திலே தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும். அதற்கும் இப்போது உச்ச நீதிமன்றம் ஒரு தடையாணை பிறப்பித்திருக்கிறது. அதாவது, நகர்ப் பகுதிகளிலே சிலைகள் வைக்க தடை

விதிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் ஒரு காரணமாக இருப்பதினால் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, அடுத்த பணியிலே, அடுத்த வேலையிலே நாம் ஈடுபடுவோம் என்று கூறி, நான் அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**78—**

**குடியிருப்புகள்**

**5699—திரு. மு. ராஜநாயகம்:**

*மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் புதிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் புதிய குடியிருப்புகள் கட்டும் திட்டத்தை அறந்தாங்கிக்கு அருகிலுள்ள சிவந்தான்காடு கிராமத்திற்குட்பட்ட, புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலைக்குச் சொந்தமான சுமார் 12 ஏக்கர் நிலத்தில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. திட்டம் செயல்படுத்த தேர்வு செய்த இடம் கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்குச் சொந்தமானது என்பதால் அந்தத் துறையிடம் இடத்திற்கான விற்பனை விலை மதிப்பு நிர்ணயிக்கக் கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் அத்துறையிடமிருந்து நிலத்திற்கான விற்பனை விலை மதிப்பு நிர்ணயம் செய்து பெறப்பட்டவுடன் அடுத்த கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.*





*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

**திரு. மு. ராஜநாயகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்து, கவலையைப் போக்கி, சட்டத்தின் துணை கொண்டு சரித்திரம் படைத்து விவசாயிகளின் வாழ்வில் விளக்கேற்றி வைத்த வருங்கால பாரதப் பிரதமர், மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய பொற்பாதங்களை வணங்கி, அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி நகரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அரசு ஊழியர் அடுக்குமாடி வீடுகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வந்தன. தற்சமயம் அந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிந்துவிழும் தருவாயில் பயன்பாட்டிற்கு உபயோகமற்ற நிலையில் உள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் வளர்ந்துவரும் பெரிய நகரங்களில் அறந்தாங்கி நகரமும் ஒன்று. பல்வேறு அரசு அலுவலகங்களும் அறந்தாங்கி நகரில் வரப்பெற்றுள்ளன. எனவே, தேர்வு செய்யப்பட்டிருக்கும் இடம் போதுமான அளவு நகரின் மையத்தில் இருப்பதனால் அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடத்தை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியில் 1986–1987–இல் அறந்தாங்கியில் 72 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி அரசு அலுவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டன. அதிலே இரண்டாவது தளம் மிகவும் பழுதடைந்திருப்பதால், தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து அதை இடிக்க வேண்டுமென்று கருத்துரு அனுப்பியிருக்கிறது. அந்தக் கருத்துருவை ஏற்று இரண்டாவது தளத்தை இடித்துவிட்டு அங்கு புதிதாக அரசு அலுவலர் குடியிருப்பு கட்டிக்கொடுக்கப்படும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.*

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.

**திரு. மு. ராஜநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், நல்ல செய்தியை இந்த மாமன்றத்திலே சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

**திரு. வி.சி. ஆறுக்குட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி என்னுடைய கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட ஆணைக்கட்டி பகுதியிலே பலதொழில்நுட்பப் பயிற்சி நிலையம் அமைப்பதற்கு ஆணையிட்ட அம்மா அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட பெருநாயக்கம்பாளையம் பகுதியிலே க.ச. எண் 62, வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடம் உள்ளது. கிட்டத்தட்ட 18 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த இடத்தில் ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டும் திட்டம் அரசிடத்திலே உள்ளதா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் சுய நிதித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டி பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டி வாடகைக்கு கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஏற்று அவருடைய தொகுதியில், அந்த இடத்தில் பொதுமக்களுடைய வரவேற்புக்கேற்ப திட்டத்தைச் செயல்படுத்த பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் ஏற்கெனவே 300 வீடுகள் கட்டப்பட்டு அனைவரும் பத்திரம் பெற்றுவிட்டார்கள். இப்பொழுதும் வாடகை கொடுக்க முடியாத நலிவடைந்த மக்கள் நகரப் பகுதியில் இருப்பதனால் மீண்டும் நலிவடைந்த பிரிவினருக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய அந்தத் திட்டத்தைத் துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரத்தில் வீடுகள் இல்லாது குடிசையில் வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழுகின்ற குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம், வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அங்கே இடம் கிடைத்தால் நிச்சயமாக அந்த நலிந்த பிரிவினருக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்க பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**79—**

## வெற்றிலைக் கொடி

*__4387—திரு. மு.வீ. கருப்பையா:__

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 மார்ச் 27

*(அ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தான் பகுதியில் வெற்றிலைக் கொடி பயிரிடுவதை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ)* சோழவந்தான் தொகுதி, சோழவந்தான் பகுதியில் கொடிக்கால் வெற்றிலையைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் அரசு ஆவன செய்து வருகிறது.

சோழவந்தானில் வெற்றிலைக் கொடிக்காலைப் பாதுகாப்பதற்கு ஏதுவாக வெற்றிலைக் கொடிக்காலைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த உரிய தொழில்நுட்பங்கள் களப்பணியாளர்கள்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் வெற்றிலை மகசூலை அதிகரிக்கவும், கொடிக்கால் வெற்றிலைச் சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கவும், விவசாயிகளை ஊக்கப்படுத்தி உரப் பரிந்துரைகள் மற்றும் பல்வேறு தொழில்நுட்பங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தமிழ்த் தாயே, அழகுமொழி உவமானப் பரம்பொருளே, தீச்சுடரே, வள்ளல் தலைவரின் வாசகத்தின் உட்பொருளே, கள்ளமற்ற தொண்டர்கள் நாளும் ஓதும் வேத வடிவே, உத்தமத் தலைவருடன் உழன்று திரிந்தோரை உரிய பெரியோராக்கி ஒன்றுகூட்டி வைத்தவரே, சுற்றமெலாம் தமிழரென அடைக்கலம் ஆனவரே, பெற்றவர் பேர் சொல்லும் பிள்ளையாய் இருப்பவரே, கவலைகளைத் தீர்த்துவிடும் கருணைத் தாயே, காரிருளில் தீச்சுடராய் ஒளிவீசும் ஜோதிச் சுடரே, அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல, அண்ணா பெயரைத் தாங்கி நிற்கும், கழகத்தை அடையாளம் காட்டும், அதன் இரட்டை இலைச் சின்னத்தை மங்காமல், மறையாமல், சிந்தாமல், சிதறாமல் எந்நாளும் காத்து நிற்கும் கழகக் காவல் தெய்வமே, புரட்சித் தாயே! *(மேசையைத் தட்டும் ஒலி)*



2013 மார்ச் 27]

இருண்டிருந்த தமிழகத்தில் ஏழைகளின் வான் நிலவாய், மண் குடிசைவாசிகளின் தென்றலாய், ஆதி திராவிடர் மக்களின் காவல் தெய்வமாய் தோன்றிவரும் தங்கத் தாரகையே, தமிழைச் சொல்லி, தமிழர்களைச் சொல்லி, எதற்கும் அரசியல் ஆதாயம் தேடும் அசுரத்தனத்தைச் சூறையாடும் சிங்க நிகர் தாயே, எண்ணால், எழுத்தால், செயலால் எண்ணற்ற ஏழைகள் பயன்பட பண்பட்ட உள்ளத்தில் எண்ணங்களைத் திட்டமாக்கி ஆக்கப் பணிகளுக்கு அனுதினமும் ஊக்கம் கொடுக்கும் உத்தமத் தலைவியே! மாண்புமிகு அம்மா அவர்கள் வாழும் இந்த நன்னாளில் நானும் வாழ்வதை எண்ணி, கடைக்கோடியில் இருக்கும் என்னையும் இந்த மாமன்றத்திற்கு வந்திருக்கும் உறுப்பினர் என்ற முறையில் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில் கேள்வி கேட்க வாய்ப்பளித்து, அதற்குப் பதில் பெறுவதற்கு வழி செய்ததற்காக கோடானுகோடி நன்றிகளைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோழவந்தான் தொகுதி முழுக்க, முழுக்க விவசாயம் நிறைந்த பகுதியாகும். அங்கு வெற்றிலை விவசாயம் அதிக அளவில் செய்யும் தொழிலாக இருந்து வருகிறது. வெற்றிலை சுப காரியங்களுக்குப் பயன்படுவதாகவும், மரியாதைக்குரியதாகவும், மருத்துவக் குணம் கொண்டதாகவும் இருந்துவருகிறது. தற்போது, அந்தத் தொழில் நலிவடைந்து வருவதால் விவசாயத்தையே நம்பியிருக்கும் கூலித் தொழிலாளர்களைப் பாதுகாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சோழவந்தான் பகுதியில் 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் ஆண்டுகளில் வெற்றிலை கொடிக்கால் பயிருக்கான நடவுப் பொருட்கள் மற்றும் இடுபொருட்கள் வேண்டி விவசாயிகளிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படாததால், இந்தத் திட்டத்தை அங்கே செயல்படுத்த முடியவில்லை. எனினும், 2013–2014 ஆம் ஆண்டு விவசாயிகள் முன்வரும்பட்சத்தில் சோழவந்தான் பகுதியில் வெற்றிலைக் கொடிக்கால் சாகுபடி செய்ய தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அவர்களுக்குப் பல்வேறு இடுபொருட்களை மானியத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெற்றிலை விவசாயத்தைச் சார்ந்திருக்கக்கூடிய விவசாயிகளுடைய எதிர்காலம் பொதுவாகவே கேள்விக்குறியாக இருக்கிறது. சோழவந்தான் பகுதியில் மட்டுமல்லாமல், தேனி மாவட்டத்தில் இருக்கக்கூடிய பெரியகுளம், போடி, சின்னமனூர் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் கடுமையான அளவுக்கு வாடல் நோய் பாதிப்பு இருக்கிறது. அதைப் போக்குவதற்கான புதிய மருந்துகளோ, கண்டுபிடிப்புகளோ இல்லை என்கிற சூழ்நிலையில் அந்த விவசாயத்தை நம்பியவர்களின் எதிர்காலம் மிகப் பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்கள்.

முற்பகல் 10–25

2001–இல் அமைந்த அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு அப்போது ஏற்பட்ட வாடல் நோய்க்கு ஒரு எக்டேருக்கு 10,000 ரூபாய் கொடுத்து, ஜெயமங்கலம், பெரியகுளம் பகுதியிலுள்ள விவசாயிகளைப் பாதுகாத்தது. இன்றைக்கும் வாடல் நோய் என்பது ஒரு முற்றுப்பெறாத தொடர் கதையாக இருக்கிறது. கடந்த சட்டமன்றக் கூட்டத்தில்கூட இந்தப் பிரச்சினையை நான் எழுப்பியபோது பல்வேறு விவாதங்கள் நடந்தன. பெரியகுளத்தில் இருக்கக்கூடிய விவசாய தோட்டக்கலை ஆராய்ச்சிப் பண்ணையில் நோய்கள் தடுப்பு, புதிய விதைகள் கண்டுபிடிப்பு போன்ற வேலைகள் நடக்கின்றனவென்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். ஆனால், நான் அறிந்த அளவில், அங்கு அதுபோன்ற பணிகள் நடக்கவில்லை. மொத்தத்தில் வெற்றிலை விவசாயம் என்பது மங்கலகரமான விவசாயம் என்பது



2013 மார்ச் 27]

மட்டுமல்ல, வெற்றிலை பெரும்பகுதியான மக்களின் வாழ்க்கையில் உபயோகிப்பது. இன்றைக்கு அந்த தொழிலைச் செய்பவர்கள் அதைவிட்டு வெளியேறுகிற நிலையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் இதன்மீது உரிய கவனம் செலுத்தி, வாடல்நோயைத் தடுக்க நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையும், உற்சாகமும் தருகிற விதத்தில் நிவாரணங்கள் கொடுத்து, புதிய விதைகளைக் கண்டுபிடித்து அந்த விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க முயற்சிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 155 எக்டேர் பரப்பில்தான் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நோயைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் திருச்சி மாவட்டம், சிறுகமணியில் உள்ள வெற்றிலை ஆராய்ச்சி நிலையத்தில் 1983 ஆம் ஆண்டு முதல் வெற்றிலைக்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையிலேதான் புதிய இரகங்கள் வெளியிடப்பட்டு வந்துள்ளன.

தமிழகத்திலே சுமார் 2,506 எக்டேர் பரப்பில் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுவரும் நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் மூலமாக வெற்றிலையைத் தாக்கும் நோய்கள் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அந்தப் பகுதி விவசாயிகளுக்கு அவ்வப்போது தேவையான தொழில்நுட்பங்களும், பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 மார்ச் 27

**80—**

### சொந்தக் கட்டடம்

*****4276—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடை தற்போது ரூ.850 மாத வாடகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்குப் போதுமான இட வசதி சங்கத்தில் உள்ளது. ஆனால், அவ்விடத்தில் கட்டடம் கட்டுவதற்கு சங்கத்தில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து உரிய நிதி உதவி பெற்று, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசித்தார் பசி களையும் அட்சய பாத்திரமாய், ஏழைகளைத் தாங்கி நிற்கும் ஏந்தலாய், மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் இன்றைய தமிழகமே, நாளைய பாரதமே அம்மா! வரியில்லா பட்ஜெட்டைத் தந்து வரலாறு படைத்திருக்கும் வாழும் வள்ளலே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் புனித பொற்பாதங்களை வணங்கி, எனது சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன் அம்மா! மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**81—**

### சாலை மேம்பாடு

*****11743—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், காட்டுப்பட்டி, மாவடப்பு, குழிப்பட்டி, குருமலை, பூச்சிக்கொட்டான்பாறை ஆகிய மலைக் கிராமங்களிலுள்ள சாலைகளை மேம்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள காட்டுப்பட்டி, மாவடப்பு, குழிப்பட்டி, குருமலை, பூச்சிக்கொட்டான்பாறை ஆகிய மலைக் கிராமங்களின் வழியாகச் செல்லும் சாலையானது ஆனைமலை காப்புக்காட்டின் வழியாகச் செல்கின்றது. ஆனைமலை காப்புக்காடு புலிகள் காப்பக மைய மண்டலத்திற்குள் அமைந்துள்ளது. இச்சாலை அப்பர் ஆழியாறு முதல் குருமலை வரை சுமார் 25 கிலோ மீட்டர் தூரத்தில் 1978 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆம் ஆண்டு வரை வனத் துறைமூலம் அமைக்கப்பட்ட சாலையாகும். இச்சாலை காட்டுப்பட்டி, மாவடப்பு, குழிப்பட்டி, குருமலை ஆகிய நான்கு கான் குடியிருப்புகளை (Forest Settlements) இணைக்கிறது. இச்சாலையில் பழுதுகள் ஏற்படும்பொழுது ஆங்காங்கே பழுதுகள் நீக்கி பராமரிக்கப்பட்டு, வாகனங்கள் சென்றுவர இன்றுவரை ஏதுவாக உள்ளது.

[2013 மார்ச் 27

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

**திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழகத்திலுள்ள தென்னை விவசாயிகள் நலன் கருதி, எங்களது தொகுதியில், திருமூர்த்தி மலைப் பகுதியிலே 82 ஏக்கர் அரசு நிலத்தை மத்திய தென்னை வாரியத்திற்குக் கொடுத்திருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எங்களது தொகுதி மக்களின் சார்பாகவும், தென்னை வாரியத்தின் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த செட்டில்மெண்ட் பகுதிக்குப் போவதற்குத் தடம் இருக்கிறது என்று கூறினார்கள். அந்தத் தடமானது 1978–லே அமைக்கப்பட்ட தடம் என்றும் கூறினார்கள். வால்பாறை சாலை, அட்டகட்டி, காடம்பாறை, அப்பர் ஆழியாறு வழியாக, அப்பர் ஆழியாறு அணையிலிருந்து சுமார் 80 கிலோ மீட்டர் தூரத்திற்கு உடுமலைப்பேட்டையிலிருந்து செல்லவேண்டும். அந்த வனத் துறை சாலையில் ஜீப் போன்ற இலகு வாகனங்கள் மட்டுமே ஊர்ந்து செல்லக்கூடிய நிலை உள்ளது. மேற்கண்ட செட்டில்மெண்டில் குடியிருக்கும் சுமார் 400 குடும்ப மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். நியாய விலைக் கடைகளுக்கான உணவுப் பொருட்களை லாரிகள் மூலமாக அங்கு கொண்டு செல்வதற்கும், மருத்துவச் சிகிச்சைக்கு மாதம் ஒரு முறை வேன் மூலம் செல்வதற்கும் சிரமமான சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, அந்தப் பகுதியில் புலிகள் சரணாலயம் உள்ளது என்று கூறினார்கள். அந்தப் பகுதியில் எப்படித்தான் பாதை அமைப்பது? அந்தப் பகுதி மக்கள் எப்படித்தான் அங்கு செல்வது? மக்கள் அங்கு எப்படித்தான் வாழ்வது என்பதை நீங்கள் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். வேறு இடங்களான வால்பாறை, மைசூர் போன்ற இடங்களில் உள்ள வனப் பகுதிக்கு ரோடு போட்டு மக்கள் செல்கிறார்கள். அதுபோன்று பல்வேறு இடங்களிலெல்லாம் செய்யும்போது, இந்தச் சாலையை மட்டும் செப்பனிடுவதற்கு அரசுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்பதை நீங்கள் பார்க்கவேண்டும். வனத் துறையிடம் நீங்கள் முடிந்தவரை சொல்லி, அந்தப் பகுதி மக்களின்*



2013 மார்ச் 27]

*வாழ்வாதாரத்தை உயர்த்த, அந்தச் சாலையைச் செப்பனிட்டு, பல்வேறு வகைகளிலும் பயன்படுத்தக்கூடிய வழிகளைக் காண நீங்கள் உறுதுணையாக இருக்கவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மத்திய அரசிடம் கேட்கவேண்டும் என்று சொல்லாமல், எந்தவகையிலாவது சட்டவிதிகளைத் தளர்த்தியாவது அந்தப் பாதையைப் போட்டுத் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்திலே வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள காட்டுப்பட்டி, மாவடப்பு, குழிப்பட்டி, குருமலை, பூச்சிக்கொட்டான்பாறை ஆகிய மலைக் கிராமங்களில் சுமார் 400 குடும்பங்களிலுள்ள மக்கள் வசிக்கின்றனர். இந்தச் சாலையானது ஆனைமலை காப்புக் காட்டின் வழியாக புலிகள் காப்பக மைய மண்டலத்திற்குள்ளாகச் செல்கின்றது. புலிகள் காப்பகம் மைய மண்டலத்திற்குள் அமைந்துள்ளதால் புதியதாக தார்ச் சாலையாக மாற்றி அமைக்கப்படவோ அல்லது வேறு மேம்பாட்டுப் பணிகள் செய்வதாக இருந்தாலோ, அழிவின் விளிம்பிலுள்ள புலிகள் காப்பகத்தின் வாழும் இடம் பாதிக்கப்படும்.*

*மேலும், மேற்காணும் சாலையில் மேம்பாட்டுப் பணிகள் எது செய்ய வேண்டுமானாலும் தேசிய வன உயிரின வாரியத்திடம் முன் அனுமதியைப் பெறவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சாலை அமைக்கப்பட வேண்டுமென்றால் மாவட்ட நிர்வாகத்தின் மூலமாகவோ அல்லது நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகவோ விண்ணப்பிக்க வேண்டும். இதுவரை முறையாக விண்ணப்பங்கள் வரவில்லை. அப்படி விண்ணப்பங்கள் வரப்படுமானால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதியில் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

[2013 மார்ச் 27

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூபாய் 10 இலட்சம் கொடுத்து வெளியே வரவேண்டுமென்று வனத் துறை கூறும்போது, அங்கு சாலை அமைப்பதற்கு யார் அதைச் செய்வது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் சொல்லவேண்டும். மக்கள் அந்தப் பகுதியிலே செல்வது என்றால், மிகச் சிரமமான சூழ்நிலை உள்ளது. அங்கு பள்ளிகள் இருக்கின்றன; சத்துணவுக் கூடம் இருக்கிறது; அங்கன்வாடிக் கூடம் இருக்கிறது. அங்கு ஆசிரியர்கள் செல்வதற்கு மிகச் சிரமமான சூழ்நிலை இருக்கிறது. அங்கு பெண் ஆசிரியர்களைப் போட்டால் அவர்களும் அங்கு பணிக்குச் செல்வது இல்லை. அங்கு வாழக்கூடிய மலைவாழ் மக்கள் கீழே இருக்கக்கூடிய சமவெளிப் பகுதிக்குச் சென்று படிக்கவேண்டுமென்றுதான் நினைக்கிறார்கள். ஆகவே, அந்த மக்கள் படிக்கின்ற சூழ்நிலையும் சிரமமாக உள்ளது. இதையெல்லாம் கருத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே 18 செட்டில்மெண்ட் பகுதிகள் இருக்கின்றன. கோடந்தூர் செட்டில்மெண்ட், தழிஞ்சி செட்டில்மெண்ட் ஆகியவை இருக்கின்றன. இந்த தழிஞ்சி செட்டில்மெண்ட் பகுதிக்குச் செல்லவேண்டுமென்றால், கூட்டாறு பகுதி வழியாகச் செல்லவேண்டும். இந்த மாமன்றத்தில் 12 ஆண்டு காலமாக பல முறை நான் கேட்டு வருகிறேன். அங்கே ஒரு பைப் போட்டு தரைமட்டப் பாலமாவது கட்டிக்கொடுத்தால், அங்கு உற்பத்தி செய்யக்கூடிய நெல் மற்றும் மலைப் பகுதியில் விளைகின்ற விளை பொருள்களை அந்தப் பகுதி மக்கள் கொண்டு செல்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 18 செட்டில்மெண்ட் பகுதியில் இருக்கக்கூடிய மக்களைக் கவனத்திலே எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு சாலை வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஒன்பதாறு வழியாக கேரளா செல்லக்கூடிய சாலையையும் பராமரிக்க வேண்டும். நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சருக்கும் தெரியும், அதையும் பலமுறை கேட்டுள்ளேன். அந்தச் சாலையையும் பராமரிக்கவேண்டுமென்றால் அதுவும் மத்திய வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று சொல்கிறார்கள்.



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு, சுருக்கமாகத் துணை வினா கேளுங்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** அமைச்சர் உரிய ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்த பிறகு, 2011–2012 ஆம் ஆண்டில் 156.30 கிலோ மீட்டர் வனச் சாலைகளும், 2012–2013 ஆம் ஆண்டில் 92.4 கிலோ மீட்டர் வனச் சாலைகளும் அமைத்து மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த மலைவாழ் மக்களுக்கு உதவியுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற பகுதிகளில் வாழ்கின்ற பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வர வேண்டும் அல்லது மாவட்ட நிருவாகத்திடமிருந்து இந்தச் சாலையைச் செப்பனிட வேண்டுமென்ற கோரிக்கை வர வேண்டும். அப்படி வந்தால்தான் மத்திய வனத் துறையிடமிருந்து அனுமதி பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்த சாலையைச் சீர்படுத்திக் கொடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், காட்டுப்பட்டி, மாவடப்பு, குழிப்பட்டி, குருமலை, பூச்சிக்கொட்டான்பாறை ஆகிய மலைக் கிராமங்களில் 400 ஆதிவாசிகள் குடியிருந்து வருகின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வனவிலங்கு சரணாலயம் அமைக்கும் பட்சத்தில் புலிகளுக்குக் கொடுக்கக்கூடிய முக்கியத்துவம் அங்கே மலைகளிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய ஆதிவாசிகளுக்குக் கொடுக்கப்படவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். காலங்காலமாக காட்டில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடியவர்களுக்குப் பாதை வசதிகூட இல்லை. நாடு விடுதலை பெற்று

*65 ஆண்டுகளுக்குப் பின்னாலே இப்படி ஒரு கேள்வி கேட்க வேண்டியுள்ளது.*

*கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியிலிருந்து, கோவை மாவட்டம் வழியாக வால்பாறை சட்டப் பேரவைத் தொகுதிக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டும். எனவே அந்தத் தடத்தை மலைவாழ் மக்கள் நடந்து செல்வதற்கும், கீழேயிருந்து பொருட்களை வாங்கிச் செல்வதற்கும், நியாய விலைக் கடைகளிலிருந்து பொருட்களை வாங்குவதற்கும், பள்ளிகளுக்குச் செல்வதற்குமான தடத்தை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதோடு, கோவை மாவட்டம், டாப்–ஸ்லிப் பகுதிகளுக்குச் செல்வதற்கான சாலையையும் அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய இடங்களிலே வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்காக, உணவுப் பொருட்களை கொண்டு செல்லும் வாகனங்கள், சுகாதாரத் துறையினுடைய நடமாடும் மருத்துவ ஊர்திகளெல்லாம் அந்தச் சாலை வழியாகத்தான் சென்று வருகின்றன. பொதுவாக, எந்தப் பகுதியாக இருந்தாலும், அந்த மாவட்ட நிருவாகம் அந்தப் பகுதிவாழ் மக்களுக்குச் சாலை வேண்டுமென்று வனத் துறையிடம் விண்ணப்பித்தால், மத்திய வனத் துறையிடமிருந்து அனுமதியை பெற்று, அந்தச் சாலையை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். ஏனென்றால், இதுவரை வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்படி புதிய சாலைகள் அமைக்கும் மொத்தம் 51 நிகழ்வுகளில், மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று 105.782 ஹெக்டேர் வனச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. அதனால் மாவட்ட நிருவாகமோ அல்லது நெடுஞ்சாலைத் துறையோ ஏதாவது ஒரு துறை முறையாக விண்ணப்பித்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதை முறையாக ஆய்வு செய்து அந்த மக்களுக்கு சாலை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**82—**

## இரயில்வே மேம்பாலம்

***2777—திரு. சு. குணசேகரன்:**

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை–தொண்டி தேசிய நெடுஞ்சாலை (NH 230) சிவகங்கை நகரில் இரயில்வே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*மதுரை–தொண்டி தேசிய நெடுஞ்சாலை, (NH 230) சிவகங்கை நகரில் இரயில்வே கடவு எண் 441–க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்சொன்ன சாலையில் நீண்ட காலமாக மேம்பாலம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையைக் கடந்த முறை சட்டமன்றக் கூட்டத் தொடரில் முன்வைத்தேன். இன்றைக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ரூ.20 கோடி மதிப்பீட்டில் அதற்கான ஒப்புதலைப் பெற்று இன்னும் ஒரு மாத காலத்தில் டெண்டர் விடுவதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேலூர்–இராமநாதபுரம் சாலையில் சிவகங்கை அருகில் ஒரு Railway Crossing இருக்கிற காரணத்தால், சிவகங்கை நகரத்தில் இருக்கக்கூடிய பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அது மாநிலச் சாலையாக*

[2013 *மார்ச்* 27

இருப்பதால், மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக மேம்பாலம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை–தொண்டி தேசிய நெடுஞ்சாலை சிவகங்கை நகரில், ரூ.20 கோடி செலவில் இரயில்வே கடவு எண் 441–க்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்டுவதற்கு 2012–2013 ஆம் ஆண்டு திட்டப் பிரேரணையில் சேர்க்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த இரயில்வே மற்றும் தேசிய நெடுஞ்சாலைப் பணிகளுக்கான வரைபடம் மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டவுடன் பணிகள் தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கேயே மற்றொரு மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இரயில்வே கடவின் குறுக்கே உள்ள அந்த மாநிலச் சாலையில் ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்த இரயில்வே கடவின் வழியாகச் செல்லும் வாகனங்களின் அலகுகள் ஒரு இலட்சத்திற்கும் மேல் இருந்தால், அந்தப் பகுதியில் மேம்பாலம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகம்தான் வேகமாக நகரமயமாகி வருவதாக ஆய்வுகள் சொல்கின்றன. எனவே, தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி, முன்னேற்றம் போன்றவற்றைக் கணக்கில் கொண்டு, இன்றைக்குப் பல நகரங்களில் புறவழிச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. வாகனங்களால் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிப்பதற்கும், விரைவாகச் செல்வதற்கும்,



2013 *மார்ச்* 27]

தடையில்லாமல் செல்வதற்கும் அந்தப் புறவழிச் சாலைகள் உபயோகப்பட வேண்டுமென்ற நோக்கத்திற்காகத்தான் அவை அமைக்கப்படுகின்றன. அப்படிப் புறவழிச் சாலைகள் அமைக்கப்படுகிற இடங்களில் எல்லாம், வாகனங்களின் அலகு எவ்வளவு என்பதைப் பொறுத்துத்தான் பாலங்கள் அமைக்கப்படுகின்றன. அந்த அலகை தீர்மானிக்கின்ற வரையில், அங்கே மேம்பாலங்கள் இல்லாமல், மேலும் ஒரு புதிய நெருக்கடியைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிற நிலை நீடிக்கிறது. எனவே, புறவழிச் சாலைத் திட்டம் எந்த நோக்கத்திற்காகச் செயல்படுத்தப்படுகிறதோ, அந்த நோக்கம் அங்கே சிதைக்கப்படுகிறது. எனவே, இந்தக் காரணத்தை மாநில அரசு, இரயில்வே துறை மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளிடம் எடுத்துச் சொல்லி, புறவழிச் சாலைகளுக்குச் சிறப்பு அனுமதியைப் பெற்று, அந்தச் சாலைகளை அமைக்கின்ற நேரத்திலேயே, மேம்பாலங்களையும் அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அந்தக் கருத்தை வலியுறுத்தி மாநில நெடுஞ்சாலைத் துறை அனுப்புமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதற்குச் காரணமாகச் சொல்லப்படும் வாகனங்களின் அலகிற்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென்று மீண்டும் மீண்டும் அழுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய இரயில்வே துறையால் நிர்ணயிக்கப்பட்ட ஒன்று; மாநில அரசால் அது நிர்ணயிக்கப்படவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புறவழிச் சாலையினுடைய பயன்பாட்டைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், மத்திய அரசு, மாநில அரசு, இரண்டு அரசுகளும் சேர்ந்துதான், இரயில்வே கடவுகளிலே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்களை அமைத்து வருகின்றன. அதற்கு ஆகின்ற செலவில், பாதி மாநில அரசும், பாதி மத்திய அரசும் ஏற்க வேண்டுமென்ற அடிப்படையில், அந்தப் பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, ஒரு இலட்சம் அலகுகளுக்குக் கீழேயிருந்தால், அங்கே மேம்பாலம் அமைக்க, மாநில அரசாங்கம்தான் அதற்கான முழுத் தொகையையும் செலவு செய்து, கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே

[2013 மார்ச் 27

கோரிக்கையைத் தெரிவித்திருக்கின்றார்கள். அங்கேயிருக்கின்ற நிலைமையை ஆராய்ந்து, நிதிநிலைமைக்கு ஏற்ப அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி, தென்காசி நகராட்சிப் பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலப் பணியில், தற்போது இரயில்வே துறையின் பணி முடிவுற்றுள்ளது. இப்பாலத்தின் இரு பக்கங்களிலும் பாலத்தை இணைக்க வேண்டிய பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. நெடுஞ்சாலைத் துறை மூலமாக இப்பணிக்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு, இறுதி செய்யப்படாத நிலையில் உள்ளதாக அறிகிறேன். இப்பாலம் கட்டும் பணி தொடங்கப்பட்டதிலிருந்து இன்று வரையில், இரயில் நிலையத்திற்குச் செல்லக்கூடிய பயணிகளுக்கும், இரயில் நிலையம் அருகேயுள்ள வட்டாட்சியர் அலுவலகம், நீதிமன்றம், மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பொதுப் பணித் துறை அலுவலகம், மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அலுவலகம் போன்ற அரசு அலுவலகங்களுக்குச் சென்று வர மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும், தென்காசியில் உள்ள பழைய, புதிய பேருந்து நிலையங்களுக்குச் சென்று வர ஊருக்கு வெளியே *5* கி.மீ. தூரம் சென்று வர வேண்டியுள்ளது. எனவே, தென்காசி இரயில்வே மேம்பாலத்தினுடைய இறுதிப் பணியினை விரைவாக முடிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தென்காசியிலே விரைந்து அந்தப் பாலப் பணியினை மேற்கொள்ள வேண்டுமென்று ஒரு கருத்தினை இங்கே குறிப்பிட்டிருக்கின்றார். துறையின் மூலமாக விரைந்து நடவடிக்கை எடுத்து, டெண்டர் விட்டு, அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் குறுக்குச் சாலையில் உள்ள அன்னலக்ரஹாரம் ஊராட்சியில் எல்.சி.–*270* எண்ணுள்ள இரயில்வே கேட் தினமும் *36* முறை இரயில் போக்குவரத்திற்காக மூடப்படுகிறது. அதனால் கும்பகோணம் நகரின் இரு பகுதிகளிலும் சென்று வரும் வாகனங்களினால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. கும்பகோணம் நகருக்கு மிக அருகில் மகளிர் கல்லூரி, குறிப்பாக மகாமகக் குளம் மற்றும் மருத்துவமனைகள் உள்ளன. எனவே, பள்ளி, கல்லூரிக்குச் செல்லும் மாணவ, மாணவிகள், அரசு ஊழியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், பொது மக்கள் அன்றாடம் சிரமத்திற்குள்ளாவதைத் தடுக்கும் விதத்தில், அங்கே ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கும்பகோணம், எல்.சி.–*270* எண்ணுள்ள இரயில்வே கேட் அமைந்துள்ள பகுதியில் இரயில்வே மேம்பாலம் கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். இரயில்வே மேம்பாலம் கட்டும்போது பின்பற்றப்படும் விதிமுறைகளைப் பற்றி ஏற்கெனவே நான் இந்த அவையிலே கூறியுள்ளேன். ஒவ்வொரு முறையும் இரயில்வே கேட் மூடப்படுகின்றபோது, இரயில்வே கேட்டின் இருபுறமும் உள்ள சாலைகளிலே எவ்வளவு வாகனங்கள் இருக்கின்றன என்பதை *24* மணி நேரத்திற்கு கணக்கிட்டு, சராசரி செய்து, ஒரு இலட்சம் வாகனங்கள் இருக்குமேயானால் அந்தப் பகுதியிலே மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய இரயில்வே துறை ஒப்புதல் வழங்குகின்றது. வாகனங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்திற்குக் குறைவாக இருக்கும்பட்சத்தில், மேம்பாலம் அமைப்பதற்கான முழு செலவையும் மாநில அரசே

[2013 மார்ச் 27

ஏற்றுக்கொள்கின்ற நிலை இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினைப் பரிசீலனை செய்து, நிதி நிலைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**83—**

## ஆவின் பாலகம்

***2020—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் புதிய பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைத்து பால் பொருட்கள் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். சேலம் புதிய பேருந்து நிலையத்திற்கு வரும் பொதுமக்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில், புதிய பேருந்து நிலையம் அருகில், பூமாலை வணிக வளாகத்தில் ஒரு ஆவின் பாலகம் அமைக்கப்பட்டு, பால் மற்றும் பால் பொருட்களை ஆவின் பணியாளர்களைக் கொண்டு விற்பனை செய்து வருகிறது. மேலும், சேலம் மாநகராட்சி ஆணையர் அவர்களிடம், சேலம் புதிய பேருந்து நிலையத்திற்குள், சேலம் ஆவின்மூலம் பாலகங்கள் அமைத்து, பால் மற்றும் பால்



2013 மார்ச் 27]

பொருட்கள் விற்பனை செய்ய, இடம் ஒதுக்கீடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. தேவையான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், சேலம் ஆவின்மூலம் புதிய பாலகங்கள் அமைத்து, ஒன்றியப் பணியாளர்களைக்கொண்டு, பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை மேற்கொள்ளப்படும். மேலும், பாலகங்கள் நடத்த விருப்பமுள்ளவர்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டால், நேரடித் தேர்வின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கும் பாலகங்கள் நடத்த உரிமம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை மணிவேல், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**84—**

## மேம்பாலம்

***990—திரு. துரை. மணிவேல்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் மாவட்டம், அரியலூர் ஒன்றியம், மருதையாற்றின் குறுக்கே (அம்பலவார்கட்டளை முதல் சுண்டக்குடி வரை) மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், அம்பலவார்கட்டளை – சுண்டக்குடி ரோடு மருதையாற்றின் குறுக்கே ஏற்கெனவே அமைந்துள்ள பாலமானது வெள்ளக் காலங்களில் நீரில் மூழ்குவதால், 10 நாட்களுக்கும் மேலாக போக்குவரத்து இடையூறு ஏற்பட்டு வந்தது. அப்பகுதியிலுள்ள சுமார் 45 கிராமங்கள் அப்பாலம்மூலம் பயனடைந்து வந்தன. அப்பாலம், விவசாயப்

[2013 மார்ச் 27

*பொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்ல வசதியாக இருந்தது. அப்பாலம் மழைக் காலங்களில் நீரில் மூழ்கும்பட்சத்தில், அப்பகுதி மக்கள் விவசாயப் பொருட்களை விற்பனை செய்ய இயலவில்லை; இதனால், அப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. எனவே, அப்பகுதியில் உயர்மட்டப் பாலம் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, 'உங்களுக்காக நான் என்பதோடுமட்டுமல்ல, உங்களால் நான்' என்கின்ற உயரிய நோக்கோடு பணியாற்றிக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) 14–11–2011 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், அம்மா அவர்களால் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டு, மேற்காணும் திட்டத்திற்கு ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடும், நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் வரும் 5–4–2013 அன்று கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டவுடன் விரைவிலே பாலம் அமைக்கும் பணி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.*

**திரு. துரை. மணிவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரிகால் பெருவளத்தான் வாளெடுத்துப் போரிட்டு வரவழைத்த காவிரியை, வெள்ளைத் தாளெடுத்துப் போரிட்டு வெற்றி கொண்ட தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் தஞ்சை இருக்கிறது; ஆனால், தமிழகமே ஒருநாள் தஞ்சையில் தாய்க்கு நன்றி சொல்ல இருந்தது. தாயின் பேனா தலை குனியும் போதெல்லாம், தமிழகம் தலை நிமிரும் தாயே! முல்லை–பெரியாறு என்றாலும், பாலாறு என்றாலும் தமிழ் என்றாலும், தமிழன் வாழ்வு என்றாலும் தங்கள் விடாமுயற்சியால் வெற்றிதான் தாயே! சாதனைக்கு என்றே இறைவனாய் வந்திருக்கும் எங்கள் இதய தெய்வமே அம்மா! இந்தியா சுதந்திரம் அடைந்த காலம் முதல் எவராலும் முடியாது என்று இருந்த அரியலூர் தொகுதி, சுண்டக்குடி–அம்பலவார்கட்டளை, மருதையாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைப்பதற்குப் போராடிய மக்களின் கோரிக்கையை ஏற்று, 10 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த, ஆயிரம் கோடி நிலவே எங்கள் அம்மா! தங்கள் மலர்ப் பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களை அரியலூர் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் சமர்ப்பிக்கின்றேன் தாயே!*



2013 மார்ச் 27]

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**85—**

## கால்நடை மருத்துவமனை

***5318—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பர்கூர் தொகுதி, பன்னந்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனிதர்களுக்கு இணையாக கால்நடைகளுக்கும் மருத்துவ வசதி செய்து தர வேண்டும் என்று அறிவுறுத்தியதன்பேரில் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு பர்கூர் தொகுதி, பன்னந்தூர் ஊராட்சி, பன்னந்தூர் கிராமத்திலே அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினால், அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று அமைக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி.*

**திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் வாழ்ந்து வணங்குகின்ற புரட்சித் தாய்! நாம் போற்றி வாழும் புரட்சித் தாய்! அம்மா, தங்கள் பாதம் பதித்த மண்ணில் என்னையும் நடக்கச் செய்து, தாங்கள் வாழ்ந்த வரலாற்று சிறப்பு மிக்க பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் இந்த ஏழைத் தொண்டனை, ஊர் தெரியா, பேர் தெரியா சிற்றூர் கிராமத்தில் பிறந்த என்னை இன்று சான்றோர் பெருமக்கள் உள்ள*

இந்தக் கொலு மண்டபத்தில் அமரச் செய்து, தாங்கள் வாழ்ந்து வரலாறு பதித்த அந்த பர்கூர் சட்டமன்றத் தொகுதி மண் உள்ளளவும், மக்கள் உள்ளளவும் அந்த மக்கள் போற்றி வாழ்வார்கள். அப்படிப்பட்ட நற்பல திட்டங்களையெல்லாம் தந்து, இன்று நாடெங்கும் உற்றுப் பார்க்கிற தொகுதி பர்கூர் சட்டமன்றத் தொகுதி என்கிற வகையிலே எனக்கு மக்கள் பணியாற்றிட வாய்ப்பளித்த நான் வணங்குகிற அன்னை! உலக நற்றமிழர்களின் உள்ளங்களிலே நீக்கமற நிலைத்து நின்று வாழ்கிற அன்னை அவர்களே! தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதி, பன்னந்தூர் ஊராட்சி என்பது 5 ஊராட்சிகளை உள்ளடக்கிய மையப் பகுதி. பன்னந்தூர் ஊராட்சி, பாப்பாரப்பட்டி ஊராட்சி, தாமோதரஅள்ளி ஊராட்சி, குடிமேல்அள்ளி ஊராட்சி, வாடமங்கலம் ஊராட்சி ஆகிய 5 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய அந்த மையப் பகுதியான பன்னந்தூர் ஊராட்சி, பன்னந்தூர் கிராமத்தைச் சார்ந்த அத்தனை ஊராட்சிகளிலும், அத்தனை கிராமங்களிலே வாழ்கிற 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். 20 ஆயிரம் ஆடுகள், 10 ஆயிரம் மாடுகள், 8 கோழிப் பண்ணைகள் உள்ளன. ஆக, இந்தக் கால்நடைகளுக்காக நீண்ட காலமாக அப்பகுதி மக்கள் வைத்துள்ள கோரிக்கையை நிறைவேற்றி நாகரசம்பட்டியிலே 13 கிலோ மீட்டர் தூரத்திலே கால்நடை மருத்துவமனை, காரிமங்கலத்திலே 11 கிலோ மீட்டர் தூரத்திலே கால்நடை மருத்துவமனை, அரசம்பட்டியிலே 7 கிலோ மீட்டர் தூரத்திலே கால்நடை மருத்துவமனை, ஆக, இங்கே இந்த ஊராட்சியை மையமாகக் கொண்டு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தந்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலான நல்லாட்சிக்கு அந்தப் பகுதி மக்கள் என்றைக்கும் நன்றி உள்ளவர்களாவார்கள். ஆகவே, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களே, தங்கள் பாதம் பணிந்து பர்கூர் சட்டமன்றத் தொகுதியின் மக்கள் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.





**86—**

## சொந்தக் கட்டடம்

***5691—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, பி. அழகாபுரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலுள்ள ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, பி. அழகாபுரியில் வாடகைக் கட்டடத்தில் ஆதி திராவிடர் பெண்கள் விடுதி செயல்பட்டு வந்தது. எங்கெல்லாம் ஆதி திராவிடர் நல விடுதிகள் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வந்ததோ, அங்கெல்லாம், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின் சொந்தக் கட்டடம் கட்ட ஆணை பிறப்பித்ததனைத் தொடர்ந்து அரசாணை நிலை எண் 18, ஆதி திராவிடர் நலத் துறை, நாள் 12–3–2013–ன்படி 44 விடுதிகள் கட்டுவதற்கு ரூபாய் 35.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில் பி. அழகாபுரியில் உள்ள ஆதி திராவிடர் பெண்கள் விடுதியைக் கட்டுவதற்கு 79 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, பணிகள் துவங்கும் நிலையில் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து.

**திரு. பி.கே. வைரமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்ற வைர வரிகளுக்கு ஏற்ப வரியில்லா பட்ஜெட்டை வாரி வழங்கி, "திட்டங்களுக்காக மக்கள் இல்லை, மக்களுக்காகவே திட்டங்கள்" என்ற தாரக

[2013 மார்ச் 27

மந்திரத்தைச் செயல்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அள்ளித் தரும், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பினை அரசு இதழில் வெளியிட வேண்டி சட்டப் போராட்டம் நடத்தி, காவிரி நீரை மீட்டுத் தந்த காவிரித் தாயே! கருணைத் தெய்வமே! பொன்னியின் செல்வியே! திருமயம் தொகுதியில் பி. அழகாபுரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட நிதி வழங்கி ஆணையிட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் கோடானுகோடி நன்றியை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**87—**

## சொகுசுப் பேருந்து

***8337—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, பேரையூரிலிருந்து சென்னைக்குக் கூடுதலாக சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதி, பேரையூரிலிருந்து சென்னைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை சார்பில் ஒரு சாதாரண பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி பேருந்தில் பயணிகளின் எண்ணிக்கை என்பது டிசம்பர் மாதம் 52 சதவிகிதம், ஜனவரி மாதம் 56 சதவிகிதம், பிப்ரவரி மாதம் 50 சதவிகிதம் என சராசரியாக 53 சதவிகிதம் அளவிற்கு மட்டுமே



2013 மார்ச் 27]

பயணிகள் பயணம் செய்து வருகின்றனர். எனவே, பயணிகளுடைய எண்ணிக்கையின் அளவு அதிகரிக்கும்பொழுது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஆணையைப் பெற்று, கூடுதலாகப் பேருந்துகள் இயக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களைத் தேடி மக்கள் அலைந்த காலத்தைப் போக்கி, மக்களைத் தேடி அரசு அலுவலர் வருவார்கள் என்று புரட்சிகரமான திட்டம், “அம்மா திட்டம்” என தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) கேட்டதையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற இந்த நல்ல வேளையில் பேரையூரிலிருந்து சென்னைக்கு வரக்கூடிய பேருந்து சாதாரண பேருந்தாக இருக்கிற காரணத்தினால், மக்கள் சில வசதிகளுக்காகத் தனியார் பேருந்துகளில் சென்று கொண்டிருக்கிறார்கள். அதற்காக, தற்போது அமைக்கப்பட்டுள்ள புதிய வடிவம் கொண்ட புதிய பேருந்துகளை வழங்கினால், கூடுதலாக மக்கள் பயணம் செய்யத் தயாராக இருக்கிறார்கள். அப்படி வருகின்றபொழுது, இப்போதுள்ள பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளையும், அதற்காக பயணிகள் கூடுதலாக வருகின்றபோது, கூடுதலாகப் பேருந்துகளை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய வரலாற்றில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகளின் எண்ணிக்கை கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் 772 பேருந்துகளாக உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றில் 442 புதிய பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் திருக்கரங்களால்

[2013 மார்ச் 27

கொடி அசைத்து துவக்கி வைக்கப்பட்டு, மக்களுடைய பயன்பாட்டிற்குச் சென்று கொண்டிருக்கின்றன. 330 பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்காகத் தயார் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மனுவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று புதியதாக 330 பேருந்துகள் வருகின்றபொழுது, அந்தப் பகுதியிலிருந்தும் சொகுசுப் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களால் அனுமதிக்கப்பட்ட புதிய பேருந்துகளை இயக்குகின்றபொழுது பேரையூரிலிருந்து சென்னைக்கு வருங்காலத்தில் புதிய பேருந்து இயக்க வகை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**88—**

**மணிமண்டபம்**

*20290—**திரு. கே.பி.பி. பாஸ்கர்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லில் கவிஞர் இராமலிங்கம் பிள்ளைக்கு மணிமண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2013 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வணக்கம். தமிழகம் வளம் பெற தடையிலா பணி செய்யும் தமிழினத் தலைவி! திராவிட இயக்க திருவிளக்கை கண்போன்று காத்திடும் திராவிடத் தலைவி! இந்திய தேசிய ஒருமைப்பாட்டை உயிரினும் மேலாகப் போற்றும் தேசியத் தலைவி! நாட்டுக்கு உழைத்த நல்லவர்களை, தமிழுக்குத் தொண்டு செய்த சான்றோர்களை, தமிழன் மேன்மைக்கு பாடுபட்ட தலைவர்களைப் போற்றி வணங்கி அவர்களுக்கு நினைவகங்களும், மணிமண்டபமும் எழுப்பி, உயர் மதிப்பையும், மரியாதையையும் உவந்து அளிக்கும் உன்னதத் தலைவி! மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) எனது பதிலை இந்த அவைக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரில் உள்ள நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் பிறந்த இல்லம் நினைவு இல்லமாக மாற்றப்பட்டு அரசால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அந்த நினைவிடத்தில் 10–4–2006 அன்று நூலகம் அமைக்க ஆணை வெளியிடப்பட்டு நூலகத் துறையின்மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த நூலகத்தில் ஏறத்தாழ 600 நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் நாள்தோறும் நாமக்கல் கவிஞர் நினைவிடத்திற்கு வருகை தந்து பார்வையிடுகின்றனர். இந்நூலகம் பொதுமக்களால் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் நாமக்கல்லில் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

[2013 மார்ச் 27

**திரு. கே.பி.பி. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அன்பும், ஆர்வமும், அடக்கமும் சேர்ந்தும்
உண்மைத் தன்மையும், உறுதியும் மிகுந்தும்
தன்னல மறுப்பும், சகிப்புத் தன்மையும்,
இயல்பாய் அமைந்தும் இன்பச் சொரூபமாய்த்
தாயாய் நின்று தரணியை தாங்கும்"

என்ற நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் பாடல் வரிகளுக்கேற்ப தங்கத் தமிழ்நாட்டை தரணி போற்றும் மாநிலமாக உருவாக்கிக் கொண்டிருக்கும் காவிரி காத்த தமிழகத்தின் பொன்னியின் செல்வி, தமிழ்நாட்டின் காவல் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் கவியும், பாடலும், பேச்சும் இந்திய மண்ணில் உள்ள மக்களின் சுதந்திர தாகத்தை உணர்ச்சிப் பிழம்பாய் மாற்றுவதற்குக் காரணமாய் இருந்த அந்தக் கவிஞனின் சிறப்பு வரிகளான,

"கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது"
"தமிழன் என்னும் ஒரு இனமுண்டு
தனியே அவனுக்கு ஒரு குணமுண்டு"

என்ற உலகப் புகழ்பெற்ற வரிகள் தமிழ் நெஞ்சங்களிடையே நீங்காத இடம் பெற்றுள்ளது. இப்பெரும் கவிஞரின் நினைவையும் பணியையும் பாராட்டும் வகையிலும், போற்றும் வகையிலும் நாமக்கல் நகரில் அவருக்கு நினைவு மண்டபம் கட்ட வேண்டுமென்பது நாமக்கல் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகும். இப்பெரும் கவிஞரின் புகழ் குன்றாது, குறையாது மக்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் கவிஞனுக்கு நாமக்கல்லில் நினைவு மண்டபம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்து அவரது புகழுக்குப் புகழ் சேர்க்க வேண்டுமாய் அன்போடு கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாழ்நாள் முழுவதும்



2013 மார்ச் 27]

தன்னலமற்று மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த மக்கள் போற்றும் தலைவர்கள், தமிழ்ச் சான்றோர்கள், தியாகச் செம்மல்கள் ஆகியோரின் சிறப்புகளையும் பெருமைகளையும் என்றென்றும் நினைவில் நிறுத்தி போற்றிப் புகழ்ந்திடும் வகையில் இத்துறையால் 55 நினைவகங்கள், 3 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள் மற்றும் ஒரு நினைவுப் பூங்கா உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவிடத்திற்கு 2011–2012 ஆம் நிதியாண்டில் ரூபாய் 50,000 பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பழுதுபார்க்கப்பட்டது. மேலும், 2012–2013 ஆம் நிதியாண்டில் பராமரிப்புப் பணிகளுக்கென ரூபாய் இரண்டு இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, தற்போது நல்லமுறையில் இயங்கி வரும் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் பிறந்த இல்லம் நினைவு இல்லமாக இருக்கின்ற காரணத்தினால், தற்போது மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை. தேவைப்படுகின்ற காலங்களில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மணிமண்டபம் அமைக்கின்ற சூழ்நிலை அமையும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

**திரு. கே.பி.பி. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் பிறந்து, வாழ்ந்த இல்லம் நினைவு இல்லமாக இயங்கி வருகிறது. அங்குள்ள பகுதிநேர ஊர்ப்புற நூலகத்தை முழுநேர நூலகமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அமைத்துத் தருமாறு அன்போடு கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், வாழ்ந்த தலைவர்களுக்கும், மறைந்த தலைவர்களுக்கும், தமிழ்ச் சான்றோர்களுக்கும் நினைவிடங்கள், சிலைகள், நினைவு மணிமண்டபங்கள்

[2013 மார்ச் 27

போன்றவை அமைத்து அவர்களுடைய புகழுக்குப் பெருமை சேர்க்கின்ற நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் மட்டுமல்லாது, தமிழகத்தில் வாழ்ந்த தலைவர்களுக்கு மட்டுமல்லாது, வெளிநாட்டில் இருந்து வெள்ளைக்காரராக வாழ்ந்து, இங்கே தேனி மாவட்டத்தை உள்ளடக்கிய 6 மாவட்ட விவசாய மக்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய பென்னி குயிக் அவர்களுக்கு மணிமண்டபமும், சிலையும் அமைத்து வருங்கால சந்ததிகள் தெரிந்துகொள்கின்ற வகையிலே, வரலாற்றிலே நன்றி சொல்லக்கூடிய தலைவி நான் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நிரூபிக்கின்ற வகையிலே இன்றைக்கு உலகிற்கு வெளிப்படுத்திக் கொண்டிருப்பவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆகவே, அம்மா அவர்களுடைய காலத்தில் உறுப்பினர் கோருகின்ற அந்த நூலகமானது முழுநேரம் பயன்படக்கூடிய அளவிலே செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**89—**

## சமுதாயக் கூடம்

***21310—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை அருள்மிகு நாடியம்மன் ஆலயத்தில் புதிய சமுதாயக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அருள்மிகு நாடியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயிலாகும் மிகவும் பிரசித்திபெற்ற



2013 மார்ச் 27]

பிரார்த்தனைத் தலமாக விளங்கும் இத்திருக்கோயில் நிர்வாகம் செயல் அலுவலர் மற்றும் தக்காரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் 1 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதற்கு முன்பாக சுமார் 60x50 = 3,000 சதுர அடி அளவில் தீப்பிடிக்காத கூரையிலான தற்காலிக மண்டபம் ஒன்று பக்தர்களின் வசதிக்காகப் போடப்பட்டுள்ளது. இம்மண்டபத்தினை நிரந்தரக் கான்கிரீட் மண்டபமாக மாற்றி அமைத்திட உபயதாரர்கள்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் மேலும் சமுதாயக் கூடம் கட்டுவதற்குப் போதிய இட வசதி இல்லாத காரணத்தினால் அதற்கான முன்மொழிவு ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரசித்தி பெற்ற அந்தக் கோயிலிலே அதிகமான திருமணங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இடம் இல்லாவிட்டாலும்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, முன்புறம் உள்ள தீப்பிடிக்காத கூரை அமைக்கப்பட்டுள்ள அந்தப் பகுதியை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறியிருக்கிறார்கள். அதனை விரைந்து எடுத்து, பக்தர்கள் உதவியோடு அதனை கான்கிரீட் தளமாக மாற்றிவிட்டார்கள் என்று சொன்னால், பல்வேறு திருமண நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு அது நிச்சயமாக உதவிகரமாக இருக்கும். எனவே, அதனை விரைவில் செய்து கொடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குண்டான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**90—**

## புதிய வட்டம்

*__22333—திரு. நயினார் நாகேந்திரன்:__

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலி வட்டத்தினை இரண்டாகப் பிரித்து மானூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டமானது 4 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்டிருப்பதாலும், நிர்ணயிக்கப்பட்ட வருவாய் கிராமங்கள் 30–க்கும் குறைவாக இருப்பதாலும், அரசாணை எண் 176 (1டி), வருவாய்த் துறை, நாள் 15–6–2012–ன்படி, திருநெல்வேலி வட்டத்தைப் பிரித்து மானூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

**திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு கண்டங்களில், 63 நாடுகளில் வாழ்கின்ற உலகத் தமிழர்களின் ஒப்பற்ற ஒரே தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்னல்களில் சிக்கித் தவிக்கும் இலங்கைத் தமிழர்களின் ஒரே பாதுகாவலர், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மானூர் ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதி. தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. மாண்புமிகு அம்மா அவர்களின்



2013 மார்ச் 27]

அரசுத் திட்டங்களை இந்தப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல ஏதுவாக. திருநெல்வேலி வட்டத்தினை இரண்டாகப் பிரித்துத் தருமாறு கேட்டுக்கொள்வதோடு, திருநெல்வேலி தாலுகா அலுவலகம், அதற்கடுத்தாற்போல் உள்ள சங்கரன்கோவில் தாலுகா அலுவலகம், இந்த இரண்டு தாலுகா அலுவலகங்களுக்கும் இடையே சுமார் 56 கிலோ மீட்டர் தூரம் இருக்கின்றது. இந்த இரண்டு தாலுகாக்களுக்கு மத்தியில் மானூர், மேலநீலிதநல்லூர் என்ற இரண்டு ஒன்றியங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு ஒன்றியங்களின் கடைக்கோடியில் இருக்கின்ற மக்கள் தாலுகா அலுவலகத்திற்கு சராசரியாக சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவிலே வந்து பட்டாக்கள் பெறுவதற்கும், அம்மா அவர்களின் திட்டங்களான ஏழையெளிய மற்றும் நலிந்தோர் திட்டங்களைப் பெறுவதற்கும் சிரமமாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து, திருநெல்வேலி வட்டத்தினை இரண்டாகப் பிரித்து மானூரைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு புதிய வட்டம் அமைத்துத் தருமாறு கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு விரைந்து போய்ச் சேர வேண்டும் என்பதே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அரசினுடைய குறிக்கோள் ஆகும். 'அரசை நாடி மக்கள்' என்றிருந்த நிலையை மாற்றி, 'மக்களை நாடி அரசு' என்கின்ற குறிக்கோளுடன் மக்களின் அன்றாடத் தேவைகளை விரைந்து பெறுவதற்கும், கால விரயத்தை கட்டுப்படுத்தி மக்களுடைய அலைச்சலைக் குறைக்கின்ற வகையிலே, பெருகி வருகின்ற மக்கள் தொகையினுடைய அடிப்படையில், வருவாய்த் துறையிலே மறுமலர்ச்சி ஏற்படுத்துகின்ற விதத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, புதிய வட்டங்களைப் பிரித்து உருவாக்குவதற்கு ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்துள்ளார்கள். வருவாய் நிருவாக ஆணையர், நில நிருவாக ஆணையர், நிலச் சீர்திருத்த ஆணையர் ஆகியோரைக் கொண்ட இந்தக் குழு, தமிழ்நாட்டிலே உள்ள பிரிக்கப்படுகின்ற வட்டங்களில் மக்கள் தொகையினுடைய

[2013 மார்ச் 27

அடிப்படையில், அதனுடைய பரப்பளவினுடைய அடிப்படையில், வருவாய் கிராமங்களினுடைய அடிப்படையில், ஆய்வு செய்து அளிக்கப்படுகின்ற பரிந்துரைகளின் அடிப்படையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–10

தமிழ்நாட்டிலே 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகையானது கணக்கெடுக்கப்படுகிறது. 2011 ஆம் ஆண்டிலே மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்டதன் அடிப்படையிலே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதி மக்கள்தொகையின் எண்ணிக்கையை பூர்த்தி செய்வதாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதி மக்களுடைய விருப்பத்தினைப் பூர்த்தி செய்யவேண்டுமென்கிற பேராவலின் அடிப்படையில், உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

**திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியில், கல்குளம் வட்டத்தில், தற்போது 64 வருவாய் கிராமங்கள் உள்ளன. மக்கள்தொகை அதிக அளவில் இருப்பதுடன் பரப்பளவில் மிகப் பெரியது. வட எல்லையான அப்பர் கோதையாறிலிருந்து தக்கலையில் இருக்கும் வட்டாட்சியர் அலுவலகம் வரை வந்து செல்ல சுமார் 80 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே,



2013 மார்ச் 27]

பொதுமக்கள் வசதிக்காக கல்குளம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருவட்டாறு அல்லது செருப்பாலூரை தலைமையிடமாகக்கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியைப் பொறுத்தவரையில், அரசு பதவியேற்ற 20 மாத காலத்தில் தமிழகத்தில் 9 புதிய வட்டங்களை அறிவித்து, மக்களுக்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியில் இருந்தபோது, ஐந்தாண்டுக் காலத்தில் மொத்தமாக 14 வட்டங்களை மட்டுமே உருவாக்கினார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 20 மாத கால பொற்கால ஆட்சியில் 9 வட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

மக்களுடைய தேவைகள், அரசினுடைய திட்டங்கள் மக்களுக்கு விரைந்து சென்று சேரவேண்டும் என்கின்ற அடிப்படை நோக்கத்தோடு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து திட்டங்களைத் தீட்டி வருகிறது. அந்த அடிப்படையிலேகூட நேற்று இந்தச் சட்டமன்றப் பேரவையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. சு. குணசேகரன் அவர்கள் பேசுகின்றபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அதிகாரிகளைத் தேடி மக்கள் செல்கின்ற காலம் மாறி மக்களைத் தேடி அதிகாரிகள் செல்லக்கூடிய அம்மா திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாகப் பெருமையோடு சுட்டிக்காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திட்டங்களை விரைந்து பெறவேண்டுமென்கின்ற நோக்கத்தோடு மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற காரணத்தினாலே அவை குழுவினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாவட்ட

[2013 மார்ச் 27

ஆட்சியருடைய அறிக்கைகள் பெறப்பட்டு, புதிய வட்டங்கள் உருவாக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### இலங்கை அரசின் தமிழின அழிப்பினைக் கண்டித்து, சர்வதேச பொது விசாரணை கோரியும் மத்திய அரசின் நிலைப்பாட்டைக் கண்டித்தும் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் போராட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இலங்கை அரசின் தமிழின அழிப்பினைக் கண்டித்து, சர்வதேச பொது விசாரணை கோரியும், மத்திய அரசின் நிலைப்பாட்டைக் கண்டித்தும், தமிழகம் முழுவதுமுள்ள கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் நடத்திவரும் போராட்டம் குறித்தும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன், திரு. எ.வ. வேலு, திரு. அர. சக்கரபாணி, முனைவர் கோவி. செழியன், திரு. டி.ஆர்.பி. ராஜா, திரு. கா. ராமச்சந்திரன் ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 56—ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. ந. நஞ்சப்பன், திரு. பி.எல். சுந்தரம், திரு. கு. லிங்கமுத்து, திரு. வெ. பொன்னுப்பாண்டி, மனித நேய மக்கள் கட்சியைச் சார்ந்த முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த டாக்டர் க. கிருஷ்ணசாமி மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் ஆகியோரும் சட்டமன்றப் பேரவை விதி 55—ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். பாட்டாளி மக்கள்



2013 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள் இதுசம்பந்தமாக தற்போதுதான் அறிவிப்புக் கொடுத்துள்ளார். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

*முற்பகல் 11–15*

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மூலம் இந்த அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கான வாய்ப்பினை எனக்கு வழங்கிய அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்றக் கட்சித் தலைவர் டாக்டர் தளபதி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் நிலவுகிற ஈழத் தமிழர்கள் தொடர்பான பிரச்சினையில் படிக்கின்ற மாணவர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டு, சாலையில் நின்று போராடுகிறார்கள் என்பதை இந்த அவையில் உள்ள எல்லோரும் நன்றாக அறிவார்கள். மாணவர்கள் ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், சாலை மறியல், இரயில் மறியல் என்ற நிலையைக் கையாண்டு, தமிழக மக்களுடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள், அகில இந்திய அளவில் அதை உணர்ந்தும் இருக்கிறார்கள். பொதுவாக, போராட்டம் என்று சொன்னால், கலைக் கல்லூரி மாணவர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள்தான் வீதியில் வந்து போராடுவார்கள். ஆனால், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக, இன உணர்வு அடிப்படையில், நடவடிக்கைக்குட்பட வேண்டுமென்று மிரட்டப்படுகிற தனியார் கல்லூரி மாணவர்கள்கூட, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மாணவர்கள்கூட இன்றைக்கு வீதியில் நின்று போராடுகிற சம்பவங்களைத் தினசரி நாடு பார்த்துக்கொண்டு இருக்கிறது. ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிறப்புக் கவன ஈர்ப்பில் சுருக்கமாகப் பேச வேண்டும்; குற்றச்சாட்டு சொல்லிப் பேசக்கூடாது. (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2013 மார்ச் 27

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: இந்தப் பிரச்சினைக்குக் காரணமே நீங்கள்தான். நீங்கள் அடுத்தவர்களைக் குற்றஞ்சாட்டி சொல்கிறீர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையில் அரசினுடைய கவனத்தை மட்டும் ஈர்த்துப் பேசுங்கள். குற்றச்சாட்டு சொல்லிப் பேசக்கூடாது. சிறப்புக் கவன ஈர்ப்பு சம்பந்தமாகப் பேசுங்கள். (குறுக்கீடு) அவர் கூறிய குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசுகின்றபோது, என்ன பிரச்சினை என்பது குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமரவேண்டும். தேவையில்லாத பிரச்சினைக்குள்ளே போய் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசின் கவனத்தை ஈர்த்துப் பேசுங்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், நீங்கள் ** சம்பந்தமாகப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் அரசின் கவனத்தை ஈர்த்துப் பேசுவதாக இருந்தால், பேசுங்கள். இல்லையென்றால் உட்காருங்கள். (குறுக்கீடு)

முனைவர் கோவி. செழியன்: மாணவர்களுடைய உணர்வை அரசு உணரவேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒரு சில திருத்தங்கள் தேவை என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் வரையறை செய்துள்ளார். அது எல்லோருக்கும் தெரியும். அதையொட்டி ** எனவே, இந்த நேரத்தில் (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2013 மார்ச் 27]

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் கோவி. செழியன், அவையின் கவனத்தை ஈர்த்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: அவர், ஏதோ சொல்லி, 'அதையொட்டி' என்று சொன்னார். 'அதையொட்டி' என்று அவர் பேசிய வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசியவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவர் எங்கே சப்ஜெக்ட்டுக்குள் பேசுகிறார்? வேறு எதையோ பேசுகிறார். அரசின் கவனத்தை ஈர்க்காமல் பேசுகிறார். (குறுக்கீடு) அவரை அரசின் கவனத்தை ஈர்க்கச் சொல்லுங்கள். குற்றஞ்சாட்டி எல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அவரை, அரசின் கவனத்தை ஈர்த்து, உட்காரச் சொல்லுங்கள்.

முனைவர் கோவி. செழியன்: எனவே, மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, திருத்தத் தீர்மானங்களை இந்த அவையில் நிறைவேற்ற வேண்டுமென்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். முனைவர் கோவி. செழியன், அரசின் கவனத்தை ஈர்த்துவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு) அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்காருங்கள்.

முனைவர் கோவி. செழியன்: அதற்காவது அனுமதியை எனக்கு கொடுங்கள். அந்த மாணவர்கள் . . .

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) முனைவர் கோவி. செழியன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் சப்ஜெக்ட்டுக்குள் பேசாமல், வேறு எங்கோ போகிறார். சப்ஜெக்ட்டைப் பேசி முடிக்க வேண்டும். அவர் அதை விட்டு வேறு எங்கோ போய்க்கொண்டிருக்கிறார்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப அரசினுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய பிரச்சினைப் பற்றிக் கூறாமல், அதற்கு வெளியே சென்று தனிப்பட்ட முறையில் அவர்கள் பேசிய அனைத்துப் பேச்சுகளையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேவையில்லாமல் பேசுபவர்களுக்கு நேரத்தைக் கொடுத்து, நாம் ஏன் நேரத்தை வீணடிக்க வேண்டும்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த உறுப்பினரைப் பேசுவதற்கு அழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் கோவி. செழியன், நீங்கள் சொன்ன அத்தனை குற்றச்சாட்டுகளும் நீக்கப்படுகின்றன. திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அத்தனை குற்றச்சாட்டுகளும் நீக்கப்படுகின்றன.

*__திரு. க. பாலகிருஷ்ணன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித சமூகமே வெட்கித் தலைகுனியும் அளவிற்கு இலங்கையிலுள்ள தமிழர்கள். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் கோவி. செழியன், உட்காருங்கள். பேச வாய்ப்புக் கொடுத்ததை சரியாகப் பயன்படுத்தவில்லையென்றால் நான் என்ன செய்வது? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேச வாய்ப்புக் கொடுத்தால், அதைச் சரியாக நீங்கள் பயன்படுத்தாமல், வேறெதையோ பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? உட்காருங்கள். கவன ஈர்ப்பு என்றால், கவன ஈர்ப்பு குறித்துத்தான் பேச வேண்டும். அரசினுடைய கவனத்தைத்தானே ஈர்க்க வேண்டும்? வேறு என்னென்னவோ பேசுகிறார். திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) என்ன பொருளோ, பொருளைப் பற்றிப் பேசாமல், வேறு எதையோ பற்றிப் பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) விதிகளின்படிதான் பேச வேண்டும். விதிகளை விட்டுவிட்டு, வேறு எதையோ பற்றிப் பேசினால் நான் எப்படி அனுமதிக்க முடியும்? (குறுக்கீடுகள்) பேசுவதற்கு அவருக்கு அளிக்கப்பட்ட அனுமதியை, வாய்ப்பை அவர் சரியாக, முறையாகப் பயன்படுத்தவில்லை. அதனால், அடுத்த உறுப்பினரைப் பேச நான் அழைத்துவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவருக்கு வாய்ப்புக் கொடுத்தேன். அந்த வாய்ப்பை அவர் சரியாகப் பயன்படுத்தவில்லை. திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.





**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித சமூகமே வெட்கித் தலை குனியும் அளவிற்கு இலங்கையிலுள்ள தமிழ் மக்கள்மீது, இலங்கை இராணுவம் தொடர்ந்து சொல்லொணாத கொடுமைகளை இழைத்து வருவதை உலகமே அறியும். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச வாய்ப்புக் கொடுத்தேன். அவர் சரியாக அதைப் பயன்படுத்தவில்லை. (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்ப அதையே பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவருக்குத்தான் பேச வாய்ப்புக் கொடுத்தேன். அவர் வேறு என்னென்னவோ பேசிக்கொண்டிருக்கிறார். அவர் அரசினுடைய கவனத்தை ஈர்க்காமல், வேறு எதையாவது பேசும்போது, நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) முனைவர் கோவி. செழியனுக்கு இரண்டு நிமிடம் வாய்ப்புத் தருகிறேன். அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். வேறு ஏதாவது புதுப் பிரச்சினை பற்றிப் பேசினால், திரும்பவும் அவரை நான் உட்கார வைத்துவிடுவேன். விவாதத்திற்கு அனுமதி கிடையாது. அரசின் கவனத்தை ஈர்ப்பதற்கு மட்டும்தான்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லாமல், மாணவர்களிடம் இருக்கக்கூடிய உணர்வை வெளிப்படுத்தி அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எண்ணம் (குறுக்கீடுகள்) ஆனால், . . . ,

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைச் சொல்லி உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற பிரச்சினை தொடர்பாக அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டும். புதிய பிரச்சினை குறித்துப் பேசாதீர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களிடம் ஏற்பட்டிருக்கிற எழுச்சி ஏதோ அரசியல் ரீதியான எழுச்சி என்று யாரும் கருதிவிட முடியாது. இங்கிருப்பவர்களும் சரி, அங்கிருப்பவர்களும் சரி. இன உணர்வின் அடிப்படையில் எழுப்பப்பட்ட ஒரு பிரச்சினை. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினுடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி, உட்காருங்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணையுடன் பரிந்துரைத்த வாய்ப்பை மீண்டும், மீண்டும் அவர் தவறாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார். ஆகவே, அவர் பேசியவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அடுத்த, உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்களைக் கூப்பிட்டிருக்கிறேன், நீங்கள் உட்காருங்கள். இதிலே point of order என்ன இருக்கிறது? சிறப்புக் கவன ஈர்ப்பில் பேசிக் கொண்டிருக்கும்போது point of order என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) Point of order எல்லாம் இதிலே கிடையாது. (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பில் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2013 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பு எடுத்துக் கொண்டிருக்கிறோம். உங்கள் உறுப்பினருக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தேன்; அவர் சரியாகப் பேசவில்லை. முதலமைச்சரும் வாய்ப்புக் கொடுக்கப் பரிந்துரைத்து, அந்த வாய்ப்பையும் அவர் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இதற்கு மேலும் நீங்கள் இதில் point of order என்றால் எப்படி? (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** தலைவரின் தீர்ப்புக்குப் பின்னர் point of order வராது. (குறுக்கீடுகள்) எதிலே point of order raise பண்ணுகிறார்? பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் தீர்ப்புக்குப் பின்னர் point of order எழுப்ப அவருக்கு உரிமை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய தீர்ப்பின்மீது நீங்கள் பேச முடியாது. உறுப்பினர் முனைவர் கோவி. செழியனை நான் உட்காரச் சொல்லிவிட்டேன். திரு. க. பாலகிருஷ்ணன் அவர்களைக் கூப்பிட்டுவிட்டேன். நீங்கள் இதற்கு மேலே raise பண்ண வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்) இந்தப் பொருள் குறித்து மட்டும் நீங்கள் பேசியிருக்கலாம். அவருக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டும் பேசவில்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் பேசட்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பு எடுத்திருக்கிறேன், இன்றைக்கு நேரமில்லை. பின்னர், பொது விவாதத்தில் 11 உறுப்பினர்கள் பேச வேண்டும். இதற்கு மேலும் பேசுவதற்கில்லை. திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றுமில்லை, திரு. அர. சக்கரபாணி, உட்காருங்கள். முனைவர் கோவி. செழியன் அவர்கள் அரசின் கவனத்தை ஈர்த்துவிட்டார். (குறுக்கீடுகள்) முன்னாலேயே சொல்லிவிட்டார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அர. சக்கரபாணி, உட்காருங்கள். இப்படியே பேசிக்கொண்டிருந்தால் எப்படி? இது சரியல்ல, முறையல்ல. நான் உங்களுக்கு நிறைய வாய்ப்புக் கொடுத்தேன் (குறுக்கீடுகள்) இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்து அவைக்குள் வரச் சொல்லியிருக்கிறோம். நீங்கள் அதையும் மீறி, அந்தப் பெருந்தன்மையை மீறி, இப்படிச் செய்து கொண்டு இருப்பது முறையல்ல. சரியல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள், உங்களுக்கு வாய்ப்பு இல்லை. (குறுக்கீடுகள்)

[2013 மார்ச் 27

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள்மீது தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் தாக்குதலைக் கண்டித்து மத்திய அரசு அதன்மீது உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திப் போராடிக் கொண்டிருக்கிற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், உட்காருங்கள். நீங்கள் செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) இப்படிச் செய்தால் எப்படி? (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புக் கொடுத்தேன். கொடுத்த வாய்ப்பை உறுப்பினர் பயன்படுத்தவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வாய்ப்புக் கொடுக்கப் பரிந்துரைத்தார்கள். இதற்கு மேலும் நீங்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தவில்லை என்றால் நான் என்ன செய்வது? நீங்கள் குற்றச்சாட்டு சொல்லி பேசிக் கொண்டிருந்தால் சிறப்புக் கவன ஈர்ப்பை எப்படி நிறைவு செய்வது? (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பை எடுத்துக்கொண்டு இந்தமாதிரி பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) இது முறையா? இதற்கு முன்னால் இந்த மாதிரி எல்லாம் நடந்திருக்கிறதா? (குறுக்கீடுகள்) ஏன் இப்படி நடக்கிறீர்கள்? இது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் திரும்பத் திரும்பச் சொல்லியும். அவர் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த பிரச்சினை குறித்து பேசி அமர்வதற்குப் பதிலாக, பிரச்சினையை வேறு திசையில் திருப்புவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறார். இதைத் தவிர்க்க வேண்டும். (குறுக்கீடு) என்ன சொல்ல வருகிறீர்கள் நீங்கள் என்பதை நாங்கள் புரிந்துகொண்டோம். பொறுமையாக இருங்கள். அதற்குரிய விளக்கங்களை, நீங்கள் கேட்ட விளக்கங்களை மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்கள் விளக்கமாகக் கூறுவார்கள், பொறுமையாக இருந்து கேளுங்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் எழுந்து நின்று பேசிக் கொண்டேயிருந்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், இது முறையல்ல. உட்காருங்கள். உறுப்பினர்கள் பொறுமையாக இருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், நான் உங்களை அனுமதிக்கவில்லை.



2013 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

நீங்கள் எழுந்து நின்று உங்கள் போக்குக்குப் பேசக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இந்த மாதிரிப் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பலமுறை பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தும் அவர் பேசுவதற்கு முயற்சி செய்யவில்லை. பிரச்சினையை வேறு திசையில் கொண்டு செல்கிறார். ஆகவே, முழுமையாக அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டாம். அடுத்த உறுப்பினர் பேசுவதற்கு, நீங்கள் வாய்ப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசலாம், நான் உங்களை பேச அழைத்துவிட்டேன்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை தமிழர்கள்மீது தொடர்ந்து ராஜபக்சே அரசாங்கத்தால் தொடுக்கப்பட்டுவரும் தாக்குதலைக் கண்டித்து மாணவர்கள் நடத்திவரும் போராட்டம் குறித்து தமிழக அரசினுடைய. . . (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று பேச முற்பட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படியெல்லாம் செய்வது முறையில்லை. (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பில் இப்படி எல்லோரும் எழுந்திருந்து பேசுவது முறையில்லை. (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தேன், ஆனால், அவர் பேசவில்லை. இப்படி எல்லோரும் எழுந்திருந்து பேசுவது முறையில்லை. ஒருவருக்கு ஒருமுறைதான் வாய்ப்புக் கொடுக்கப்படும். இப்படி எல்லோரும் எழுந்து பேசினால் எப்படி? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாய்ப்புக் கொடுத்தும், உறுப்பினர் வாய்ப்பை முறையாகப் பயன்படுத்தவில்லை. நீங்கள் எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி வாய்ப்புத் தருவது? (குறுக்கீடுகள்) கொடுக்கவேண்டிய வாய்ப்பு கொடுத்தாகிவிட்டது, இனி வாய்ப்பு இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். அளவுக்கு மீறி, இதுமாதிரி பேசிக்கொண்டிருந்தால் நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி வரும், உட்காருங்கள். அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பேசுவதற்கு நிறைய வாய்ப்புகள் கொடுத்துவிட்டேன். கொடுத்த வாய்ப்பை நீங்கள் முறையாகப் பயன்படுத்தவில்லை. (குறுக்கீடுகள்) முதலில், அவரவர் இருக்கையில் சென்று அமருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை என்றால் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். (குறுக்கீடுகள்) அவர் முழுவதும் பேசிவிட்டார், பேசி அவையின் கவனத்தை ஈர்த்துவிட்டார். (குறுக்கீடுகள்) திரும்பவும் வாய்ப்புத் தர முடியாது. இப்படி நடந்துகொண்டால் சபையை என்னால் எப்படி நடத்தமுடியும்? இப்படி ஒவ்வொரு உறுப்பினரும் எழுந்திருந்து ரகளை செய்தால், சபையை எப்படி நடத்தமுடியும்? இது முறையில்லை. (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள், உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லையென்றால் நான் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். (குறுக்கீடுகள்) முதலில் அவரவர் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உங்களை நான் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலினும் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். இதுசம்பந்தமாகப் பேசுவதாக இருந்தால் திரு. மு.க. ஸ்டாலின், உங்களை நான் பேச அனுமதிக்கிறேன். திரு. மு.க. ஸ்டாலின், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவர் சரியாக, அவரது வாய்ப்பைப் பயன்படுத்தவில்லை.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இது முறையில்லை. இது அந்த உறுப்பினரை அவமானப்படுத்துவதுபோன்று அமைந்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அந்த உறுப்பினர் அவரது வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தவில்லை. நீங்கள் இந்தத் தீர்மானம் குறித்துப் பேசுவதற்கு எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். உங்களை நான் பேச அழைக்கிறேன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். அவர்தான் பேசவேண்டுமென்பது என்ன கட்டாயம்? அவரது வாய்ப்பை அவர் சரியாகப் பயன்படுத்தவில்லை. அவருக்கு மேற்கொண்டு வாய்ப்புத் தருவதற்கு இல்லை. (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்; நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)





இல்லை, அந்த உறுப்பினருக்கு வாய்ப்புக் கொடுக்காமல் இருந்தால்தான் அது insult, உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் பேசுவதாக இருந்தால் பேசலாம். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், உட்காருங்கள், உங்களுக்கு வாய்ப்பில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இதுசம்பந்தமாக எதுவும் பேச வேண்டாம். திரு. துரைமுருகன், இங்கே பாருங்கள். சபையை நான் நடத்திக்கொண்டிருக்கிறேன். சபையை எப்படி நடத்தவேண்டுமென்று எனக்குத் தெரியும். பேரவை விதி 56—ன்கீழ் திரு. மு.க. ஸ்டாலினும் அறிவிப்பை எழுதிக் கொடுத்திருக்கிறார். அதனால், திரு. மு.க. ஸ்டாலினுக்கு வாய்ப்புத் தருகிறேன். திரு. மு.க. ஸ்டாலின், நீங்கள் பேசுங்கள். இங்கே பாருங்கள், நீங்களும்தான் விதி 56—ன்கீழ் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் பேசுவதாக இருந்தால் பேசலாம். மற்றவருக்கு வாய்ப்புக் கொடுத்தேன், அவர்கள் அதைப் பயன்படுத்தவில்லை. அவருக்கு மீண்டும் வாய்ப்புத் தர முடியாது. நீங்கள் பேசுவதாக இருந்தால் பேசலாம். (குறுக்கீடு) திரு. மு.க. ஸ்டாலின் பேசுவதாக இருந்தால் பேசலாம். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர். (குறுக்கீடு) திரு. மு.க. ஸ்டாலின் எழுந்து என்னைக் கேட்டார்.

*முற்பகல் 11-35*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு எதிரே வந்து நின்று கூச்சலிட்டனர்.)*

இதுமாதிரி அவையில், பாதி வழியில் வந்து நிற்பது நியாயமா? (குறுக்கீடுகள்) இது நியாயமா? எல்லோரும் அவரவர் இடத்திற்குப் போய் உட்காருங்கள். இல்லையென்றால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் தலைவரும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவரை நான் பேச அழைக்கிறேன். (குறுக்கீடு) இல்லை. அவர் உங்கள் தலைவர்தானே? அவர் உங்கள் கட்சித் தலைவர்தானே? அவருக்கு வாய்ப்புத் தருகிறேன், பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அவருக்கு வாய்ப்புத் தருகிறேன், பேசச் சொல்லுங்கள்.

[2013 மார்ச் 27

**திரு. மு.க. ஸ்டாலின்:** நான் பேசுகிறேன். (குறுக்கீடு) நான் பேசி விடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி உறுப்பினர் பேசிக்கொண்டிருந்தபோது இடையிடையே சில வார்த்தைகளைச் சொன்ன காரணத்தால் அவற்றையெல்லாம் நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கின்றீர்கள். தொடர்ந்து அவர் பேச முற்படுகிற நேரத்தில் அதே நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. எனவே, நீங்கள் அவருக்குப் பதிலாக நான் பேச வேண்டுமென்று ஒரு கருத்தைச் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். நன்றி தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களும்தான் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** ஆனால், ஓர் உறுப்பினருக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டு அதுவும் ஒரு வழக்கறிஞராக, பேசக்கூடிய ஆற்றலைப் பெற்றவராக இன்னும் பெருமையோடு சொல்லவேண்டுமென்று சொன்னால், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவருக்கு வாய்ப்புக் கொடுத்தேன். அதைப் பயன்படுத்தவில்லை. ஒரு முறைக்கு இரு முறை வாய்ப்புக் கொடுத்தேன். அதைப் பயன்படுத்தவில்லை.

**திரு. மு.க. ஸ்டாலின்:** ** ஒருவருக்குப் பேச வாய்ப்புக் கொடுத்துவிட்டு, அதை மறுத்து நான் பேசுவது என்றால், அது மரபாக இருக்காது. எனவே, நாங்கள் இதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2013 மார்ச் 27]

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித சமூகமே வெட்கித் தலை குனியும் அளவுக்கு இலங்கையிலே இருக்கிற தமிழ் மக்கள்மீது இலங்கை இராணுவமும், ராஜபக்சே அரசாங்கமும் நடத்தி வருகிற கொடூரமான கோரக் கொலைகளைக் கண்டித்து தமிழகத்திலே மாணவர்கள், அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வலியுறுத்தியும், அதிலே மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியும், அவர்கள் நடத்தி வருகிற அந்தப் போராட்டம் குறித்து கொண்டுவரப்பட்டிருக்கும் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளித்திருக்கிற தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உண்மையிலேயே அண்டை நாடாக இருக்கிற இலங்கையில், இவ்வளவு பெரிய கொடுமை வேறெங்கும் நடைபெறவில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு தமிழ் மக்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு வருகிறார்கள். கடைசி கட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தில் 50,000 பேருக்கு மேலே ராஜபக்சே அரசாங்கம் மக்களைக் கொன்று குவித்திருக்கிறது. பெண்களை, குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டுமென்கிற சர்வதேச நியதிகளைக்கூட காலிலே போட்டு மிதித்துவிட்டு அங்கே ஒரு மனித நாகரிகமற்ற கொடூரத்தை இழைத்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். இங்கே தி.மு.க. உறுப்பினர் பேசும்போது ** வாய்ப்புக் கொடுக்கவில்லையென்று பதிவு செய்திருக்கிறார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. க. பாலகிருஷ்ணன்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 வயததே நிரம்பிய பாலகன் என்றுகூடப் பார்க்காமல்

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2013 மார்ச் 27

ராஜபக்சே அரசாங்கம் அந்தப் பாலகனைக் கொடூரமாகக் கொலை செய்திருப்பது உலகம் முழுவதும் இருக்கிற மனிதநேய மிக்க மக்கள் மத்தியில், குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், கோபத்தையும் உண்டாக்கியிருக்கிறது. நீண்டகாலமாக நீடித்து வருகிற, தமிழ் மக்களுக்கு இழைத்து வருகிற அந்தக் கொடூரத்தை தடுத்து நிறுத்தியும், அங்கே தமிழ் மக்கள் மற்ற மக்களோடு சமமாக வாழ்கிற அதிகாரப் பகிர்வு, மறுவாழ்வு, மீள் குடியமர்வு, சிங்கள மொழிக்கு இணையாகத் தமிழ் மொழிக்கான சமத்துவ அந்தஸ்து என்கிற அந்த அடிப்படையில் அங்கே அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்று தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்துக் கட்சியினரும் அவரவர்களுக்கே உரித்தான வழியிலே போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறோம். இதே அவையிலே இலங்கைத் தமிழர்களுடைய நலனைப் பாதுகாக்கிற வகையில், ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழிந்து நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களில் மிகுந்த கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அங்கே நடைபெறுகின்ற அந்தக் கொடூரத்தைத் தடுத்து நிறுத்த ஒட்டுமொத்த தமிழகமும், பல்வேறு அரசியல் கட்சிகளும் வலுவான போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், அந்தக் கொடுமையான கொலையின் கோரக் காட்சிகளினாலே ஈர்க்கப்பட்டு மாணவர்கள் இன்றைக்கு களத்திலே நின்று போராடிக்கொண்டிருக்கிறார்கள். சிலர் தங்களை மாய்த்துக்கொள்கிற, வேதனைமிக்க சில தற்கொலைச் சம்பவங்கள்கூட நடந்திருக்கின்றன. எனவே, இந்த நேரத்தில், தமிழ்நாட்டில் இருக்கிற அனைவரும் அந்த மக்களுடைய துயரத்தைப் பகிர்ந்துகொள்வதோடு, அதை நியாயமான முறையில் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இந்த அவை உட்பட, அனைவரும் சேர்ந்து தீர்மானங்களையெல்லாம் நிறைவேற்றியிருக்கிற இந்தச் சூழ்நிலையில், மாணவர்கள் போராடுவது தவறு அல்ல. அவர்களும் இந்தச் சமூகத்தினுடைய ஓர் அங்கம் என்கிற அடிப்படையிலே அந்தத் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்கிற அந்த உணர்வை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.



2013 மார்ச் 27] [திரு. க. பாலகிருஷ்ணன்]

*முற்பகல் 11–40*

ஒட்டுமொத்த தமிழ் மக்களுடைய பிரச்சினையாக அனைவரும் சேர்ந்து அதில் ஈடுபட்டு அதில் தீர்வு காண வேண்டிய அவசியம் இருக்கிற சூழ்நிலையில், நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றமும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் மத்திய அரசாங்கத்தை தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், இப்படி அனைவரும் சேர்ந்து அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், இப்போது தேர்வுகள் நெருங்கிக்கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், மாணவர்கள் இந்தப் போராட்டங்களையெல்லாம் விலக்கிக்கொண்டு தமிழகத்திலே அமைதியான முறையிலே கல்வி நிலையங்கள் நடைபெற ஒத்துழைக்க வேண்டும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு அந்த உத்தரவாதத்தை அளித்து, கல்வி நிலையங்களைத் துவங்கி, சுமுக நிலையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். தங்களை மாய்த்துக்கொள்கிற எந்த சம்பவத்திற்கும் யாரும் இடம் அளித்துவிடக்கூடாது. ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். எனவே, தற்கொலைச் சாவுகள் ஏற்படும் வண்ணம் தங்களை மாய்த்துக்கொள்கிற முயற்சியிலே தமிழ் மக்கள் யாரும் ஈடுபட வேண்டாம் என்று இந்த நேரத்திலே கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய பல்கலைக்கழக மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பொறியியல் கல்லூரி மாணவர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள் இலங்கையிலே நடைபெற்றுவரக்கூடிய இனப் படுகொலைக்கு எதிராகவும், இந்தியாவில் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கக்கூடிய மத்திய அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளைக் கண்டிக்கக்கூடிய முறையிலும், ஐக்கிய நாட்டு சபையில் ஏற்கெனவே கொண்டுவந்த தீர்மானத்தின் அடிப்படையில், இலங்கையில் நடைபெறுகின்ற அந்த இனப் படுகொலையைக் கண்டிக்க வேண்டுமென்ற அடிப்படையிலும்,

[திரு. எம். ஆறுமுகம்] [2013 மார்ச் 27

ராஜபக்சேவை குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டும், அங்கே ஓர் அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலும்தான் மாணவர்கள் போராட்டங்களை நடத்திக்கொண்டு வருகிறார்களே தவிர, இந்த அரசைக் கண்டித்தோ அல்லது வேறு பல நடவடிக்கைகளுக்காகவோ அவர்கள் போராட்டம் நடத்தவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாணவர்கள் நடத்தக்கூடிய போராட்டம் என்பது இலங்கையில் இனப் படுகொலை தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதற்காக; முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாக தமிழர்களைப் படுகொலை செய்தபோது பாராமுகமாக இருந்தவர்கள், மத்தியில் ஆட்சியிலே இடம் பெற்றவர்கள், தமிழகச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தைத் கொண்டுவராதவர்கள்கூட இப்போது கூக்குரல் இடுவது என்பது (மேசையைத் தட்டும் ஒலி) வேடிக்கையாக என்னாலே பார்க்க முடிகிறது.

முற்பகல் 11—45

நான் இந்த நேரத்திலே ஒன்றைப் பதிவு செய்ய விரும்புகின்றேன். தமிழகத்தினுடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் தமிழக சட்டமன்ற வரலாற்றில் இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இனப் படுகொலைக்கு எதிராக, (மேசையைத் தட்டும் ஒலி) இதில் ஓர் அரசியல் தீர்வு ஏற்பட வேண்டுமென்பதற்காக, முதன்முறையாக இந்தச் சட்டமன்றத்திலே ஒருமனதாக திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பதிவுசெய்ய விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது மாணவர்கள் நடத்தக்கூடிய போராட்டத்தை அமைதிப்படுத்த வேண்டும்.

அங்கே கொத்துக் கொத்தாக இனப் படுகொலை நடைபெற்ற நேரத்தில் தமிழர்களை, தமிழ் மக்களை, தமிழ் இன உணர்வு படைத்தவர்களைத் தட்டி எழுப்பக்கூடிய முறையில் 2010 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி தமிழகமே எதிர்பார்க்கக்கூடிய முறையில் உடனடியாக அங்கே போரை நிறுத்தவேண்டும் என்பதற்கான முறையிலே பிரம்மாண்டமான



2013 மார்ச் 27] [திரு. எம். ஆறுமுகம்]

உண்ணாவிரதப் போராட்டத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சி நடத்தியது என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். தமிழகத்திலே நடைபெற்றுவரக்கூடிய மாணவர்கள் போராட்டம் அமைதியாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தேர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நேரம். மாணவர்கள் தங்களுடைய படிப்பை முடிக்க வேண்டும். தங்களுடைய தேர்வை முடிக்க வேண்டும். இலங்கை இனப் படுகொலைக்கு எதிராக அரசாங்கமும் இருந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றபோது, தெருக்களில் யார், யார் உருவ பொம்மைகளை தமிழகத்திலே எரித்தார்கள் என்பது இந்த நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நான் கருதுகின்றேன். எனவே, இனப் படுகொலைக்கு எதிராக தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கக்கூடிய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் தமிழகத்திலே நடைபெறக்கூடிய, பள்ளிக் கல்வி பயிலும் மாணவர்களுடைய போராட்டத்தை அமைதிப்படுத்துவதற்கும், மாணவர்கள் தேர்வில் பங்கெடுத்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையில் காமன்வெல்த் மாநாட்டை நடத்துவதால் இனப் படுகொலைக்கு எதிராக இந்திய அரசாங்கம் அதில் கலந்துகொள்ளக் கூடாது என்று கடிதம் அனுப்பிய ஒரே முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு முதல்வர்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

எனவே, இனப் படுகொலைக்கு எதிராக தமிழின உணர்வு படைத்தவர்கள் ராஜபக்சேவிற்கு உரிய தண்டனையை வழங்கக்கூடிய முறையிலே, தமிழகச் சட்டமன்றத்தில் மற்றொரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் உள்நாட்டுப் போர் என்ற பெயரில் திட்டமிட்டு நடத்தப்பட்ட இனப் படுகொலையைக் கண்டிக்கின்ற வகையிலும், அந்த இனப் படுகொலை நிகழ்வதற்குக் காரணமாக

[திரு. அ. கணேஷ்குமார்] [2013 மார்ச் 27

இருந்த கொடுங்கோலன் ராஜபக்சேவை போர்க் குற்றவாளி என்று சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்று கோரியும், அதுமட்டுமில்லாமல், இத்தகைய நடவடிக்கைக்கு உதவிய இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும் என்றும், இந்தப் போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமான சர்வதேச, பன்னாட்டு நீதிமன்ற விசாரணை வேண்டுமென்பதை வலியுறுத்தியும், அங்கு மிச்சமுள்ள தமிழர்கள் இன்றைக்கும் காணாமல் போகின்ற சூழ்நிலை நிகழ்ந்துகொண்டிருப்பதைக் கண்டித்தும், மாணவர்கள் போராட்டம் தொடங்கி தமிழகத்திலுள்ள அனைத்துத் தரப்பினரும் வெகுண்டெழுந்து போராடிக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், ஒட்டுமொத்த தமிழகமும் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்த சூழ்நிலையில், மத்திய அரசு அவர்களின் உணர்வுகளைக் கண்டுகொள்ளாத ஒரு சூழ்நிலையில், அந்த மாணவர்களின் போராட்டத்திற்கு மதிப்பளித்து, அவர்களுக்கு நிச்சயமாக இந்த அரசு உறுதுணையாக இருந்துகொண்டிருக்கிறது, இனியும் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு அந்த மாணவர்கள் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைத்து தங்களுடைய கடமைகளை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தினால், மாணவர்கள் தங்களுடைய போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திக்கொண்டு, மீண்டும் தேவை வரும் சமயத்தில் வெகுண்டெழுந்து எழுச்சியுடன் போராடவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக கேட்டுக்கொண்டு, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1965—க்குப் பிறகு தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக மாணவச் சமுதாயம் முழுவதும் வீதிக்கு வந்து, ஈழத்திலே நடைபெற்ற இந்த நூற்றாண்டின் மிகக் கொடூரமான genocide என்ற இனப் பேரழிவிற்கு எதிராக போராட்டத்தை நடத்தி வருகிறது கல்லூரிகள் காலவரையின்றி மூடப்பட்ட போதிலும்கூட இந்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது. இரண்டு அம்சங்களை முன்வைத்து மாணவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்துகிறார்கள். இலங்கையிலே, ஈழத்திலே தமிழினத்தைக் கொன்று குவித்த



2013 மார்ச் 27] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

ராஜபக்சேவும், அவரைச் சார்ந்தவர்களும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலே நிறுத்தப்பட்டு, பொது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும் என்பது அவர்களுடைய முதல் கோரிக்கை. இரண்டாவது, ஈழத்திலே referendum என்று சொல்லக்கூடிய பொது கருத்துக் கணிப்பு நடத்தப்படவேண்டும். இந்த இரண்டு கோரிக்கைகளையும் முன்வைத்து இந்தப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

*முற்பகல் 11—50*

தமிழகத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, இந்த அவையிலே வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஒரு தீர்மானத்தை, இலங்கையிலே நடைபெற்றது இனப்பேரழிவு என்பதைப் பிரகடனப்படுத்தி, இலங்கையுடனான, பொருளாதார உறவைத் துண்டித்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். அதுமட்டுமல்ல, சென்ற ஆளுநர் உரை கூட்டத் தொடரின்போது, மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக நான் பேசும்போது, ஜெனீவாவிலே, ஐ.நா. மனித உரிமை ஆணையத்திலே, அமெரிக்கா கொண்டு வரக்கூடிய ஒரு தீர்மானம் இருக்கின்றது; அதை இந்திய அரசு ஆதரிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை நான் வைத்தேன். மறு நாள் ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தத் தீர்மானம் வலுவில்லாத தீர்மானமாக இருந்தாலும்கூட, ஒரு symbolic ஆக, அடையாளமாக இந்திய அரசு அதை ஆதரிக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை வைத்தார்கள். ஆனால், அந்தத் தீர்மானத்தை நீர்த்துப் போக வைக்கக்கூடிய வேலையைத்தான் மத்திய அரசு செய்து, இன்று அது அம்பலப்பட்டு நின்றுகொண்டிருக்கக்கூடிய காட்சியைப் பார்க்கின்றோம்.

பலரும் ஐ.நா.விலே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றதென்று சொல்கிறார்கள். ஐ.நா.விலே தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. ஐ.நா.வினுடைய ஒரு பிரிவாக இருக்கக்கூடிய, ஐ.நா.வினுடைய மனித உரிமை ஆணையத்திலேதான் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இப்போது, தமிழகத்திலே, நம்முடைய மாணவர்கள் நடத்துகின்ற இந்தப் போராட்டத்தினுடைய

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 மார்ச் 27

கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றால், ஐ.நா.வினுடைய பாதுகாப்பு சபையிலே, லெபனானிலே, அந்த நாட்டினுடைய பிரதமர் ரஃபீக் ஹரீரி உட்பட 12 பேர் கொலை செய்யப்பட்டதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஒன்று நிறுவப்பட்டு, பொது விசாரணைக்கு அந்த இனப் படுகொலையிலே, அந்த war crimes–இலே, போர்க் குற்றத்திலே ஈடுபட்டவர்கள் விசாரிக்கப்பட்டார்கள். ஆனால், ஈழத்திலே, ஜோசப் ராயப்பன் என்ற யாழ்ப்பாணத்தினுடைய பேராயர், இலங்கை அரசு அமைத்த நல்லிணக்கக் குழுவிலே, Lessons Learnt and Reconciliation Commission–இலே யாழ்ப்பாணத்திலே, வடக்கு ஈழத்திலே மட்டும் ஒரு இலட்சத்து 45 ஆயிரம் பேருடைய கதி என்ன என்று தெரியவில்லை என்று சொல்லியிருக்கிறார். டப்ளினில் உள்ள பொதுத் தீர்ப்பாணையமும், ஓர் இனப் பேரழிவு நடைபெற்றிருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றது. ஐ.நா.வினுடைய மனித உரிமை ஆணையத்தினுடைய ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை அவர்களும் இதை உறுதி செய்திருக்கிறார்கள். ஏன், ஐ.நா.வினுடைய பொதுச் செயலாளர் பான் கி மூன் அமைத்த மூவர் குழு, இலங்கை அரசாங்கத்தினுடைய ஒத்துழைப்பு எதையுமே பெறாமல் விசாரணை செய்து, மிகத் தெளிவாக போர்க் குற்றம் நடைபெற்றிருக்கிறது என்பதைப் பிரகடனப்படுத்தியிருக்கின்றது. எனவே, நம்முடைய மாணவர்களுடைய போராட்டம், தேர்வு வரக்கூடிய இந்தச் சூழலிலே நிறுத்தப்பட வேண்டும். ஆனால், அதேநேரத்திலே, இந்த அவையிலே இரண்டு விஷயங்களையும், ஐ.நா.–வினுடைய Security Council–இலே, பாதுகாப்பு சபையிலே, எப்படி கொசாவாவிலே, எப்படி போஸ்னியாவிலே, எப்படி லெபனானிலே ஒரு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போர்க் குற்றங்களுக்காக நிறுவப்பட்டு, பொது விசாரணை நடைபெற்றதோ, அதேபோல, கொடுங்கோலன் ராஜபக்சேயும், அவனைச் சார்ந்தவர்களும் நிறுத்தப்படுவதற்காக இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். ஈழத்திலே பொது கருத்துக் கணிப்பு, referendum நடத்தப்படுவதற்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய எல்லையிலேயிருந்து 23 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கக்கூடிய ஈழத்தில், தமிழ் மக்கள் தங்களுடைய சுய மரியாதைக்காகவும், சுய நிர்ணய உரிமைக்காகவும், பாதுகாப்புக்காகவும் ஏறக்குறைய 60 ஆண்டுக் காலத்திற்கும் மேலாக அமைதியான வழியில், ஆயுதம் தாங்கிய வழியிலே போராடிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கை 1948–லே சுதந்திரம் பெற்றது. சுதந்திரம் பெற்றவுடனே 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களுடைய வாக்குரிமையையும், ஜனநாயக உரிமையையும் பறித்த, மிகப் பெரிய ஜனநாயக விரோதமான அரசாக விளங்கியது இலங்கை அரசு. இன்றும்கூட, ஒரு பக்கம் ஈழத் தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பறிப்பது, இன்னொரு பக்கம் பல தலைமுறைகளுக்கு முன்பாக, எப்படி தமிழகத்திலேயிருந்து மலேசியாவுக்கும், பர்மாவுக்கும், பிஜிக்கும், தென் ஆப்பிரிக்காவிற்கும், வாழ்வதற்காகவும் அல்லது ஆப்பிரிக்கக் கண்டங்களிலேயிருந்து கருப்பின மக்கள் துன்புறுத்தப்பட்டு, பிற நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்களோ, அதுபோல, தமிழ் மக்களும் ஆங்கிலேயர்களுடைய காலத்தில் . . .

முற்பகல் 11–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, சுருக்கமாக அரசினுடைய கவனத்தை ஈர்த்துப் பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலேயர்களுடைய காலத்தில் தமிழ் மக்கள், இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் அங்கே இலங்கையினுடைய வளங்களைப் பெருக்குவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்த மக்கள், இன்றும்கூட 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் அங்கே வாக்குரிமை இல்லாமலும், குடியுரிமை இல்லாமலும் இருக்கிறார்கள். அந்த அளவிற்கு இலங்கையிலே ஒரு பகுதியிலே வடக்கு, கிழக்கிலே வாழக்கூடிய தமிழ் மக்கள் உரிமைகளை இழந்து நாடற்றவர்களாக வாழ்கிறார்கள். மலைப் பகுதியிலே வாழக்கூடியவர்கள் குடியுரிமையற்றவர்களாக வாழ்கிறார்கள்.

2008–2009 ஆம் ஆண்டிலே விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரில் ராஜபக்சே அரசு நடத்திய தாக்குதலில் ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 2009 ஆம் ஆண்டு மே 17, 18 ஆகிய இரண்டு தினங்களில் மட்டும் முள்ளிவாய்க்கால் பகுதியில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்திகள் வருகின்றன. எனவே, அங்கு நடைபெற்றது முழுக்க முழுக்க போர் விதிமுறை மீறல், மனித உரிமை மீறல்; இது ஓர் இன அழிப்பு நடவடிக்கை. எனவே, இதை முழுமையாக விசாரிக்க வேண்டுமென்று சொன்னால், அங்கே இருக்கக்கூடிய ஈழத் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், இலங்கை அரசு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும். அதற்கு–International Independent Investigation–சர்வதேச அளவிலான பன்னாட்டு விசாரணை ஆணையம் ஒன்றுதான் வழி என்று உலகெங்கும் வாழக்கூடிய ஈழத் தமிழ் மக்கள் குரல் கொடுத்து வருகிறார்கள். எனவே, இந்த மன்றத்திலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 2011 ஆம் ஆண்டு அவரே முன்மொழிந்த இரண்டு தீர்மானங்கள், ஒன்று, இன அழிப்பிலே ஈடுபட்டு வருகின்ற இலங்கை அரசுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம். மற்றொன்று, கச்சத் தீவை மீட்டெடுக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம். அதேபோல, 3 தமிழர்களுடைய உயிரைப் பாதுகாப்பதற்கு ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். எனவே, இந்த மாமன்றத்தின் வாயிலாக இந்திய அரசை வலியுறுத்தக்கூடிய வகையிலே சுதந்திரமான சர்வதேச விசாரணை ஆணையம் ஒன்று அமைக்க இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா.–விலே மனித உரிமை ஆணையத்திலே தீர்மானம் கொண்டு வருவதற்கு இந்திய அரசு முயல வேண்டும். வருகின்ற செப்டம்பர் மாதத்தில் நடைபெறக்கூடிய மனித உரிமை ஆணையத்திலே அதைக் கொண்டு வரவேண்டும் என்பதற்குண்டான ஏகமனதான தீர்மானத்தை இந்த அவையிலே நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வேண்டுகோள் வைக்கிறேன்.

அதேபோல, இன்று தமிழகமெங்கும் இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாணவர்கள் எந்தவிதமான அரசியலுக்கும் அப்பாற்பட்டு போராடி வருகிறார்கள். அவர்களுடைய போராட்டங்கள் நியாயமானது, முழுக்க முழுக்க



ஏற்றுக்கொள்ளக்கூடியது. இருந்தாலுங்கூட அவர்களுடைய கல்வி எந்தவிதத்திலும் தடைபடாமல் இருக்கக்கூடியவண்ணம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அவர்களுக்கு ஆதரவு அளிக்கக்கூடிய வகையிலே, ஆதரவான வார்த்தைகள் சொல்லக்கூடிய வகையிலே, அவர்களுடைய போராட்டத்தில் உள்ள நியாயங்களை ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய போராட்டங்களைத் தற்காலிகமாகவாவது வாபஸ் பெற வைப்பதற்குண்டான தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வர வேண்டுமென்று புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வலியுறுத்தி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே பல ஆண்டுக்காலமாக தமிழர்களுக்கு சம உரிமை வழங்கப்படாத சூழ்நிலை ஏற்பட்டு, அங்கு புரட்சி வெடித்து, தமிழ் இனமே அழிக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாகியிருப்பது அனைவருக்கும் தெரியும். சிங்கள இராணுவத்தின் கொடூரச் செயல்களின் உச்சகட்டமாக 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மே மாதம்வரை தமிழினத்தைக் கூண்டோடு அழிக்க வேண்டுமென்ற எண்ணத்திலே இனப் படுகொலையில் ஈடுபட்டு, தமிழ் இனமே அழியக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருந்தது அனைவருக்கும் தெரியும். ஆனால், அங்கு புரட்சி வீரராகத் திகழ்ந்த பிரபாகரன் அவர்களின் மகனான 12 வயது பாலச்சந்திரன் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வின் புகைப்படம் அனைத்துப் பத்திரிகைகளிலும் வந்த பிறகு அது நெஞ்சைப் பிளக்கும் அளவிற்கும், அனைவரின் கண்களில் கண்ணீர் வரும் அளவிற்கும் அந்த நிகழ்வு இருந்ததன் காரணமாக மாணவர்களின் மத்தியிலும் சரி, வழக்கறிஞர்களின் மத்தியிலும் சரி, தமிழகத்தில் உள்ள அனைவரின் மத்தியிலும் சரி, வேகமாகவும், துரிதமாகவும் மத்திய அரசை வலியுறுத்தி தீர்க்கமான ஒரு முடிவைக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது.

நண்பகல் 12–00

முதலாவதாக ராஜபக்சே போர்க் குற்றவாளியாக அறிவிக்கப்பட வேண்டும். ஒரு பொது வாக்கெடுப்பு எடுத்து, போர்க் குற்றவாளியாக

[திரு. ரா. சரத்குமார்] [2013 மார்ச் 27

அறிவிப்பதற்கு மட்டுமல்லாமல், பொருளாதாரத் தடையை நிரந்தரமாக விதிக்க வேண்டுமென்ற எண்ணத்தையெல்லாம் மாணவர்கள் இன்று பதித்து வருகிறார்கள். அங்கே இனப் படுகொலை என்பது அனைவரையும் கூண்டோடு அழிக்க வேண்டுமென்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருப்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். அந்த இனப் படுகொலை தொடர்ந்துகொண்டிருக்கிற சூழ்நிலையிலே இங்கு மாணவர்களும் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள். ஆனால், மாணவர்கள் போராட்டத்தில் குதித்ததற்குச் சிலர் பல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் போராட்டங்கள் எல்லாம் வருவதற்கு முன்பே, இந்தச் சட்டமன்றத்திலே மாபெரும் சாதனை படைக்கும் அளவிற்கு தீர்மானங்களை, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனைக்குரிய கொலையாளிகளை விடுவிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ராஜபக்சே அரசுக்குப் பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும் என்று சிறந்த ஒரு தீர்மானத்தை கொண்டுவந்ததன்மூலம் ஈழ அரசுக்கு எதிராக உறுதியான ஒரு முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்றுதான் நாம் சொல்லவேண்டும். ஆக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஈழத் தமிழகம் எப்படி இருக்கவேண்டும், ஈழத் தமிழர்களின் நல்வாழ்வு எப்படி இருக்கவேண்டும் என்று உன்னிப்பாக கவனித்து, அந்த உணர்வோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்று மாணவர்கள் போராட்டம் நடந்துகொண்டிருக்கும் சூழ்நிலையிலே, மாணவர்கள் இப்போராட்டத்தில் உணர்வுபூர்வமாக இருக்கிறார்கள் என்பதை அனைவரும் அறிவோம். அதே சமயத்தில் இந்தப் பிரச்சினைக்குக் காரணமாக இருந்த சிலர், அவர்கள் இந்தச் சபையிலே இருப்பார்கள், வெளிநடப்புச் செய்யமாட்டார்கள் என்று எண்ணி அமர்ந்துகொண்டு இருந்த எனக்கு அவர்கள் வெளிநடப்புச் செய்தது ஒரு வருத்தம்.

அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தது மாணவர்கள் நலன் கருதியா அல்லது அரசியலுக்காக செய்கிறார்களா என்று புரியாத சூழ்நிலையில், அவர்கள் ஒரு கவன ஈர்ப்பைக் கொண்டுவந்து மாணவர்களுக்கு என்ன



2013 மார்ச் 27] [திரு. ரா. சரத்குமார்]

செய்யவேண்டும், மாணவர்கள் போராட்டத்தில் இறங்கி இருக்கிறார்கள் என்று சொல்லும்போது, இந்த மாணவர்களின் போராட்டத்தை உணர்ந்த ஒரு முதலமைச்சர் இங்கே இருக்கிறார்கள்; மாணவர்களின் போராட்டம் நியாயமானதுதான் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணர்ந்து இருக்கிறார்கள். எதற்காக கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன என்கிற காரணம் அனைவருக்கும் புரியும். இதை அரசியல் இலாபத்திற்காக அரசியல் நோக்குடன் பார்ப்பவர்கள் சிலர் இருப்பதால்தான், இது வேறுவிதமாக திசை திருப்பிவிடக்கூடாது என்கிற காரணத்தாலேதான், கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. இருப்பினும், மாணவர்களுக்கு மார்ச், ஏப்ரல் மாதத்தில் தேர்வுகள் இருக்கிற காரணத்தால், அனைவர் மீதும் கருணை காட்டுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீது நம்பிக்கை வைத்து நம்பிக்கையோடு, தீர்க்கமான முடிவு எடுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் இருக்கும்போது அவர்கள்மீது நம்பிக்கை வைத்து, அந்தப் போராட்டத்தை மாணவர்கள் தவிர்க்கவேண்டும். மாணவர்கள் கல்லூரிகளுக்குச் சென்று தேர்வுகளை எழுதி, வாழ்க்கையிலே உயரவேண்டும் என்ற எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் செயலில் ஈடுபட்டு, அதையும் தாங்கள்தான் தீர்த்து வைக்கவேண்டும் என்று கேட்டு, இப்பிரச்சினையில் அரசின் கவனத்தை ஈர்த்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக்குத் திரும்பினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழர்களின் வாழ்வு உயர, தன்னையே தியாகம் செய்து தனி மனித இராணுவமாய் அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருத்திலேகொண்டு, இதுசம்பந்தமாக அரசின் பதிலை வழங்கி, தீர்மானம் ஒன்றை முன்மொழிய அனுமதி கோரியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்தும், இந்தப் பிரச்சினைத் தொடர்பாக மாணவ, மாணவியர் நடத்திவரும் போராட்டம் குறித்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த

அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து தங்களது கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை தொடர்பாக அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து எனது விளக்கத்தினை தங்களின் வாயிலாக இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இலங்கைத் தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே இரண்டாம் தர குடிமக்களாக கருதப்படுவதை எதிர்த்தும், இலங்கை அரசின் இனவெறிக் கொள்கையை எதிர்த்தும், அங்குள்ள தமிழர்கள் 1980 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே குரல் எழுப்பி வருகிறார்கள். இந்த நீண்ட, நெடிய உரிமைப் போராட்டத்தை நசுக்கும்வண்ணம், ஒட்டுமொத்தத் தமிழினத்தையே அழிக்க வேண்டும் என்ற நோக்கில் 2007 ஆம் ஆண்டிலிருந்து திட்டம் தீட்டி, அதனை வெற்றிகரமாக 2009 ஆம் ஆண்டு நிறைவேற்றியது இலங்கை அரசு. தமிழினத்தை அழித்த சிங்கள வெறிபிடித்த இலங்கை அரசுக்கு அனைத்துவிதமான உதவிகளையும் செய்தது தி.மு.க. அங்கம் வகித்த மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கை இராணுவத்தினருக்கு இந்திய மண்ணில் இந்திய இராணுவம் இரகசியமான முறையில் போர்ப் பயிற்சி அளித்தது, இலங்கை இராணுவத்திற்கு இந்திய அரசு ஆயுதங்களை வழங்கியது, மிக நவீன இராணுவ ரேடார் கருவிகளை வழங்கியது, இந்திய இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் மற்றும் இந்திய அரசின் உயர் அதிகாரிகள் இலங்கைக்கு அடிக்கடி சென்றது என பல செய்திகளை அப்போது ஊடகங்கள் படம் பிடித்துக் காண்பித்தன. நானும் இதுகுறித்து அறிக்கைகள் வெளியிட்டு இந்திய அரசின் தமிழின விரோதச் செயலுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்திருந்தேன். இந்தச் செய்திகளுக்கெல்லாம் மத்திய அரசு எவ்வித மறுப்பையும் தெரிவிக்கவில்லை.

பிற்பகல் 12–05

தமிழர் நலனை முன்னிட்டு மத்திய காங்கிரஸ் கூட்டணியிலிருந்து தி.மு.க. வெளியேற வேண்டுமென்றும் அப்போதே நான் தெரிவித்திருந்தேன். ஆனால், அப்போது மாநிலத்திலும், மத்தியிலும் ஆட்சி அதிகாரத்தில் இருந்த தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியோ அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி இரண்டு வாரத்தில் போர் நிறுத்தத்திற்கு மத்திய அரசு





முன்வராவிட்டால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா என்ற அளவில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். பின்னர் இராஜினாமா கடிதங்கள் யாரிடம் கொடுக்கப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சில நாட்கள் கழித்து அப்போதைய மத்திய அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் திரு. கருணாநிதியை சந்தித்த பிறகு, "மத்திய அரசின் நடவடிக்கை திருப்தியளிப்பதாக இருக்கிறது" என்று தெரிவித்து, இராஜினாமா நாடகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார் திரு. கருணாநிதி.

இதனையடுத்து, டெல்லி வந்த இலங்கை அதிபர் பாரதப் பிரமரைச் சந்தித்த பிறகு 'போர் நிறுத்தம் கிடையாது' என்று அறிவித்தார். பின்னர், "இந்தியப் பேரரசு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கை அரசைப் போர் நிறுத்தத்திற்கு இணங்க வைத்து, தமிழர் பகுதிகளில் நிலையான அமைதியும், சக வாழ்வும் ஏற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என்ற அளவில் 12–11–2008 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'அனைத்துக் கட்சிக் கூட்டம்', 'சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம்', 'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம்', 'மனிதச் சங்கிலி போராட்டம்', 'நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி விலகல் கடிதங்களை திரு. கருணாநிதியே பெற்றுக் கொள்ளுதல்', 'எல்லோரும் பிரதமருக்குத் தந்தி அனுப்புங்கள்' என்ற அறிவிப்பு, 'டெல்லியில் பிரதமருடன் சந்திப்பு', 'வேலை நிறுத்தம்', 'பேரணி' என பல்வேறு கண்துடைப்பு நாடகங்கள்தான் நடந்தனவே தவிர, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இலங்கையில் போரை நிறுத்த. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவையெல்லாம் நடந்த வரலாற்று உண்மைகள். வரலாற்றை மறுக்க முடியாது, மறைக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சருடைய பதிலுரையிலே குறுக்கிட்டுப் பேசவேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) இதுமாதிரி செய்வது சரியல்ல.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கூச்சலிட்டுக்கொண்டே தங்கள் இருக்கையை விட்டு எழுந்து பேரவைத் தலைவரின் இருக்கை அருகே வந்தனர்.)

முதலில் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (கூச்சல்—குழப்பம்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். உங்கள் இருக்கைக்குச் செல்கிறீர்களா, இல்லையா? உட்காருகிறீர்களா, இல்லையா? (கூச்சல்—குழப்பம்) அவைக் காவலர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அவையிலிருந்து அவர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அவர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். அனைவரும் வெளியே போகவேண்டும். (கூச்சல்—குழப்பம்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டே வெளியில் சென்றனர்.)

இந்த மாதிரி கோஷம் போடக்கூடாது. அவைக் காவலர்கள் லாபியில் அவர்கள் கோஷமிடுவதற்கு அனுமதிக்காமல் வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு முக்கியமான பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்போடு பதில் அளித்துக்கொண்டிருக்கிறார்கள். அதைக் கேட்பதற்கில்லாமல் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

பிற்பகல் 12—10

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் லாபியில் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லாபியில் கோஷம் போட்டுக் கொண்டிருக்கும் உறுப்பினர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். லாபியில் யாரும் கோஷம் போடாமல் இருக்க அவர்களை உடனடியாக வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இலங்கையில் போரை நிறுத்த ஏற்பாடு செய்கிறேன்' என்று சொல்லி போரை தீவிரப்படுத்தியதுதான் மிச்சம். கடைசியாக நடைபெற்ற திரு. கருணாநிதியின் மூன்று மணி நேர உண்ணாவிரத நாடகத்தின்மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) இலட்சக்கணக்கான அப்பாவி இலங்கைத் தமிழர்கள் ஒரே நாளில் இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

ஆனால், இந்த மூன்று மணி நேர உண்ணாவிரதத்தைப் பற்றி புது விளக்கங்களைச் சமீப காலமாகக் கூறி வருகிறார் திரு. கருணாநிதி. இலங்கையில் தமிழர்கள்மீதான போரை நிறுத்திவிட்டதாக இலங்கை அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்ததாகவும், அதனை மத்திய அரசு நம்பி தனக்குத் தெரியப்படுத்தியதாகவும், அதனை தான் நம்பி இலங்கையில் போர் முடிந்துவிட்டது என்று அறிவித்ததாகவும், இலங்கை அரசு அவ்வாறு ஏமாற்றிவிட்டதாகவும் சமீப காலமாக திரு. கருணாநிதி கூறி வருகிறார். இதனை எந்தத் தமிழரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

'போர் நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது' என்று கூறி தனது உண்ணாவிரத நாடகத்தை மூன்று மணி நேரத்தில் முடித்துக் கொண்டதற்கு அடுத்த நாள், 'கனரக ஆயுதங்களைப்' பயன்படுத்தி தாக்குதல் நடைபெறுவதாகச் செய்திகள் வந்திருக்கிறதே என்று பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு, 'மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பார்களே, அதைப்போலத்தான்' என்று பதில் அளித்தார் திரு. கருணாநிதி. அதாவது, போர் நிறுத்தம் ஏற்படவில்லை என்பதை நன்கு உணர்ந்துதான் இதுபோன்ற பேட்டியை அளித்துள்ளார் திரு. கருணாநிதி.

"இலங்கையில் உச்சகட்டப் போர் முடிவுக்கு வந்த பிறகு, 3.5 இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் எவ்வித

அடிப்படை வசதியுமின்றி முகாம்களில் தங்க வைக்கப்பட்டு இலங்கை அரசால் கொடுமைப்படுத்தப்படுகின்றனர். இதைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று நான் பல முறை வலியுறுத்தினேன். ஆனால், ஆட்சி அதிகாரத்தில் இருந்த திரு. கருணாநிதியோ, தன் மகள் கனிமொழி உட்பட தி.மு.க. மற்றும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களை இலங்கைக்கு அனுப்பி, இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த இலங்கை அதிபரைச் சந்திக்க வைத்து, கை குலுக்கி, விருந்துண்டு, பரிசுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளச் செய்தார். (மேசையைத் தட்டும் ஒலி) பரிசு பொருட்களைப் பெற்று வந்த அவர்களை தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி விமான நிலையத்திற்குச் சென்று வரவேற்றார். பின் பத்திரிகையாளர்களைச் சந்தித்த திரு. கருணாநிதி, 'முகாம்களில் தமிழர்கள் யாரும் சித்ரவதை செய்யப்படவில்லை' என்று பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்தார்.

மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்போது, தானும், தன் குடும்பத்தினரும் பதவியில் இருக்க வேண்டும் என்பதற்காக, இலங்கைத் தமிழர்கள்மீதான இலங்கை அரசின் தாக்குதலுக்கு உறுதுணையாக, ஆதரவாக இருந்து, அவர்கள் அழிவதற்கு மறைமுகக் காரணமாக விளங்கிய தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் ஆட்சி அதிகாரத்தை இழந்த பின், டெசோ அமைப்பை மீண்டும் புதுப்பித்துள்ளார். திடீரென்று ஞானோதயம் பிறந்ததுபோல் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் அதிக அக்கறை செலுத்துவது போல் காட்டிக்கொள்ள முயற்சிக்கிறார் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி.

மத்திய அமைச்சரவையிலிருந்து வெளிவந்ததை இலங்கைத் தமிழர்களுக்காக தான் செய்த மிகப் பெரிய தியாகம் என்று சித்தரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார் திரு. கருணாநிதி. மத்திய அரசுக்கும், தி.மு.க.–வுக்கும் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்று காட்டிக் கொள்ளும் திரு. கருணாநிதி, இரயில்வே குழுத் தலைவர் பதவியில் தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர், திரு. டி.ஆர். பாலு இன்று வரை தொடருவது குறித்து வாய் திறக்கவில்லையே!





*பிற்பகல் 12–15*

மத்திய அமைச்சராக இருந்த அவரது மகன் திரு. அழகிரி காங்கிரஸ் தலைவரையும், பாரதப் பிரதமரையும், மத்திய அமைச்சர் திரு. சிதம்பரத்தையும் சந்தித்து இருக்கிறார். ராஜினாமா செய்த பின் உங்கள் மன நிலை என்ன என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, "அலுவலகத்திற்குப் போக முடியவில்லை, மக்களுக்கு சேவை செய்ய முடியவில்லை" என்று கூறியிருக்கிறார் திரு. அழகிரி. இலங்கைத் தமிழர்கள் அழியக் காரணமாக இருந்த மத்திய அரசுக்கு உறுதுணையாக இருந்ததையும், பெட்ரோல் மற்றும் டீசல் விலை நிர்ணயிக்கும் அதிகாரத்தை எண்ணெய் நிறுவனங்களுக்கு மத்திய அரசு வழங்கி விலைவாசி உயர்விற்கு வித்திட்டதற்கு உறுதுணையாக இருந்ததையும், "மக்கள் சேவை" என்று குறிப்பிடுகிறார் போலும்! இது குறித்து திரு. கருணாநிதி கருத்துத் தெரிவிக்கவில்லையே! தி.மு.க. செயற்குழுவில் பேசிய தி.மு.க. பொதுச் செயலாளர் திரு. க. அன்பழகன், மத்தியில் ஆட்சியைக் கவிழ்க்க தி.மு.க. துணை போகாது என்று பேசியிருக்கிறார். இதை திரு. கருணாநிதி கேட்டுக்கொண்டு வாய்மூடி மௌனியாகத்தான் இருந்தார். இந்த விஷயங்களில் எல்லாம் திரு. கருணாநிதி மௌனம் சாதிப்பதைப் பார்த்தால், மத்திய அரசுடனான தொடர்பை எவ்விதத்திலும் துண்டிக்க திரு. கருணாநிதிக்கு விருப்பமில்லை என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மறைமுக உறவைத் தொடர்ந்து கொண்டு தியாகம் செய்துவிட்டதுபோல் வெளி வேஷம் காட்டி, தமிழக மக்களை ஏமாற்றப் பார்க்கிறார். இதைவிட தமிழக மக்களுக்கு செய்யும் துரோகம் வேறு எதுவும் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கை அரசின் தமிழர்களுக்கு எதிரான கொடூர நடவடிக்கைகளினால் தமிழ்நாட்டில் வாழும் மக்கள் இயற்கையாகவே வெறுப்பும், கோபமும் அடைந்துள்ள சூழ்நிலையில், இலங்கை நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகளை உள்ளடக்கிய ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்தப்படக்கூடாது என்று பாரதப் பிரதமருக்கு நான் கடிதம் எழுதினேன். தமிழ்நாட்டில் நடக்கவிருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை நாட்டைச் சேர்ந்த வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகளை அனுமதிக்க வேண்டாம் என்று ஐ.பி.எல். அமைப்பாளர்களை வற்புறுத்துமாறு இந்திய கிரிக்கெட்

கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மத்திய அரசு அறிவுரை வழங்க வேண்டுமென்றும் அந்தக் கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளேன். இலங்கை நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்க மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை ஐ.பி.எல். அமைப்பாளர்கள் அளித்தால் மட்டுமே ஐ.பி.எல். விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாட்டில் நடைபெற தமிழக அரசு அனுமதிக்கும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது வேண்டுகோளினைப் பரிசீலித்த ஐ.பி.எல். ஆட்சிமன்றக் குழு, சென்னையில் நடைபெறவிருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை நாட்டைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்க மாட்டார்கள் என்று முடிவெடுத்து, இதுகுறித்த ஆலோசனையை அணிகளின் உரிமையாளர்களுக்குத் தெரிவிப்பதென தீர்மானித்துள்ளது. இது, இலங்கைத் தமிழர்களின்பால் எனது தலைமையிலான அரசு கொண்டுள்ள உணர்வுபூர்வமான ஈடுபாட்டிற்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

இருப்பினும், ஐ.பி.எல். போட்டிகளில், பங்கேற்க உள்ள அணிகளில், திரு. கருணாநிதியின் பேரன் திரு. கலாநிதி மாறனுக்குச் சொந்தமான சன் குழுமத்தின் சன் ரைசர்ஸ் (Sun Risers) கிரிக்கெட் அணியும் ஒன்று என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அணியின் தலைவரே இலங்கை நாட்டைச் சேர்ந்த திரு. குமார் சங்ககாரா, (Kumar Sangakkara), (மேசையைத் தட்டும் ஒலி) இவரைத்தான் அணியின் தலைவராகவே திரு. கருணாநிதியின் பேரனுக்குச் சொந்தமான சன் குழுமம் தேர்ந்தெடுத்துள்ளது. இலங்கை நாட்டைச் சேர்ந்த திரு. திசாரா பெரேரா (Thisara Perera) என்ற மற்றொரு வீரரும் இந்த அணியில் இடம் பெற்றிருக்கிறார். இதை எப்படி திரு. கருணாநிதி அனுமதிக்கிறார்? ஒரு பக்கம் இலங்கைத் தமிழர்களுக்காக உருகுவதுபோல் தோற்றத்தை உருவாக்குவது; மறுபக்கம் தமிழர்களை அழித்த இலங்கை அரசுக்கு உறுதுணையாக இருந்த மத்திய காங்கிரஸ் அரசுடனும் உறவைத் தொடர்வது! டெசோ அமைப்பிற்கு புத்துயிரூட்டியுள்ள திரு. கருணாநிதி, இலங்கையில் நடைபெறவுள்ள காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்று கூறும் திரு. கருணாநிதி, தன் குடும்ப



கிரிக்கெட் அணியில் இலங்கை வீரர்கள் இடம் பெற்றிருப்பது குறித்து வாய் திறக்காமல் இருப்பது சுயநலத்தின் உச்ச கட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் இந்த இரட்டை வேடம்? ஏன் இந்த இரட்டை முகம்? திரு. கருணாநிதியின் இந்த இரட்டை வேடத்தை மக்கள் நன்கு புரிந்துதான் வைத்துள்ளார்கள்.

பிற்பகல் 12—20

என்னைப் பொறுத்தவரையில், இந்த அரசைப் பொறுத்தவரையில், இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப் போரை ஆரம்பத்திலிருந்து எதிர்த்து வந்திருக்கிறோம். இந்திய அரசு இலங்கைத் தமிழர்களை அழிக்க ஆயுதங்களை அளித்ததிலிருந்து, பயிற்சிகளை அளித்ததிலிருந்து அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்திருக்கிறோம். நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், இலங்கையில் போர்க் குற்றங்களை நிகழ்த்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டுமெனவும், இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும், தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி, சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகை செய்யும் வரையில், அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில், மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடையை விதிக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) அதை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தேன். ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் ஆகக்கூடிய நிலையிலும், மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதுமட்டுமல்லாமல், இலங்கை இராணுவ வீரர்களுக்குத் தமிழ்நாட்டில் பயிற்சி அளிப்பதைத் தடுத்து நிறுத்தினேன். இந்தியாவில் எங்கும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடாது என்று பாரதப் பிரதமரை வலியுறுத்தினேன். இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் நடைபெறும் எந்த விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்துகொள்ள அனுமதிக்கக்கூடாது என்று உத்தரவிட்டேன். இலங்கை நாடு பங்கேற்கும் தெற்காசிய தடகளப்

போட்டிகளைத் தமிழகத்தில் நடத்த அனுமதிக்க முடியாது என்று தெரிவித்து, அந்தப் போட்டியை நடத்துவதையே தமிழகம் கைவிட்டு விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், இலங்கையில் இந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெறவுள்ள காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தி பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளேன். சென்ற ஆண்டு இலங்கை அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தினேன். அமெரிக்கா கொண்டு வந்த ஓரளவு வலுவான தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்து, அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக மத்திய காங்கிரஸ் அரசு வாக்களித்தது.

இந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு தீர்மானம் ஒன்றை அமெரிக்கா கொண்டு வந்தபோது, அதற்கு வலுவூட்டும் விதமாக இந்தியா என்னென்ன திருத்தங்களை அளிக்க வேண்டுமென்று பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். இந்தத் திருத்தங்களையெல்லாம், 19–3–2013 அன்று இறுதி வரைவுத் தீர்மானம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு கொண்டு வருவதற்கான நடவடிக்கையை எடுத்து, மனித உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் நாடாக இந்திய நாடு விளங்க வழிவகை செய்ய வேண்டுமென்று நான் பாரதப் பிரதமருக்குக் கடிதம் வாயிலாகக் கேட்டுக்கொண்டேன்.

இதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசியபோது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா இந்த ஆண்டு கொண்டு வருவது ஒருபுறம் இருந்தாலும், தமிழர்கள் நலன் கருதி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதை மற்ற நாடுகளுடன் இணைந்து நிறைவேற்ற வேண்டுமென்றும் மத்திய அரசை நான் கேட்டுக் கொண்டேன். ஆனால், இதையெல்லாம் தி.மு.க. அங்கம் வகித்த மத்திய அரசு கண்டுகொள்ளவில்லை.





இந்தச் சூழ்நிலையில், இலங்கை அரசின் மனிதாபிமானமற்ற, ஈவு இரக்கமற்ற, மனித நேயமற்ற செயல்களை, போர்க் குற்றங்களை, இனப் படுகொலைகளைக் கண்டித்து, கல்லூரி மாணவ, மாணவியர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். மாநிலம் முழுவதும் சுமார் நூற்றுக்கும் அதிகமான கல்லூரிகளில் மாணவ, மாணவியர் வகுப்புகளைப் புறக்கணித்து, நூற்றுக்கணக்கான மாணவ, மாணவியர் பல்வேறு இடங்களில் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். மேலும், மாணவ, மாணவியர் 210 இடங்களில் ஆர்ப்பாட்டம், 110 இடங்களில் ஊர்வலம், 68 இடங்களில் சாலை மறியல், 31 இடங்களில் இரயில் மறியல், 24 இடங்களில் உருவ பொம்மையை எரித்தல் ஆகிய போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

எனது தலைமையிலான அரசால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பாரதப் பிரதமரை வலியுறுத்தி நான் எழுதியுள்ள கடிதங்கள் மற்றும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக எனது தலைமையிலான அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் ஆகியவற்றை பிரதிபலிக்கும் விதமாகத்தான் மாணவ, மாணவியரின் போராட்டம் அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளதுதான் இந்தப் போராட்டம். அரசியலுக்கு சிறிதும் இடமளிக்காமல், இலங்கைத் தமிழர் நலன் ஒன்றையே கருத்திற்கொண்டு, உன்னதமான குறிக்கோளுக்காக அறவழியில் நடத்தப்படும் இந்தப் போராட்டம் இலங்கைத் தமிழர் நலனுக்கான அர்ப்பணிப்பின் வெளிப்பாடு.

பிற்பகல் 12–25

இவ்வளவு உணர்வுபூர்வமான போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்புகள் தமிழகத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற சூழ்நிலையிலும், இலங்கை அரசு இலங்கைத் தமிழர்களைத் தொடர்ந்து இரண்டாம் தர குடிமக்களாகவே நடத்தி வருகிறது. போரினால் இடம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள், முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் அடைக்கப்பட்டுள்ளனர். தங்களுடைய சொந்த நாட்டிலேயே இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வாழ்ந்து வரும் அவல நிலைமை நீடிக்கிறது. இதுமட்டுமல்லாமல், தமிழர்கள்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 மார்ச் 27

வசித்த பகுதிகளில் சிங்களர்களை இலங்கை அரசு குடியமர்த்தி வருகிறது. தமிழர் வழிபாட்டுத் தலங்கள் அகற்றப்படுகின்றன. மொத்தத்தில் ஓர் இனவெறி இலங்கையில் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டிய மத்திய அரசு, தமிழர்களின் உணர்வுகளுக்கு, தமிழக அரசின் கோரிக்கைகளுக்கு சற்றும் மதிப்பளிக்காமல் பாராமுகமாக இருந்து வருவது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

## 3. அரசினர் தனித் தீர்மானம்

### இலங்கையை ‘நட்பு நாடு’ என்று கருதாமல், தமிழினப் படுகொலையை போர்க் குற்றமாகக் கருதி, குற்றம் புரிந்தவர்களுக்கு உரிய தண்டனை கிடைக்கவும், பொருளாதாரத் தடை விதித்திடவும், ‘தனி ஈழம்’ குறித்து பொது வாக்கெடுப்பு நடத்திடவும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தைக் கொண்டு வர மத்திய அரசை வலியுறுத்துதல்

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இந்தச் சூழ்நிலையில், ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வுகளை மத்திய அரசுக்கு மீண்டும் எடுத்துரைக்கும் வகையில் கீழ்க்காணும் தீர்மானத்தினை தமிழக அரசின் சார்பில் நான் முன்மொழிகிறேன்:

#### தீர்மானம்

“தமிழன் யாருக்கும் தாழாமல் – யாரையும் தாழ்த்தாமல், எவரையும் சுரண்டாமல் – எவராலும் சுரண்டப்படாமல், எவருக்கும் எசமானனாக இல்லாமல் – உலகில் எவருக்கும் அடிமையாக இல்லாமல் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே எங்களது தலையாய கொள்கை” என்றார் பேறிஞர் அண்ணா. (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கேற்ப, இலங்கைவாழ் தமிழர்களுக்கு நல்வாழ்வு ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதைத் கருத்திற்கொண்டு, இலங்கை நாட்டை ‘நட்பு நாடு’ என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும்; (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கை இனப் போரின்போது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன் விசாரணை நடத்திடவும்; (மேசையைத் தட்டும் ஒலி) இந்த சர்வதேச



2013 மார்ச் 27] [செல்வி ஜெ ஜெயலலிதா]

விசாரணையின் அடிப்படையில், போர்க் குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதிமன்றம் முன்பு நிறுத்தப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தந்திடவும்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும் வரை இலங்கை நாட்டின்மீது பொருளாதாரத் தடையை விதித்திடவும்; (மேசையைத் தட்டும் ஒலி) ஈழத் தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு ‘தனி ஈழம்’ குறித்து இலங்கைவாழ் தமிழர்களிடமும், இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும், (மேசையைத் தட்டும் ஒலி) ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தினைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்; தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.” (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தினை இந்த மாமன்றம் ஒரு மனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கைத் தமிழர்களின்பால் எனது தலைமையிலான தமிழக அரசு எடுத்து வரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டும், நமது கோரிக்கைகள் வென்றெடுக்கப்படும் நாள் விரைவில் மலர இருக்கிறது என்பதை மனதில் வைத்தும், (மேசையைத் தட்டும் ஒலி) போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாகிய மாணவ, மாணவியர் தங்களுடைய அறப்போராட்டத்தைக் கைவிட்டு, கல்வியில் தொடர்ந்து கவனம் செலுத்தி, பெற்றோருக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) எனது இந்த வேண்டுகோளுக்கு அனைத்து கட்சிகளைச் சார்ந்தவர்களும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*பிற்பகல் 12–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2013 மார்ச் 27

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது மணி 12–30 ஆகிவிட்டது. இன்னும் 11 பேர் பேச வேண்டும். (குறுக்கீடு) நன்றி சொல்கிறீர்களா? (குறுக்கீடு) கருத்து எல்லாம் இல்லை. தீர்மானம் நிறைவேற்றியதற்குப் பின்னர் கருத்துகள் இல்லை, உட்காருங்கள்.

## 4. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் நிதியாண்டிற்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையின்மீது எனது கருத்துகளைப் பதிவு செய்திட நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிற தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல நிதிநிலை அறிக்கை ஏழை மக்களுக்கு ஏற்றம் தரக்கூடியதாகவும், அடித்தளத்து மக்களுக்கு ஆதரவு தரக்கூடியதாகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உதவிடக்கூடியதாகவும், அனைத்துத் தர மக்களுக்கும் சம வாய்ப்பை உருவாக்கித் தருவதாகவும், அப்படிப்பட்ட ஓர் அரணாக இருக்கக்கூடியதாகவும் அமைந்திட வேண்டும் என்பது நிதிநிலை அறிக்கைக்கான இலக்கணமாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சீரிய இலக்கணத்தோடு நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திற்கு நிதிநிலை அறிக்கையைத்



2013 மார்ச் 27] [முனைவர் செ.கு. தமிழரசன்]

தந்திருக்கிறார்கள் என்கிறபோது அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'பட்ஜெட்' என்கிற இந்த சொல் கிரேக்கச் சொல் என்று சொல்கிறார்கள். அந்த கிரேக்கச் சொல்தான் உலக ஜனநாயகத்திற்கே தொடக்கச் சொல்லாக இருந்து, அந்த ஜனநாயக நாடுகளை வழிநடத்திச் செல்கிற, திட்டமிடுகிற வாய்ப்பை ஜனநாயகத்தில் ஏற்படுத்தி இருக்கிற சொல்லாக, இலக்கணமாக இருந்துகொண்டிருக்கிறது.

*பிற்பகல் 12–35*

தனித்தனியே வாழ்ந்த மனிதன், எப்போது சமூகத்தோடு சேர்ந்து வாழத் தொடங்கினானோ, ஒரு குழுவுக்கு பயந்து, ஒரு குழுவில் இணைந்து, ஆக குழு சமுதாயங்கள் உருவான அந்தக் காலத்திலேயே, எதிர்காலம் என்கிற ஓர் அச்சம் ஏற்பட்டு, அந்த எதிர்காலம் கருதி திட்டமிடத் தொடங்கினானோ அப்போதே இந்தத் திட்டமிடுகிற உணர்வும், சிந்தனையும் சமூகத்தில் உருவாகிவிட்டது. திட்டமிடுவது என்பதற்கான மறு பெயர்தான் பட்ஜெட்டாக, அரசாங்கங்களின்மூலம் ஒரு நிதிநிலை அறிக்கையாக இன்றைக்கு மாறி, உருவாகி மரபு பெற்று வந்துள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேற்றைய முன்தினம்கூட இந்த அவையில் சொன்னார்கள். மக்களுக்காகத்தான் திட்டங்களே தவிர, திட்டங்களுக்காக மக்கள் இல்லை என்று. அதுதான் மக்களாட்சித் தத்துவம்.

மன்னர் ஆட்சி, அதிபர் ஆட்சி ஆகிய ஆட்சி முறைகள் அமைந்திருக்கிற பகுதிகளில் எல்லாம், அந்த ஆட்சியில் உள்ளவர்களுக்காகத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. மக்களாட்சி எங்கெல்லாம் அமைந்து இருக்கிறதோ, அங்கெல்லாம் மக்களுக்காகத் திட்டங்கள் உருவாகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த வழியிலே மக்களுக்காகத் திட்டங்கள் என்கிற அடிப்படையில்தான் மக்களாட்சி மணி மகுடமாக இருந்து கொண்டிருக்கிற நம்முடைய மாதர்குலப் பேரரசி புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு இந்த நிதிநிலை அறிக்கை மக்களுக்கான திட்டங்களைப் பெருக்கியதாக இருக்கிறது.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2013 மார்ச் 27

இந்த ஆட்சி மக்களுக்கான திட்டங்களை வகுக்கிற அதேநேரத்தில் அதிகாரங்கள்கூட மக்களுக்காகவே என்கிற வகையிலே மக்களைத் தேடிப் போகும் வகையில் நம்முடைய அதிகார அமைப்பை முடுக்கி விடுகிற வகையில், இப்போது புதிதாக "அம்மா திட்டம்" என்ற ஒரு திட்டத்தை வருவாய்த் துறையில் அறிமுகப்படுத்தி, எங்கெல்லாம் மக்கள், ஏழை மக்கள், கிராமப்புற மக்கள் இருக்கிறார்களோ அவர்களைத் தேடி அலுவலர்கள் போய், அவர்களைத் தேடி அரசு அதிகாரம் போய் உங்கள் பிரச்சினைகள் என்ன உங்கள் தேவைகள் என்ன என்று கேட்டறிந்து தீர்வு காணுகிற இந்த 'அம்மா திட்டத்தின்' மூலம் திட்டங்களும் மக்களுக்காக, அதிகாரமும் மக்களுக்காக என்கிற ஒரு புது மறுமலர்ச்சியை ஆட்சி அதிகாரத்தில் உருவாக்கிக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே உணவு, உறைவிடம், வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம், வேளாண்மை, தொழில் என்று ஒரு சமூகக் கட்டுப்பாடு, சமூகக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு என்னென்ன அரங்கங்கள் அவசியமோ, அந்த அரங்கங்களையெல்லாம் செழுமைப்படுத்துகிற வகையில் இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடுகளும், திட்டங்களும் அமைந்திருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டி, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக நம்முடைய தமிழக அரசு, புரட்சித் தலைவி அம்மாவின் தலைமையிலான இந்தத் தமிழக அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கி வருகிற ஏராளமான, தாராளமான எத்தனையோ நலத் திட்டங்களுடைய விரிவாக்கமாக, முழுமையாக செழுமைப்படுத்தி இருக்கிற, ஒரு சிறப்பான அம்சமாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏராளமான நலத் திட்டங்கள் மென்மேலும் செழுமைப்படுத்தப்பட்டு இருக்கின்றன, முழுமைப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த ஒட்டுமொத்த நிதிநிலை அறிக்கையில் நாம் உணர முடிகிறது.



2013 மார்ச் 27] [முனைவர் செ.கு. தமிழரசன்]

1,600 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சங்க காலப் புலவர் திருமூலர் அவர்கள் சொன்னார்கள். "உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே" என்று. அந்தத் திருமூலர்தான் திராவிட இயக்கத்தினுடைய தத்துவத்தையே தந்தவர். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற சமய சார்பின்மைக் கொள்கையை இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலகத்திற்கு மட்டுமல்ல, நம்முடைய, திராவிட இயக்க தத்துவத்தையே "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற அந்த வார்த்தையைத் தந்த திருமூலர் அவர்கள், "உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே" என்று சொன்னார். ஆக, ஏழை மக்கள் பெருமளவில் வசிக்கிற, வறுமைக்கோட்டிற்குக் கீழே அதிக அளவில் வசிக்கிற ஒரு நாட்டின் தேவை எதுவோ அந்த நாட்டின் துக்கம் எதுவாக இருக்கிறதோ, அந்தத் துக்கத்தைத் தவிர்ப்பதற்கு ஏறக்குறைய ரூ.4,900 கோடி முதல் ரூ.5,000 கோடி வரையில் உணவு மானியமாக மட்டும் இந்த நிதிநிலை அறிக்கையில் வழங்கப்பட்டு இருக்கிறது என்கிறபோது ஏழைகளின் குரலாக இந்தச் சிறப்பினை நான் இங்கே பாராட்டி, வரவேற்று பதிவு செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–40

அதைப்போலவே, கடந்த ஆண்டு பசுமை வீடு திட்டத்திலே ஏராளமான ஏழையெளிய மக்களுக்கு உறைவிடம் தந்திருக்கிற இந்த அரசு நடப்பாண்டிலேயும் 60,000 பசுமை வீடுகளைத் தருவதோடு, இந்திரா குடியிருப்புத் திட்டத்திலே ஒரு இலட்சம் குடியிருப்பு வீடுகளைக் கட்டுவதற்கு திட்டமியற்றி, வரும் நடப்பாண்டிலே மட்டும் 1,60,000 கிராமப்புற மக்களுக்கான குடியிருப்புகளையும், மாநகரங்களிலே 50,000 பேருக்கு குடியிருப்புகளையும் உருவாக்குகிற திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் எடுத்து வைப்பதன்மூலம், வளர்ந்து வருகிற ஒரு நாட்டின் அவசியமான தேவையான, அதுவும் வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கிற தொழிலாளர்களுக்கு ஏழை மக்களுக்கு, அடித்தளத்து மக்களின் தேவையை நிவர்த்தி செய்கிற வகையிலே வீடு கட்டித் தருகிற முயற்சியையும் அரசு இந்த நிதிநிலை அறிக்கையில் முதன்மைப்படுத்தி இருப்பதை நான் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2013 மார்ச் 27

அதேபோல, வளர்ந்து வரும் நாடுகளில் அத்தியாவசியமான, தேவையான வேலைவாய்ப்பைக் கருத்திலே கொண்டு, ஆட்சி அமைந்த ஓராண்டு, 11 மாத காலத்திலே ஒரு இலட்சம் பேருக்கு மேலே வேலைவாய்ப்புகளை உருவாக்கி அவர்களைப் பணியிலே அமர்த்தியிருப்பதோடு, வரும் நடப்பாண்டிலே 3 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு என்பதைக் கருத்திலே கொண்டு அதற்கான திட்டங்களையும் உருவாக்கி ஏராளமான வேலைவாய்ப்பைக் காவல் துறையிலும், உள்ளாட்சித் துறையிலும், பிற துறைகளிலும் உருவாக்கி இருப்பதன்மூலம், வளர்ந்து வருகிற நாடுகளின் நோக்கங்களை நிறைவேற்றி இருக்கிற தன்மையையும் நான் இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைவிட இன்னும் சிலவற்றை இங்கே எடுத்துச் சொல்லி, குறிப்பிட்டு, பதிவு செய்தாக வேண்டும். தென் மாவட்டங்களிலே புதிய தொழில்களை, பெரும் தொழில்களை, பன்னாட்டு தொழில்களை, உருவாக்குவதற்கு மாநில அரசு குறிப்பாக, தென் மாவட்டங்களைக் கருத்திலே கொண்டு, அந்த மாவட்டங்களிலே உருவாக்குவதற்கு வரும் நடப்பு நிதியாண்டிலே திட்டமிடும் என்கிற ஒரு குறிப்பு என்னைப் போன்றவர்களை மிகப் பெரிய அளவிலே மகிழ்ச்சியடையச் செய்திருக்கிறது. 1952–களிலே தொடங்கி இன்று வரையிலே அரை நூற்றாண்டு காலமாக சமூக நல்லிணக்கத்திற்கு மாறான பல நடவடிக்கைகளினாலே தென் மாவட்டங்கள் எப்போதுமே நீருபூத்த நெருப்பாக இருந்து ஏதோ ஒரு காற்றடிக்கிறபோது அது பொங்கியெழுந்து கலவரங்கள் விளைந்து, பதட்டம் உருவாகி, அந்தப் பதட்டம் தணிவதற்காகப் பல நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு, அப்படி அரை நூற்றாண்டு காலமாக தொடர்ந்து சமூக நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கின்ற வகையிலே அந்த மாவட்டங்கள் எப்போதுமே பதட்ட நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன என்பதற்காக நாம் அதைத் தவிர்த்து விட முடியாது. அதை மறைத்து விடவும் முடியாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அப்படிப்பட்ட பகுதிகளிலே நிரந்தரத் தீர்வை உருவாக்க வேண்டுமென்கிற பெரும் நோக்கோடு, நீண்ட தொலைநோக்கோடு தென் மாவட்டங்களுக்கு முன்னுரிமை தந்து பெருந்தொழில்களை உருவாக்கி, அந்தத் தொழில்களின்மூலம் அந்தப் பகுதிகளிலே நிரந்தர



2013 மார்ச் 27] [முனைவர் செ.கு. தமிழரசன்]

அமைதியை உருவாக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கையை சமூக சீர்திருத்தவாதி என்கிற மிகப் பெரிய கண்ணோட்டத்தோடு, அவர்கள் உருவாக்கி இருக்கிற இந்தச் சிந்தனையை நான் மனப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கே ஒரு நிரந்தரத் தீர்வு இனிமேல் ஏற்படும். அந்தப் பகுதிகளிலே, நெல்லைப் பகுதியிலோ, தூத்துக்குடி பகுதியிலோ அல்லது மதுரையைத் தாண்டிய வேறு பகுதிகளிலெல்லாம் இப்படிப்பட்ட பெருந்தொழில்களைத் தொடங்குவதன்மூலம், அதை ஒரு நோக்கமாகவே அரசு பிரகடனப்படுத்தி இருப்பதன்மூலம் அங்கே ஒரு நிரந்தரத் தீர்வு உருவாகும். அரை நூற்றாண்டு கால பிரச்சினைக்கு இன்றைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீர்வு கண்டிருக்கிறார், வித்திட்டிருக்கிறார் என்கிறபோது அந்தச் சிந்தனையை, அந்த சமூக சீர்திருத்த உணர்வை நான் மீண்டும் மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, இதை இங்கே எடுத்து வைக்கிற அதே சந்தர்ப்பத்திலே, வட மாவட்டங்களிலும் அப்படிப்பட்ட உணர்வு விதைகள் வந்து விடக் கூடாது என்பதிலே இந்த அரசு கவனமாக இருக்க வேண்டுமென்பதையும் நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். வேண்டுமென்றே சாதிய மோதல்களை உருவாக்கும், சாதிய சிந்தனைகளைத் தூவிவிடுகிறவர்கள், யாராக இருந்தாலும், அவர்கள் பின்னணியிலே எந்தச் சக்தி இருந்தாலும் அவற்றை எல்லாம் முளையிலேயே கிள்ளி எறிவதற்கு இந்த அரசு முனைப்போடு, உறுதியோடு இருந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துச் சொல்வது அவசியமாக இருக்கும். ஏனென்றால், இந்த ஆட்சியிலே, கடந்த நாட்களில் பலமுறை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசிலே எடுத்து வைத்துள்ள கோரிக்கைகள் இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்கு நிச்சயம் நிறைவேறும் என்கிற நம்பிக்கையை, அந்த உணர்வை அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிற ஒருவன் என்கிற வகையில் நான் இங்கே சிலவற்றைச் சொல்வது அவசியமாக இருக்கின்ற காரணத்தினால் சொல்ல விரும்புகிறேன்.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2013 மார்ச் 27

*பிற்பகல் 12–45*

காலத்தின் அருமை கருதி விரைவில் முடித்துவிடுகிறேன். நம்முடைய இந்திய நாடு, உலகத்தின் முதல் மக்கள் மறுமலர்ச்சியை உருவாக்குவதற்கு வித்திட்ட ஒரு நாடு. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட நம்முடைய மூத்த திராவிட இயக்க முன்னோடிகள் எல்லாம் எந்தத் தத்துவத்தை, எந்தக் கொள்கையை, மற்ற மத உணர்வுகளுக்கு அப்பாலும் நேசித்தார்களோ, அந்தக் கொள்கை உருவான நாடு இந்த நாடு. பௌத்தம் இங்கேதான் தோன்றியது. இந்தியாவிலே தோன்றிய ஒரே மதம் புத்த மதம். புத்தருடைய பிறந்த நாளை நாம் இன்னமும் ஒரு விடுமுறை நாளாக அறிவிக்காமல் இருக்கிறோம். சில மாநிலங்களிலே அது விடுமுறை நாளாக இருக்கின்றது. (குறுக்கீடு) அது வேறு, புத்த மதம் தோன்றியது இந்தியாவில், பீகாரில், புத்த கயாவில். மதத்தை காலமெல்லாம் எதிர்த்த தந்தை பெரியார் அவர்கள் ஒரு மத மாநாட்டில் கலந்துகொண்டார் என்றால், அது இலங்கையில் நடந்த புத்த மத மாநாட்டில்தான் என்பதை நான் நம்முடைய சக உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் அவருடைய வாழ்நாளிலே ஒரு மத மாநாட்டிலே, எவர் கடைசிவரை மதத்தை எதிர்த்தாரோ அவர் ஒரு மத மாநாட்டில் கலந்துகொண்டார் என்று சொன்னால், அது இலங்கையிலே நடந்த புத்த மத மாநாட்டில்தான். அது வரலாறு. ஆகவே, தந்தை பெரியார் அவர்களே கடைசி வரையிலே தனது குடியரசு பத்திரிகையிலே தலைப்பாக ஒன்றைப் போட்டுக்கொண்டிருந்தார். "புத்தி உள்ளவனே புத்தன், சிந்திக்கத் தெரிந்தவனே சித்தன்" அதுதான் அந்தத் தலைப்பிலே இருக்கும். நீங்கள் இன்றைக்கும் கன்னிமாரா நூலகத்திலே சென்று தேடிப்பிடித்து பார்த்தீர்கள் என்று சொன்னால், அந்தக் குடியரசு நாளிதழ் முகப்பிலே என்ன இருக்கும் என்றால், "புத்தி உள்ளவனே புத்தன், சிந்திக்கத் தெரிந்தவனே சித்தன்" என்றுதான் இருக்கும். ஆகவே, தந்தை பெரியார் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, பேரறிஞர் அண்ணா அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த பௌத்த சிந்தனைகள் தமிழ்நாட்டை ஆயிரம் ஆண்டுகள் ஆண்டது என்பது வரலாறு. (மணியடிக்கப்பெற்றது) சங்க இலக்கியங்களிலே, வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை ஆகிய எல்லா இலக்கியங்களுமே பௌத்த இலக்கியங்கள் . . .



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். இன்றைக்கு இன்னும் பத்து உறுப்பினர்கள் பேச வேண்டியுள்ளது. தற்போது நேரம் *12–47*.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். கிருஷ்ண ஜெயந்திக்கு விடுமுறை விடுவதைப்போல, கிருஸ்துமஸ்க்கு விடுமுறை விடுவதைப்போல, தமிழகத்திலே அடித்தளத்து மக்கள், அம்பேத்கர் இயக்க சிந்தனையாளர்கள், திராவிட இயக்க சிந்தனையாளர்கள் பலர் *50* இலட்சம் பேர்களுக்கு மேலே பௌத்த நெறியைப் பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இந்தக் கருத்தோடு உரையை முடித்துவிடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** ஆகவே, அன்புகூர்ந்து நம்முடைய அரசு பரிசீலித்து புத்த ஜெயந்தியை விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும் என்கிற அந்த வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். அதைப்போல, சில கோரிக்கைகளைச் சொல்லி நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் பத்து உறுப்பினர்கள் பேச வேண்டும். மணி *12–48* ஆகிறது. சரியாக நீங்கள் *15* நிமிடம் பேசியிருக்கிறீர்கள். எல்லோருக்கும் இனி *10* நிமிடங்கள்தான். நீங்கள் *15* நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். ஒரு நிமிடத்தில் பேச்சை முடியுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையில் ஓர் ஆணை உள்ளது. அந்த ஆணை தவிர்க்கப்பட வேண்டும் என்று நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்ற வகையில், அந்த ஆணையை மற்ற துறைகளும் பின்பற்றிவிடக் கூடாது. அந்த ஆணை எண் *206*, என்னவென்றால், பணியாற்றும்போது இறந்தவர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குகின்றபோது, இறந்தவர்கள் எந்தப் பணியில் இருந்தார்களோ அந்தப் பணியையே குழந்தைகளுக்குத் தருவது என்பதுதான்.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2013 மார்ச் 27

ஒரு துப்புரவுத் தொழிலாளரின் குழந்தை, அவன் எம்.ஏ., படித்திருப்பானேயானால், அவனுக்குத்தக்க வேலையைத் தரவேண்டுமேயொழிய அவனுக்கு துப்புரவுத் தொழிலையே தருவது என்பது குலத் தொழிலை ஆதரிக்கின்ற ஒரு நிலையை உருவாக்கிவிடக்கூடும். அவன் என்ன படிப்பு படித்திருக்கின்றானோ அந்தப் படிப்புக்குத் தகுந்த வேலையினைத் தருவது, எழுத்தராகவோ அல்லது வேறு வேலையோ, தருவதுதான் நம்முடைய அரசு காட்டுகின்ற ஒரு முன்னுரிமையாக இருக்கவேண்டும் என்கிற வகையில், பிற துறைகளிலும் அது வந்துவிடக்கூடாது என்பதற்காக மாற்றம் தேவை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நேரத்தின் அருமை கருதி உரையை முடித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டிருப்பதுபோல 'தமிழர்களின் நலன் தமிழகத்தின் வளம்' என்கின்ற அந்தப் புதிய முழக்கத்திற்கு ஒப்ப தமிழர்களின் நலத்தையும் தமிழகத்தினுடைய வளத்தையும் கருத்திலேகொண்டு தயாரித்து அளிக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கை என்கின்ற வகையிலே வாழ்த்தி, பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12—50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு. இன்னும் 10 உறுப்பினர்கள் பேச வேண்டியுள்ளது. நேரத்தைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2013—2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதினான்காவது பொதுத் தேர்தலில் மூன்றாவது முறையாக பொறுப்பேற்பதற்காக அவர்கள் தந்த வாக்குறுதிகளில் பெரும்பாலான வாக்குறுதிகளைத் தங்குதடையில்லாமல் அரசியலாளர்கள், நிர்வாகவியலாளர்களே வியந்து இப்படிப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது என்று அவர்கள் ஐயுற்றபோது, அவர்கள் மிக எளிதாக, தந்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றி, அந்தத் திட்டங்கள் தொடர்ந்து மக்கள் அனுபவிப்பதற்கு ஏற்ற நிதிநிலை அறிக்கையாகத்தான் இந்த நிதிநிலை அறிக்கை செம்மைப்படுத்தப்பட்டிருக்கிறது.



2013 மார்ச் 27] [திரு. உ. தனியரசு]

குறிப்பாக, இந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு ரூபாய்கூட புதிதாக வரியோ, ஏற்கெனவே இருந்த வரியைக் கூட்டியோ இல்லாமல், அலங்காரம் இல்லாமல், ஒப்பனை இல்லாமல் ஒரு நிதிநிலை அறிக்கையை நேர்மையோடு, ஒரு சிறந்த நிருவாகம் மக்களுக்காகச் சேவை செய்கின்ற நிருவாகம், அந்த நிருவாகத்தினுடைய வெளிப்பாடாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருப்பதால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலாண்மையில் நம்முடைய நிதியமைச்சர் மாண்புமிகு ஐயா அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை முழுவதுமாக தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை வரவேற்கிறது.

குறிப்பாக, மின் உற்பத்திக்கு அதிக நிதியொதுக்கியிருப்பது, நகர்ப்புற கட்டமைப்புகளை மேம்படுத்த அதிக நிதி, கல்வி, சுகாதாரம், ஊட்டச் சத்து போன்ற சமூக மேம்பாட்டிற்குக் கூடுதல் நிதி தந்திருப்பது, இந்த நிதியாண்டில் 17,138 காவலர்கள், 1,000 உதவி ஆய்வாளர்கள், 1,000 தீயணைப்புத் துறை வீரர்கள், 300 சிறைக் காவலர்கள் என சீருடைப் பணியாளர்கள் 20,000 பேர் புதிதாக வேலையில் அமர்த்துவதற்குப் பணியாணை வழங்க ஆணை பிறப்பித்திருப்பது என்பது மிகுந்த வரவேற்பிற்குரியது.

அதேபோன்று, மிகவும் பழமையான, வாடகைக் கட்டடங்களிலே காவல் நிலையங்கள் இயங்கிவருகின்ற நிலையை மாற்றி புதிய சொந்தக் கட்டடத்திற்கு கோடிக் கணக்கிலே நிதியைத் தந்து, ஒட்டுமொத்த தமிழகம் முழுக்க வாடகைக் கட்டடங்களிலே இயங்குகின்ற காவல் நிலையங்களை சொந்தக் கட்டடங்களாக மாற்றுவதற்கு நிதி ஒதுக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மிகவும் பாராட்டுகிறேன்.

மாநில சாலை மேம்பாட்டிற்குக் கூடுதலாக ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றது அரசு. சாலைப் போக்குவரத்து, வாகன நெரிசல், மக்களுடைய நகர்ப்புற அடர்த்தியான வாழ்வியலை கருத்தில்கொண்டு, நாட்டிலேயே அதிகப்படியான சாலை வசதியைப் பெற்றிருக்கின்ற நம்முடைய மாநிலத்தில், அதை இன்னும் மேம்படுத்துவதற்கு விபத்துகள் இல்லாத தரமான வேகமாக பயணிக்கின்ற சாலை வசதிகளை உருவாக்குவதற்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த

நிதியாண்டிலேயே *1,000* கோடி ரூபாயைக் கூடுதலாக ஒதுக்கியிருப்பதைப் பாராட்டி வரவேற்கிறேன்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்ட நாட்கள் *100* ஆக இருந்ததை *150* நாட்களாக மாற்றி, அந்த *150* நாட்களுக்கும் *132* ரூபாய் ஊதியமாக இருந்ததை *16* ரூபாய் கூட்டி *148* ரூபாயாக மாற்றியிருக்கிறார்கள்.

ஏற்கெனவே *500* ரூபாய் முதியோர் உதவித் தொகை பெற்றவர்கள், மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்றவர்கள் *500* ரூபாய் பெற்று வந்தபோதுகூட அந்தத் திட்டத்திற்கு மக்களிடத்திலே வரவேற்போ, விழிப்புணர்வோ, தேவையோ இல்லாத சூழ்நிலை இருந்தது. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு அந்த *500* ரூபாய், *1,000* ரூபாயாக உயர்த்தப்பட்டது. சுதந்திரம் பெற்று சுமார் *70* ஆண்டுகளில் *500* ரூபாய் இருந்ததை ஒரே உத்தரவில் *1,000* ரூபாயாக மாற்றியதன் விளைவுதான் கிராமப்புறங்களில் வசிக்கின்ற ஏழையெளிய ஆதரவற்ற சாமான்ய முதியோர்கள், பெரியவர்கள், ஆதரவற்றவர்கள், மாற்றுத் திறனாளிகள் அவர்களுடைய வாழ்வியலில் வாழ்வதற்கான ஆதாரத்தை உளப்பூர்வமாக அரசு எல்லா வகைகளிலும் அவர்களை கைவிடாது என்கின்ற உத்தரவாதம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழு கோடி தமிழ்ச் சமூகத்திற்கு ஆட்சித் துறைத் தலைவராக வந்தபிறகுதான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதுதான் பெருமைக்குரிய விஷயம்.

பிற்பகல் *12—55*

அந்த *500* ரூபாயை ஆயிரம் ரூபாயாக மாற்றியவுடன் உதவித் தொகை பெறுவோருக்கு எப்படி மதிப்புக்கூடியதோ அதைப்போன்று கிராமப்புறங்களிலே விவசாயத் தொழிலாளர்கள் இந்த வறட்சி காலகட்டங்களில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு *150* நாட்கள் ஏறத்தாழ ஒரு ஆண்டில் பாதி நாட்களுக்கு அரசாங்க வேலை. அந்த பாதி நாட்களும் *150* ரூபாய் என்பது மாதத்திற்கு ரூ.*4,500* ஏறக்குறைய வருகிறது. இதையே, ஒரு சத்துணவு பணியாளரோ அல்லது பல்வேறு பணியாளர்களோ இதே ஐந்தாயிரம், ஆறாயிரம் ரூபாய் பெறுவதற்கு எவ்வளவோ போட்டிகள் இருக்கின்றன. பல்வேறு, கட்சிகளைச் சார்ந்தவர்கள்கூட எத்தனையோ



அமைச்சர்களை அணுகி, அதற்குப் பரிந்துரைக் கடிதங்கள் கொடுத்து, வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், ஒரு ரூபாய்கூட எந்த வகையிலும் செலவழிக்காமல், கல்வித் தகுதி இல்லை, தகுதித் தேர்வு இல்லை, இட ஒதுக்கீடு இல்லை, promotion கிடையாது, ஆனால் அரசாங்க வேலை. வருடத்தில் பாதி நாள், *4,500* ரூபாய் சம்பளம். ஒரே தகுதி உயிரோடு ஒரு மனிதன் இருக்கவேண்டும். வேறு எந்தத் தகுதியும் வேண்டியதில்லை. உயிரோடிருக்கிற அனைத்து மனிதர்களுக்கும் வேலைவாய்ப்பு தந்து, மாதம் *4,500* ரூபாய் தந்து, வருடத்தில் பாதி நாட்கள் அவர்கள் அரசு ஊழியர்களாக தகுதி உயர்வு பெறுகிற பெருமையை, சிறப்பைச் சேர்த்த ஒப்பற்ற முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிலையை இப்போது அரசாங்க வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்கள்கூட, கிராமப்புறங்களில் ஊராட்சிகளில் இந்த வேலைவாய்ப்பைப் பெற்றுவிட்டால், காத்திருப்போர் பட்டியல் எவ்வளவோ குறைந்திருக்கும். ஆனால், ஊராட்சியில் மட்டும்தான் இந்த வேலைவாய்ப்பு இருக்கிறது. என்னுடைய நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதியிலே ஒரு நகராட்சிகூட கிடையாது. பேரூராட்சிதான் இருக்கிறது. ஐந்து பேரூராட்சிகள் இருக்கின்றன. ஐந்து பேரூராட்சிகளிலுமே விவசாயமும், விவசாயத் தொழிலாளர்களும் நிரம்பியிருக்கிறார்கள். அந்தப் பேரூராட்சிகளில் இருக்கிற கிராமப்புற விவசாயத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்குத் தடையாக இருப்பது, பேரூராட்சிகளில் வசிக்கக்கூடியவர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பைப் பெறமுடியாத சூழ்நிலையில் உள்ளனர். பொதுவாக இந்தத் திட்டம் அவசியமா, அவசியம் இல்லையா என்பதற்கான முரண்பாட்டிற்குள் போகவில்லை. ஆனால், பேரூராட்சிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் தரமான ஊதியமாக மாற்றிய பிறகு *150* நாட்களுக்கு அந்த வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று உறுதிப்படுத்தப்பட்ட பிறகு பேரூராட்சிகளில் இருக்கிற மக்களைவிட ஊராட்சிகளில் இருக்கிற மக்கள் பெருவாரியாக அதில் பயன்பெறுகிறார்கள்.

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்திலே ஒரு திருத்தம். வறட்சி மாநிலமாக அறிவிக்கப்பட்ட காரணத்தினால்தான் 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டம் 150 நாளாக உயர்த்திக்கொடுக்கப்பட்டிருக்கிறது. வறட்சியாக அறிவிக்கப்படாத பட்சத்தில் ஆண்டொன்றுக்கு 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டமாகத்தான் இது செயல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** இந்த வறட்சிக் கால கட்டத்தில் ஊராட்சியில் இருக்கிற பக்கத்து கிராமத்தில் இருக்கக்கூடியவர்கள் வறட்சி என்ற அறிவிப்பை காரணம்காட்டி அவர்கள் அந்தப் பலனைப் பெறுகின்றபோது, பக்கத்து கிராமத்தில் பேரூராட்சியில் வசிக்கின்ற ஒரே காரணத்திற்காக மற்றொரு விவசாயத் தொழிலாளி அந்த வாய்ப்பைப் பெறுவதற்குத் தடையாக இருக்கின்ற அந்த உத்தரவை. . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சிப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் செய்கின்ற பணி, கூலி விவசாயத் தொழில்கள். அதன் அடிப்படையிலேதான் அந்த 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் நகராட்சிப் பகுதிகளில் இருக்கின்றவர்கள், பேரூராட்சிப் பகுதிகளில் இருக்கின்றவர்கள் விவசாயத் தொழிலாளர்கள் அந்தப் பகுதியில் என்னென்ன கூலித் தொழில்கள் இருக்கின்றனவோ, பல பேரூராட்சிகளில் அவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இப்போது பார்ப்போம் என்று



2013 மார்ச் 27] [திரு. கே.பி. முனுசாமி]

சொன்னால் ஒரு பால்கோவா கம்பெனி இருக்கிறது. அந்த பால்கோவா கம்பெனியில் 50 பேர் வேலை செய்கிறார்கள். அதுபோன்ற பணிகளில் அவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான் அவர்களை அதில் ஈடுபடுத்தமுடியவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** விவசாயத் தொழிலாளராக இருந்து அவர்கள் விரும்பினால், விரும்பி அந்த வேலையை நான் செய்கின்றேன் என்று விரும்புகின்றபோது அதற்கான வாய்ப்பை வழங்க விதியைத் தளர்த்துவதற்கு மாநில அரசாங்கத்தால் இயலும் என்றால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போன்று காவிரி பாசன விவசாயிகளினுடைய பயிர் இழப்பிற்கு 20 நாட்களில் அவர்களுடைய வங்கிக் கணக்கிற்கு சுமார் 541 கோடி ரூபாயைத் தந்து, இந்திய வரலாற்றில் பயிர் இழப்பிற்காக உதவி செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வரவேற்று நன்றியோடு பாராட்டுகிறேன்.

பிற்பகல் 1–00

அதுபோல், வறட்சியால் பாதிக்கப்பட்ட பிற மாவட்ட விவசாயிகளுக்கும் விரைவாக இந்த நிவாரண நிதி சென்று சேருவதற்கான ஆயத்தப் பணிகள் விரைந்து நடைபெற்று வருவதாக நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பதையும் வரவேற்கிறேன்.

குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2 கோடி ரூபாய் தொடர்கிறது என்பது மகிழ்ச்சி. அதை 5 கோடி ரூபாயாக உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்ய வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதி, அவர்களுடைய ஊதியம், பணப் பயன்கள் மிகக் குறைந்த அளவில் இருக்கின்றன. ஒரு சாதாரண ஆசிரியருடைய ஊதியத்திற்கு இணையாக அல்லது குறைவாக இருக்கிறது. ஒரு தொடக்கப் பள்ளியிலே இருக்கிற ஆசிரியர் ஒருவர்,

[திரு. உ. தனியரசு] [2013 மார்ச் 27

அவர் உள்ளூரிலிருந்து 5 மணி நேரம், 6 மணி நேரம் சென்று பணியாற்றி, அவர் பெற்று வருவதற்கான ஊதியத்தைவிட குறைவாக இருக்கிறது. அதிலும், குறிப்பாக என்னுடைய தொகுதியைப் போன்று . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்பொழுதுமே மனித இயல்பு 'தனக்கு' என்று வருகின்றபொழுது, கூடுதலாகக் கேட்க வேண்டுமென்பது பேரவா. அதனடிப்படையிலே 'சட்டமன்ற உறுப்பினர்' என்று வருகின்றபொழுது 2 கோடி ரூபாயோடு 5 கோடி ரூபாய் கொடுக்க வேண்டும் என்பதில் உங்களோடு எங்களுக்கும் அந்த ஆசை இருக்கிறது. ஆனால், இந்த நாட்டை வழிநடத்திக் கொண்டிருக்கக்கூடிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு சோதனைகளைச் சந்தித்து, நம்முடைய தமிழக அரசியல் வரலாற்றில் மட்டுமல்ல, இந்திய அரசியல் வரலாற்றை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், குறுகிய காலத்திற்குள்ளாக ஒரு மாநிலத்தில், கடந்த ஆண்டு ஒரு இலட்சத்து 18 ஆயிரம் கோடி ரூபாய்க்கு நிதிநிலை அறிக்கையைக் கொடுத்து, அடுத்த ஆண்டே ஒரு இலட்சத்து 43 ஆயிரம் கோடி ரூபாய் வரவு—செலவு கணக்கு கொடுத்திருக்கிறார்கள் என்றால் நிதி ஆதாரத்தை எப்படியெல்லாம் முயற்சி செய்து திரட்டியிருப்பார்கள் என்பதை நாம் உணர வேண்டும். அதனடிப்படையிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சமூகம் மேம்பட வேண்டும் என்பதற்காக, ஒடுக்கப்பட்ட மக்கள் மேம்பட வேண்டும் என்பதற்காக பல்வேறு நலத் திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நிதி ஆதாரங்கள் நிறைய தேவைப்படுகின்றன. அந்த நிதி ஆதாரங்கள் போக, வருகின்ற காலத்தில் உங்களோடு நாங்களும் சேர்ந்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே வேண்டி, எதிர்காலத்திலே அதை உயர்த்துவதற்குரிய முயற்சியை மேற்கொள்வோம் என்பதை பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு. அதிகபட்சம் இரண்டு நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல ஊதிய உயர்வு. ஐயா அவர்களே, 2 கோடி ரூபாய் தொகுதி மேம்பாட்டு நிதிக்குத்தான். அதுவும் மக்களுக்காகத்தான் மேம்பாட்டு நிதி. அதுவும் கிராமப்புறம் ஐயா. இப்போது, 2 கோடி ரூபாய், 5 கோடி ரூபாய் என்பது தி.நகர் போன்று ஒரு மாநகரத்தினுடைய மையப் பகுதியில் இருக்கிற தொகுதிக்கு 2 கோடி ரூபாய், 5 கோடி ரூபாய் அவசியப்படாது. ஆனால், 100 கிலோ மீட்டர் பரப்பளவுகொண்ட பரந்து, விரிந்த கிராமப் பகுதிகள் எனக்குக் கொடுக்கிற ஒரு கோடி ரூபாய், ஒன்றரை கோடி ரூபாய்க்கு, 5 கிலோ மீட்டர் தூரத்திற்குதான் தார்ச்சாலை அமைக்க முடிகிறது. வேறு என்ன ஐயா செய்ய முடிகிறது? அதுமட்டுமல்லாமல், 50 ஆயிரம் ரூபாய், 55 ஆயிரம் ரூபாய் நம்முடைய ஊதியம் இருப்பதை பார்த்தோமென்றால் ஐயா, யாராவது கிராமத்திலுள்ள ஒருவர் நம்மை மிகவும் தொந்தரவு செய்து, ஒரு நிகழ்ச்சிக்கு கூப்பிடுகின்றபோது, ஒரு வாகனத்தில் ஏறி ஒரு நாளைக்கு நான்கு பேர் போய் வருவதென்றால், 1,000 ரூபாய், 2,000 ரூபாய் வாடகை ஆகிறது ஐயா. எப்படி ஐயா, இந்த ஊதியத்தை வைத்து, பொதுமக்களுக்கு நிறைவாய் சேவை செய்ய முடியும்? ஒன்றும் செய்ய முடியவில்லை. பெரிய பணக்கார சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டுமானால், அதே ஊதியம் இருக்கட்டும். எங்களைப் போன்று சாமான்ய, வசதி வாய்ப்புகள் குறைவாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்காவது முதல் தவணையாக சட்டமன்ற உறுப்பினர் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்மை போன்று சாமான்யமான மனிதர்களையே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் சட்டமன்ற உறுப்பினர்களாவே உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி

[திரு. கே.பி. முனுசாமி] [2013 மார்ச் 27

சாமான்யமானவர்களுக்குத்தான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனேயே யாரும் கேட்காமலேயே ஒரு கோடியே எழுபத்தைந்து இலட்சம் என்பதை இரண்டு கோடி ரூபாயாக சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்தி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள் எல்லாம், ஊராட்சி ஒன்றியத்தில் 30 பஞ்சாயத்துகளுக்குச் சென்று வருவதற்காக வாகன வசதி, இதர ஏற்பாடுகள் எல்லாம் அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது ஒரு பரந்து விரிந்த சட்டமன்றத் தொகுதியில், சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று வருவதற்கான வாகன வசதி, அந்த மக்களைச் சந்திப்பது, ஓர் இடத்தில் தீப்பற்றி எரிந்தால் அங்கே உடனடியாகச் செல்வதற்கு, அத்தகைய விஷயத்திற்குத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்துகிறார். அது விஷயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. உ. தனியரசு:** ஐயா, இதில் கட்சிக்கு அப்பாற்பட்டு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னால், உடனடியாக எதிர்ப்புக் குரல் கொடுத்து வெளியேறுகின்றவர்கள்



2013 மார்ச் 27] [திரு. கே. பி. முனுசாமி]

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு சட்டமன்ற உறுப்பினர்கள். ஆனால், அவருடைய உள்மனதிலே இருக்கின்ற ஆசையை அந்தச் சட்டமன்ற உறுப்பினர் சொல்கின்ற கருத்தை வழிமொழிவதாக, தன்னுடைய ஆசையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளிக்காட்டியிருக்கிறார் என்பது இதிலிருந்து தெரிகிறது.

பிற்பகல் 1–05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். 15 நிமிடங்கள் ஆகிவிட்டது.

**திரு. உ. தனியரசு:** 235 சட்டமன்ற உறுப்பினர்களுடைய உணர்வுகளைத்தான் நான் பிரதிபலித்தேன். அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தால் இப்போது ஏற்றுக்கொள்வார்கள். அதை அம்மாவினுடைய அரசு பரிசீலிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு, அந்த மானியக் கோரிக்கையில் பேசும்போது கேளுங்கள். இப்போது பட்ஜெட் பற்றி பேசி முடியுங்கள்.

**திரு. உ. தனியரசு:** பொது விவாதம்தான், பட்ஜெட் குறித்து, நிதிநிலை அறிக்கைமீது இந்தக் கருத்தைப் பதிவு செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது, உரிமை இருக்கிறது.

அதுபோல் அம்மா திட்டம். உழவர்களுடைய நலத் திட்டங்களை அவர்கள் அறிந்து கொள்வதற்காகக் கிராமப்புறங்களிலே உழவர் பெரு விழாக்களை நடத்தி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விருந்து தந்து, அந்த உழவர்களுக்கான திட்டங்களை, உழவர்களுடைய வசிப்பிடங்களுக்கே சென்று, அறிமுகப்படுத்துவதற்கு அதிகாரிகள் அந்த கிராமங்களுக்குச் சென்று நடத்துவதைப் போன்று, தமிழகத்தில் இருக்கிற மிக முக்கியமான வருவாய்த் துறை, பெரும்பான்மை மக்களுடைய கோரிக்கையாக இருக்கிற பட்டா மாறுதல், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் போன்ற பல்வேறு சான்றாவணங்களை ஊராட்சிகளிலேயே வட்ட அதிகாரிகள் சென்று, அதைத் தருவதற்கான அம்மா திட்டத்தை அறிமுகப்படுத்தியிருப்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு பாராட்டுகிறேன்.

[திரு. உ. தனியரசு] [2013 மார்ச் 27

அதேமாதிரி விவசாயிகளுக்குத் தண்ணீர், பாசன உபகரணங்கள், திரவ உரங்கள் தடையின்றிக் கிடைக்க சுழல் நிதியாக 50 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பது, வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பது, நுண்ணீர் பாசன விவசாயிகளுக்கு முழு மானியம் ஒரு ஏக்கர் என்ற உச்சவரம்பை நீக்கியிருப்பது வரவேற்கத்தக்கது.

பயிர்க் கடன் இலக்கு 4,500 கோடி ரூபாயாக உயர்த்தி இருப்பது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மடிக் கணினி வழங்கியிருப்பது, சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூடுதலாகத் தர வேண்டும் என்று நான் இப்போது கேட்கவில்லை. ஏற்கெனவே நாம் கோரிக்கை வைக்கவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே மடிக் கணினி வேண்டும் என்றோ, தொலைநகல் கருவி வேண்டும் என்றோ, ஜெராக்ஸ், ஸ்கேன் கருவிகள் எல்லாம் வேண்டும் என்றோ நாம் கேட்கவில்லை. அதை எப்படி அமைச்சர் அய்யா அவர்கள் சொன்னதுமாதிரி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே 235 சட்டமன்ற உறுப்பினர்களும் மடிக் கணினியை பயன்படுத்தி, அறிவு சார்ந்த விரைவான திட்டத்தினுடைய அல்லது தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கு உகந்த, உரிய அவசியமான கருவி என்பதனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே விரும்பித் தந்தார்கள். மக்கள் விரும்பியதை, மக்கள் கேட்காமலேயே எப்படி அவர்கள் தருவார்களோ அதைப்போன்று சட்டமன்ற உறுப்பினர்கள்கூட அவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இது அவசியம் என்று கருதி அந்த மடிக் கணினியையும், அதனுடைய ஜெராக்ஸ், ஃபேக்ஸ், ஸ்கேன் மெஷின்களை கொடுத்ததற்காகச் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு, அதோடு முடித்து விடுங்கள். 18 நிமிடங்கள் ஆகின்றன.

**திரு. உ. தனியரசு:** முடிந்துவிட்டது. அதேபோல சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாக வசதிகள். இப்போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், நம்முடைய ஓமந்தூரார் சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்திற்குள் வரும்போது சாலையே இருக்காது, சாலைகள்



2013 மார்ச் 27] [திரு. உ. தனியரசு]

பூராவும் குண்டும் குழியுமாக இருக்கும். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு இருந்தபோது, தமிழ்நாடு முழுவதும் அரசு நிருவாகம் சீர்கெட்டு, மக்களினுடைய மேம்பாட்டு வசதிகள் சீர்குலைந்த நிலைமை வேறு, சட்டமன்ற உறுப்பினர்களுடைய குடியிருப்பு வளாகம் எப்படி இருந்தது? மனிதர்கள் அல்லது ஒரு சாதாரண சாமான்ய மக்கள்கூட குடியிருப்பில் வசிக்க முடியாத அளவிற்கு சாலைகள் பழுதாகிக் கிடந்தன. மழை நீர் தேங்கிக் கிடந்தது, சுத்தமாக இல்லை, மேம்படுத்தப்படாமல் இருந்தது. இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகம்கூட நட்சத்திர ஓட்டலுக்கு இணையாக மேம்படுத்தப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான் அந்த அளவுக்கு சாலைகள் தரப்படுத்தப்பட்டு, மின்ஒளிகள் எல்லாம் மிகவும் அம்சமாக இருக்கிறது. சுத்தமாக இருக்கிறது. தூய்மைக்காகச் சொன்னேன். உயர்வான வசதி வாய்ப்புகளுக்காகச் சொல்லவில்லை. தூய்மைக்காகச் சொன்னேன். கோயில் மாதிரி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு, நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான் தமிழ்நாடும், தமிழ்நாடு சட்டமன்றமும், ஒட்டுமொத்தத் துறைகளும் வளர்ச்சி அடைந்து ஒட்டுமொத்த மானிட சமூகம் இன்புற்று மகிழ்வோடு வாழ்வதற்கான சூழல் ஏற்பட்டிருக்கிறது. அச்சூழலை உறுதி செய்வதற்கான நிதிநிலை அறிக்கையாகக் கருதி, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

*பிற்பகல் 1–10*

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை வரி இல்லா நிதிநிலை அறிக்கை, மக்களை சிரமத்திற்குள்ளாக்கும்

[திரு. பி.வி. கதிரவன்] [2013 மார்ச் 27

விலைவாசியின் தன்மையை உணர்ந்து, தமிழக முதல்வர் அவர்கள் இந்த வரியில்லா பட்ஜெட்டை வழங்கியமைக்கு அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சி மனமாரப் பாராட்டி மகிழ்கிறது.

காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பின் ஆணையை பெற்ற பின்பும், 2007 ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகளாக எப்படியாவது ஆணையை மத்திய அரசின் கெஜட்டில் கொண்டு வர வேண்டுமென்று முயற்சி எடுத்தது, இதற்கு முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசும், மத்தியில் ஆட்சி புரிந்த காங்கிரஸ் அரசும் கொடுக்க மறுத்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றம் சென்று அந்த ஆணையைப் பெற்று அரசிதழில் வெளியிட்ட பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குச் சேரும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். அந்த நிலையைப் பாராட்டுகின்ற வகையிலே டெல்டா பகுதி விவசாயிகளும், இதர தமிழக விவசாயிகளும் அனைவரும் சேர்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பாராட்டு விழா நடத்தி “பொன்னியின் செல்வி” என்ற பட்டத்தையும் வழங்கி பெருமைப்படுத்தியது தமிழகச் சரித்திரத்தில் எவரும் மறக்க முடியாத ஒன்று என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி டெல்டா பகுதியில் இயற்கை பொய்த்ததனால், காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டதை மனதில் கொண்டு, 50 சதவிகிதம் பாதிக்கப்பட்ட விவாசாயிகள் அனைவருக்கும் ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் கொடுத்து பெருமை சேர்த்த மாண்புமிகு தமிழக முதல்வரைப் பாராட்டுகிறேன்.

அதேபோன்று, தமிழகத்தில் முல்லைப் பெரியாறு அணையிலும், வைகை அணையிலும் இந்த முறை தண்ணீர் திறந்துவிடப்பட்டது. தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 20 நாள், 30 நாள் தண்ணீர் திறந்துவிடப்பட்டு அப்பகுதி மக்கள் விவசாயம் செய்தார்கள். ஆனால், இயற்கை பொய்த்ததனால் விவசாயத்திற்குத் தண்ணீர் நிறுத்தப்பட்டு, குடிநீருக்காக அந்தத் தண்ணீர் பாதுகாக்கப்படுகின்ற நிலைமைக்கு மாற்றப்பட்டது. எனவே, அந்தப் பகுதி விவசாயிகளும், தமிழகத்திலுள்ள ஒட்டுமொத்த விவசாயிகளும் இந்த முறை



2013 மார்ச் 27] [திரு. பி.வி. கதிரவன்]

பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் அந்த விவசாயிகளுக்கும் நிவாரணம் அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பார்கள் என்பதை நாங்கள் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கை வாழ் தமிழர்களின் அடிப்படை உரிமையைப் பெறுகின்ற வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதே மாமன்றத்தில் ஆட்சிக்கு வந்தவுடனேயே அதிபர் ராஜபக்சேவுக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. அந்த அடிப்படையிலே இன்றையதினம்கூட இலங்கைத் தமிழர்களுடைய நிலையினைக் கருத்தில்கொண்டு, தமிழக மாணவர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குக் குரல் கொடுத்து உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டங்கள், இரயில் மறியல் போன்ற போராட்டங்களை நடத்தினார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இதே மாமன்றத்தில் ஏனோ அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டுவந்தார்கள், மறுக்கவில்லை. ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாணவர்கள் போராட்டம் நடத்துவது போன்றும், திராவிட முன்றேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள்தான் அதையெல்லாம் செய்ய வைப்பது போன்றும் இங்கே தம்பட்டம் அடித்ததை நாங்களெல்லாம் பார்த்தோம். அதேநேரத்தில் சிந்திக்க வேண்டும், திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழகத்தில் ஆட்சியிலே இருந்தார்கள், மத்தியிலும் காங்கிரசோடு ஆட்சியில் இருந்தார்கள். இந்த இரண்டு கட்சிகளும் ஆட்சியில் இருந்தபோதுதான் 2009-இல் பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டார். இலங்கைத் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அப்போது தமிழகத்தில் ஆட்சியில் இருந்தவர்கள் இவர்கள்தான். ஆனால், அதைப்பற்றி எதையும் சிந்திக்காமல் இன்று வெளிநடப்புச் செய்யவேண்டும், பத்திரிகையில் செய்தி வர வேண்டுமென்பதற்காக இதுபோன்று சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் நடந்துகொள்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. பி.வி. கதிரவன்] [2013 மார்ச் 27

*பிற்பகல் 1–15*

தமிழக மீனவர்கள் ஒவ்வொரு நாளும் பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள். கச்சத் தீவு இந்தியாவுடன் இல்லாததே தமிழக மீனவர்கள் பாதிப்பதற்குக் காரணம். முக்கியமாக கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுத்ததுதான் காரணம். இரண்டாவதாக கடற்பகுதியிலே, அந்த நாட்டிற்கு 12 கி.மீ. உரிமை இருக்கின்றது. அதுபோன்ற உரிமை இருந்தும்கூட, இலங்கைக்கும், இந்தியாவிற்கும், அதாவது தமிழக தென் பகுதிக்கும் 20 கி.மீ.தான் இருக்கிறது. அந்த அடிப்படையிலே தமிழக மீனவர்கள் 12 கி.மீ. போகிறார்கள். அவர்களும் 12 கி.மீ. வருகிறார்கள். இதுபோன்ற சர்ச்சைகள் இருந்து வருவதினால்தான், தமிழக மீனவர்களுடைய பிரச்சினை ஒவ்வொரு நாளும் பெருகிக் கொண்டேயிருக்கிறது. அதனால்தான் இந்தக் கச்சத் தீவை இந்திய அரசு இலங்கைக்குக் கொடுத்தபொழுது, எங்களது பாராளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய தலைவர் திரு. பி.கே. மூக்கையா தேவர் பாராளுமன்றத்திலே கச்சத் தீவு குறித்து உரையாற்றினார். அப்போது மத்தியிலே காங்கிரஸ் அரசு இருந்தது. அங்கே இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்தார்கள். கச்சத் தீவை இலங்கைக்கு கொடுக்கக்கூடாது, அதனால் தமிழக மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று பாராளுமன்றத்திலே உரையாற்றி, அன்றையதினம் வெளிநடப்பும் செய்த ஒரே பாராளுமன்ற உறுப்பினர் ஃபார்வர்டு பிளாக் கட்சியினுடைய பாராளுமன்ற உறுப்பினர் அமரர் மூக்கையா தேவர் என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அந்த அடிப்படையிலே, சட்டமன்றத்திலே கச்சத் தீவு மீட்பைப் பற்றி தமிழக முதல்வர் அவர்கள் நேற்றுகூட சொல்லியிருக்கிறார்கள். இந்த கச்சத் தீவை மத்திய அரசே மீட்க வேண்டும். இல்லையென்றால் உச்ச நீதிமன்றத்தை அணுகி நிச்சயமாக அதை மீண்டும் பெறுவோம் என்பதை இந்தச் சட்டமன்றத்தில் உறுதியாகச் சொல்லியிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதனால் அவர்களை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அடுத்து, அரசுப் பணியாளர்கள் நியமனம். கிட்டத்தட்ட 20 மாதங்கள்தான் ஆகின்றன, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்து 20 மாதங்கள்தான் ஆகின்றன. இந்த 20 மாதங்களிலே 1,93,508 பேர் அரசுப் பணியிலே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்றளவுக்கு, எந்த மாநிலத்திலும்



2013 மார்ச் 27] [திரு. பி.வி. கதிரவன்]

இல்லாத பெருமையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தொலைநோக்குத் திட்டம், 2023 என்ற தொலைநோக்குத் திட்ட கட்டமைப்பைத் தமிழகத்தில் உருவாக்கி இந்தியாவில் தமிழகம் சிறந்த மாநிலமாக வரவேண்டுமென்பதற்காக இந்த ஆண்டு 2013–2014 ஆம் ஆண்டில் 2,200 கோடி ரூபாயை ஒதுக்கி பெருமை சேர்த்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு என்பதில் பெருமையடைகிறோம்.

அதேபோன்று, இன்று வேளாண்மைத் துறையில் இரண்டாவது பசுமைப் புரட்சி; இந்திய நாடு ஒரு விவசாய நாடு என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கருத்தில்கொண்டு இங்கு, இரண்டாவது பசுமைப் புரட்சியை உண்டாக்கி, கிட்டத்தட்ட 5,189.15 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, கூட்டுறவுத் துறையில் 4,500 கோடி ரூபாயை அந்தக் கூட்டுறவு பயிர்க் கடன் கொடுப்பதற்காக ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியது. அதுமட்டுமல்ல, கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 2,270 சேமிப்புக் கிடங்குகளை உருவாக்கி, விவசாயிகளினுடைய பாதுகாவலனாக இருந்திருப்பதை நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த 5 ஆண்டுக் காலம் தி.மு.க ஆட்சியிலே போக்குவரத்துத் துறை நலிவுற்றிருந்தது. மாநிலத்தின் ஒவ்வொரு பகுதியிலும், கடந்த 5 ஆண்டுக் காலத்திலே பஸ்கள் ரோட்டிலே நிற்கும். உபயோகமே இல்லாமல் எல்லா வண்டிகளும் ரோட்டிலே நின்றன. அதனால் அவற்றிற்குப் பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. அதையெல்லாம் மாற்றி மாண்புமிகு தமிழக முதல்வர் ஆட்சிக்கு வந்த பின்பு அதற்குப் புத்துயிர் கொடுத்து, தேவையான நிதியை ஒதுக்கி, இன்று சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கும்போது, அதற்கு மத்திய அரசு மீண்டும் ஒரு முட்டுக் கட்டையைப் போட்டு, டீசல் விலையிலே இரட்டை விலையைக் கொண்டு வந்து, தமிழக அரசின் போக்குவரத்துத் துறையைப் பாதிக்கின்ற வகையிலே செய்தார்கள். ஆனால், நீதிமன்றத்திற்குச் சென்று அதை மாற்றி வந்திருக்கின்ற பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. ஆனால், மத்திய அரசு அதில் பாராமுகமாக

[திரு. பி.வி. கதிரவன்] [2013 மார்ச் 27

இருந்து வருவது உண்மையிலேயே கண்டிக்கத்தக்கது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்தில் மின்வெட்டு இருந்து வருகிறது. மறுக்கவில்லை. கடந்த 5 ஆண்டுக் காலமாக திராவிட முன்னேற்றக் கழக அரசு, இங்கே ஆட்சி புரிந்தது. நிரந்தர கட்டுமானப் பணியை அவர்கள் செய்யாததனால் நாம் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றோம். அதனால்தான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மின்வெட்டு தமிழகத்தில் இருக்கக்கூடாது என்பதற்காக அனைத்துப் பகுதிகளுக்கும் எவ்வளவு முயற்சி எடுக்க வேண்டுமோ, அவ்வளவு முயற்சி எடுத்து வருகின்ற ஜூன் மாதத்திற்குள் இந்த மின்வெட்டைக் குறைத்து 2013 டிசம்பருக்குள் மின்சாரத்தில் உபரி மாநிலமாகத் தமிழகத்தைக் கொண்டு வருவேன் என்று சொல்லியிருப்பதை நான் பெருமையோடு இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். அதற்காக 2013–2014 ஆம் ஆண்டிற்கு, 12,197 கோடி ரூபாயை தமிழக அரசு ஒதுக்கியிருப்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற்பகல் 1–20

பள்ளிக் கல்வித் துறையினைப் பொறுத்தவரை நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் தமிழகம் உண்மையான வளர்ச்சி மாநிலமாக இருக்க வேண்டுமென்றால், அதைக் கல்விதான் கொண்டுவர முடியும் என்ற நல்ல நோக்கினைக் கருத்திற்கொண்டு கடந்த ஆண்டைக்காட்டிலும் இந்த முறை 16,965.30 கோடி ரூபாயை பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கியிருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஊரக வளர்ச்சித் துறையில் இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெரிய புரட்சியெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். எந்தத் திட்டங்கள் வந்தாலும் அந்தத் திட்டங்களை ஐந்தாண்டுக் காலத்தில் நிறைவேற்றி வருகிறார்கள் என்பதைப் பெருமையோடு இந்த நேரத்திலே அவர்களைப் பாராட்டுவது என்னுடைய கடமையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 மார்ச் 27] [திரு. பி.வி. கதிரவன்]

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி; இங்கேகூட நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தனியரசு சொல்லும்போது அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதாவது, இப்போது Delimitation–ல் அதிகமான பகுதிகள் வந்துவிட்டன. சொல்லப்போனால், ஒரு தொகுதிக்கு 3 ஒன்றியங்கள், நகரங்கள், பேரூராட்சிகள் என்று வரக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், நான் இந்தக் கடைசியிலிருந்து அந்தப் பகுதிக்கு செல்ல வேண்டுமானால், 75 கிலோ மீட்டர் போய் வர வேண்டும். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசியில் ஒப்பந்ததாரர்கள் யாரும் வேலை செய்ய மறுக்கிறார்கள். கட்டட வேலை கொடுத்தால், அவர் வேலைக்கு வர மறுக்கிறார். நாங்கள் கேட்பது அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்காகத்தான். நமது உறுப்பினர்கள் சொல்கின்ற அடிப்படையிலே, ஐந்து கோடி ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று உறுதியாகக் கேட்பதை இந்த அவையில் நான் வழிமொழியக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒவ்வொரு நாளும் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த வறட்சிக் காலத்தைக் கணக்கில் கொண்டு, 100 நாட்களாக இருந்ததை 150 நாட்களாக உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள், பாராட்டக்கூடியது. அதேபோன்று, 132 ரூபாயாக இருந்ததை 148 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருப்பதற்கு நான் பெருமை அடைகிறேன்.

அடுத்து, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை; கள்ளர் சீரமைப்புத் துறையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுடைய வேண்டுகோளை ஏற்று, மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகளை உசிலம்பட்டி, செக்கானூரணி, ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களில் கொடுத்து பெருமை சேர்த்திருக்கின்றார்கள்.

[திரு. பி.வி. கதிரவன்] [2013 மார்ச் 27

அதுமட்டுமல்ல, ஆண்டிப்பட்டியிலே நர்சிங் கல்லூரி ஒன்றையும் கொடுத்து, கள்ளர் சீரமைப்புத் துறையின்கீழ் இயங்கும் என்ற உத்தரவையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். சீர்மரபினர் நல வாரியம் அமைக்கப்பட வேண்டும். அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கையாக வைக்கின்றேன்.

வழக்கறிஞர் நலன் என்பதைப் பொறுத்தவரை, ஒரு வழக்கறிஞர் இறந்தால் அவரது குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இப்போது 5.25 இலட்சம் ரூபாய் கொடுத்து ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4 கோடி ரூபாயை அந்த Welfare Fund–க்கு கொடுத்திருப்பதை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியிலே இருக்கின்ற பெருங்காமநல்லூரில் 1920 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ரேகை சட்டம் என்ற ஒன்றைக் கொண்டு வந்து ஒவ்வொருவரும் இரவிலே ரேகை வைக்கவேண்டும் என்ற சட்டம் கடுமையாக இருந்தபோது, அந்தக் கடுமையான சட்டத்தை எதிர்த்துப் போராடிய 16 பேர்களை ஆங்கிலேயர்கள் சுட்டுக்கொன்றிருக்கின்றார்கள். அந்தப் புண்ணிய பூமியில் தமிழக அரசு, விழா நடத்த வேண்டுமென்று பலமுறை கேட்டுவந்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே அதை கவனத்தில்கொண்டு அதை அரசு விழாவாக நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் உங்கள் முன்னால் வைக்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிரவன், இன்னும் 8 உறுப்பினர்கள் பேச வேண்டும். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

பிற்பகல் 1–25

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர்ப் பாசனத் துறையில், வைகை அணையிலிருந்து எங்களது உசிலம்பட்டி பகுதியில் 1998 ஆம் ஆண்டு 58 கிராம கால்வாய்த் திட்டம் உருவாக்கப்பட்டு கிட்டத்தட்ட இப்போது 15 ஆண்டுகளாகின்றன. 15 ஆண்டுகளாகியும் முற்றுப்பெறாமல் இருந்தது. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு முன்னால் முதல்வராக இருந்தபொழுது 33 கோடி ரூபாயாக இருந்ததை 74 கோடியே 60 இலட்சம் ரூபாயாகக் கொடுத்தார்கள். அப்பொழுதும் அந்தத் திட்டம் முடிவுபெறவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால், மேலும் 8 கோடியே 7 இலட்சம் வேண்டுமென்று திட்டம் கொடுத்திருந்தார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த மக்களுடைய ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்ற வகையில், 8 கோடியே 7 இலட்சம் ரூபாயை அந்தத் திட்டத்திற்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்து, அதற்கு நன்றி சொல்லி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.



2013 மார்ச் 27] [திரு. பி.வி. கதிரவன்]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை பற்றி விவாதிக்க வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகின்ற அதே நேரத்தில், ஈழம் உருவாகும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை உறுதிப்படுத்தி, இலங்கை அரசு நட்பு நாடல்ல என்று அறிவிக்க வேண்டுமென்ற தீர்க்கமான தீர்மானத்தை நிறைவேற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக நன்றிதனைத் தெரிவித்து என் உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மூன்றாம் முறையாக தமிழக முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்று, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கும் மூன்றாவது நிதிநிலை அறிக்கையான, 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தில் பங்கேற்கின்ற வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறுகிறேன். நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுகையில் ஒரு வெல்லக் கட்டியின் எந்தப் பகுதி இனிப்புப் பகுதி என்று சொல்ல முடியாத அளவிற்கு அதன் எல்லாப் பகுதியும் இனிப்பாக இருப்பதைப்போன்று, (மேசையைத் தட்டும் ஒலி) 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலும் எந்த அம்சம் சிறப்பான அம்சம் என்று சொல்ல முடியாத அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்பதை முதற்கண் மகிழ்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. ரா. சரத்குமார்] [2013 மார்ச் 27

இந்த பட்ஜெட் குறித்து வெளியில் இருந்துகொண்டு விமர்சனம் செய்தவர்கள் விலைவாசியைக் கட்டுப்படுத்தும்விதமாக இந்த பட்ஜெட்டிலே ஏதும் இல்லை என்று கூறியிருப்பது வேடிக்கையாக இருக்கிறது. அவர்கள் எதைச் செய்தாலும் வேடிக்கையாகத்தான் செய்வார்கள். காலையிலே கவன ஈர்ப்புத் தீர்மானம் எதற்காகக் கொண்டுவந்தார்கள் என்று புரியாமலேயே பேசிக்கொண்டிருந்தவர்களுக்கு, வெளியிலிருந்து பார்ப்பதற்கு எதுவுமே புரியாது என்பதுதான் உண்மை.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

ஆக, நாட்டின் விலைவாசி உயர்விற்கும், பணவீக்கத்திற்கும் முக்கியக் காரணமாக இருப்பது, மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலையைத் தொடர்ந்து உயர்த்தி வருவதுதான் என்பதை நாம் உணர வேண்டும். மாநில அரசு விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த எவ்வளவுதான் முயற்சி எடுத்தாலும், மத்திய அரசு டீசல் விலையை உயர்த்துவதன் தாக்கம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் பல மடங்கு உயர்வதில்தான் முடியும் என்பது அடிப்படையான, நிதர்சனமான, பொருளாதார உண்மை. இதை மனதில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேலும் விலைவாசி உயர்ந்துவிடக் கூடாது, தமிழக மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன், இந்த பட்ஜெட்டில் புதிய வரிகள் விதிக்காமல், நடைமுறையில் உள்ள வரி விகிதங்களை உயர்த்தாமல், இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருப்பது மக்களின் மீதும், தமிழகத்தின் வளர்ச்சியின்மீதும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டிருக்கின்ற அக்கறையைக் காட்டுகிறது.

அதுவும், மாண்புமிகு நிதி அமைச்சர் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப்போல, மத்திய அரசின் சில தவறான பொருளாதார முடிவுகள் காரணமாக தமிழகத்திற்குக் கூடுதல் நிதிச் சுமை இருக்கும் காலங்களில் புதிய வரிகள் விதிக்காமல், நடைமுறையில் உள்ள வரி விகிதங்களை உயர்த்தாமல் இருப்பதற்கு தெளிவும், துணிவும் வேண்டும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இத்தகைய துணிவும், தெளிவும்தான் இந்த பட்ஜெட்டில் வெளிப்பட்டிருக்கிறது. அத்தகைய துணிவும், தெளிவுடன் கூடிய அறிவும், துணிச்சலும் அறிவும் கொண்ட விடாமுயற்சியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அமையப்பெற்றதால்தான் வள்ளுவரின் வாக்கிற்கு எடுத்துக்காட்டாகத் திகழக்கூடிய பெருமை



2013 மார்ச் 27] [திரு. ரா. சரத்குமார்]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கிடைத்துள்ளது என்றே கூறலாம். அந்த வகையில்,

“தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு”

என்ற குறளோடு நிதிநிலை அறிக்கை தொடங்கியிருப்பது சாலப் பொருத்தமாகும்.

மூச்சைத் தமிழாக மொழிபெயர்க்கத் துடிக்கின்ற புரட்சித் தலைவி அவர்களுக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களே, உங்களிடம் அன்பு இருக்கிறது; பண்பு இருக்கிறது; அறிவும், ஆற்றலும் இருக்கிறது; அகிலமெல்லாம் அசத்தும்வண்ணம் அமைந்திட்ட பட்ஜெட்டை, வரியேதும் கண்டிராத வளமான பட்ஜெட்டை, சில வரியால் சொல்லிடவே வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

*பிற்பகல் 1–30*

தமிழுக்கோ தன்மொழியில் மூன்று இனம் சிறப்புதான். உங்கள் ஆட்சியிலே மூன்றாம் பட்ஜெட் சிறப்புதான். அமிழ்தினிய அத்தனையும் சொல்லிடவே ஆசைதான். அரைநேரம் நானுரைக்க, அவை இங்கு அனுமதியா, அடுத்தோரும் வாய்ப்பு பெற, அவை நலமும் காப்பாற்ற, அவையடக்கம் கொண்டு இங்கே ஒரு நேரம் சொல்லிடுவேன்; மாண்புமிகு புரட்சித் தலைவியே, இன்று தங்களை அனைத்துலகோரும் பாராட்டுகிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* காரணம், I will not rest or give up till I realise my cherished dream or the Vision outlined in this Tamil Nadu Vision 2023 document என்று, Vision Tamil Nadu 2023–ஐ அறிமுகப்படுத்தியபோது சொன்னீர்களே, அந்த தொலைநோக்குப் பார்வைதான்,

“கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய
திருமா மணி”

என்று சிலப்பதிகாரம் செதுக்கிய சிற்ப வரிகளுக்கு உயிர்ப்புத் தந்து, நேற்று கொங்குச் சீமையும், சோழ மண்டலமும் சேர்ந்து, தங்களை வாழ்த்திச் சிறப்பித்தது. விடி வெள்ளி நம் விளக்கு,

[திரு. ரா. சரத்குமார்] [2013 மார்ச் 27

விரி கடலே பள்ளிக்கூடம், அருமை மேகம் நமது குடை, பாயும் புயல் நம் ஊஞ்சல், தொழும் தலைவி பெருவானம், தொண்டு தொழிலாளர் நாங்கள், நம் உரிமை உயரவேண்டும் என்று கத்துக் கடல் பரப்பில் காலம் எல்லாம் போராடும் மீனவர்களை, இலங்கை வெறியர்களின் இன்னலிலிருந்து காப்பாற்ற இந்திய அரசோடு போராடும் இரும்பு மனிதமே, நீங்கள்தானே மீனவர் வாழ்க்கைக்கு உறுதியான நங்கூரம். (மேசையைத் தட்டும் ஒலி)

'சரத்' என்னும் பெயருடையோன், சுரத்தின்றி சொல்லாமல், உரத்தோடு சொல்லுகின்ற உண்மையான சாட்சியங்கள். நான் இங்கு சொல்வது எல்லாமே நிதர்சனங்கள், உண்மைகள்; சறுக்காத, தன்மானச் சரித்திரத்தில் இடம் பிடித்திருக்கும் பெட்டகமாய்த் துளிர்த்துள்ள சாதனைகள் ஒன்றா, இரண்டா? ஒவ்வொன்றாய் சொல்கின்றேன். ஒருமனதாய் கேளுங்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரையால் பெயரான இந்த நிதிநிலை அறிக்கையில் பல அம்சங்கள், சிறப்பான அம்சங்கள்.

1968–ல் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, சென்னை தீவுத்திடலில் நடைபெற்றபோது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மறைந்த கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் அவர்களின் எழுத்தோவியத்தில், 'காவேரி தந்த கலைச்செல்வி' என்ற நாட்டிய நாடகத்தை நடத்திக் காட்டினீர்கள். உலகத் தமிழர்கள் வியப்படைந்தார்கள். அம்மா நாட்டிலே பேரறிஞர் அண்ணா அவர்களால், 'காவேரி தந்த கலைச்செல்வி' என்று அழைக்கப்பட்டீர்கள். இந்த மாண்புமிகு கலைச்செல்விதான் (மேசையைத் தட்டும் ஒலி) பின்னர் தமிழகத்திற்கு நிரந்தரத் தீர்வு பெற்று காவேரியை மீட்டுத்தரப் போகிறார் என்பதை அப்போதே தீர்க்கதரிசனமாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள், 'காவேரி தந்த கலைச்செல்வி' (மேசையைத் தட்டும் ஒலி) என மாண்புமிகு முதலமைச்சரை அழைத்துவிட்டார் போலும்.

தற்போது காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட வைத்ததன்மூலம் 'காவேரியை மீட்டுத் தந்த புரட்சித் தலைவி' என்று பேரும் புகழும் அடைந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) இது



2013 மார்ச் 27] [திரு. ரா. சரத்குமார்]

ஒரு சாதாரண விஷயம் அல்ல. ஒரு மாபெரும் சாதனையாகத்தான், சரித்திரத்திலே பொறிக்க வேண்டிய ஒரு சாதனையாகத்தான் இதை எடுத்துக்கொள்ள வேண்டும். காரணம், ஆப்ரகாம் லிங்கன் அவர்கள் அமெரிக்காவிலே கருப்பர் இனத்தைச் சேர்ந்தவர்கள் அடிமைகளாக இருக்கிறார்கள் என்று Thirteenth Constitutional Amendment ஒன்றைக் கொண்டு வந்தார்கள். கருப்பர்களும் இங்கு அமைதியாக அனைவருடனும் ஒத்து வாழ வேண்டும்; அவர்கள் அடிமைகளாக இருக்கக்கூடாது என்ற சரித்திரத்தைப் படைத்தவர் ஆப்ரகாம் லிங்கன் அவர்கள். இன்று ஒரு கருப்பர் அமெரிக்காவை ஆண்டு கொண்டிருக்கிறாரென்றால், அன்று அவர் செய்த அந்தப் பணிதான் இன்று நாம் அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம், ஒரு மாபெரும் சாதனை படைத்தவராக ஆப்ரகாம் லிங்கன் அவர்களைப் பார்க்கிறோம். அப்பேற்பட்ட ஒரு சாதனையைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழ் வாழும் வரை (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரும் போற்றிப் புகழ்கின்ற விவசாயிகளுக்கெல்லாம் இது ஒரு உத்தரவாதமாக அமைந்திருக்கின்ற ஒரு மாபெரும் சாதனையைப் படைத்திருக்கிறார்கள் என்றே இங்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆறு ஆண்டுக் காலமாக காவேரிப் பிரச்சினையில் கனலாய் இருந்த ஓர் ஆணையை குளிர் நிலவாய் மாற்றி, அதை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில், சென்னை நீங்கலாக, பிற மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டு, அங்கு நில வரி இரத்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஒரு குடும்பத்திற்கான ஆண்டு உச்சவரம்பு 150 நாட்கள், காவேரிப் பாசனப் பகுதியில் பயிரிழப்பைச் சந்தித்துள்ள விவசாயிகளுக்கு சிறப்பு நிவாரணம் மற்றும் காப்பீடு இழப்பாக ஏக்கர் ஒன்றுக்கு 15,000 ரூபாய் தவிர, கால்நடை தீவனப் பற்றாக்குறையைச் சமாளிக்க 17.85 கோடி ரூபாய், குடிநீர் வினியோகத்தைச் சீரமைக்க 37.25 கோடி ரூபாய் என அறிவித்திருப்பது உண்மையிலேயே மகிழ்ச்சியளிக்கிறது.

தென் மாவட்டங்கள் வறட்சியாக இருப்பதை உணர்ந்து, அங்கு தொழில் வளம் இல்லை; பாதிக்கப்பட்ட மக்கள் பல தொழிற்சாலைகள் இல்லாத காரணத்தினால், பாதிக்கப்பட்டவர்களை மனதில் கொண்டு, தொழில் துறையில் பின்தங்கியுள்ள தென் மாவட்டங்களில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் விதமாக, புதிய

[திரு. ரா. சரத்குமார்] [2013 மார்ச் 27

சலுகைத் தொகுப்பு விரைவில் அறிவிக்கப்படும் என்ற செய்தி தென் மாவட்ட மக்களுக்குத் தேனாக இனிக்கும் செய்தியாகும். இது தொடர்பாக, தூத்துக்குடியில் பொதுத் துறை, தனியார் துறை பங்கேற்பு வாயிலாக, தொழில் வளர்ச்சி நிறுவனம்மூலம் புதிய கப்பல் கட்டும் தளம் அமைக்கப்பட இருப்பது, 2013–2014 ஆம் ஆண்டில் மதுரை, தூத்துக்குடி தொழில் வழித் தடத்தை ஏற்படுத்தி இத்திட்டத்தில் 4 உற்பத்தி மண்டலங்கள், ஒரு வேளாண் வணிக மண்டலம், 2 வணிக முதலீட்டு மண்டலங்கள், ஒரு சிறப்புச் சுற்றுலா மண்டலம், ஒரு கிராமப்புற சுற்றுலா மையம், ஒரு அறிவுசார் மையம் ஏற்படுத்த உத்தேசித்திருப்பதும் தென் மாவட்டங்களில் மாபெரும் வளர்ச்சி ஏற்பட வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

உள்நாட்டு ஆறுகள் இணைப்புத் திட்டத்தில் உள்நாட்டு ஆறுகளான தாமிரபரணி, கருமேனி ஆறு, நம்பியாறு இணைப்புத் திட்டம், கட்டளைக் கதவணையுடன் காவிரி, குண்டாறு இணைப்புத் திட்டப் பணிகள் நடைபெற இருக்கின்றன. இத்திட்டத்திற்கு 156.44 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது நதி இணைப்புத் திட்டமான பெண்ணையாறு, பாலாறு இணைப்புத் திட்டப் பணி விரைவில் துவங்கவுள்ளது என்பதும் வரவேற்கத்தக்கதாகும்.

பிற்பகல் 1–35

சென்னையில் ஆறுகள் மற்றும் நீர்வழித் தடங்கள் சீரமைத்தல் வரவேற்கத்தக்கதாகும். பக்கிங்காம் கால்வாய் ஆங்கிலேயர் காலத்தில் போக்குவரத்திற்காக உருவாக்கப்பட்டது. இங்கு வெளிநடப்புச் செய்தவர்கள் சிங்காரச் சென்னையாக மாற்றி பக்கிங்காம் கால்வாயை சீர்படுத்திவிடுகிறேன் என்று சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். அது சுரண்டப்பட்டது. நான் சொல்வது சுத்தப்படுத்துவதற்காகச் சுரண்டப்பட்டது என்று சொல்கின்றேன், தோண்டப்பட்டது என்று சொல்கிறேன். ஆக, அந்த பக்கிங்காம் கால்வாய் அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. ஆக, சிங்காரச் சென்னை உருவாகவில்லை. சிங்காரச் சென்னை உருவாகாத காரணத்தினால் பக்கிங்காம் கால்வாய் ஆங்கிலேயர்கள் ஏற்படுத்திய காலம் முதல் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட பக்கிங்காம்



2013 மார்ச் 27] [திரு. ரா. சரத்குமார்]

கால்வாயை மீண்டும் அது போக்குவரத்திற்கு வழித்தடமாக பயன்படுத்தப்படும் என்று சொல்லியிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழக மக்கள்தொகையில் ஏறத்தாழ 25 சதவிகிதம் பேர் 20 முதல் 34 வயதிற்குள் உள்ளனர். 2020–ல் அதிகமான இளைஞர்கள் உள்ள நாடு இந்தியா என்று இருக்கும் சூழ்நிலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைத் துல்லியமாகக் கண்டெடுத்து, அந்தக் கணிப்பை உணர்ந்து இளைஞர்களை சிறப்பாக வழிநடத்த வேண்டுமென்ற அடிப்படையிலே இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டு இயக்கத்தைச் செயல்படுத்திவரும் மாநில திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக திறன்வளப் பயிற்சிக்கு ரூ.75 கோடியிலிருந்து ரூ.100 கோடியாக உயர்த்தியிருப்பது, வரவேற்கத்தக்கது. தமிழ்நாடு நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டம் 2003–இல் வரையறுக்கப்பட்டுள்ள குறியீடுகளுக்கு உட்பட்டும், 13–வது நிதிக் குழுவின் வரையறைக்குட்பட்டும் உள்ளன என்பது அவர்கள் துல்லியமாக இந்த நிதிநிலை அறிக்கையை அறிவித்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

சட்டம்–ஒழுங்கை சீராக்க வரும் நிதியாண்டில் 17 ஆயிரத்து 138 காவலர்கள், 1,091 துணை ஆய்வாளர்கள், 1,005 தீயணைப்புப் பணியாளர்கள் மற்றும் 292 சிறைக் காவலர்கள் தேர்வு, மேலும் இந்த நிதியாண்டில் 4,096.70 கோடி ரூபாயாக இருந்த தகவல் தொழில்நுட்பத் துறைக்கான மொத்த ஒதுக்கீடு வரும் நிதியாண்டில் 4,706.17 கோடி ரூபாய் உயர்த்தியிருப்பது, அதுபோல இந்த நிதியாண்டில் 208.48 கோடி ரூபாயாக இருந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான மொத்த ஒதுக்கீடு வரும் நிதியாண்டில் 179.6 கோடி ரூபாய் அளவில் உயர்த்தியிருப்பது இவை அனைத்தையும் வரவேற்கத்தக்க ஒன்றாகத்தான் கருதவேண்டும்.

இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புப் பயிற்சி அளிப்பதற்காக தொழில் முனையம் திறன் வளர்ச்சி நிறுவனத்திற்கு 5 கோடி ரூபாய். ஆக, வருங்கால நாட்டின் வளர்ச்சி இளைஞர்களின் கையில்தான் இருப்பதை சுட்டிக்காட்டும் அளவிலே சிறப்பான திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள்.

[திரு. ரா. சரத்குமார்] [2013 மார்ச் 27

மீனவர்களின் நிலையை மேம்படுத்தி அவர்களின் வாழ்வை வளம்பெறச் செய்ய மீன் பிடிப்பு குறைவாக உள்ள காலங்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.4 ஆயிரம் நிவாரணம் அளித்தது, மீன் பிடிப்பு தடை செய்யப்பட்ட காலங்களில் வழங்கப்படும் நிவாரணத்தை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தியது மற்றும் மானியத்தோடு எரிபொருள் வழங்குவது போன்ற பல்வேறு சிறப்பான முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு எடுத்துள்ளதை நாங்கள் வரவேற்கின்றோம்.

Health is wealth என்று சொல்வார்கள். உடல்நிலை சிறப்பாக இருந்தால்தான் எந்தப் பணியும் ஆற்ற முடியும். பசிப்பிணி மருத்துவராம் நமது மாண்புமிகு முதலமைச்சர் ஆட்சியில்தான் அரிசி பெற தனித் தகுதியான குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் விலையில்லா அரிசி கிடைக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் உணவு மானியத்திற்காகவே 4,900 கோடி ரூபாய் ஒதுக்கீடு என்றால் நிச்சயம் நீங்கள் ஒரு பசிப்பிணி மருத்துவர்தான். அரிசி விலையைக் கட்டுப்படுத்த கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் ஒரு கிலோ அரிசி 20 ரூபாய்க்கு விற்கப்படும் என அறிவித்துள்ளீர்கள். அந்த அறிவிப்பு உண்மையிலேயே வயிற்றுப்பாட்டுக்காரர்களுக்கு வாய்ப்பாடாக அமையும். அந்த வாய்ப்பாடுகளை இவர்களின் வாய்கள் என்றும் உச்சரித்துக் கொண்டேயிருக்கும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, பசுமைப் புரட்சி; மாநிலத்தில் பசுமைப் பரப்பை உயர்த்தவும், வறண்ட பகுதிகளில் மண் வளம் மற்றும் நீர் வளத்தைப் பாதுகாக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 65–வது அகவை ஆண்டில் 65 இலட்சம் மரக் கன்றுகள் நடும் திட்டம் செயலாக்குவது உண்மையிலேயே பாராட்டத்தக்கது. சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்திச் சாலைகள் அமைக்க வேண்டி, வரும் நிதியாண்டில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு இவை அனைத்தும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

மின்சாரம்; மின்சாரத் தடை வந்ததற்குக் காரணம் யார் என்று நமக்கெல்லாம் தெரியும். கடந்த ஆட்சியிலேயே எங்கள் ஆட்சி கவிழ்கிறது என்றால் அதற்கு மிக மிக முக்கியமான காரணமாக இருப்பது மின்சாரத் தட்டுப்பாடுதான் என்று ஆற்காடு வீராசாமி



2013 மார்ச் 27] [திரு. ரா. சரத்குமார்]

அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களே ஒப்புக்கொண்டார்கள், நான் ஒரு பத்திரிகையிலே படித்தேன். இங்கிருந்த திரு. ஸ்டாலின் அவர்கள் இரண்டு மாதத்திலே செய்து முடிக்கிறேன் என்று சொன்னீர்களே, ஏன் உங்களால் முடியவில்லை என்று கேட்கிறார்கள். உங்களால் செய்ய முடியாததைச் செய்து கொண்டிருக்கிற அரசை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் விட்டுச் சென்ற பணிகளை, செய்ய முடியாத பணிகளைக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மின் தட்டுப்பாட்டை உடனடியாக நிவர்த்தி செய்வதற்காக ஜூன் மாதம் கண்டிப்பாக நிவர்த்தி செய்வோம் என்ற உத்தரவாதம் அளித்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அதற்காக பழுதடைந்த மின் நிலையங்களையெல்லாம் பழுதுபார்க்கும் சூழ்நிலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இப்படி ஒவ்வொன்றையும் சிந்தித்து செயல்படுத்திக் கொண்டிருக்கிற நிதிநிலை அறிக்கையை நாம் பெற்றிருக்கின்றோம்.

பிற்பகல் 1–40

இப்படிப்பட்ட நல்லறிவிப்புகள், ‘மக்களால் நான், மக்களுக்காக நான்’ எனவுள்ள முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் மக்கள் நல்லவற்றை அனுபவிக்க இருக்கிறார்கள் என்பதைக் குறித்து நாங்கள் பெருமைப்படுகிறோம்.

தாண்டாமல் தடம் நெடுக நடந்துவரின் எத்தனை திட்டங்களை இந்த அறிக்கையிலே பார்க்கலாம். ஒப்பாரும் ஒப்புமாறு யார் செய்வார் இவரைப்போல்! நன்மைகள் தவிர தீமைகள் இல்லா அறிக்கை இது என்று சொல்லலாம். ஆனால், சில பேர் அதைச் சிதறு தேங்காயைப் போல் சிதைக்கிறார்கள். பொசுக்கும் பொறாமைகளை மனதில் கொண்டு புன்னகைக்கும் நடிப்பிசைத் திலகங்கள் அல்லவா? திரைக்கதை நிபுணர்கள் அல்லவா? ஆகவேதான், அவர்கள் அப்படியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகாயம் விலைபேசி மழை விற்பதில்லை. பூமி விதை வளர்க்க பணம் கேட்பதில்லை. அதுபோல்தான் புரட்சித் தலைவியும், தன்னை நம்பும் மக்களை அவர் தனியாய் விட்டதில்லை. இவர்போல் தான் மக்களும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ரா. சரத்குமார்] [2013 மார்ச் 27

'வடபுல இமயத்து வாங்குவில் பொறித்த
ஏழு உறழ் திணிதோள் இயல்... தேர்க்குட்டுவன்'

என்று வடதிசை இமயத்தில் வில் முத்திரையைப் பதித்த செங்குட்டுவனின் பராக்கிரமத்தால் ஏற்கெனவே தமிழர்கள் இமயம் ஆண்டனர்.

அந்த பராக்கிரமத்தின் புதிய இணைப்பாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் பராக்கிரமமும் நாளை சேர வேண்டும், சேரும், சேர்ப்போம் என்பது நான் சார்ந்த இயக்கத்தின் பெருவிருப்பம் என்பதை இந்தப் பெருமன்றத்தில் சொல்லிக்கொள்ள ஒரு சின்ன ஆசை, ஒரு மத்தாப்பூ ஆசை.

வெள்ளையர்கள் ஆண்ட காலத்திலேயே தமிழ்நாட்டை,
'செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே'
என்று புகழ்ந்து பாடினான் பாரதி.

தமிழகத்தின் வளர்ச்சியும், தமிழக மக்களின் நலனும் மட்டுமே தமது குறிக்கோள்களாகக் கொண்டு திறம்படச் செயல்பட்டுவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில்,

'செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே'

என்று நாம் மட்டுமல்லாது, உலகத் தமிழினமும், இந்த தேசமும் ஆனந்தப் பள்ளு பாடும் நிலைக்குத் தமிழகம் வளர்ச்சி பெற்று வருகிறது என்பதை மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றிக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் இனம் தமிழினம். ஒன்றுக்குப் பத்தாக நன்றிக் கடனைத் திருப்பிச் செலுத்தும் பண்பு தமிழர்களின் பண்பு. தமிழ் இலக்கியத்தில் *40* என்ற எண்ணுக்கு தனிச் சிறப்பு உண்டு. சங்க இலக்கியத்தில், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது என்ற இலக்கியங்கள் உள்ளன. எனவே, காவேரியை மீட்டுத்தந்து தமிழர்களின் நலன் காத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழர்கள் நன்றிக் கடனாக நாற்பதாகத் தருவார்கள்,



2013 மார்ச் 27] [திரு. ரா. சரத்குமார்]

(மேசையைத் தட்டும் ஒலி) நாற்பதையும் தருவார்கள் என்ற நம்பிக்கை *2014* ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் உறுதியாகும் என்று உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்மை பயக்கின்ற நிதிநிலை அறிக்கை தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கும் என்பதைக் கூறி சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலே மீண்டும் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் தனது கருத்துரையை வழங்கும்போது ஒரு தகவலைச் சொன்னார். துப்புரவுப் பணியாளர்களாகப் பணியாற்றுகின்ற நபர்கள் இறக்கின்றபட்சத்தில் அவர்களுடைய வாரிசுகளுக்குத் துப்புரவு பணியாளர்களாகவே பணி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உயர் கல்வி கற்றாலும்கூட, துப்புரவுப் பணிகளுக்கே அனுப்பக்கூடிய நிலைமை இருக்கிறது என்று சொன்னார். அது தவறு. துப்புரவுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால், அவருடைய வாரிசு கூடுதலான கல்வித் தகுதி பெற்றிருப்பின் அவரை நுழைவுப் பணியான இளநிலை உதவியாளர் பணியில் பணியமர்த்தலாம், தடையேதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் துப்புரவுப் பணியாளர்களுடைய வாரிசுதாரர்களுக்கான பணி நியமனத்தைப்பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி கொடுப்பது சம்பந்தமாக நமது அரசு ஒரு சரியான முடிவை எடுத்திருக்கிறது. அப்படி கருணை அடிப்படையில் பணியமர்த்தப்படக்கூடிய

பணியாளர்கள் பணி நியமன ஆணையைப் பெற்ற பின்னர் பணியில் சேருவதற்கு நகராட்சிகளுக்குச் செல்லும்போது அங்கிருக்கின்ற அதிகாரிகள் அவர்களது பணி ஆணையை உறுதி செய்து பணி கொடுக்காத நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. அதையும் கவனத்தில் எடுத்து, உடனடியாக பணி நியமனம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செவி வழியாக வந்த கருத்துகளை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதுபோன்று நபர் யாராவது பணி உத்தரவு பெற்றபிறகு பணியில் சேர்க்கப்படவில்லையென்று குறிப்பிட்டுச் சொன்னால், உடனடியாக பணியில் சேர்க்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது புதிய தமிழகம் கட்சியினுடைய கருத்துகளை எடுத்துரைப்பதற்கு வாய்ப்பளித்திருக்கக்கூடிய தங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று காலையில் ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக அதுவும் இந்த மாமன்றத்தில் ஈழத் தமிழ் மக்களுடைய இன்னல்கள் தீர தனி ஈழம் ஒன்றுதான் தீர்வு என்ற அடிப்படையில், அதற்கு முன்னோடியாக விளங்கக்கூடிய வகையில் ஐ.நா.–வில் சுதந்திரமான சர்வதேச விசாரணை ஆணையம் ஒன்றை இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டுவர வேண்டும், ஈழத்திலும் புலம் பெயர்ந்தும் வாழுகின்ற தமிழ் மக்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பை





ஐ.நா.–வினுடைய மேற்பார்வையில் நடத்திட வேண்டும். இலங்கையில் நடைபெற்றது அனைத்தும் இன அழிப்புதான், அங்கு நடைபெற்றது போர் விதி மீறல், மனித உரிமை மீறல் என்ற கருத்துகளை வலியுறுத்தி, வருகின்ற காலங்களில் ஐ.நா.–வில் இந்திய அரசே இலங்கை அரசுக்கு எதிராகத் தீர்மானத்தை முன்மொழிய வேண்டுமென்ற அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட அந்தத் தீர்மானத்திற்குப் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நன்றியையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2013–2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை சர்வதேச அளவிலும், இந்திய அளவிலும் நிலவி வருகின்ற பொருளாதார மந்த நிலையைப் பிரதிபலிக்கக் கூடியதாக இருக்கின்றது. மாநிலத்தினுடைய மொத்த பொருளாதார வளர்ச்சி விகிதம் 4.61 சதவிகிதம். அண்டை நாடான சீனாவில் 9 முதல் 11 சதவீதம் வளர்ச்சியைக் கண்டு கொண்டிருக்கின்றபொழுது, இந்தியாவில் அதைப்போன்ற ஒரு பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாத சூழ்நிலைகள், அதனுடைய விளைவாக தமிழ்நாட்டிலும் அதனுடைய பிரதிபலிப்புகள், அதனுடைய விளைவாக நாமும் பல்வேறு விதமான பொருளாதார சிக்கல்களில் சிக்கித் தவிக்கிறோம். இருப்பினும்கூட இந்த நிதிநிலை அறிக்கையில் முதன்மைத் தொழிலுக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய வகையில் சற்றேறக்குறைய 5,189 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது மிக மிக வரவேற்கக்கூடியது. இதிலே வேளாண்மைத் துறைக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பது என்பது இன்று மட்டுமல்ல, நாளையும், எதிர்காலத்திலும் தமிழகத்தினுடைய நிரந்தரமான பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடக் கூடியதாகும். இதில் ஒரே ஒரு சிறிய விளக்கத்தை மட்டும் நான் அறிய விரும்புகிறேன். இதிலே சொட்டு நீர்ப் பாசனத்திற்காக பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து 520 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 1,30,000 ஏக்கருக்கு 520 கோடி ரூபாய் என்று சொன்னால், சராசரியாக ஒரு ஏக்கருக்கு 40,000 ரூபாய் என்று வருகிறது. அதனுடைய விவரம் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். அந்த 40,000 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறதா அல்லது விதைகளாக வழங்கப்படுகிறதா, வேறு ஏதாவது விதத்தில் வழங்கப்படுகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அடுத்தது. . .

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் முழுவதும் மானியமாகத்தான் கொடுக்கிறோம். வாங்குகின்ற பொருட்களுக்கு, அதாவது, பைப் லைன் போன்ற பொருட்களுக்குத்தான் முழுமையாக மானியத்தை வழங்குகிறோம்.

பிற்பகல் 1–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் ஒரு நாட்டிலே தழைத்தோங்கி, மேலோங்க வேண்டுமென்று சொன்னால், இரண்டு முக்கியமான அம்சங்கள் வேண்டும். ஒன்று நீராதாரம் வலுவாக இருந்திடவேண்டும்; இரண்டாவது விளைகின்ற பொருட்களுக்கு விலை நிர்ணயம் நிச்சயமாக இருக்கவேண்டும். இன்று இருக்கக்கூடியவகையில், கரும்புக்கும், நெல்லுக்கும் ஒரு ஆதாரமான விலை இருக்கிறது. பிற பொருட்களுக்கு, குறிப்பாக காய்கறி போன்ற பொருட்களுக்கெல்லாம் ஒரு ஆதாரமான விலை இன்று வரையிலும் நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே, ஒருபக்கம் விவசாயம் வளர வேண்டும் என்பதற்கு நிதி ஒதுக்குகிறபோது, கூடுதல் கவனம் செலுத்துகின்றபோது, அனைத்து விதமான விவசாயப் பொருட்களுக்கும் விலை நிர்ணயம் செய்வதற்கான ஒரு கொள்கையையும் நாம் வகுத்தாக வேண்டும். இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே இதுபோன்று வேறு எந்த மாநிலமும் செய்யாவிட்டாலும், தமிழ்நாடு இதற்கு முன்னோடியாக இருக்கலாம் என்பது என்னுடைய கருத்தாகும்.

தமிழகத்தில் ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள், இன்னும் வீட்டு மனைகளற்ற மக்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் பேருக்குமேல் இலவசமாக வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டதாகவும், கடந்த ஆண்டு 1,20,000 பேருக்கு கொடுக்கப்பட்டதாகவும் நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. இதிலே வருகின்ற 2013–2014 ஆம் நிதியாண்டில் மேலும் இரண்டு இலட்சம் பேருக்கு கொடுக்கப்படும்



2013 மார்ச் 27] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது வரவேற்கக்கூடிய அம்சமாக இருந்தாலுங்கூட, அந்த ஒரு இலட்சம் பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கொடுக்கப்பட்டதில் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன. ஏனென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடிய நாங்கள் தொடர்ந்து இந்த இலவச வீட்டுமனைப் பட்டாவிற்காக, பல கோரிக்கைகளை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலும் வட்டாட்சியர்களிடமும் வைக்கின்றபோது, அந்தக் கோரிக்கைகள் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. அதுவும் குறிப்பாக, one time regularisation என்ற ஒரு விதி, மாநகராட்சி போன்ற எல்லைப் பகுதிகளிலே. மாவட்ட நிருவாகத்திற்குத் தடையாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, அதைத் தளர்த்தாமல் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூடுதல் அதிகாரம், கூடுதல் வாய்ப்பு கொடுக்கவேண்டும்.

அதாவது சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைக்கும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்மீது குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக மாவட்ட நிருவாகம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற காலவரையறை செய்யப்படவில்லை என்று சொன்னால், அது வெறும் ஏட்டளவிலே அதிகாரிகள் கொடுக்கும் தவறான தகவல்களின் அடிப்படையிலே ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் என்று இருக்குமே தவிர, உண்மையான ஏழையெளிய மக்களுக்கு பயன் சென்றடைய வாய்ப்பில்லாமல் போய்விடும். எனவே, இந்த 1,20,000 அல்லது 2,00,000 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் ஒரு சட்டமன்றத் தொகுதியில் எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றன, எந்தக் காலக்கட்டங்களில், எந்த மாதத்தில், எந்த வாரத்தில் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பதை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தந்த மாவட்ட நிருவாகம் தொகுதிவாரியாகத் தெரிவிக்கவேண்டும். ஆனால், வெறும் அதிகாரிகள் கொடுக்கும் தகவலை மட்டும் வைத்துக்கொண்டு, நாம் சொன்னால் அது சரியாக இருக்காது என்பதே என்னுடைய கருத்து என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்கிறேன். ஏனென்று சொன்னால், நான் தூத்துக்குடி மாவட்டத்தில், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலே பல்லாயிரக்கணக்கான மனுக்கள் கொடுத்து 200, 300 பேருக்கு மட்டும்தான் அந்த இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இந்தக் குறையைக் களைவதற்குத் தீவரமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் புறம்போக்கு நிலங்களிலே ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரக்கூடிய, குறிப்பாக இந்தக் கூட்டத் தொடரில் பேசிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள், மேய்க்கால் புறம்போக்கு, மந்தைவெளி, மயானம், பாதை போன்ற இடங்களில் நீண்டகாலமாக ஆக்கிரமிப்புகள் செய்து குடியிருந்துவரும் மக்களுக்கு இந்த ஒருமுறை வரன்முறைப்படுத்தும் சிறப்புத் திட்டத்தின்மூலமாக பட்டா வழங்கக்கூடிய திட்டம் இப்போது நடைமுறையிலே இல்லை என்பதை இங்கு சுட்டிக்காட்டிப் பேசினார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகின்றபோதும் இதே கருத்தை இங்கு சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்களுடைய மனதில் பால் வார்க்கின்ற வகையிலே, அரசுப் புறம்போக்கு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமிப்புகள் செய்து வசித்து வருகின்றவர்களுக்கெல்லாம் சிறப்புத் திட்டத்தின்மூலமாக வரன்முறைப்படுத்தி பட்டா வழங்கக்கூடிய இந்த ஒரு முறை சிறப்பு வரன்முறைப்படுத்துகின்ற திட்டத்திற்கு கால நீட்டிப்புக் கொடுத்திருக்கின்றார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, குறிப்பாக மேய்க்கால், மந்தைவெளி, மயானம், பாதை போன்ற வகைமாற்றம் செய்ய முடியாதஆக்கிரமணங்களுக்கெல்லாம்,அரசுக்குத் தேவைபடாதபட்சத்தில், சிறப்பு வரன்முறை திட்டத்தின் மூலமாக பட்டா கொடுப்பதற்குண்டான ஆணையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு நீட்டித்து உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேசையைத் தட்டும் ஒலி)



2013 மார்ச் 27] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

பிற்பகல் 1–55

அதுமட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, வீடில்லாத அடித்தட்டு ஏழையெளிய மக்களுக்கும் வருடம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்று தேர்தல் காலத்திலே அளித்த வாக்குறுதிகளை மிஞ்சுகின்ற வகையில், வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆக, பட்டாக்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல், மரியாதைக்குரிய மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடியதைப்போல, ‘குடிசை எல்லாம் வீடாகும் நேரத்திலே, இங்கு தெருவோரம் குடியேறத் தேவையில்லை’ என்று மக்கள் இன்றைக்கு ஆனந்தமாகப் பாடிக்கொண்டிருக்கின்ற வகையிலே, இந்த அரசு பட்டாக்களையும் வழங்குகின்றது; கொடுக்கப்பட்ட பட்டாக்களுக்கு ரூபாய் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் மதிப்பிலான பசுமை வீடுகளையும் இந்த அரசாங்கம் கட்டித் தருகிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவில் வறுமைக் கோட்டை நிர்ணயம் செய்வதற்கு கிராமப்புறங்களிலே வாழக்கூடிய மக்களுக்கு அவர்களுடைய வருமானம் ரூ.27/– எனவும், நகர்ப்புறத்திலே வாழக்கூடியவர்களுக்கு ரூ.32/– எனவும் திட்டக் கமிஷன் நிர்ணயித்துள்ளது. ஆனால், அது நாடாளுமன்றத்திலேயே மிகக் கடுமையான எதிர்ப்புக்கு ஆளாகியிருக்கிறது. எனவே, புதிய வரன்முறைகள் தமிழக அளவிலே தோற்றுவிக்கப்பட வேண்டும். அதாவது, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடியவர்களின் எல்லைக் கோடுகள் என்ன என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். அதற்குண்டான ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும்

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2013 மார்ச் 27

இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றபொழுது, தமிழகத்திலே எந்த அளவிற்கு அளவுகோல் உள்ளது? What is the Bench–Mark? தமிழகத்திலே இருக்கக்கூடிய ஏழைகள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடியவர்கள் என்ன தகுதிக்குக் குறைவானவர்கள் என்ற விதிமுறைகள் ஒன்றும் இதில் சொல்லப்படவில்லை. எனவே, அந்த வரைமுறைகள் இருந்தால்தான் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் அதுபோன்ற குறைபாடுகளை வறுமைக் கோட்டிற்குக் கீழே யாராவது சேர்க்கப்படவில்லை என்று சொன்னால், இந்தத் தகுதிகள் இருந்தும்கூட அவர்கள் அந்தப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்று எடுத்து வைப்பதற்குண்டான வாய்ப்புகள் கிடைக்கும். எனவே, அதைத் தெளிவாக, என்னென்ன வசதிகளற்றவர்கள், எந்த அளவிற்கு வருமானம் குறைவாக இருக்கக்கூடியவர்கள், எந்த நிலையிலே வாழ்ந்துகொண்டிருக்கக்கூடியவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழானவர்கள் என்று தெளிவான வரைமுறைகள் இருந்தால்தான் அதை சட்டமன்ற உறுப்பினர்கள் முழுமையாக எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்தது, தமிழகத்தில் ஏறக்குறைய கடந்த 40 ஆண்டுகளாக, ஏழையெளிய மக்கள், குறிப்பாக பட்டியலின மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 35, 40 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட வீடுகளெல்லாம் இப்போது இடிந்து விழக்கூடிய தருவாயில் இருக்கின்றன. அவற்றில் பல வீடுகளிலே அவர்கள் குடியே இருக்க முடியாது. பெரிய மழை பெய்கின்றபொழுது அவை எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய வாய்ப்பிருக்கிறது. இப்பொழுது வேண்டுமென்றால், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலேயிருந்து அதற்கு நிதி ஒதுக்கலாம். அதைத் தவிர பொது நிதி என்று ஒன்றும் கிடையாது. Sub–Plan என்று அழைக்கப்படக்கூடிய சிறப்பு உட்கூறு திட்ட நிதியிலே இருந்தும், பிற்படுத்தப்பட்டோர் நிதியிலிருந்தும்கூட, அவர்களுக்குப் பொதுவாக ஒரு மாவட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு 10,000, 20,000 அல்லது 50,000 வீடுகளுக்கென்று அந்த நிதியிலேயிருந்து ஒதுக்குவதற்குண்டான நடவடிக்கையை இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2013 மார்ச் 27] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

அதேபோல, Sub–plan தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு இந்திய அரசினுடைய ஆணையின்படி 1984–லேயிருந்து அந்தந்த மாநிலங்களில் வாழக்கூடிய மக்களுடைய விகிதாச்சாரத்திற்கொப்ப நிதி ஒதுக்கப்படுகிறது. கடந்த 2011–2012 ஆம் ஆண்டும் மற்றும் இந்த ஆண்டும் அதற்குண்டான நிதி ரூ.7,100 கோடி என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அண்டை மாநிலமான ஆந்திராவில் இந்த நிதி ஒவ்வொரு துறையிலிருந்தும் எப்படி செலவழிக்கப்படுகிறது? அந்த நிதி முறையாக அந்தப் பகுதி மக்களைச் சென்றடைகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காக, அந்தந்த அமைச்சர்கள் தலைமையில் Sub–Committee என்று தனியாக ஒரு குழு செயல்படுகிறது. எனவே, எதற்கும் ஒரு கண்காணிப்பு இருக்க வேண்டும்.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஒரு நல்ல நோக்கத்தோடு 7,100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த மக்கள் ஓராண்டுக் காலம், ஈராண்டுக் காலம் அல்ல; ஆயிரம் ஆண்டுக் காலமாக, இரண்டாயிரம் ஆண்டுக் காலமாக சமூகத்தில், பொருளாதாரத்தில் மிக, மிகப் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். எனவே, அந்த மக்கள் மேம்பாடு அடைய வேண்டுமென்ற நோக்கத்திற்காக 7,100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அப்படி ஒதுக்கப்படுகிற 7,100 கோடி ரூபாய் அந்த மக்களைத்தான் சென்றடைகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கான முறை பிற மாநிலங்களில் இருக்கிறது. போக்குவரத்துத் துறை என்று சொன்னால், நெடுஞ்சாலைத் துறை என்று சொன்னால், உள்ளாட்சித் துறை என்று சொன்னால், அந்தத் துறை அமைச்சர்களுடைய தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் அடங்கிய குழுக்கள், இந்த ஆண்டு சிறப்பு உட்கூறுத் திட்டத்தின்கீழ் எவ்வளவு நிதி வந்திருக்கிறது; எந்தெந்தப் பகுதி மக்களுக்கு எவ்வளவு நிதி செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்காணிப்பதற்காக இருக்கின்றன. எனவே, அந்தக் குழுக்களைப் போன்று தமிழகத்திலேயும் கொண்டுவர வேண்டும். அப்போதுதான்

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2013 மார்ச் 27

அதனுடைய நோக்கம் நிறைவேறும் என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஒரு கருத்தைக் கூறினாலும்கூட, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வருகின்றபோதே, அந்தத் திட்டம் யாரைப் போய்ச் சென்றடைய வேண்டுமோ, அதற்கேற்ப சட்டத்தைத் தீட்டி, அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், கடந்த கால ஆட்சியில் விலையில்லாத தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுத்தார்கள்; முறையாகப் போய்ச் சேரவில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விலையில்லாத மின் பொருட்களான மிக்சி, கிரைண்டர், மின்விசிறி போன்றவற்றைக் கொடுக்கிறார்கள். எந்தச் சூழ்நிலையிலும், குடும்ப அட்டைதாரர்களுக்கு அந்தப் பொருட்கள் நேரடியாகச் சென்று சேருகின்றன.

உதாரணத்திற்கு, கிராமங்களிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளுக்குச் செல்கின்றபோது, முன்பெல்லாம் பார்த்தோமென்று சொன்னால், அரசாங்கம் கொடுக்கக்கூடிய பொருட்களை வாங்குவதற்காக மக்கள் போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள். ஆனால், இன்று என்ன நிலைமை என்று சொன்னால், அமைச்சர் சென்று விடுகிறார்; சட்டமன்ற உறுப்பினர் சென்று விடுகிறார்; மாவட்ட ஆட்சித் தலைவர் சென்று விடுகிறார். ஆனால், பொருள்களை வாங்குவதற்காக வரக்கூடிய பயனாளிகள் பொறுமையாக வந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், நம்முடைய பொருளை யாரும் எடுத்துச் செல்லமுடியாது; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நமக்கென்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கட்டாயம் நம்மிடத்தில்தான் கொடுக்க வேண்டும் என்கிற அளவிற்கு நம்பிக்கை வந்திருக்கிறது.

அதனடிப்படையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்திற்கேற்ப, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.



2013 மார்ச் 27] [திரு. கே.பி. முனுசாமி]

பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. அதிலே, ஆதி திராவிட மக்களுக்கு 30 விழுக்காடு வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. அந்த 30 விழுக்காடு வீடுகளும், முறையாகப் பயனாளிகளுக்குப் போய் சேர்ந்து கொண்டிருக்கின்றன. எனவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒரு திட்டத்தைத் தீட்டுகின்றபோது, எந்தெந்த சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எங்கெங்கு சென்றடைய வேண்டுமோ, அது முறையாகச் சென்றடைந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறையில் பயிலக்கூடிய மாணவர்களுக்கு உதவித் தொகை அளிப்பதற்காக, தமிழ்நாட்டிலே கடந்த ஆண்டு 125 கோடி ரூபாய், தமிழ்நாடு அரசால், அதுவும் பட்டியலின மாணவர்களுக்கு, பழங்குடியின மாணவர்களுக்கு அவர்களுடைய கல்விக் கட்டணமாக ஒதுக்கப்பட்டது. குறிப்பாக, சுயநிதிக் கல்லூரிகளில், மருத்துவக் கல்லூரிகளில் பயிலக்கூடிய மாணவர்களுக்கு எல்லாவிதமான கட்டணங்களையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டு, அதற்குண்டான நிதியும் ஒதுக்கப்பட்டது. ஆனால், நடைமுறையில் என்ன நடந்தது என்று சொன்னால், பல தனியார் கல்லூரிகள், ‘நீங்கள் முதலிலே பணத்தைக் கட்டுங்கள்; அதற்குப் பிறகு அரசாங்கத்திடமிருந்து வாங்கிக் கொள்ளுங்கள்’ என்று, கடந்த காலத்தில் என்ன நடைமுறை இருந்ததோ, அதே நடைமுறையை மீண்டும் கொண்டுவந்து பின்பற்றினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே, அதிலும் சொல்ல வேண்டுமென்றால், இந்திய வரலாற்றிலேயே, சென்ற முறைதான் தனியார் பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கு, கவுன்சலிங் மூலமாகச் செல்லக்கூடிய மாணவர்களுக்கு, இரண்டு இலட்சம்

[திரு. பி. பழனியப்பன்] [2013 மார்ச் 27

ரூபாய் அளவிற்கு ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு, அவர்கள் தனியார் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்தால்கூட, அரசாங்கமே அந்தக் கட்டணத்தைக் கட்டிக் கொள்ளும் என்ற ஓர் அற்புதமான திட்டத்தை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் நலத் துறை மூலமாக அந்த நிதி அந்த மாணவ, மாணவிகளைச் சென்றடைகிறது.

Single Window System மூலமாக அந்த Allotment Order பெறுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல சில சிக்கல்கள் இருந்தன. முதன்முதலாக இது நடைமுறைப்படுத்தப்படுகிற திட்டம் என்கிற காரணத்தினால், அதுபோன்ற சிக்கல்கள் இருந்தன. பின்னர் அவை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, தற்போது அந்தக் குறை தீர்க்கப்பட்டு, கல்லூரிகளுக்கு ஆணை வழங்கப்பட்டது. அரசாங்கத்தின் மூலமாக அந்த நிதி வழங்கப்பட்டு வருகிறது. அதுபோன்ற நிலையில், யாரும் கட்டாயமாக கட்டணத்தை வசூல் செய்யக் கூடாது; அரசாங்கத்தின் மூலமாக அந்த நிதி வந்து சேரும் என்று அனைத்துக் கல்லூரிகளுக்கும் அதற்கான அரசாணையை அரசு அனுப்பி வைத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இதுபோன்ற தவறு எங்கும் நடக்கவில்லை என்பதையும் நான் இங்கே பதிய வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற நிலைமை எங்கும் இல்லை. யாரிடமாவது அதுபோன்ற தவறு இருந்தால், பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னால், அதன்பேரில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 மார்ச் 27]

*பிற்பகல் 2–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள், நேரமாகிவிட்டது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடு நாட்களாக, பல வருடங்களாக கல்வியில், வேலைவாய்ப்பில், தொழிலில், வணிகத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், மதுரை போன்ற தென் மாவட்டங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. எனவே, தென் தமிழகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய வகையில், தென் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழகத்திலே, தென் தமிழ்நாடு கல்வி, மற்ற இனங்களில் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறது என்ற கருத்தைப் பதிய வைத்துக்கொண்டிருக்கின்றார்; அது தவறு. உதாரணத்திற்கு, தேனி மாவட்டத்தில்தான் படித்த மாணவர்களுடைய சதவீதம் கூடியிருக்கிறது என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் தமிழகத்தில் கடந்த காலங்களில் பெரிய கல்வி நிறுவனங்கள், பெரிய மருத்துவமனைகள், பெரிய தொழிற்சாலைகள் போன்றவை தொடங்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

[2013 மார்ச் 27

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதுவும் கடந்த ஆட்சியில் தொடங்கப்பட்ட 38 பெரிய தொழிற்சாலைகளும் திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சுற்றியே தொடங்கப்பட்டுள்ளன. எனவே, தென் தமிழகத்தில் வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய வகையில் தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். அதனடிப்படையில், தென் தமிழகத்திற்கு புதிய தொழிற்பூங்காக்கள் துவங்கப்படும் என்று கொள்கைரீதியாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும்கூட, அதற்கான நிதியினை உடனடியாக ஒதுக்கிட வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக வறட்சி நிவாரணத்திற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதற்குத் தனியாக நிதி ஒதுக்க வேண்டுமென்று கோரியுள்ளார். மாண்புமிகு அம்மா அவர்கள், தனியாக தொகுப்பு சலுகை அறிவிக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிதிநிலை அறிக்கையினை சரியாகப் படிக்கவில்லை என்று நினைக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள், நிச்சயமாக தொகுப்பு நிதி அறிவிப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். நாங்கள் தொழிற்சாலைகள் துவங்குவதற்குத் தேவையான ஏற்பாட்டை, நிலத்தை ஒதுக்கீடு செய்து தருவோம். தொழிற்சாலைகள் துவங்கும் தொழில் முனைவோர்கள்தான் முதலீடு செய்து, தொழிலை ஆரம்பிக்க வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் தமிழகத்திலே தொழில்கள் துவங்கும்போது ஒரு விஷயத்தை மிக முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், தற்போது இயங்கி வரும்



2013 மார்ச் 27] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

பெரும்பாலான தொழிற்சாலைகள் சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கக்கூடிய, நிலத்தடி நீரைச் சுரண்டக்கூடிய வகையிலே இயங்கி வருகின்றன. ஸ்டெர்லைட் போன்ற ஆலைகள் விஷ வாயுக்களை வெளியே விடுவதாலும், நிலத்தடி நீரை சுரண்டுவதாலும் அந்த பகுதியிலே மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்காத தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுப்புறச் சுகாதார அனுமதி இல்லாமல் எந்த ஒரு தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்படுவதில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஸ்டெர்லைட்டிலிருந்து வந்த வாயுக் கசிவு உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, நிறுத்தப்பட்டிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நேரமாகிவிட்டது, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இறுதியாக, தமிழ்நாட்டிலுள்ள நகர மற்றும் கிராமப்புறங்களில் 45 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்வதாக ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது. எனவே, வறுமையை ஒழிப்பதற்காகக் கிராமப்புறங்களுக்கு 350 கோடி ரூபாயும், நகர்ப்புறங்களுக்கு 250 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது; இது போதாது. இன்னும் பல மடங்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன். கடைசியாக, அதாவது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, கடைசியாக, கடைசியாக என்று கூறிக்கொண்டே பேசிக்கொண்டு இருக்கிறீர்கள்.

[2013 மார்ச் 27

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** கடைசியாக, காவேரி டெல்டா பகுதி மக்களுக்கு வறட்சி நிவாரணத் தொகையாக 541 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. காவேரி டெல்டா பகுதியிலே இன்னும் பல குறைகள் இருப்பதாக, அந்தக் குறைகளை முன்வைத்து அங்குள்ள மக்கள் போராடி வருகிறார்கள். அந்தக் குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவேரி டெல்டா பகுதி மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளைப் போன்று, தென் தமிழகத்தில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 15,000 ரூபாய் கொடுப்பதற்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி, வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், என்னவென்று சொல்லுங்கள்.

பிற்பகல் 2–10

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இன்று காலையிலே ஒரு முறை பட்டா வழங்குகிற சிறப்புத் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நேற்று எங்கள் கட்சியின் சார்பிலே பேசுகிற தோழர் கே. தங்கவேல் அவர்களும், நேற்றைய முன்தினம் இந்த அவையிலே பேசுகிறபோது நானும், இன்னும் பல்வேறு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும் அந்த ஒரு முறை பட்டா வழங்குகிற அந்த ஆணையை நீட்டித்துத் தர வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்தி வந்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே அந்த ஆணையை நீட்டித்து வழங்கியிருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு என்னுடைய சார்பிலேயும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலேயும் இந்த நேரத்திலே நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, காலதாமதம் இல்லாமல் அந்த ஆணையின் அடிப்படையில் ஏற்கெனவே நிலுவையில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களிலேயும் அந்தப் பட்டாக்களை வழங்குவதற்குத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு அமைகிறேன்.



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை குறித்து மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக எங்கள் கருத்துக்களைப் பதிவு செய்ய வாய்ப்பு வழங்கியமைக்காக முதலில் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்று காலையிலே இந்தப் பேரவையிலே ஈழத் தமிழர்களினுடைய, தமிழகத் தமிழர்களுடைய, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களுடைய உணர்வுகளையெல்லாம் பிரதிபலிக்கக்கூடிய வகையிலே இந்த அவையிலே எழுப்பப்பட்ட கோரிக்கைகளையெல்லாம் உள்வாங்கி, ஈழம் தொடர்பாக மிகச் சிறப்பான தீர்மானத்தை ஏகமனதாக இந்த அவையிலே நிறைவேற்றுவதற்கு முன்வந்து, நிறைவேற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இலங்கையிலே ராஜபக்சே அரசு ஒரு பாசிஸ அரசு. மனித இனத்திற்கு எதிராக தொடர்ந்து குற்றங்களைச் செய்து வரக்கூடிய அரசு. அந்த அரசை நட்பு நாடாகப் பாராட்டுவது தவறு. தமிழக மக்களினுடைய உணர்வுகளை மத்தியிலே ஆட்சி செய்யக்கூடிய காங்கிரஸ் உள்வாங்கி திருந்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, முதலிலே தமிழர்களைக் கொன்று குவித்தார்கள். இன்று இலங்கையிலே தமிழ் பேசக்கூடிய முஸ்லிம்கள் ராஜபக்சே அரசாங்கத்தினுடைய தூண்டுதலின் பேரிலே சொல்லொணா துன்பங்களுக்கு இலக்காகி வருகின்றார்கள். பள்ளிவாசல்கள் அடித்து நொறுக்கப்படுகின்றன. முஸ்லிம்களினுடைய கலாச்சார சின்னங்களுக்கெல்லாம் பங்கம் விளைவிக்கக்கூடிய வகையிலே அங்கே ஒரு தீவிரவாத கும்பல் 'பொதுநல சேனா' என்ற பெயரிலே ராஜபக்சேவினுடைய ஆதரவோடு இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய சூழலிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே நிறைவேற்றி இருக்கக்கூடிய தீர்மானம் நிச்சயமாக ராஜபக்சேவின் ஆட்சிக்கு சாவு மணி அடிக்கக்கூடிய ஒரு தீர்மானமாக அமையும் என்பதைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 மார்ச் 27

2013–2014 ஆம் ஆண்டுக்கான முன் மதிப்பீடுகளின் அடிப்படையில் நியாய விலை மதிப்பீட்டின்படி மாநிலத்தின் மொத்த பொருளாதார உற்பத்தி வளர்ச்சி விகிதம் 4.61 விழுக்காடு என்ற பின்னணியிலும், மாநிலத்தில் நிலவும் கடுமையான வறட்சியின் பின்னணியிலும் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய வரி பகிர்வில் மாநில அரசின் பங்கு குறைந்துகொண்டே வரும் நிலையில், 2007–2008 இல் 17 விழுக்காடாக இருந்த பகிர்வு 2012–2013–ல் 14.7 விழுக்காடாகக் குறைந்து, தமிழகம் தனது சொந்த நிதி ஆதாரங்களை மேலும் சார்ந்து இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த இக்கட்டான சூழலிலே மக்களின் மன நிலையைக் கருத்தில்கொண்டு புதிய வரிகள் எதுவும் இல்லாமலும், இருக்கும் வரிகளை உயர்த்தாமலும் இந்த நிதிநிலை அறிக்கையை அளித்தமைக்காக மீண்டும் மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதன்மைத் துறைக்கான ஒதுக்கீடு சென்ற ஆண்டைவிட 20.12 விழுக்காடு அதிகரிக்கப்பட்டுள்ளதையும் வரவேற்கின்றேன். வால்மார்ட் போன்ற வெளிநாட்டு நிறுவனங்களை அனுமதித்தால்தான் வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தும் வசதிகள் செய்ய இயலும் என்று கூறி, சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டை மத்திய அரசு நியாயப்படுத்தி வரும் நிலையில், இந்தக் கொள்கையை எதிர்க்கும் தமிழக அரசு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் சேமிப்புக் கிடங்கு வசதிகளை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்று அறிவித்துள்ளதையும், வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும், அதேபோல நகர்ப்புறப் பகுதிகளில் கூட்டுறவு அமைப்புகள்மூலமும், தோட்டக்கலைத் துறைமூலமும் விவசாயிகளையும், நுகர்வோர்களையும் நேரடியாக இணைக்கக்கூடிய பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள், Fresh Vegetables விற்பதற்காகத் திறக்கப்படும் என்ற அறிவிப்பை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மனமார வரவேற்கிறேன்.

பிற்பகல் 2–15

250 கோடி ரூபாய் செலவில் 2013–2014 ஆம் ஆண்டில் 12,000 கறவைப் பசுக்களும், 1.5 இலட்சம் நிலமற்ற ஏழைப் பெண்களுக்கு 6 இலட்சம் செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகளும் வழங்கப்படும் என்ற அறிவிப்பையும் வரவேற்கின்றேன்.



2013 மார்ச் 27] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

ஆழ்கடல் மீன் பிடிப்பை ஊக்குவிப்பதற்காகப் புதிய ஆழ்கடல் டியூனா மீன்பிடி படகுகளை வாங்குவதற்காக வழங்கப்படும் மானியத்தை 25 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தி இதற்காக 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்ற அறிவிப்பையும் வரவேற்கிறேன். இராமநாதபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலே இரண்டு மீன் பதப்படுத்தப்படும் பூங்காக்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பையும் வரவேற்கின்றேன்.

மீனவர் பிரச்சினை தொடர்பாக நேற்று கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கச்சத் தீவை மீட்பது இந்தப் பிரச்சினைக்கு ஒரு சிறந்த வழி என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதை வரவேற்கக்கூடிய அதேநேரத்தில் இதுவரையில் தமிழகத்தைச் சேர்ந்த 570–க்கு மேற்பட்ட மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்டு இருக்கின்றார்கள். 2000–க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்திருக்கின்றார்கள். இந்தச் சம்பவங்கள் தொடர்பான வழக்குகளிலெல்லாம் தமிழகக் காவல் துறை முதல் தகவல் அறிக்கை (F.I.R.) பதிவு செய்திருக்கின்றது. இதோடு நிற்காமல் தமிழக அரசு இந்த F.I.R.–களிலே அந்தந்தக் காலத்தில் இருந்த இலங்கை அதிபர்கள், அந்தந்தக் காலத்தில் இருந்த இலங்கை கடற்படை தளபதிகளை எல்லாம் குற்றவாளிகளாகப் பெயர் சொல்லி, அறிவித்து, அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி, காயம்பட்ட மீனவர்களுக்கும், இறந்த மீனவர்களின் குடும்பங்களுக்கும், இலங்கை அரசாங்கத்திடமிருந்து சரியான இழப்பீட்டைப் பெற்றுத் தருவதற்கு முன்னோடியாக இருந்து, இலங்கை குறித்து பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கக்கூடிய இந்த அரசு இந்தக் கோரிக்கையையும் நிச்சயமாக, நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

அரிசி விலையைக் கட்டுப்படுத்த அமுதம் அங்காடிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள்மூலம் ஒரு கிலோ அரிசி 20 ரூபாய் வெளிச் சந்தையில் விற்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் பாராட்டத்தக்க முயற்சி.

அகதி முகாம்களுக்கு வெளியில் வசிக்கக்கூடிய இலங்கை அகதிகளுக்கும் முதலமைச்சரின் புதிய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தினுடைய பயன் அளிக்கப்படும் என்ற அறிவிப்பையும் வரவேற்கிறேன். என்னுடைய தொகுதியில்,

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 மார்ச் 27

மண்டபத்தில் அகதி முகாம்கள் இருக்கின்றன. அங்கு வசிக்கக்கூடிய குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்பு கொடுக்கப்படவில்லை. இதனால் அவர்கள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே, மண்டபம் அகதி முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளுக்குச் சமையல் எரிவாயு இணைப்புகளை அளிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளும் பயன்பெறும் வகையில் பல்வேறு அறிவிப்புகளை அறிவித்தார்கள். அந்த அறிவிப்புகளில் சில இந்த வரவு–செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மேலும், பல அறிவிப்புகள் குறித்து மாண்புமிகு நிதியமைச்சருடைய உரையில் குறிப்பிடப்படாவிட்டாலும் இந்தக் கூட்டத் தொடரில் அந்த அறிவிப்புகளை நடைமுறைப்படுத்தும் செயல் திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

தென் மாவட்டங்களில் சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க கூடுதல் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படும் என்று இந்த வரவு–செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளதை வரவேற்கின்றேன்.

இராமநாதபுரம், தூத்துக்குடி சாலை நான்கு வழிச் சாலைகளாக மாற்றப்படுவதுடன், அது ஒரு தொழில் வழித்தடமாகும். Industrial Corridor–ஆக மாற்றப்படும் என்று மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதற்கு விரைவில் செயல் வடிவம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இராமநாதபுரம் மாவட்ட அரசு மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்று மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்காக, மீண்டும் என்னுடைய நன்றியை சொல்லக்கூடிய அதேநேரத்திலே, இராமநாதபுரம் மாவட்ட மக்களுடைய நீண்டகால



2013 மார்ச் 27] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

கோரிக்கையை ஏற்று இராமநாதபுரம் அரசு மாவட்ட பொது மருத்துவமனையை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டிருப்பதோடு, வரும் கல்வி ஆண்டிலேயே அது மருத்துவக் கல்லூரியாகவும் தரம் உயர்த்தப்படுவதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டிலிருந்து தமிழ்நாடு ஹஜ் குழு மூலமாக, புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் யாத்திரிகர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்குமாறு ஆண்டுதோறும், மத்திய அரசுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதிய பிறகுதான் அந்த எண்ணிக்கை அதிகரிக்கப்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சென்ற ஆண்டு முதலிலே 3,000 பயணிகளுக்குத்தான் அனுமதி கிடைத்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதிய பிறகு அது 4,000ஆக உயர்த்தப்பட்டது. இந்த ஆண்டும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படிக் கடிதம் எழுதி தமிழகத்திலிருந்து ஹஜ்க்குச் செல்லக்கூடிய பயணிகளுடைய எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–20

சட்டமன்றத் தேர்தலின்போது அளித்த பல வாக்குறுதிகளை இந்த அரசு உறுதியுடன் நிறைவேற்றி வருகிறது. ஆனால், சிறுபான்மை முஸ்லிம் சமூகத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தின்போது, பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு இருக்கக்கூடிய 3.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை அதிகரித்துத் தருவோம் என்று பல இடங்களிலே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றத்திலே இந்தப் பிரச்சினையை நான் இப்போது எட்டாவது முறையாக பேசிக் கொண்டிருக்கின்றேன். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு வரவு–செலவுத் திட்ட விவாதத்தின்போதும், மானியக் கோரிக்கையின்போதும் இது பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தினுடைய பரிசீலனையில் இருக்கின்றது என்று குறிப்பிட்டார்கள். இது தமிழக முஸ்லிம்களுடைய வாழ்வாதாரம் தொடர்பான கோரிக்கை. இதை விரைவிலே பரிசீலித்து . . .

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரித்திரத்திலே முதல் தடவையாக தமிழ்நாட்டில் சிறுபான்மை மக்களுக்கென்று பல திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகின்ற பெருமைமிக்க முதல்வராக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குகின்றார்கள். சிறுபான்மை மக்களுக்குப் பயன்தரக்கூடிய அனைத்துத் திட்டங்களையும் செய்து கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது இந்த வருடமும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஹஜ் பயணிகளுக்காக அதிகமான நலன்களைப் பெற்றுத்தர வேண்டுமென்று கூறினார்கள். ஒவ்வொரு வருடமும் மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசிடம் வாதிட்டு நலன்களைப் பெற்றுத் தந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். அதைப்போலவே, சிறுபான்மை மக்களுக்கு கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டே வருகின்றார்கள். ஆக, சிறுபான்மையின மக்களுடைய நலனில் அக்கறையுள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்துத் திட்டங்களையும், அவர்களுக்குத் தேவையான அனைத்து பயனுள்ள காரியங்களையும் செய்து கொண்டு வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து, துப்பாக்கி, விஸ்வரூபம் திரைப்பட விவகாரங்களிலே உறுதியாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்தது போன்று, இந்த இட ஒதுக்கீட்டையும் அதிகரிக்கக்கூடிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கின்றேன்.

2009–லே இயற்றப்பட்ட தமிழ்நாடு கட்டாயத் திருமணப் பதிவுச் சட்டத்திலே முஸ்லிம் சமுதாயத்திற்கு சில சங்கடங்கள் உள்ளன. அந்தச் சட்டத்தில் சில திருத்தங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற



2013 மார்ச் 27] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

கோரிக்கையை நீண்டகாலமாக முன்வைத்து வருகின்றோம். நானும் சட்டமன்றப் பேரவையிலே அதைப்பற்றி வலியுறுத்தி இருக்கின்றேன். சிறுபான்மை மக்கள்மீது மிகவும் பரிவு கொண்ட இந்த அரசு இந்தத் திருத்தங்களை உடனே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மத்திய அரசுமூலம் கொண்டு வந்த இந்தச் சட்டத் திருத்தத்தை அவர்கள் வலியுறுத்தி தமிழ்நாட்டில் கொண்டு வந்து விட்டார்கள். இதை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிச்சயமாக வேண்டியது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி. அதேபோல, திருமணம் முடிந்த 3 மாதங்களுக்குள்ளே இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இது எல்லா சமூகத்திற்கும் பொருந்தும். ஆனால், பல பேர் இந்த 3 மாத கால அளவிற்குள்ளே விழிப்புணர்வு இல்லாமல் பதிவு செய்யாவிட்டால், ஒருபோதுமே பதிவு செய்ய முடியாத ஒரு நிலை இருக்கின்றது. எனவே, இந்த 3 மாதத்தை ஓராண்டாக நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சிறுபான்மை பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தினால் சிறுபான்மை மக்களுக்காக வழங்கப்படும் கடன்களுக்குக் குறைந்த விழுக்காடுதான் வட்டி வசூலிக்கப்படுகிறது. இந்த வட்டிகூட TAMCO என்று சொல்லக்கூடிய நிறுவனத்தினுடைய நிர்வாகச் செலவுக்குதான் வசூலிக்கப்படுகின்றது.

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 மார்ச் 27

ஆனால், முஸ்லிம்களுக்கு வட்டி என்பது மார்க்க ரீதியாக, மத ரீதியாக தடை செய்யப்பட்டிருக்கின்றது என்ற காரணத்தினால் இதன் பலன்களை முழுமையாக முஸ்லிம் சமுதாயம் அனுபவிக்கவில்லை. எனவே, இந்தக் கடன்களையெல்லாம் வட்டியில்லாத கடன்களாகக் கொடுத்து விட்டு அப்படி கடன் பெறுபவர்களிடம் நிர்வாகச் செலவிற்காக சேவை வரி போன்று, சேவைக் கட்டணம் போன்று, இந்த முறையை மாற்றியமைத்தால் TAMCO–வினுடைய பலன் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு பெருவாரியாகச் சென்றடையும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, TAMCO மூலம் சிறுபான்மை பிரிவு மக்கள் மிக அதிகமாகப் பயன் பெற்று வருகிறார்கள். அதிலும் குறிப்பாக, 2012–2013 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கையில் வரும் இந்த ஆண்டு மிக அதிகமான அளவு நாங்கள் இந்தக் கடனுதவியைச் செய்திருக்கின்றோம். TAMCO மூலம் நம்முடைய சிறுபான்மைப் பிரிவு மக்கள் அதிகமான அளவு பயன் பெற்றிருக்கின்றார்கள். மிக மிகக் குறைந்த வட்டி, வட்டியை நீங்கள் சேவை வரி, சேவைக் கட்டணம் என்றுகூட எடுத்துக்கொள்ளலாம். நாங்கள் வரி என்று சொல்கின்றோம். நீங்கள் கட்டுபவர்கள் சேவை வரி என்று எடுத்துக்கொள்ளலாம். மிக மிகக் குறைவான அளவில்தான் அது விதிக்கப்படுகின்றது. எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு மிக அதிகமான அளவு TAMCO மூலம் கடனுதவி கொடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மகிழ்வோடு உரையை நிறைவு செய்யுங்கள்.



2013 மார்ச் 27]

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பெயர் மாற்றத்தினால் நிறுவனத்திற்கு எந்த இழப்பீடும் ஏற்படப் போவதில்லை. இன்னும் அதிகமான மக்கள் பயனடைவார்கள் என்ற நோக்கத்தோடுதான் நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

பள்ளிக் கல்வித் துறைக்கு, 2013–2014 ஆம் ஆண்டு 16,965.30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 51,757 ஆசிரியர்களும், 7,275 ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளதைப் பாராட்டுகிறோம். இருப்பினும் ஆசிரியர் தேர்வு வாரியம். . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையை மகிழ்வோடு முடியுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். உருது மொழியில் தேர்ச்சி பெற்ற சிறுபான்மையினருக்குப் பணி நியமனம் வழங்கப்படவில்லை. சமூக அறிவியல், கணிதம் போன்ற உருது வழி பாடத் திட்டங்கள் போதிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. எடுத்துக்காட்டாக வேலூர் அரசு முஸ்லிம் மேல்நிலைப் பள்ளியில் பத்து ஆண்டுகளாக 11 பணியிடங்கள் காலியாக உள்ளன. இவற்றையெல்லாம் நிரப்புவதற்கு இந்த அரசு உடனே ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளிலே இருக்கக்கூடிய சுயநிதிப் பிரிவு மாணவர்களுக்கும், அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளிலே இருக்கக்கூடிய சுயநிதி உதவி பெறும் மாணவர்களுக்கும் அரசாங்கம் மடிக் கணினி வழங்கக்கூடிய திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மடிக் கணினி வழங்குகின்ற திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக மாண்புமிகு

[திரு. பி. பழனியப்பன்] [2013 *மார்ச்* 27

இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் கொண்டுவந்தார்கள். இத்திட்டம் நாட்டு மக்கள் மத்தியிலும், கல்வியாளர்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சுய உதவி பாடப் பிரிவில் பயிலும் மாணவர்களுக்கும், மடிக் கணினி வழங்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே, உதவி பெறும் பாடப் பிரிவில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கும், சுய உதவி பாடப் பிரிவில் படிக்கும் மாணவர்களுக்கும், கல்லூரிகளில், பள்ளிகளில் மடிக் கணினி வழங்கப்படுகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஏதாவது பள்ளிகளில் விடுபட்டிருந்தால் அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அது நிறைவேற்றப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது ஆம்பூர் தொகுதியில் இருக்கக்கூடிய இந்து மேல்நிலைப் பள்ளி மற்றும் ஹஸ்னாத்தாச்சாரியா மேல்நிலைப் பள்ளியும் அரசு உதவி பெறுகின்ற பள்ளிகள், அந்தப் பள்ளிகளில் சுய நிதிப் பிரிவுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்குச் சென்ற ஆண்டு மடிக் கணினி வழங்கப்படவில்லை. ஏனென்று கேட்டால், சுய நிதிப் பள்ளிகளில் பயில்கின்ற மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்கப்படமாட்டாது என்று சொல்லிவிட்டார்கள். மாணவர்களின் சான்றிதழில் பின்புறம் சீல் வைத்துக் கொடுத்தார்கள். அவர்கள் பள்ளியை விட்டு வெளியில் செல்லும்போது, பிறகு அவர்களுக்கு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 *மார்ச்* 27]

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அரபி மதரசாவில்கூட மடிக் கணினி அளிக்கப்பட்டது. வட ஆற்காடு மாவட்டம், குமராபாத்தில் உள்ள மதரசாவில் நானே போய் கொடுத்துவிட்டு வந்தேன். அரபி மதரசாவில், குரானை ஓதிக் கொடுக்கின்ற மதரசாவிலே மாண்புமிகு அம்மா அவர்களால் மடிக் கணினி வழங்கப்பட்டது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜவாஹிருல்லா, தயவுசெய்து நன்றி சொல்லி உரையை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) திரு. அ. அஸ்லாம் பாஷா, நீங்கள் எழுதிக்கொடுங்கள். முனைவர் ஜவாஹிருல்லா, நன்றி சொல்லி நிறைவு செய்யுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி. தமிழ்நாடு அரசுப் பணிகளில் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக டி.என்.பி.எஸ்.சி. போட்டித் தேர்வுக்கான பாடத் திட்டங்களில் சமீபத்தில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா தயவுசெய்து உரையை நிறைவு செய்யுங்கள். இன்னும் நான்கு உறுப்பினர்கள் பேச வேண்டியுள்ளது. மணி *2–30* ஆகிவிட்டது. உரையை நிறைவு செய்யுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டி.என்.பி.எஸ்.சி. குரூப்–*2*, வி.ஏ.ஓ., குரூப்–*4* ஆகிய போட்டித் தேர்வுக்கான தேர்வு முறைகளை மாற்றியிருக்கின்றது. இதில் தமிழுக்கான முக்கியத்துவம் குறைக்கப்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக கிராமப்புற மாணவர்கள், நகர்ப்புற மாணவர்களுடன் போட்டி போட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. தமிழ்மீது மிகுந்த அக்கறை கொண்ட இந்த அரசாங்கம் இதையும் சீர் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வரக்கூடிய கல்வியாண்டில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை நிறைவு செய்யுங்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 மார்ச் 27

*மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள் ஒரு கருத்தை முன்வைத்திருக்கிறார்கள். டி.என்.பி.எஸ்.சி. தேர்வில் தமிழ் பொதுத் தேர்வின் வழியாக அந்தத் தமிழ்ப் பாடங்கள் தற்போது முறைப்படுத்தப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார். அதற்கு சம்பந்தப்பட்ட டி.என்.பி.எஸ்.சி. தலைவர் அவர்களுக்கு உரிய முறையில் எடுத்துச்சொல்லி, அந்தப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து நன்றியுரை ஆற்றி, நிறைவு செய்யுங்கள்.

பிற்பகல் 2–30

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மிகுந்த மகிழ்ச்சியான செய்தியை அறிவித்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை நிறைவு செய்யுங்கள். அடுத்த வாய்ப்பில் பேசலாம்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். வரக்கூடிய ஆண்டுகளில் 8 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை ஆரம்பிக்க இந்த அரசு உத்தேசித்திருக்கிறது. அதோடு கூடுதலாக இராமேஸ்வரம் தீவில், சுமார் 80,000 மக்கள் வசிக்கக்கூடிய தீவில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்கவேண்டுமென்று சொல்லி என்னுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுகிறேன். அவற்றைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**தொகுதிப் பிரச்சினைகள்:** இராமநாதபுரம் தொகுதியில் இராமேஸ்வரம் ஓலைக்குடா முதல் மண்டபம் ஒன்றியம் புதுமடம் வரையிலான வடக்கு கடல் பகுதியில் தொடர்ச்சியான கடல் அரிப்பு ஏற்பட்டு வருகிறது. இதனால் நமது நிலப் பகுதியின் பெரும்பகுதி சமீப சில ஆண்டுகளில் கடலுக்குள் சென்றுவிட்டது.



2013 மார்ச் 27] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

இராமேஸ்வரம் ஓலைக்குடா துவக்கப் பள்ளியிலிருந்து சங்குமால் விருந்தினர் இல்லம் வரையும் மண்டபத்தில் பாம்பன் பாலத்தின் துவக்கத்திலிருந்து மீன் வளத் துறை அலுவலகம் வரையும், மரைக்காயர்பட்டினத்தில் CMFRI–ன் பாலத்திலிருந்து வேதாளை செல்லும் கடற்கரை சாலையில் மகளிர் மன்றக் கட்டடம் வரையும், சந்தரமுடையான்–சீனியப்பா தர்கா பகுதியிலும் இந்தக் கடல் அரிப்பின் பாதிப்பைக் காண முடியும்.

சுனாமிக்குப் பிறகு குறிப்பாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் சுமார் பத்து அடி முதல் நூறு அடி தூரம் வரை நிலப் பகுதி கடலுக்குள் சென்று விட்டதாக இப்பகுதி மக்கள் கவலைப்படுகின்றனர். மேலும், பரவலாக வருடத்திற்கு மூன்று அடி வீதம் இவ்வாறு கடல் அரிப்பு ஏற்பட்டு நிலப் பகுதி கடலுக்குள் செல்கிறது. சீனியப்பா தர்கா பகுதியில் கிராமச் சாலையே கடலுக்குள் சென்று விட்டதால் ஊராட்சி மன்றம் புதிய சாலை அமைத்துள்ளது. காலப்போக்கில் இப்பகுதியின் பல கிராமங்கள் இருந்ததற்கான சுவடே இல்லாமல் அழிக்கப்படும் அபாயம் நிலவுகிறது. இதற்குத் தீர்வாக கடற்கரை ஓரங்களில் கான்கிரீட் தடுப்புச் சுவர் அமைக்கப்பட வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர். கடல் அரிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள ஓலைக்குடாவில் சுமார் 500 மீட்டர் தூரம், மண்டபத்தில் சுமார் 500 மீட்டர் தூரம், மரைக்காயர்பட்டினத்தில் சுமார் 350 மீட்டர் தூரம், சீனியப்பா தர்கா பகுதியில் சுமார் 350 மீட்டர் தூரம் தடுப்புச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்புல்லாணி ஒன்றியம், உத்திரகோசமங்கை ஊராட்சியில் உள்ள கோயில் சுற்றுப்புறப் பகுதியில் மழை பெய்தால் குளம் போல் தண்ணீர் தேங்குவதால் கோயிலுக்கு வரும், பக்தர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, மேற்கண்ட உத்திரகோசமங்கை கோயிலைச் சுற்றிய பகுதியில் மழை நீர் தேங்காதவாறு தளம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் தொகுதி பாம்பனில் வடக்கு கடற்கரை பகுதியில் பாம்பன் பாலத்தின் அடியில் நாட்டுப் படகு மீனவர்கள் தங்கள் வல்லங்களை நிறுத்துவது, மீன்களை ஏலமிடுவது, உலர வைப்பது,

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 மார்ச் 27

வெளியூர்களுக்கு அனுப்பும் மீன்களைப் பதப்படுத்தி வைப்பதற்கு கொட்டகை போடுவது போன்றவற்றை பராம்பரியமாக செய்து வருகின்றனர். நூற்றுக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் வடக்கு போட் யார்டு எனப்படும் வடகடல் பகுதி தொழில்மூலம் நடைபெற்று வருகிறது. மேற்படி வடக்கு கடல் பகுதியில் உள்ள மேற்கூறப்பட்ட கடல் தொழில் நிறுவனங்களை அப்புறப்படுத்த நெடுஞ்சாலைத் துறை முயற்சி மேற்கொண்டுள்ளதாக அறிகிறேன். இது மிகவும் கவலைக்குரிய ஒன்றாகும். எனவே, மேற்படி பாம்பன் வடக்கு கடற்கரை மீனவத் தொழிலாளர்களை பாதிக்கும் வகையில் உள்ள நெடுஞ்சாலைத் துறையின் நடவடிக்கையை தடுத்து நிறுத்தி மீனவத் தொழிலாளர்கள் நிம்மதியாக தொழில் செய்திட வழி ஏற்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் தொகுதி, பாம்பன் வடக்கு கடற்கரை பகுதியில் ஆண்டுதோறும் பருவகாலங்களில் மழை மற்றும் காற்று அதிகரிக்கும்போது மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக, மீன்பிடிப் படகுகள் பெருமளவு சேதமடைகின்றன. மீன்பிடி சாதனங்கள் அழிந்து போகின்றன. மேலும், வசிக்கும் இடத்தை விட்டு இடம்பெயரும் நிலையும் ஏற்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, பாம்பன் வடக்கு கடல் பகுதியில் லைட்ஹவுஸ் முதல் போட் யார்டு வரை தூண்டில் வளைவு ஏற்படுத்தி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியான பகுதி என்பது அனைவரும் அறிந்ததே. இருப்பினும், மழைக்காலங்களிலும் மற்ற காலங்களிலும் அதிகப்படியான தண்ணீர் உத்திரகோசமங்கை ஆறு மற்றும் வைகை ஆறு மூலமாக கடலில் கலக்கிறது. சக்கரக்கோட்டை கண்மாய் தென்பகுதியிலும், பெரியகண்மாய் கிழக்குப் பகுதியிலும் நீர் சேமிப்பு வசதிகள் இல்லாததால் வீணாக கடலில் கலக்கும் நீரைத் தேக்க முடியவில்லை. இதனால், கடலுக்கு அருகில் உள்ள வெளிப்புற நீர் உப்பாக மாறுகிறது. இந்நிலையில் திருப்புல்லாணி ஒன்றிய சுற்றுப்புற கிராமப் பகுதிகளில் உள்ள கிணறுகளில் மிகுந்த சுவையான நீர் வளம் உள்ளது. இந்த கிணற்று நீர் மூலமாக தென்னை, மா, முந்திரி போன்ற பழங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன என்பது ஆச்சரியமான உண்மை. மேலும், இப்பகுதியில் உள்ள கிணறுகளிலிருந்துதான் கீழக்கரை நகராட்சி மற்றும் பிற



2013 மார்ச் 27] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

பகுதி கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, திருப்புல்லாணி ஒன்றியம், திருப்புல்லாணி வருவாய் கிராமங்களில் கோரைக்குளம், மேலப்புதுக்குடி கிராமங்களுக்கு குறுக்கே உத்திரகோசமங்கை ஆற்றில் ஒரு தடுப்பணை அமைத்து உபரியான மழை நீர் மற்றும் வெள்ள நீரைத் தேக்கி வைப்பதன்மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயரவும் நீரின் சுவை மேம்படுத்தவும் ஒரு திட்டம் தயாரித்து செயல்படுத்த வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு *2,900* வீடுகள் கட்டிக் கொடுக்க A.P.R. புராஜெக்ட் நிறுவனம் ஒப்பந்தம் செய்தது. இதில் தற்போது தரை தளத்துடன் *340* வீடுகள், லிண்டல் மட்டத்துடன் *450* வீடுகள், லிண்டல் போடப்படாமல் சுவற்றுடன் *270* வீடுகள், மேல்தளம் போடப்பட்டு *270* வீடுகள், மேல்தளம் போடப்படாமல் *260* வீடுகள், ஆக மொத்தம் *1,590* வீடுகள் முடிக்கப்படாமல் உள்ளன. சுமார் *1,000* வீடுகள் பூச்சு வேலைகள் செய்யப்படாமல் உள்ளன. இந்த வீடுகள் அனைத்தும் விரைந்து கட்டி முடிக்கப்பட அரசு ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதிக்கு ஒரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புறங்களிலே உள்ள ஏழையெளிய மாணவர்கள் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்கி வருகிறார்கள். இதன் அடிப்படையிலே ஆரம்பிக்கப்படவிருக்கின்ற *8* புதிய கல்லூரிகளில் மூன்று புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தாங்கள் சார்ந்திருக்கின்ற இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள். முழுமையாக அந்த 10 நிமிடங்களைப் பயன்படுத்திக்கொண்டு நன்றாகப் பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் கருத்துகளை எடுத்துவைப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கும், தமிழினப் போராளி மருத்துவர் ஐயா அவர்களுக்கும், முன்னாள் நடுவண் சுகாதாரத் துறை அமைச்சர் மருத்துவர் சின்ன ஐயா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய பொருளாதார சூழ்நிலையில், தமிழக அரசு அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொண்டிருக்கும் முயற்சிகளைப் பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது. அரிசி விலையைக் கட்டுப்படுத்த அமுதம் அங்காடிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பங்காடிகள் மூலமாக ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய் என்ற விலையில் வெளிச்சந்தையில் விற்பதற்கு அரசு எடுத்திருக்கும் நடவடிக்கையை பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது.

உணவு உற்பத்தியில் கடந்த ஆண்டுகளில் தமிழக அரசு சாதனை படைத்திருந்தது. கடந்த 2011–2012 ஆம் ஆண்டில் 105 இலட்சம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. 2012–2013 ஆம் ஆண்டில் 120 இலட்சம் டன் நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதில் பாதிகூட உற்பத்தி செய்யப்படாத நிலைதான் இப்போது இருக்கிறது. இதற்கு வறட்சி ஒரு காரணம் என்றாலும், வேளாண் விளைநிலங்கள் வீட்டுமனைப் பட்டாக்களாக மாற்றப்படுவதும் ஒரு முக்கிய காரணம் ஆகும்.

இந்த நிலையில் சிப்காட் நிறுவனத்திற்கு 25,000 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட நில வங்கியை அரசு ஏற்படுத்தும் என்ற அறிவிப்பு மிகுந்த வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் அளிப்பதாக பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது.



2013 மார்ச் 27] [திரு. அ. கணேஷ்குமார்]

எனவே, தொழிற்சாலைகளுக்கு நிலங்கள் கையகப்படுத்தும்போது வேளாண் விளைநிலங்களாக இல்லாத நிலங்களை மட்டுமே கையகப்படுத்த வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக்கொள்கிறது. தமிழகத்தில் தருமபுரி, ஈரோடு உள்ளிட்ட 7 மாவட்டங்களில் கெயில் நிறுவனம் எரிவாயுக் குழாயை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது “25,000 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி நில வங்கி உருவாக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அது வருத்தத்திற்குரிய செயல்” என்று சொன்னார்கள். யாருக்கும் பாதிப்பு இல்லாத நிலையில் அந்த நிலம் கையகப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழகத்தில் தருமபுரி, ஈரோடு உள்ளிட்ட 7 மாவட்டங்களில் கெயில் நிறுவனம் எரிவாயுக் குழாயைப் புதைக்கும் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு விவசாயிகளின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள் இதற்காக போராட்டங்கள் நடத்தியபோது அவர்களுக்காக முதன் முதலில் குரல் கொடுத்தவர் தமிழினப் போராளி மருத்துவர் ஐயா அவர்கள்தான். நாங்களும் முதலில் அதிகாரிகளின் ஒருசில தவறான நடவடிக்கைகளால் தமிழக அரசும் கெயில் நிறுவனத்திற்கு ஆதரவாக இருக்கிறதோ என்று கருதினோம். ஆனால், உண்மை நிலையை அறிந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விவசாயிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்திருப்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

காவேரிப் பாசன மாவட்டங்களில் மட்டும் 50 விழுக்காட்டிற்கு மேல் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு

[திரு. அ. கணேஷ்குமார்] [2013 மார்ச் 27

ரூபாய் 15,000 இழப்பீடு அளிக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது சிலருக்கு மட்டும்தான் அந்த இழப்பீடு வழங்கப்பட்டிருக்கிறது. 50 விழுக்காட்டிற்கும் குறைவாக பாதிக்கப்பட்டுள்ள பயிர்களுக்கு காப்பீட்டு நிறுவனங்கள் சார்பில் அதிகபட்சமாக ஏக்கருக்கு ரூபாய் 4,350 தான் இழப்பீடு வழங்கப்படும். ஆனால், அந்தக் காப்பீட்டுத் தொகைகூட இன்னும் கிடைக்கப்பெறாத சூழ்நிலைதான் அங்கிருக்கிறது. காப்பீட்டுத் துறை அதிகாரிகளிடம் கேட்டால் எங்கு, எத்தனை விழுக்காடு பாதிப்பு என்று இன்னும் கணக்கிடப்படவில்லை என்கிறார்கள். காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை எப்போது கிடைக்கும் என்று கேட்டால் அவர்களிடம் தெளிவான பதில் இல்லை. கடன் வாங்கி சாகுபடி செய்த விவசாயிகள் கண்ணீரில் தவிக்கிறார்கள். ஏற்கெனவே, இந்தப் பிரச்சினையைத் தமிழக அரசு கனிவுடன் அணுகி பாதிப்பிற்கு அளவுகோல் வைக்காமல், அளவை கருத்தில் கொள்ளாமல், அனைவருக்கும் ஒரே மாதிரியாக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 25,000 இழப்பீடு வழங்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

காவேரிப் பாசன மாவட்டங்கள் தவிர, பிற மாவட்ட விவசாயிகளுக்கும் அதேபோல இழப்பீட்டை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பயிர்க் கடனை முழுவதுமாக தள்ளுபடி செய்யவேண்டும்.

*பிற்பகல் 2–35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டாவைத் தவிர அனைத்து மாவட்டங்களையும் வறட்சி மாவட்டமாக மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அனைத்து மாவட்டங்களுக்கும் இந்த நிவாரணக் குழு சென்றிருக்கிறது. குழு வந்தவுடன் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கு பேசியபோது வறட்சி பாதித்த டெல்டா பாசன விவசாயிகளுக்கு, 50 சதவீதத்திற்குக் கீழே இருக்கக்கூடிய விவசாயப் பெருமக்களுக்கு இழப்பீட்டுத் தொகைகளைக் காப்பீட்டு நிறுவனம் வழங்கவில்லையென்று சொல்லியிருக்கின்றார்கள். பொதுவாகவே அந்தப் பகுதியில் விவசாயிகள் மேல் அக்கறைகொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசே விவசாயிகளுடைய விளைநிலங்களின் மொத்த காப்பீட்டுத் தொகையையும் செலுத்தியிருக்கின்றது என்பதை இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல, 50 சதவீதத்திற்கு குறைவாக இருக்கக்கூடிய இழப்புகளை காப்பீட்டு நிறுவனம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. அந்தக் காப்பீட்டு நிறுவனத்திற்குண்டான அரசினுடைய பங்குத் தொகையையும், உடனடியாகக் கட்டுவதற்குண்டான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 50 சதவீதத்திற்குக் கீழே இருக்கிற பாதிக்கப்பட்ட விவசாயப் பெருமக்களுக்கு அந்த காப்பீட்டுத் தொகை மிக விரைவில் வழங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. காப்பீட்டு நிறுவனங்கள் அந்தத் தொகையை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுத்துகின்றன என்றுதான் நான் தெரிவித்தேன். மேலும், பிற மாவட்டங்களுக்கு வழங்கப்படும்போது இதுபோன்று இழப்பீடுக்கான அளவுகோல் வைக்காமல் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையைத்தான் நான் முன்வைத்தேன். மேலும், ஓராண்டுக்கான பயிர்க் கடனை தள்ளுபடி செய்யவேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக வலுப்பெற்று வருகின்ற காரணத்தினால் பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் . . . (குறுக்கீடு)

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறுகிய காலப் பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று சொன்னார்கள். இந்தியாவிலே, தமிழகத்திலே சென்ற ஆண்டு மூவாயிரம் கோடி ரூபாய் பயிர்க் கடனை உரிய காலத்தில் கட்டுகிறவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களே ஏழு சதவீதமான வட்டியை ஏற்றுக்கொள்வதாகச் சொல்லி, மூவாயிரம் கோடி ரூபாய் கொடுக்க நிர்ணயித்தார்கள். 2012–2013 ஆம் ஆண்டில் 3,280 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. இப்போது நான்காயிரம் கோடி ரூபாய் அறிவித்திருக்கிறார்கள். ஏறத்தாழ 3,720 கோடி ரூபாய் இப்போது பயிர்க் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குரிய வட்டியை அம்மா அவர்களுடைய அரசு உரிய காலத்தில் கட்டுகிறவர்களுக்கு 160 கோடி ரூபாய் மானியமாக வழங்கியிருக்கிறது. இது கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் கூட்டாகச் சேர்ந்து செய்கின்ற கூட்டு நிறுவனம். தமிழகம் எங்கும் வறட்சி பாதித்த பகுதிகளில் உள்ளவர்கள் எல்லாம் இரத்து செய்வதை முழுமையாக அறிந்தபிறகு இதை மத்தியக் காலக் கடனாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது வந்தபிறகு, கருத்துரு பெற்று, அதற்குப் பிறகு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள், உங்களுக்கு இன்னும் நான்கு நிமிடங்கள் இருக்கின்றன.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. கடந்த ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் அதிகபட்சமாக பள்ளிக் கல்வித் துறைக்கு ரூபாய் பதினாறாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தைந்து கோடி நிதி ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

அதேநேரத்தில் வரும் ஆண்டில் எத்தனை புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பன போன்ற அறிவிப்புகள் ஏதும் இடம்பெறாதது ஏமாற்றம் அளிக்கிறது. கடந்த ஆண்டில், தமிழ்நாடு அரசு, பள்ளிக் கல்வித் துறையில் காலியாக உள்ள முதுநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப கடந்த மே மாதம்



2013 மார்ச் 27] [திரு. அ. கணேஷ்குமார்]

27 ஆம் தேதி போட்டித் தேர்வுகள் நடத்தியது. அதன் முடிவுகள் வெளியிடப்பட்டு, சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஆனால், இதில் ஒரு சின்ன விஷயம். தாவரவியல் ஆசிரியர், Botony ஆசிரியர் பணியிடங்களுக்கு மட்டும் யாரையும் நியமிக்கவில்லையென்று கூறப்படுகிறது. மொத்தம் 204 தாவரவியல் ஆசிரியர் பணியிடங்களை நியமிப்பதற்காக 427 பேர் அழைக்கப்பட்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில், சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டவர்கள் குழப்பமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனவே, அதைப் போக்குவதற்கு தமிழக அரசு உடனடியாக தாவரவியல் முதுகலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப, தேர்வின் முடிவுகளை உடனடியாக வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில், மக்களைச் சீரழிக்கும் மதுவை ஒழித்து, முழுமையான மதுவிலக்கை ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் எங்களின் நீண்டநாள் கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தித்தான் கடந்த 24 ஆண்டுகளாக எங்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ஐயா அவர்கள் போராடி வருகிறார்கள். ஆனால், 'தமிழரின் நலன், தமிழகத்தின் வளம்' என்று குறிப்பிடுகின்ற இந்த . . .

பிற்பகல் 2–40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்

*__மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:__ மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்ன, இன்னும் சொல்லாமல் இருக்கிறாரே! என்று நினைத்தேன். திரைப்படக் காட்சியிலே வருகிற மாதிரி "ஆரம்பிச்சிட்டாங்களே, ஐயா, ஆரம்பிச்சிட்டாங்களே!" (சிரிப்பு) என்பது மாதிரி இருக்கிறது. இதைவிட்டால் உங்களுக்கு வேறு சப்ஜெக்ட்டே கிடைக்கவில்லையா? நான், கேட்கிறேன், நேற்று உங்கள் கட்சி உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்களுக்கு பதிலை ஒரு மாதிரி சொன்னேன். இப்போது, அதையே இன்னொரு மாதிரி, கொஞ்சம் மாற்றிச் சொல்கிறேன். (குறுக்கீடு) கொஞ்சம் பொறுமையாக இருங்கள். சித்திரை மாதம் வரப்போகிறது. வருகின்ற சித்திரை மாதத்திலும் பௌர்ணமி விழா நீங்கள் நடத்தப்போகிறீர்கள். Wall Poster எல்லாம்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 மார்ச் 27

பார்த்தேன். இந்த விழாவிலாவது அங்கே விற்பனை அதிகமாக இருக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். (சிரிப்பு) அரசுக்கு வருவாய் வருவது நல்லதுதான். ஆனால், சமுதாய நலன் கருதி இந்த வருடமாவது அங்கே அரசுக்கு அதிக வருவாய் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில், அதைச் செய்யுங்கள். அப்புறம், அடுத்த ஆலோசனைகளைச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. கலை அரசு, இல்லை. உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) திரு. அ. கணேஷ்குமார், உங்களுக்கு உரையாற்ற ஒரே நிமிடம்தான் இருக்கிறது. அதற்குள் நீங்கள் என்ன சொல்ல வேண்டுமோ, சொல்லுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இது சம்பந்தமான விவாதத்தின்பொழுதுகூட மாண்புமிகு அமைச்சர் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** இல்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் நேரம் கொடுங்கள், சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமில்லை.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்து மிக ஆட்சேபணைக்குரிய கருத்தாகும். அங்கு நடைபெற்றது பாட்டாளி மக்கள் கட்சியின் மாநாடு மட்டும் அல்ல; ஒரு மிகப் பெரிய சமுதாயத்தினுடைய குடும்ப நிகழ்ச்சி. அந்தக் குடும்ப நிகழ்ச்சியை இதுபோன்று இழிவுபடுத்துகின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்த கருத்துகளைத் திரும்பப் பெற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் புள்ளிவிவரத்தின் அடிப்படையிலே சொல்லியிருக்கின்றேன். தவறாகச் சொல்லியிருந்தால் அன்றைக்கே withdraw செய்திருப்போம். நீங்கள்



2013 மார்ச் 27] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

வேண்டுமானால், அதைத் திருத்திக் கொள்ள வேண்டுமே தவிர, அதற்குத் தீர்வு காண முயற்சி செய்ய வேண்டுமே தவிர, அதற்காக அங்கே நடந்த சம்பவங்களைச் சொல்கின்றபொழுது, அதைத் திருத்திக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. அன்றைக்கு விற்றிருப்பது உண்மைதான். சந்தேகம் இருந்தால் எங்களுடைய விற்பனை அலுவலகங்களில் புள்ளிவிவரத்தோடு பார்த்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதன் உள்ளார்ந்த விவாதத்திற்குள் செல்லவில்லை. என்னுடைய கருத்துகளை மட்டும், எங்கள் கட்சி . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. கலை அரசு, நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசுகிறார்? நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசுவார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் சொல்கிறேன், கேளுங்கள். தவறான தகவல் என்று சொன்னால், நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்கின்றோம். சரியான தகவலாக இருந்தால், நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? முதலில், அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நாங்கள் சரியான தகவல் என்பதற்கான புள்ளிவிவரத்தோடு, ஆதாரத்தை, சட்டமன்றத்திலே சபாநாயகர் அவர்களிடம் கொடுக்கின்றோம். அப்போது ஒத்துக்கொள்வீர்கள் அல்லவா? அதற்குப் பின்னர், அதுகுறித்து நீங்கள் பேசமாட்டீர்களல்லவா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடித்துக்கொள்கிறீர்களா அல்லது உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பை உடனே முடித்துவிடட்டுமா?

**திரு. அ. கணேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு ஐந்து நிமிடம் கொடுங்கள். என்னுடைய கருத்தைத்தான் நான் பதிவு செய்ய இருக்கிறேன். மற்றவர்களுக்குக் கொடுத்த நேரத்தில் கால்வாசி நேரமாவது கொடுங்கள். என்னுடைய கருத்தை நான் பேசவே கூடாது என்று சொல்வது. . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள். (குறுக்கீடு) திரு. அ. கணேஷ்குமார் இப்போது, உங்களுக்குப் பேச அனுமதி அளித்து, 13 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடத்தில், உரையை முடியுங்கள்.*

**திரு. அ. கணேஷ்குமார்:** *எங்களுடைய கருத்தை நான் பதிய வைக்கின்றேன். வேறொன்றுமில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கட்டும். நான் விவாதத்திற்குள் செல்லவில்லை. நான் கேட்பது என்னவென்றால் . . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

**திரு. அ. கணேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது என்னவென்றால், 'தமிழர்களின் நலன், தமிழகத்தின் வளம்' என்று குறிப்பிட்டிருக்கக்கூடிய இந்த நிதிநிலை அறிக்கையில் மதுவிலக்கை, மது விற்பனையைக் குறைப்பதற்கான எந்த நடவடிக்கையும் இல்லையே என்பதுதான் எங்களுக்கு வருத்தம் அளிப்பதாக நாங்கள் கூறிக்கொண்டிருக்கிறோம். இந்தப் பிரச்சினையை நாங்கள் பேரவையில் எப்பொழுது எழுப்பினாலும் மாண்புமிகு அமைச்சர் . . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரியிலே மதுக் கடைக்கு பூட்டுப் போடுகிற போராட்டத்தை நடத்துங்கள். அங்கே என்ன கொள்கை? மாநிலத்திற்கு மாநிலம் உங்கள் கொள்கை மாறுபடுகிறதா? (குறுக்கீடுகள்)*





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. ம. கலை அரசு, உட்காருங்கள். உங்கள் கட்சி உறுப்பினர் பேசி, அவர் உரையை முடிக்கப் போகின்றார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சியில் இரண்டு பேர் ஒரே சமயத்தில் பேச முடியாது. (குறுக்கீடு) திரு. கணேஷ்குமார் நன்றி சொல்லுங்கள்.*

**திரு. அ. கணேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் இந்தப் பிரச்சினையை எப்பொழுது இந்த அவையில் எழுப்பினாலும், கொள்கை அளவில் மதுவிலக்கை நாங்கள் ஆதரிக்கிறோம்; ஆனால், அண்டை மாநிலங்களில் மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட்டதே . . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், பேசுங்கள். (குறுக்கீடு) 13 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) சரி, வேறு கருத்துக்குப் போகிறீர்களா? (குறுக்கீடு) வேறு கருத்தில் பேசுகிறீர்களா? (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள். திரு. அ. கணேஷ்குமார், ஒரு நிமிடம் பேச வாய்ப்புத் தருகிறேன், பேசுங்கள்.*

**திரு. அ. கணேஷ்குமார்:** *நான் என்னுடைய கருத்தை தெளிவுபடுத்தத்தான் விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்தைப் பதிவு செய்வதற்கு தயவுசெய்து வாய்ப்புக் கொடுங்கள் என்றுதான் நான் கேட்கிறேன். நான் விவாதத்திற்குச் செல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விவாதத்திற்குள்ளேயும் நான் செல்லவில்லை.*

*பிற்பகல் 2–45*

*இதைப்பற்றி நாங்கள் எப்போது கேட்டாலும் அண்டை மாநிலங்களில் மதுவிலக்கை நடைமுறைப்படுத்தாதபோது தமிழகத்தில் மட்டும் மதுவிலக்கைக் கொண்டு வருவது சாத்தியம் இல்லை என்ற பதிலே திரும்பித் திரும்பிச் சொல்லப்படுவது, தமிழகத்தில் ஒருபோதும் மதுவிலக்கு சாத்தியம் ஆகாது என்றேதான் நாங்கள் கருத வேண்டியிருக்கிறது. அதேபோல் இங்கு மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட்டால் அண்டை மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்குள் மது நுழைவதைத் நம்முடைய காவல் துறையினரால் தடுக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். **அதுமட்டுமின்றி அண்டை மாநிலங்களில் செய்ய முடியாத பல விஷயங்களை*

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திரு. அ. கணேஷ்குமார்] [2013 மார்ச் 27

நமது மாநிலம் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. அதேபோல மதுவிலக்கையும் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உங்கள் நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் இந்தப் பிரச்சினையை விடுங்கள் என்று சொல்கிறீர்கள். உட்கார்ந்திருக்கிறோம். திரும்ப இதே பிரச்சினையை அவர் மட்டும் தொடரலாம் என்று சொன்னால் நாங்கள் பதில் சொல்ல வேண்டியதாக இருக்கும். நாங்கள் ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறோம். ஏதோ அவர்களுடைய கட்சிக்குத் தான் மதுவிலக்குக் கொள்கையிலே பிடிப்பு இருக்கிறது, மற்றவர்களுக்கெல்லாம் அதிலே உடன்பாடு இல்லை என்ற தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டாம். உங்களைவிட தமிழகத்தில், மதுவின் தீமையை அதிகமாக உணர்ந்திருப்பவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதிலே எந்தவிதமான மாறுபாடும் கிடையாது. ஆனால், அது நடைமுறை சாத்தியம் இல்லை என்பதால் வேறு வழியில்லாமல் தான் மதுவிலக்கை அமல்படுத்த முடியவில்லையே தவிர, மாறாக, கொள்கை ரீதியாக அதிலே மாறுபட்ட கருத்தே கிடையாது. இதிலே யாருக்கும் உடன்பாடுதான். ஆனால், இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களிலும் அதை ஒட்டுமொத்தமாக, குறைந்தபட்சம் அண்டை மாநிலங்களிலாவது மதுவிலக்கை அமல்படுத்தினால்தான் இது நடைமுறை சாத்தியம். இல்லையென்றால், அது சமூக விரோதிகளின் வருவாய்க்கு வழிவகுத்துக் கொடுப்பதற்கு அல்லது சமூக விரோதிகளுக்கு, கள்ளச் சந்தைக்காரர்களுக்கு தமிழகம் ஒரு களமாக அமைந்துவிடும் என்பதை பலமுறை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம். **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், பேசுங்கள். (குறுக்கீடு) அந்தக் கருத்து வேண்டாம்; நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? பேசுங்கள். (குறுக்கீடு) அடுத்த முறை வாய்ப்புத்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2013 மார்ச் 27] [பேரவைத் துணைத் தலைவர்]

தருகிறேன். திரு. என்.ஆர். ரெங்கராஜன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். திரு. அ. கணேஷ்குமார், நீங்கள் 15 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். திரு. என்.ஆர். ரெங்கராஜன், நீங்கள் பேசுங்கள். உங்கள் நேரம்தான் வீணாகிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) உங்கள் நேரம்தான் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. திரு. என்.ஆர். ரெங்கராஜன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே கலந்து கொண்டு பேசுவதற்கான வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள் பேசும்போது ** சம்பந்தப்பட்ட அவருடைய கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** தமிழகத்தைப் பொறுத்தவரையில் வளர்ச்சியைப் பற்றித்தான் அதிகமாகப் பேச வேண்டிய ஒரு சூழ்நிலையில் இன்றைக்கு நாம் இருந்து கொண்டிருக்கின்றோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கான உரையாற்றும் நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) திரு. ரெங்கராஜன் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அவர் பேசிக்கொண்டு போகட்டும். நீங்கள் பேசுங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** எங்கே பேசுவது? அவர் கத்திக்கொண்டே இருக்கிறார். (குறுக்கீடு) வரி இல்லாத பட்ஜெட் அறிவித்திருக்கின்றீர்கள். வாழ்த்துவோம் என்று நினைக்கக்கூடிய நேரத்திலே வரிக்கு வரி மத்திய அரசை வாரி விட்டிருக்கிறீர்கள் என்பதை நினைக்கும்போதுதான் எங்களுக்கு சற்று வருத்தமாக இருந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால். . .

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், உட்காருங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மத்திய அரசினுடைய பல்வேறு நிலைகளைக் குறிப்பாகச் சொல்லக் கடமைப்பட்டவன் என்ற முறையிலே, மத்திய அரசினுடைய மகாத்மா காந்தி நூறு நாள் வேலை திட்டம். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** நான் கேட்டுக்கொள்வதெல்லாம், எந்தவிதமான தவறான கருத்தையும் ** கூறவில்லை இந்த அவையில். தயவு செய்து மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கருத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக பல விஷயங்களை நாம் செயல்படுத்தி வருகின்ற சமயத்தில், மதுவிலக்கை ** செயல்படுத்தி தென்மாநிலங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்று தான் நான் இங்கே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேனே தவிர, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், அதோடு உரையை முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** கடைசியாக ஒரேயொரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், பேசுங்கள். (குறுக்கீடு) இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) திரு. என்.ஆர். ரெங்கராஜன், நீங்கள் பேசுங்கள்.

பிற்பகல் 2–50

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** அவர் கத்திக்கொண்டே இருக்கிறார். என்னால் பேசமுடியவில்லை.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கணேஷ்குமார், நீங்கள் உட்காருகிறீர்களா இல்லையா? திரு. ரெங்கராஜன், பேசுங்கள். நீங்கள் பேசுகிறீர்களா இல்லையா?

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறேன். மத்திய அரசின் திட்டமான மகாத்மா காந்தி நூறு நாள் வேலைவாய்ப்புத் திட்டம், தூத்துக்குடி துறைமுகத்தின் வளர்ச்சிக்காக இந்த வருடம் பட்ஜெட்டில் 7,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் சென்னையிலிருந்து மதுரவாயல் வரை 1,300 கோடி. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்ய முயன்றுவிட்டு வெளியில் செல்ல முயற்சித்தப் பின்பும்கூட நாகரிகமாக பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் திரு. கணேஷ்குமார் அவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) கணேஷ்குமார் நீங்கள் இளைஞராக இருக்கிறீர்கள், அவசரப்படாதீர்கள், கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள், உட்காருங்கள் please. இளைஞராக இருக்கின்ற காரணத்தினால்தான் உங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பைக் கொடுத்து உங்கள் கருத்தும் அவையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்த பின்பும் உங்கள் கட்சியைச் சார்ந்த மற்றொரு உறுப்பினரையும் அழைத்து வெளியே செல்லலாம் என்றால், அரசியல் நாகரிகம் இல்லாமல் ஆகிவிடும். தயவுசெய்து அமரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கணேஷ்குமார், நீங்கள் ஒரு வழிகாட்டியாக உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** 1,300 கோடி ரூபாயிலே சென்னையிலிருந்து மதுரவாயல் வரை துறைமுகத்திற்குத்

[திரு. என்.ஆர். ரெங்கராஜன்] [2013 மார்ச் 27

தனிச் சிறப்பாக ஒரு பாதை அமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கூடங்குளம் மின் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களிலே நான்கு வழிச் சாலைகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று பல்வேறு நல்ல திட்டங்களையெல்லாம் மத்திய அரசு கொடுத்துக்கொண்டிருக்கக்கூடிய நேரத்தில் மத்திய அரசு எதையும் செய்யவில்லை என்று சொல்லியிருப்பதை நாங்கள் வன்மையாக மறுக்கிறோம். (குறுக்கீடு)

அடுத்ததாக, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று 50 சதவிகிதத்திற்குமேல் பாதிக்கப்பட்ட. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரெங்கராஜன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. கணேஷ்குமார், நீங்கள் இருக்கைக்கு வாருங்கள். திரு. ரெங்கராஜன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** என்னால் பேச முடியவில்லை. நீங்கள் ஒரு முடிவிற்கு வாருங்கள், நான் பேசுகிறேன். (குறுக்கீடு) பல்வேறு விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையை வழங்கியிருக்கிறீர்கள். அதிலே குறிப்பாக, எங்களுடைய கோரிக்கையான விவசாயத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்பது நிறைவேற்றப்படாமல் இருப்பது வருத்தத்திற்குரியதாக கருதுகின்றோம்.

குறிப்பாக, இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நெற்பயிர்கள் பாதிக்கப்பட்ட தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு முழுமையாக நீங்கள் நிவாரணம் வழங்கியிருக்கிறீர்கள். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், இன்றைக்கு தருமபுரி, மாரண்டஅள்ளியில் ஆரம்பித்து மதுரை, கோயம்புத்தூர், பொள்ளாச்சி, பேராவூரணி, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளிலே இருக்கக்கூடிய தென்னை விவசாயிகள் இந்த வறட்சியின் காரணமாக மிக, மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆழ்க்குழாய் கிணறுகளிலே தண்ணீர் இல்லை, காவேரி தண்ணீர் பொய்த்த காரணத்தினாலே, மழை வறண்ட காரணத்தினாலே மிகப் பெரிய வறட்சி ஏற்பட்டிருக்கிறது. தென்னை விவசாயிகளை அரசு கவனிக்கவில்லை என்பதை வருத்தத்திற்குரிய செயலாக இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு தென்னை விவசாயிகளின் கோரிக்கையையும் ஏற்று, தென்னை விவசாயத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். 100 காய்கள் விழுந்த இடத்திலே இன்று 30 காய்கள் விழுந்துகொண்டிருக்கின்றன. இருந்தாலும் கட்டுப்படியான விலை கிடையாது. எனவே, தென்னை விவசாயிகளும் மிக கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதையும் நீங்கள் மனதிலே கொண்டு அவர்களுக்கும் நிவாரணம் அளிக்கக்கூடிய திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2013 மார்ச் 27] [திரு. என்.ஆர். ரெங்கராஜன்]

அதேபோன்று, இன்றைக்கு எதற்கெடுத்தாலும் ரேஷன் கார்டு கேட்கிறார்கள். பாஸ்போர்ட் எடுக்க வேண்டுமென்று சொன்னாலும் சரி, எதற்கெடுத்தாலும் ரேஷன் கார்டு கொடுக்க வேண்டிய ஒரு சூழல் இருந்து வருகிறது. அரசைப் பொறுத்தவரையில் நீங்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அதிலே எக்ஸ்பிரஸ் வேகம் தேவை என்பதுதான் என்னுடைய கோரிக்கை. இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், உள்தாள் ஒட்டக்கூடிய பணிகள் முடிவடைந்துவிட்டனவா இல்லையா? இப்பணி முடிவடையவில்லை என்று சொன்னால், எப்போது முடிக்கப்படும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 2-55*

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடற்கூறு முறையிலான தேசிய மக்கள்தொகை தகவல் தொகுப்பு அடிப்படையில் மின்னணு அட்டைகள் வழங்கப்படவிருப்பதால் 1–1–2013 முதல் 31–12–2013 வரையிலான ஒரு வருட காலத்திற்கு குடும்ப அட்டைகளில் உள்தாள் ஒட்டி அத்தியாவசியப் பொருட்களைப் பெற ஆவன செய்யப்பட்டு 1–1–2013 முதல் 28–2–2013 வரை கால அவகாசம் தரப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அளித்த பொங்கல் பரிசு தொகுப்புகள் 14–1–2013 பொங்கல் நாளுக்கு முன்பாக வழங்கவேண்டியிருப்பதால் 17–1–2013 வரை ஒரு கால கட்டத்திற்கு உள்தாள் ஒட்டும் பணி நிறுத்திவைக்கப்பட்டு

[திரு. இரா. காமராஜ்] [2013 மார்ச் 27

18–1–2013 வரை தொடர்ந்து நடைபெற்றது. இதன்காரணமாக மேற்கண்ட கால அவகாசம் மீண்டும் 15–3–2013 வரை நீட்டிக்கப்பட்டது. அதாவது கிட்டதட்ட 70 நாட்கள். உள்தாள் ஒட்டுகிற பணிக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. இதன்படி 1–1–2013 முதல் 15–3–2013 வரை கீழ்க்கண்டவாறு உள்தாள் ஒட்டும் பணி நடைபெற்றது. 31–12–2012 தேதியிலிருந்த தகுதி வாய்ந்த குடும்ப அட்டைகள் 1 கோடியே 95 இலட்சத்து 24 ஆயிரத்து 154. 1–1–2013 முதல் 15–3–2013 வரை உள்தாள் ஒட்டப்பட்ட அட்டைகள் 1 கோடியே 93 இலட்சத்து 90 ஆயிரத்து 357. 15–3–2013 கால அவகாசம் முடிந்த பின்னரும் உள்தாள் ஒட்ட அங்காடிக்கு கொண்டு வரப்படாத குடும்ப அட்டைகள் 1 இலட்சத்து 33 ஆயிரத்து 797. தற்போது, கால அவகாசம் 70 நாட்கள் கொடுக்கப்பட்டப் பின்னரும் இன்னும் ஒருசில இடங்களில் கோரிக்கை வரப்பெற்றிருப்பதால் அந்தந்த வட்ட வழங்கல் அலுவலகங்களிலும், அதேபோல சென்னையில் துணை ஆணையர் அலுவலகங்களிலும் மீண்டும் உள்தாள் ஒட்டுகிற பணியைத் தொடரலாம் என உத்தரவிடப்பட்டிருக்கிறது. வேறு எங்கேயாவது ஒட்டப்படவில்லை என்று சொன்னால், அது எந்த இடத்தில் என்று சொன்னால், அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமென மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரை அடுத்த பிரச்சினையாகப் பேச வேண்டுமென்றால், மின்சாரப் பிரச்சினைப் பற்றிச் சொல்லலாம். அதிலே நான் நீண்ட விளக்கத்தை எதிர்பார்க்கவில்லை. நான், நேற்றுமுதல் சபையைக் கவனித்துக்கொண்டிருந்தபோது, மரியாதைக்குரிய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கங்களையெல்லாம் அளித்துக் கொண்டிருந்தார்கள்.



2013 மார்ச் 27] [திரு. என்.ஆர். ரெங்கராஜன்]

ஆனால், நான் கேட்பதெல்லாம் வரக்கூடிய ஏப்ரல்–மே மாதங்களிலே குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கும். தற்போது குடிநீர்ப் பிரச்சினை என்பது பல்வேறு இடங்களிலே எங்கு பார்த்தாலும் ஆரம்பித்திருக்கின்றது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நேற்றுகூட செய்தித்தாள்களிலே வேலூர் பகுதிகளிலெல்லாம் குடிநீர்ப் பிரச்சினை காரணமாக பொதுமக்களிடையே பதற்ற நிலை இருப்பதாக செய்திகளைக் கொடுத்திருக்கின்றார்கள். மின்சாரத்தை இரவு நேரங்களிலே 6 மணி நேரம், 7 மணி நேரம் என தொடர்ந்து கொடுத்தால்தான் அந்த Overhead Tank–ல் முழுவதுமாக தண்ணீர் ஏற்ற முடியும். எனவே, அரசைப் பொறுத்தவரையிலே இந்தக் குடிநீர்ப் பிரச்சினைகள் வராமல் இருப்பதற்கு என்ன தீர்வுகளை எடுக்க இருக்கின்றீர்கள்? அதற்கு மின்சாரத் துறையின் மூலமாக இரவு நேரங்களிலே முழுவதுமாக 6, 7 மணி நேரத்திற்கு தொடர்ந்து மின்சாரத்தை வழங்குவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

அதேபோன்று, இன்றைக்கு பட்டுக்கோட்டை பகுதியிலே இருக்கக்கூடிய வறட்சியைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். அந்தப் பகுதியில் வறட்சிப் பணிகளை மேற்கொள்ளும்போது, அந்தப் பகுதியிலே ஓடக்கூடிய மகாராஜ சமுத்திரம், பாட்டுவானாச்சி, கண்ணனாறு, நசுவினியாறு ஆகிய காட்டாறுகளிலெல்லாம் சிறிய Check Dam என்று சொல்லக்கூடிய தடுப்பணைகள் அமைப்பதற்கான திட்டங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிந்து கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின்படி, எங்கெங்கு தடுப்பணை வேண்டுமோ, அங்கெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு, அங்கே தேவையான நீர் வரத்து இருப்பின் தடுப்பணை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** இதற்கும் மாண்புமிகு அமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தற்போது பட்டுக்கோட்டை பகுதியிலே இருக்கக்கூடிய சல்லிக்குறிச்சி என்ற ஒரு ஏரி, 300 ஏக்கர் பரப்பளவிலே அமைந்திருக்கிறது. அதைப் பொறுத்தவரையிலே கரையைக் கட்டக்கூடிய வேலைகளை 100 நாள் வேலைத் திட்டத்தின்கீழ் அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மிகப்பெரிய ஏரிகளையெல்லாம் 100 நாள் வேலைத் திட்டத்தின்கீழ் செய்தோம் என்று சொன்னால், காலத்தே முடிப்பது என்பது மிகவும் சிரமமான ஒன்றாகும். எனவே, பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையிலே, வாய்க்கால்களையெல்லாம் நீங்கள், A, B, C, D என்று 4 வகையாக பிரித்திருக்கின்றீர்கள். C, D என்கிற வாய்க்கால்களையெல்லாம் நீங்கள் 100 நாள் வேலைத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளலாம். ஆனால், A, B என்ற வாய்க்கால்களையெல்லாம் இயந்திரத்தின் மூலமாக தூர் வாரி வரக்கூடிய ஜூன் மாதத்திற்குள் விவசாயிகளுக்கு பயனளிக்கக்கூடிய வகையிலே அவற்றைச் செம்மைப்படுத்தித் தர வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை இந்த நேரத்திலே மாமன்றத்தில் நான் வைக்கக் கடமைப்பட்டவனாய் இருக்கின்றேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த வறட்சி நிவாரணங்களையெல்லாம் நல்ல முறையிலே கொடுத்திருக்கின்றார்கள். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையிலே, முழுமையாக அவர்கள் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய எண்ணத்தை நான் இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

வறட்சி நிவாரணத்தைப் பொறுத்தவரையிலே 50 சதவிகிதம் என்ற அந்த எல்லையோடு நின்று விடாமல் கருணை உள்ளத்தோடு, நீங்கள் இன்னும் அதிகமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு வறட்சி நிவாரணத்தை அளிக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2013 மார்ச் 27] [திரு. என். ஆர். ரெங்கராஜன்]

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு வசூலை ஒத்திவைத்திருக்கின்றீர்கள். தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய எண்ணத்தை நான் காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்ற திட்டத்தை நீங்கள் அறிவித்திருக்கின்றீர்கள்.

பிற்பகல் 3–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் பேசினார். திரு. என்.ஆர். ரெங்கராஜனும் அவருடைய கருத்தைச் சொல்கிறார். கூட்டுறவு வங்கிகள் பயிர்க்கடனை இரத்து செய்ய வேண்டும் என்று கூறுகின்றார். இந்தியாவினுடைய நிதியமைச்சராக இருக்கின்ற திரு. ப. சிதம்பரம் அவர்கள் கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கின்ற 4 சதவிகித மானியத்தை வணிக வங்கிகளுக்கும் மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். அங்கே இவர் அந்தக் கடனை இரத்து செய்வாரேயானால், இங்கும் மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் சொல்லி எல்லாவற்றையும் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கலாம். தனியார் வங்கிகள், தேசிய வங்கிகள், வணிக வங்கிகளுக்கெல்லாம் கூட்டுறவு வங்கிக்கு எந்த அளவுக்கு மானியம் கொடுக்கின்றார்களோ, அதே அளவுக்கு அவர்களும் கொடுக்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்தான் சிறு, குறு விவசாயிகளுக்குக் கடன் வழங்குகின்றன. இப்போது வணிக வங்கிகள் அவ்வாறு வழங்குகின்றனவா? பெரிய பெரிய பண்ணையார்களுக்கும், பெரிய முதலாளிகளுக்கும்தான் வழங்குகின்றன. உண்மையான பண்ணையார்கள், விவசாயிகள் யாரும் வாங்குவது இல்லை. திரு. ரெங்கராஜன் அவர்கள் அந்தக் கருத்தைச் சொல்வதால் நான் என்ன சொல்கிறேன் என்றால், அவர் திரு. சிதம்பரத்திடம் சொல்லி இப்போது அந்த மாதிரி இரத்து செய்தார்கள் என்றால், மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் சொல்லி நமது வறட்சி நிவாரணக் குழு வந்து முடிவு எடுத்து என்ன செய்கிறார்கள் என்று பார்க்கலாம், முடிவெடுக்கலாம்.

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், பேசி முடியுங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று வருடங்களுக்கு முன்பு விவசாயிகள் பெற்ற கடனை மத்திய அரசு தள்ளுபடி செய்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

வீட்டுமனைப் பட்டாக்களைப் பொறுத்தவரையில், புதிய வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றீர்கள். அதைப் பொறுத்தவரையில், அந்த வீட்டுமனைப் பட்டாக்களைக் கொடுக்கும்போது நீர்நிலைப் புறம்போக்கு என்ற இடத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு பட்டாக்கள் கொடுப்பதற்கான வாய்ப்புகள் இல்லை, உச்ச நீதிமன்றத்தின் ஆணை இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும்கூட, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும்போது புதிய இடங்களைக் கையகப்படுத்தி, நீர்நிலைப் புறம்போக்கில் இருக்கக்கூடியவர்களுக்கெல்லாம் மாற்றம் செய்து அவர்களுக்கு பட்டாக்கள் வழங்க வேண்டுமென்ற எனது எண்ணத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மத்திய அரசினுடைய திட்டமாக இருக்கக்கூடிய துறைமுகத்திலிருந்து மதுரவாயல் வரை செல்லக்கூடிய சிறப்புப் பாதை ஒன்றை அமைப்பதற்காக, 1,300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, 10 சதவிகித பணிகள்தான் இப்போது முடிந்து இருக்கின்றன. எனவே, இந்தச் சாலை முடிவதற்கு தமிழக அரசு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள வளர்ச்சித் திட்டங்கள் பற்றியும், நிதி ஒதுக்கீடுகள் நடைமுறைப்படுத்துவதற்கான செயல் திட்டங்கள் பற்றியும்,



2013 மார்ச் 27] [திரு. எம். ஆறுமுகம்]

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை, ஏற்றமதி இறக்குமதி கொள்கைகள், உலகமயம், தாராளமயம், இந்திய சந்தையை அந்நியக் கம்பெனிகள் கைப்பற்றிக்கொள்ளும் கொள்கை, இந்திய தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருள்கள் சந்தையிலிருந்து வெளியேற்றப்படும் கொள்கை ஆகியவற்றாலும் வங்கிகள், காப்பீட்டுத் துறை, தொலைத் தொடர்பு, மின்சாரம், தொழில் துறை, விமானப் போக்குவரத்து உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் பன்னாட்டுக் கம்பெனிகள் தங்குதடையின்றி அனுமதிக்கப்பட்டு வருவதாலும், இந்தியப் பொருளாதாரம் நெருக்கடிக்கும், சிக்கலுக்கும் உள்ளாகியுள்ளது. இது தமிழகத்தையும் பாதிப்புக்கு உள்ளாக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது. இருப்பினும், தமிழகத்தைப் பொறுத்தமட்டில் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள வரவு–செலவுத் திட்டத்தில் அதில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு அம்சங்களைப் பற்றியும், வளர்ச்சித் திட்டங்களைப் பற்றியும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி பாராட்டுகிறது, வரவேற்கிறது.

முதலில், காவேரி நடுவர் மன்றம் ஆரம்பிக்கப்பட்டு, 22 ஆண்டுகளுக்குப்பின் தனது சீரிய முயற்சியாலும் தொடர் நடவடிக்கையாலும் நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசு இந்திய அரசிதழில் வெளியிட உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, அரசிதழில் வெளியிட வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களை கட்சியின் சார்பாகப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டதை இந்திய கம்யூனிஸ்டு கட்சி பாராட்டுகிறது. காவேரிப் பாசனப் பகுதியில் பயிர் இழப்பை சந்தித்துள்ள விவசாயிகளுக்கு 50 சதவிகிதத்திற்குமேல் பயிர் இழப்பு ஏற்பட்டிருந்தால் சிறப்பு நிவாரணத்துடன் காப்பீட்டு இழப்பீட்டிற்கான முன்பணமும் சேர்த்து ஏக்கர் ஒன்றிற்கு 15,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அதே நேரத்தில் விவசாயத் தொழிலையே நம்பி வாழும் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பை ஈடுகட்ட எந்த நிவாரணமும் அறிவிக்கவில்லை என்ற ஏக்கம் உள்ளது. அதைப் போக்க, விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். ஆறுமுகம்] [2013 மார்ச் 27

பிற்பகல் 3–05

கோவை, திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, தஞ்சாவூர், பட்டுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் தென்னை சாகுபடி விவசாயம் என்பது அதிகமாக உள்ளது. நெற்பயிருக்கு சோழ நாடு சோறுடைத்து என்று சொல்லக்கூடிய தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு அடுத்தபடியாக, தமிழகத்தில் தென்னை விவசாயம்தான் அதிக அளவில் உள்ளது. அத்துடன் நெல், கரும்பு, மஞ்சள், மக்காச்சோளம், வாழை போன்ற சாகுபடியும் செய்து வருகிறார்கள். தென்மேற்கு பருவமழை, வடகிழக்குப் பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தினால் நீர் இன்றி தென்னை மரங்கள் காய்ந்துகொண்டிருக்கின்றன. உயிர்த் தண்ணீர் விட்டால் மட்டுமே பாதுகாக்க முடியும் என்ற நிலையில் பாதிக்கப்பட்டுள்ள தென்னை விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

மாநிலம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள டெல்டா மாவட்டங்களல்லாத பிற பகுதிகளுக்கும் வேண்டிய நிவாரண உதவித் தொகையை அரசு முடிவு செய்து, மாண்புமிகு முதல்வர் அவர்களால் விரைவில் அறிவிக்கப்படவுள்ளது என்று கூறியிருப்பது ஆறுதலாக இருந்தாலும்கூட, தென்னை விவசாயிகள் மத்தியில் ஒரு சோர்வு காணப்படுகிறது. கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் கொப்பரைக்கு விலை அதிகமாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல, தமிழகத்திலும் கொப்பரைக்கு அதிகமான விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். தேங்காய் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால், தேங்காய்க்கு நியாயமான விலையை நிர்ணயம் செய்து, அரசே நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும். தேங்காய் விலை வீழ்ச்சி அடைந்திருப்பது மட்டுமல்ல, தேங்காய் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் இன்றையதினம் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அரசே கொள்முதல் செய்ய வேண்டும்.

இந்த பட்ஜெட் உணவுக்கும், தண்ணீருக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ள பட்ஜெட். எந்தவொரு கூடுதல் வரியும் சுமத்தாமல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மாநிலத்தின் மொத்த ஒதுக்கீடு 2.11 இலட்சம் கோடி ரூபாய் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதன் விளைவாக வறுமை



2013 மார்ச் 27] [திரு. எம். ஆறுமுகம்]

ஒழிக்கப்படுவதோடு, கூடுதலான மேம்பாட்டு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது வரவேற்கக்கூடிய ஒன்றே.

தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கு முறையாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டிருந்தாலும்கூட, 2013–2014 ஆம் ஆண்டிற்கு 4,706.17 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. காவலர்களின் எண்ணிக்கையை அதிகரித்திருப்பது வரவேற்புக்குரிய ஒன்றாக இருந்தாலும்கூட, ஒருசில இடங்களில் காவல் துறை அதிகாரிகளின் நடவடிக்கை என்பதும், செயல்பாடு என்பதும் அரசினால் கண்காணிக்கப்பட வேண்டிய ஒன்றாகும் என்றே நாங்கள் கருதுகின்றோம்.

வருவாய்–நிருவாகம் என்பதன் கீழ், 2013–2014 ஆம் ஆண்டில் 2 இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க உள்ளோம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது பாராட்டுதலுக்குரிய ஒன்றாகும். இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்ல வேண்டும். கோயில் நிலம், பூமிதான இயக்கத்தில் வழங்கியிருக்கக்கூடிய நிலங்கள், பஞ்சமி நிலங்கள், நீர்நிலைப் புறம்போக்கு நிலங்கள் ஆகியவை கண்டறியப்பட்டு, வீடற்ற இலட்சக்கணக்கான ஏழை, எளிய மக்கள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கான உத்தரவாதத்தை அரசு உருவாக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்களுக்காக கையகப்படுத்தப்படும் நிலங்கள் வழக்கு மன்றங்களுக்குச் சென்று தடையாணை பெற்றும், வழக்கு நடைபெற்றுள்ள நிலையில் இந்த நிலங்களையெல்லாம் எடுத்து வழங்கலாம். வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவர அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறப் பகுதிகளிலும், நகர்புறப் பகுதிகளிலும் வறுமையை ஒழிக்க ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டு வருவது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். தமிழகத்தை வறுமை இல்லாத மாநிலமாக மாற்ற எடுத்துவரும் முயற்சி வெற்றி பெற உறுதி செய்யவேண்டும். தொலைநோக்குத் திட்டம் 2023, பகுதி–2–ஐ உயர்த்த இலக்கு, அடுத்த பத்தாண்டுகளில் தமிழ்நாடு மாநில கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தில் 15 இலட்சம் கோடி ரூபாய் அளவிலான மொத்த முதலீடுகள் பெறுவதை, தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ இலக்காகக் கொண்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

[திரு. எம். ஆறுமுகம்] [2013 மார்ச் 27

பிற்பகல் 3–10

வேளாண்மை மற்றும் பாசனத் துறையில் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 250 கோடி ரூபாய், நகர்ப்புற கட்டமைப்புத் துறைக்கு இரண்டு இலட்சத்து 59 ஆயிரம் கோடி ரூபாய், போக்குவரத்து மற்றும் சாலைத் துறைக்கு 3 இலட்சத்து 65 ஆயிரத்து 927 கோடி ரூபாய், மனித ஆற்றல் மேம்பாட்டுத் துறைக்கு 60 ஆயிரத்து 120 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருப்பது என்பது, தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ இலக்காகக் கொண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகையினால் தமிழகம் வளர்ச்சி பெறும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2013–2014 ஆம் ஆண்டு கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்காக ரூ. 2,000 கோடியும், திட்ட வடிவமைப்பு நிதிக்காக 200 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதை உறுதியாக நிறைவேற்றும்போதுதான் தொலைநோக்குத் திட்டத்தின் குறிக்கோளை எட்ட முடியும். வேளாண்மைத் துறைக்கு, 2013–2014–இல் இதுவரை இல்லாத அளவுக்கு ரூ. 5,189.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயத்தை அதிகரிக்கவும் சிறு, குறு விவசாயிகளின் நலன்களில் அரசு அக்கறை கொண்டுள்ளதை எடுத்துக்காட்டுகிறது. தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தில், வேளாண் விளைபொருள் பதப்படுத்தும் தொழிற்சாலைகளை நிறுவ 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கக்கூடிய ஒன்று.

வறட்சி, வெள்ளம் உறுதியற்ற மழையளவு போன்ற பல்வேறு பருவநிலை மாறுபாடுகளைச் சமாளிக்க அரசு பன்முனை அணுகுமுறைகளைப் பின்பற்றி வருவதும், 2013–2014 ஆம் ஆண்டுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டங்களில் மாநில அரசின் பங்கு ரூ. 42.95 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதும் பாராட்டுதலுக்குரியதே. சொட்டு நீர்ப் பாசனம், சிறு, குறு விவசாயிகளுக்கு நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின்கீழ் பயன்பெறுவதற்கு, ஒரு ஏக்கர் என்ற உச்சவரம்பு நீக்கப்படும் என்ற அறிவிப்பும், தரமான நிறுவனங்களைத் தேர்வு செய்ய விவசாயிகளுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்படும் என்ற அறிவிப்பும் விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை அளித்திருக்கின்றது.



2013 மார்ச் 27] [திரு. எம். ஆறுமுகம்]

கூட்டுறவுத் துறையில் கூட்டுறவு அமைப்புகள் மூலமாக வழங்கப்படும் பயிர்க் கடன்கள் வரும் நிதியாண்டில் ரூ.4,500 கோடியாக உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது பாராட்டுதலுக்குரியது. கடும் வறட்சி உள்ள இந்தக் காலத்தில், கூட்டுறவுக் கடன்கள் முழுவதையும் இரத்துச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.1,082.64 கோடி ஒதுக்கியுள்ளது அரசு. 2013–2014 ஆம் ஆண்டில் 12,000 கறவைப் பசுக்கள், 1.5 இலட்சம் நிலமற்ற ஏழைப் பெண்களுக்கு 6 இலட்சம் செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள் வழங்க ரூ. 250 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கால்நடைகளைப் பராமரிக்க, கால்நடைகளுக்கு இலவசமாக தீவனங்கள் வழங்கப்பட வேண்டும். கால்நடைகளை, பாலக்காடு போன்ற பகுதிகளுக்கு அடிமாடுகளாக ஓட்டிச் செல்வதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்ற அறிவிப்போடு, கோவை மாவட்டத்தை மையமாக வைத்து, ஆனைமலையில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசியைக் கட்டுப்படுத்துவதைப் பொறுத்தவரை, அத்தியாவசியப் பொருட்களினுடைய விலைகள் தொடர்ந்து உயர்ந்து கொண்டே போவதற்கு மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைதான் காரணம் என்பது உண்மை. இந்த அரசு அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்த எடுத்துவரும் நடவடிக்கையை இந்திய கம்யூனிஸ்டு கட்சி பாராட்டுகிறது. பொது வினியோகக் கடைகள்மூலம் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் போன்றவை ரூ.30–க்கும், ரூ. 25–க்கும் வழங்குவது தொடர வேண்டும். அரிசி விலையைக் கட்டுப்படுத்த, அமுதம் அங்காடிகள், கூட்டுறவு நிறுவனங்கள், சிறப்பங்காடிகள்மூலம் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை கிலோ ஒன்றுக்கு ரூ.20–க்கு வெளிச்சந்தையில் விற்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற அறிவிப்பு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 மார்ச் 27

*மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொது வினியோகத் திட்டத்தின் மூலமாக துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் எல்லாம் தொடர்ந்து மானிய விலையில் வழங்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 31–3–2014 வரை தொடர்ந்து அத்திட்டத்தை நீட்டித்து உத்தரவிட்டுள்ளார்கள் என்பதனை இந்த அவைக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அரிசி விலையைக் கட்டுப்படுத்துகின்ற அதே நேரத்தில், 20 ரூபாய்க்கு வெளிச்சந்தையில் விற்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற அறிவிப்பு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தாலுங்கூட, இன்றும் கலப்படக்காரர்கள், பதுக்கல் பேர்வழிகள், கடத்தல்காரர்கள் யார் என்று கண்டறியப்பட்டு, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காய்கறி விலையைக் கட்டுப்படுத்த பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளை–Farm Fresh Consumer Outlets திறக்கப்படும் என்ற அறிவிப்பைப் பாராட்டுகிறோம்.

அடுத்து, நீர்ப் பாசனம். மாநிலத்தின் விவசாயத்தில் பாசனத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு 2013–2014 ஆம் ஆண்டு ரூ.3,314.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கேரள அரசு பவானி ஆற்றை மறித்து புதிய அணை கட்டத் திட்டமிட்டுள்ளது. சிறுவாணி ஆற்றை மறித்தும் புதிய அணை கட்டத் திட்டமிட்டுள்ளது. கேரள அரசு சட்டமன்றத்தில் 50 கோடி ரூபாயை இந்த அணைகள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கியுள்ளதாக பத்திரிகையிலே செய்திகள் வந்துள்ளன. இது கோவை, ஈரோடு மாவட்டங்களின் நீர் ஆதாரத்திற்குக் கடுமையான பாதிப்பை உருவாக்கும். இதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



2013 மார்ச் 27] [திரு. எம். ஆறுமுகம்]

பிற்பகல் 3–15

அடுத்து, நீர் வளப் பாதுகாப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு 36 ஆயிரம் பாசன ஏரிகள் மற்றும் நீர் நிலைகளைப் புனரமைப்பதற்கானப் பணிகள் ஏற்கெனவே தொடங்கியுள்ளன. இவற்றில் 13 ஆயிரத்து 699 ஏரிகள் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டிலும், எஞ்சியவை ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. நீர்வள, நில வளத் திட்டம் மற்றும் ஏனைய திட்டங்களின்கீழ் 5,894 பொதுப் பணித் துறை ஏரிகள் சீரமைக்கப்பட்டு அவற்றின் கொள்ளளவு ஏற்கெனவே உயர்த்தப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு பாசன ஏரிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்ட நிதியைப் பயன்படுத்தி மேம்படுத்தப்படுகின்றன. மேலும், பாரம்பரிய நீர் நிலைகளை மேம்படுத்துவதற்காக 176 திட்டப் பணிகள் 2013–2014 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் குளம் குட்டைகளில் இருக்கக்கூடிய மண்ணை அள்ளுவதற்கான முறையை அரசு அனுமதிக்க வேண்டும்.

பெரும் அணைகள் சீரமைப்பு என்ற வகையில், அணைகள் சீரமைப்பு மேம்படுத்துவதற்கு 745.49 கோடி ரூபாய்க்கு உலக வங்கியுடன் கையெழுத்திடப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில் 390 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆழியாறு அணை, சோலையாறு அணை, திருமூர்த்தி அணை, பவானிசாகர் அணை போன்ற அணைகள் தூர் வாரப்பட வேண்டும். பி.ஏ.பி.–யினுடைய மெயின் வாய்க்கால், கிளை வாய்க்கால்களை மராமத்து செய்ய வேண்டும். அத்திக்கடவு–அவினாசி திட்டத்தை நிறைவேற்ற நிதியொதுக்கீடு செய்ய வேண்டும். ஆனைமலையாறு, நல்லாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கிடப்பிலே போடப்பட்டு இருக்கக்கூடிய பாண்டியாறு–புன்னம்புழா திட்டம் குறித்து, கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி திட்டம் நிறைவேற்றுவதற்கான முறையிலே அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

[திரு. எம். ஆறுமுகம்] [2013 மார்ச் 27

தொழில் துறையைப் பொறுத்தவரை, மத்திய அரசு, தமிழகத்தைப் புறக்கணிக்கிறது, வஞ்சிக்கிறது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடர்ச்சியாக சொல்லி வருவது என்பதும், மத்திய அரசாங்கத்தால் தமிழகம் புறக்கணிக்கப்பட்டு வருவதை எதிர்த்து குரல் கொடுத்து வருவது என்பதும் பாராட்டுதலுக்குரியது. மத்திய அரசாங்கத்தினுடைய செயலும், நடவடிக்கையும் தமிழகத்தைப் புறக்கணிப்பது மட்டுமல்ல, தமிழகத்திற்கு நெருக்கடியை உருவாக்குவதற்கான முறையிலே அமைந்துள்ளன. இருப்பினும் தமிழ்நாட்டில் சேலம் உருக்காலை, திருச்சி பெல் தொழிற்சாலை, ஊட்டி போட்டோ ஃபிலிம் போன்ற பெரும் தொழிற்சாலைகள் முழுமையாக கடந்த 1952–க்கு பின்னாலே 10, 15 ஆண்டு காலத்தில்தான் கொண்டுவரப்பட்டன. ஆனால், 30 ஆண்டு காலமாக மத்திய அரசாங்கத்தினுடைய பெரிய தொழிற்சாலைகள் Heavy Industries தமிழகத்திலே வருவதற்கு மத்திய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இதை நாம் மத்திய அரசிடம் கேட்டுப் பெற வேண்டும். புதிதாக எந்தத் தொழிற்சாலையையும் தொடங்க மத்திய அரசு முன்வரவில்லை என்பது வேதனையளிக்கிறது. மாநில அரசு, மத்திய அரசிடம் என்னென்ன பெரிய தொழிற்சாலைகள் கட்ட அனுமதி கேட்டு மறுக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தைச் சட்டமன்றத்திலே தெரிவிக்க வேண்டும். தொழில் துறையில் பின்தங்கியுள்ள தென் மாவட்டங்களில் முதலீடு செய்து தொழில் தொடங்க புதிய சலுகைகளின் தொகுப்பு ஒன்று விரைவில் அரசால் அறிவிக்கப்படும் என்பது தென் மாவட்ட மக்கள் மத்தியிலே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள். மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் பெரும் பங்காற்றி வருகின்றன என்பது உண்மை. கோவை மாவட்டம், சிறு, குறு தொழில்களைக் கொண்டிருக்கக்கூடிய பெரிய மாவட்டமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அங்கே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கு Coal, Iron, Pig Iron மற்றும் இருக்கக்கூடிய மூலப் பொருட்கள் தாராளமாக கிடைப்பதற்கும், இத்தொழிற்சாலைகள் தொடர்ந்து இயங்கி உற்பத்தியைப் பெருக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், ஏற்றுமதிமூலம் அந்நியச் செலாவணி கிடைக்கவும், மின் தடையிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.



2013 மார்ச் 27] [திரு. எம். ஆறுமுகம்]

கைத்தறி மற்றும் துணி நூல் துறையைப் பொறுத்தவரை, தமிழகத்தில் கூட்டுறவு நூற்பாலைகள் 18 செயல்பட்டு வந்தன. தற்போது 5 கூட்டுறவு ஆலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன. இயங்காத ஆலைகளை இயக்க முடியுமா, நவீனப்படுத்த முடியுமா என்பதற்கான முறையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த இயந்திரங்களும், இடமும் எதற்கும் பயன்படாமல் வீணாக இருந்து வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 40 ஆண்டுக் காலமாக கூட்டுறவு நூற்பாலைகளின் நிருவாகம் செயல்படாமல் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் இப்பொழுது 104.43 கோடி ரூபாயில் இயங்கி வருகின்ற 5 கூட்டுறவு நூற்பாலைகளும் நவீனமாக்கப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை நியமித்து, எந்தெந்த மில்களையெல்லாம் மீண்டும் ஆரம்பிக்கலாம், அதற்கு என்ன சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதையெல்லாம் ஆராய ஆணையிட்டுள்ளார்கள். ஆகவே அரசு அதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 3–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** நன்றி. நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரை, 2013–2014 ஆம் ஆண்டில் 6,452.77 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் துறை வளர்ச்சிக்கு சாலைப் போக்குவரத்து இன்றியமையாத ஒன்றாகும். ஊராட்சி, பேரூராட்சி சாலைகளை மாநில நெடுஞ்சாலைகளோடு இணைக்கப்பட வாய்ப்புள்ளதா என்பதை அரசு பரிசீலிக்கவேண்டும். ஒருங்கிணைந்த சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ. 2,032 நிதி ஒதுக்கீடு செய்து

சாலைகளின் தரத்தை உயர்த்தவும், வலுப்படுத்தவும் எடுத்துவரும் நடவடிக்கை வரவேற்கக்கூடியது ஆகும்.

அடுத்து, பாலங்கள். கோவை நகரம் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியை நோக்கியுள்ள நகரமாகும். போக்குவரத்து நெரிசல், மக்கள் தொகை அதிகரிப்பு போன்றவற்றால் விபத்துகள் ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளது. எனவே, காந்திபுரம், சத்தி ரோடு சாலை, அவினாசி சாலை, பாலக்காடு–உக்கடம் சாலை ஆகிய இடங்களில் மேம்பாலங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையை, பொறுத்தமட்டில், அரசு 1,026 கோடி ரூபாய் செலவில் 6,000 புதிய பேருந்துகள் வாங்க அனுமதித்துள்ளதில், 2,855 பேருந்துகள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. மலைப் பகுதிகளுக்குப் புதிய பேருந்துகள் விடவேண்டும். புதிய வழித்தடங்களில் வால்பாறையிலிருந்து பாலக்காட்டுக்கும், வால்பாறையிலிருந்து கொச்சி, எர்ணாகுளத்திற்கும் பேருந்து விடவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்தாமல் அரசே எரிபொருள் செலவை ஈடு செய்ய ரூ. 500 கோடி நிதி ஒதுக்கியதை மனதாரப் பாராட்டுகிறோம். மத்திய அரசின் நியாயமற்ற, பிற்போக்கான டீசலுக்கான இரட்டை விலைக் கொள்கையினால், விலையை அடிக்கடி உயர்த்துவதால் போக்குவரத்துக் கழகங்களுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழக்குமன்றத்திற்கு சென்றிருப்பதும் சரியானதே.

அடுத்து, 'தமிழ்நாட்டிற்குச் செல்வோம்–2014' என்ற உத்தியின் அடிப்படையில் சுற்றுலா மேம்பாட்டுக்கான விளம்பரப் பணிகளை மேற்கொள்ள ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறைக்கு ரூ.153.95 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. நான் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், 'தமிழ்நாட்டுக்குச் செல்வோம்' என்பதை 'வால்பாறைக்குச் செல்வோம்' என்ற அடிப்படையில் வால்பாறைப் பகுதியைச் சுற்றுலா மையமாக அறிவிக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





பள்ளிக் கல்வியைப் பொறுத்தமட்டில், 2013–2014 ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைத்துப் பள்ளிகளிலும் 100 சதவிகிதம் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதியுடன் கழிப்பறை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்ற அறிவிப்பு அனைத்து மாணவ, மாணவிகள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில் மலைப் பகுதிகளில் படிக்கும் 10.30 இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு கம்பளி ஆடைகள் வழங்க 4.12 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன் மலைப் பகுதிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மழைக் கோட்டும், குடையும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுகொள்கிறேன்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு 2013–2014 ஆம் ஆண்டில் 6,341.80 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தினக்கூலி ரூ. 132–லிருந்து ரூ. 148 ஆக உயர்த்தியிருப்பது தமிழ்நாட்டில் மட்டும்தான். கடுமையான வறட்சி நிலவும் காலகட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

**திரு. எம். ஆறுமுகம்:** விவசாயத் தொழிலையே நம்பியுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கும் வேலையில்லா காலத்திற்கு நிவாரணம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் 2 விஷயங்கள்தான் இருக்கின்றன.

நகராட்சி நிருவாகத் துறையில் வறட்சி காலங்களில் குடிநீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஊராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க சிறப்பு நிதி ஒதுக்கவேண்டும்.

ஆழியாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம், கம்பாளப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் போன்றவற்றை நிறைவேற்றவேண்டும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் பாதுகாக்கப்பட ரூ.7,042 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி இம்மக்களின் பயன்பாட்டுக்கு முறையாகச் சென்றடைகிறதா என்பதைக் கண்காணிக்கவேண்டும். ஆதி திராவிட மக்களுக்கு இலவசப் பட்டா வழங்கும் மனுக்களைப் பரிசீலித்து செயல்படுத்துவதற்கென்று தனி தாசில்தார் நியமிக்கவேண்டும்.

[திரு. எம். ஆறுமுகம்] [2013 மார்ச் 27

தொழிலாளர் நலனைப் பொறுத்தவரை, அரசு தேயிலைத் தோட்டக் கழகம் மற்றும் தனியார் தேயிலை, காப்பித் தோட்டங்களில் பணியாற்றும் சுமார் 1.5 இலட்சம் தொழிலாளர்கள் வால்பாறை, நீலகிரி, தேனி, மாஞ்சோலை, ஏற்காடு போன்ற இடங்களில் பணியாற்றி வருகிறார்கள். இவர்கள் நாள் ஒன்றுக்கு ரூ.161 மட்டுமே தினக்கூலியாகப் பெற்று வருகிறார்கள். கடுமையான குளிர், வெயில் என்று பாராமல் கொடிய மிருகங்களுக்கு மத்தியில் பணிபுரிந்துவரும் இத்தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு குறைந்தபட்ச சம்பளமாக ரூ.250–ஐ அரசு அறிவிக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–25

கடைசியாக ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி எனது உரையை முடித்துக்கொள்கிறேன். அங்கீகாரமற்ற குடியிருப்பு மனைப் பிரிவுகளுள்ள பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர சட்டத் திருத்தம் தேவை தமிழ்நாட்டில் அங்கீகாரமற்ற குடியிருப்பு மனைப் பிரிவுகள் ஏராளமாக உள்ளன. அங்கு உள்ளாட்சி அமைப்புகள் சாலை வசதி, சாக்கடை வசதி, மின் விளக்கு வசதி, குடிநீர் வசதி, பொதுக் கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தருவதில்லை. இதனால் பொதுமக்கள் மிகவும் நெருக்கடிக்கு உள்ளாகிறார்கள். எனவே, மாநில அரசு ஒரு சிறப்பு ஆணையை வெளியிட்டு, அங்கீகாரமற்ற குடியிருப்பு மனைப் பிரிவுகள் முழுவதற்கும் அங்கீகாரம் வழங்கி முறைப்படுத்துவதோடு இனிமேல் அங்கீகாரமற்ற மனைப் பிரிவுகளே உருவாகாதவாறு ஒரு நிரந்தர ஏற்பாடு செய்யும் வகையில், பத்திரப் பதிவு சட்டத்தில் ஒரு பொருத்தமான திருத்தம் செய்வதன்மூலம் அங்கீகாரமற்ற மனைப் பிரிவுகள் உருவாவதைத் தடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் மணி அடிப்பதற்கு முன்பே முடிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ஆகவே, மணியை அடிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. அதுமாதிரி உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** வரவு–செலவுத் திட்டத்தில் பல அம்சங்களை வரவேற்று எங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் ஏற்கெனவே கருத்துத் தெரிவித்துள்ளார்கள். காலம் கருதி கூறியதைக் கூற விரும்பவில்லை.

விலைவாசி ஏறுவதற்குப் பிரதான காரணமாக எல்லா பொருளாதார நிபுணர்களும் சொல்லிக் கொண்டிருப்பது, demand எவ்வளவு தேவை இருக்கிறதோ அதற்கேற்ப Supply–இருப்பு இல்லையென்றால், தேவை அதிகரிக்கும்போது விலை ஏறும் என்பதுதான் அந்த theory. இப்பொழுது எல்லா பொருட்களுடைய விலையும் ஏறுகிறது, அரிசி விலை ஏறுகிறது. எல்லாம் ஏறுகிறது. ஆகவே, இவை தாராளமாய்க் கிடைப்பதற்கு, சந்தையிலே அதிகம் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு விளைச்சலை அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது. விளைவதை கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது. அரசே அதை விநியோகிக்க வேண்டியிருக்கிறது. விலை ஏறினால், அந்தப் பொருளை அரசாங்கமே சந்தைப்படுத்தும், அந்தப் பொருளை அரசாங்கமே தங்களுடைய அங்காடிமூலம் விற்பனை செய்யும் என்பதை உறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது. அந்தத் திசையிலே சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசி கொள்முதல் செய்து, கிலோ 20 ரூபாய் விலையிலே விற்பனை செய்வது போன்றே அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் தொடர்பாகவும் நடவடிக்கையை நாம் மேற்கொண்டால் நிச்சயமாக விலையைக் கட்டுப்படுத்த முடியும். குறிப்பாக, அந்த நடவடிக்கையை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

அதுபோல, சாதாரண மக்களுக்கு ஹார்மோன் பாதிப்பால் ஏற்படக்கூடிய சர்க்கரை வியாதி, தைராய்டு வியாதி போன்றவற்றிற்குத் தேவையான மருந்துகளுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும். அதன் மூலமாக அந்த மருந்துகள் மலிவான விலையில் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. சவுந்தரராசன்] [2013 மார்ச் 27

வேலைவாய்ப்பை அதிகப்படுத்துவது என்பது மிக முக்கிய இலக்காக நம்முடைய அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக எடுக்கப்படுகிற எல்லா நடவடிக்கைகளையும் நாம் தீவிரப்படுத்த வேண்டியிருக்கிறது.

தமிழகத்திலே இளைஞர்கள் எண்ணிக்கை அதிகம் என்பது மகிழ்ச்சி கொள்ளத்தக்க ஒன்று. அதேநேரத்தில் வேலையற்ற இளைஞர்கள் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போனால், அது அபாயகரமானது. இதை மனதில் வைத்து, வேலைவாய்ப்பை அதிகப்படுத்தக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்கிற அதேவேளையில், ஏற்கெனவே மக்கள் நலப் பணியாளர்கள் வேலை இழந்திருப்பதை நினைவூட்டுகிறேன். அதேபோல அரசுப் பணியிலே இருக்கிற அங்கன்வாடி, சத்துணவு, டாஸ்மாக், கூட்டுறவு, உள்ளாட்சி, போக்குவரத்து, மின்சாரம் போன்றவற்றிலே நிரந்தரமற்று தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பூதியம் என்கிற பெயரிலே பல ஆண்டுகளாக வேலை பார்க்கக்கூடிய இலட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசுப் பணியிலுள்ள கடைநிலை ஊழியர்களுக்கு இணையான சம்பளமாவது கொடுத்து, ஒரு காலமுறை ஊதியம் கொடுத்து, அவர்களை அரசு ஊழியர்களாக மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பைப் பெருக்குகிற அதேநேரத்தில், சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள்தான் *50* இலட்சம் பேருக்கு வேலை தருகிறது என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தொழில்களை ஊக்குவிப்பதற்கான ஒரு தொகுப்பு நிதியையும் நாம் உருவாக்குவோம் என்று பட்ஜெட்டில் சொல்லியிருக்கிறோம். இப்போது உடனடியாக இந்தத் தொழில்களுக்கு மின் கட்டணத்தில் *50* சதம் மானியமாகக் கொடுப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன். இல்லாவிட்டால் அந்தத் தொழில்கள் அடுத்த ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடத்திற்குத் தாக்குப் பிடிக்குமா என்பது தெரியவில்லை. அந்த அளவுக்கு பாதிப்பிற்குள்ளாகி இருக்கின்றன. ஏற்கெனவே நாம் அவர்கள் உபயோகப்படுத்தக்கூடிய எரிபொருட்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு, குறு தொழில்கள் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் ஜெனரேட்டர் வாங்குவதற்காகப் பல உதவிகளையெல்லாம் செய்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். அது மாத்திரமல்ல, அத்தகைய நிறுவனங்களுடைய தொழிலாளர்களெல்லாம், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் வந்து அம்மா அவர்களை காலையிலே பார்த்தார்கள். மாலையிலேயே அதற்குண்டான உத்தரவுகளெல்லாம் போடப்பட்டு, பல்வேறு தீர்மானங்களை அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.



2013 மார்ச் 27] [திரு. ப. மோகன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்னாக்கிகளுக்கெல்லாம் மானியம் தருவது என்பதை நாங்கள் ஏற்கெனவே வரவேற்றிருக்கிறோம், மானியம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த மின்னாக்கிகளுக்கான எரிபொருளுக்கு வாட் வரியைக் குறைப்பதென்று நாம் ஏற்கெனவே முடிவெடுத்திருக்கிறோம். அந்த முடிவு இன்னும் அமலுக்கு வரவில்லை என்று அவர்கள் நேற்று என்னிடம் சொன்னார்கள்.

*பிற்பகல் 3–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்னாக்கிகளுக்கான வாட் வரியையும் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு குறைத்திருக்கிறது. அதற்குண்டான அந்த எண்ணெய்க்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு மிக்க நன்றி. நான் அதை வரவேற்கிறேன். நேற்று என்னைச் சந்தித்த

[திரு. அ. சவுந்தரராசன்] [2013 மார்ச் 27

அந்த அசோசியேஷன்காரர்கள் பெட்ரோல் பங்கில் டீசல் வாங்குகிறபோது வாட் வரி என்று தனியாக குறிப்பதில்லை. இந்த வாட் வரியை அரசிடம் Reimburse செய்துகொள்ளச் சொல்கிறது. அதாவது, திரும்ப வந்து வாங்கிக்கொள்ளச் சொல்கிறது. அதற்கான ஒரு முறையை நாம் ஒழுங்குபடுத்தி, இப்படி, இப்படிச் செய்தால் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்பதற்கான ஏற்பாட்டினை நாம் செய்யவேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திறன் மேம்பாட்டு இயக்கம் என்பது இந்த வரவு—செலவு அறிக்கையிலே உள்ள மிக முக்கியமான ஒன்று. தமிழகத்தினுடைய எதிர்காலமே அது தொடர்பானதுதான். ஏராளமான கல்லாதவர்கள் இருக்கிறார்கள். 10, 12 ஆம் வகுப்புகளில் படித்தவர்கள் மட்டுமல்லாமல், படிக்காதவர்களுடைய திறனையும், வேலை செய்வதற்கு தகுதியானவர்களாக மாற்றுகிற அந்தச் செயலுக்கும் நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொழில் முனைவோர்களுடைய கோரிக்கையை ஏற்று, 7—12—2012 அன்று மின்னாக்கிகளின்மீது அன்றையதினம் விதிக்கப்பட்ட 14.5 விழுக்காடு மதிப்புக் கூட்டு வரி 5 விழுக்காடாகக் குறைக்கப்படும் என்றும், மேலும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்மூலம் கடன் பெற்று, மின்னாக்கிகள் வாங்கும் தொழில் முனைவோர்கள், தற்போது செலுத்தவேண்டிய 20 விழுக்காடு பங்குத் தொகை 10 விழுக்காடாகக் குறைக்கப்படும் என்றும், தொழிற்சாலைகளில் மின்னாக்கிகளில் பயன்படுத்தப்படும் எரி உலை எண்ணெய்க்கு (Furnace Oil) 1—2—2012 முதல் 30—9—2012 வரை மதிப்புக் கூட்டு வரியிலிருந்து ஏற்கெனவே விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த வரி விலக்கு 1—10—2012 முதல் முன்தேதியிட்டு 31—5—2013 வரை தொடர்ந்து அளிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள். இதனால் அரசுக்கு 97 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரின் பதிலுக்கு மிக்க நன்றி. நீங்கள் செய்திருப்பதையெல்லாம் நான் ஏற்கெனவே பாராட்டியிருக்கிறேன், வரவேற்றிருக்கிறேன். செய்யவேண்டிய சிலவற்றைத்தான் நான் சொன்னேன்.

இந்தத் திறன் மேம்பாட்டு இயக்கத்தை நாம் வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டுமானால், தொழில் நிறுவனங்களின் தொழில் மேம்பாட்டுத் திறனை உருவாக்குவதற்கு நாம் கட்டாயப்படுத்த வேண்டும். அவர்களுக்கு இதைப் பொறுப்பாகவும், கடமையாகவும் நாம் ஆக்கவேண்டும். அதற்காக அவர்கள் ஒரு தொகையைச் செலவு செய்யவேண்டும். அரசு மட்டுமே செய்யக்கூடாது. ஆகவே, அவர்களோடு MoU போடுகிறபோதே, மற்ற நிபந்தனைகளோடு நீங்கள் சில நிறுவனங்களை உருவாக்க வேண்டும், Institutions உருவாக்க வேண்டும் என்று நாம் நிபந்தனை போட்டால் அது இன்னும் சிறப்பாக அமையும். அரசும் அதற்கு வேண்டிய இதர ஏற்பாடுகளையும், உதவிகளையும் செய்தால் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே உள்ள மிக முக்கியமான விஷயம் திடக்கழிவு மேலாண்மை குறித்த அரசாங்கத்தினுடைய முன்முயற்சி. இந்தத் திடக்கழிவு மேலாண்மை என்பது, இதற்குமேல் நம்மால் தாங்கிக்கொள்ள முடியாது என்கிற ஒரு எல்லைக்குப் போய்விட்டது. சென்னை நகரத்தைப் பொறுத்தவரையிலே, 4,500 டன் குப்பைகள் ஒவ்வாரு நாளும் உற்பத்தியாகி, குப்பை கொட்டும் இடத்திற்கு அது வந்து சேருகிறது. கொடுங்கையூர், பெருங்குடி ஆகிய இரண்டு இடங்களில் மிகப்பெரிய மலை போல் குப்பை குவிந்து கிடக்கிறது. ஏராளமான சுகாதாரச் சீர்கேடுகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. அந்தத் திடக் கழிவு மேலாண்மையிலே இனிமேல் ஒரு பெரிய முன்னேற்றம் காணமுடியும் என்கிற நம்பிக்கையை இந்த அரசு கொடுத்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதற்கான வேலையை நாம் வேகப்படுத்தி தமிழகம் முழுவதும் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதிலே மிக முக்கியமாக, குப்பைகள் உருவாகும் இடத்திலேயே, அதாவது at source—ல் நாம் அதைப் பிரித்து வாங்கவும், ஒவ்வொரு நாளும், ஒன்று குப்பையை

[திரு. அ. சவுந்தரராசன்] [2013 மார்ச் 27

மறுசுழற்சிக்கு அனுப்புவது, இரண்டு அதை அழிப்பது, மூன்று அதை மக்க வைப்பது என்று மூன்று வகையிலும் அதற்கான ஏற்பாட்டை நாம் முழுமையாகச் செய்யவேண்டும். அதற்கு எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை என்கிற முறையில் நாம் எடுத்துச் செய்தால் தமிழ்நாட்டினுடைய சுகாதாரம், தமிழ்நாட்டினுடைய ஆரோக்கியம், தமிழ்நாட்டைப் பற்றி நாம் கனவு காணக்கூடியது நிறைவேறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மிக நியாயமான கோரிக்கை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்காகத்தான் இந்த வரவு–செலவுத் திட்டத்திலே நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், நீண்டகாலமாக பல்வேறு நிலைகளில் மாற்றி, மாற்றி அமைத்தும்கூட, பல்வேறு நிலைகளில் தோல்வியைச் சந்தித்துக்கொண்டிருக்கிற இந்தச் சூழலில், ஒரு புதிய முயற்சியாக இது வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படவேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்தவிருக்கிறார்கள். எனவே, குறுகிய காலத்திற்குள்ளாக இதற்கு ஒரு விடிவு ஏற்பட்டுவிடும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

*பிற்பகல் 3–35*

**திரு. அ. சவுந்தரராசன்:** மிக்க நன்றி. ஏற்கெனவே இது தொடர்பாக கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேறவில்லை. சென்னையைப் பொறுத்தவரையிலே இதற்கு முன்பிருந்த எல்லா மாநகராட்சி தந்தையர்களும் கொடுத்திருக்கிற எந்த வாக்குறுதியும் நிறைவேறவில்லை. அதனால்தான் (குறுக்கீடு) இதற்கு முன்பு இருந்ததைத்தான் நான் சொல்ல வருகிறேன். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிஷம்.



2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து எல்லாமே தோல்வியைத் தழுவிவிட்டது என்று சொல்லிவிட முடியாது. எல்லாமே தோல்வியைத் தழுவிவிட்டால் சென்னை மாநகரத்தில் குடியே இருக்க முடியாது. அது வேறு விஷயம். ஆனால், சில முயற்சிகளில் சில நேரங்களில் தொய்வு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொய்வை மாற்றி, அதை வேகப்படுத்துவதற்காகத்தான் எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு புதிய முயற்சியின் பயனாக, அதிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, சற்று பொறுமையாக இருப்பீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக அதை ஒரு வெற்றி நிலையிலே கொண்டுவந்து நிறுத்துவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு மிக்க நன்றி. சென்னை, கொடுங்கையூர் குப்பைமேட்டை மீஞ்சூருக்கும், பெருங்குடி குப்பைமேட்டை கூத்தம்பாக்கத்திற்கும் மாற்றும் முடிவிற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. விரைவில் அதைச் செய்து தர வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை வலியுறுத்துகிறேன்.

அடுத்து, பண்ணைசாரா கடன் வாங்கப்பட்டு நீண்டகாலமாக அது நிலுவையிலே இருக்கிறது. ஏராளமான வட்டி, அபராத வட்டி என்று அவர்களுக்கு விதிக்கப்பட்டு கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். விவசாயம் பல சந்தர்ப்பங்களிலே பாதிக்கப்பட்டதால் எங்களால் கடனைக் கட்ட முடியவில்லை, இப்போது புதிதாக கடனும் வாங்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் அதற்காக நடவடிக்கை எடுத்து, குறைந்தபட்சம் அவர்களுக்கு வட்டியை இரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஈரோடு மற்றும் இதர பகுதிகளிலும் இந்தப் பிரச்சினை மிக அதிகமாக இருக்கிறது. விளைபொருட்களை பதப்படுத்துவதற்கான தொழிற்சாலைகள் அமைப்பது என்பதை இந்த அறிக்கையிலே இருக்கிற மிக நல்ல திட்டமாக நான் பார்க்கிறேன். இதுவரை அப்படிப்பட்ட ஒரு முன்முயற்சி எடுக்கப்பட்டதில்லை. பதப்படுத்தும் அந்தத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும், எல்லா முக்கியமான விவசாய மையங்களிலும் ஒரே நேரத்திலே அமல்படுத்த வேண்டிய அளவிற்கு மிக முக்கியமான திட்டமாகும். அதற்காக ரூ.20 கோடி நிதி ஒதுக்கியிருக்கிறோம். இது மிக முக்கியமான திட்டம் என்பதால், இது போதாது என்று நான் கருதுகிறேன். மீன் பதப்படுத்துவதற்கான பூங்காக்களை அமைப்பதைப் போலவே, விளைபொருட்களைப் பதப்படுத்தும் இந்த ஏற்பாடுகள் ஒரு பெரிய வரப்பிரசாதமாக அமையும் என்று கருதுகிறேன். பாராட்டுகிறேன்.

கூட்டுறவுத் தேர்தலிலே கடன் பாக்கி வைத்திருப்பவர்களுக்கு வாக்குரிமை இல்லையென்று சொல்லப்பட்டிருப்பதாக எனக்கு தகவல் வருகிறது. பலர் சொல்கிறார்கள். பாக்கி வைத்திருப்பவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது. வேட்பாளர்களுக்குள்ள தகுதியை வாக்காளர்களுக்குள்ள தகுதியாக மாற்றக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1988, விதி எண் 38–ன்படி, ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர் அச்சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் தவணைத் தொகையைத் தேர்தல் நடைபெறும் தேதிக்கு 30 நாட்களுக்கு முன்னர், மூன்று மாதத்திற்கு மேலாக தவணைத் தொகையைச் செலுத்தாமல் இருந்தால், அவர் அச்சங்கத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியற்றவர். இது இப்போது கொண்டு வந்தது இல்லை. இது ஏற்கெனவே இருந்தது. மேலும், ஒருவர் ஒன்றுக்கும் மேற்பட்ட சங்கத்தில் உறுப்பினராக இருக்கும் பட்சத்திலும், ஏதாவது ஒரு சங்கத்தில் தேர்தல் நடைபெறும் தேதியிலிருந்து 30 நாட்களுக்கு முன்னர், மூன்று மாதங்களுக்கும் மேலாக தவணைத் தொகையைச் செலுத்தாமல் இருந்தாலும், அவர் எந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலும் வாக்களிக்கத் தகுதியற்றவராவார். இது இப்போது கொண்டு வந்தது இல்லை. இந்த விதி 1988–லே முதன்முதலில் கொண்டுவரும்போதே கொண்டுவரப்பட்டது.





சென்ற தேர்தலில் என்ன நடந்தது என்றால், தேர்தலில் முறைகேடு செய்தவர்கள் எல்லாம் யார்? அவர்களுக்காக அதைத் தளர்த்திக் கொண்டார்கள். அந்தமாதிரி முறைகேடு நடக்க வேண்டுமா? 100 பேர் இருக்கிறோம். 10 பேர் தவறு செய்தால், அவர்களைக் கொண்டுவந்து சேர்த்து அவர்களுக்கு எப்படி வாய்ப்பு கொடுப்பது? அப்போது மீதியிருக்கும் 90 பேர் என்ன நினைப்பார்கள்? அதனால் மாண்புமிகு அம்மா அவர்கள், கூட்டுறவுத் தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்த வேண்டும், அதனை வலுப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இது இப்போது கொண்டு வந்தது அல்ல. போன ஆட்சியிலே அவர்கள் கொண்டுவந்தார்கள். தவறு செய்தது பூராவும் போன ஆட்சியிலே, மைனாரிட்டி தி.மு.க.–வை சேர்ந்தவர்கள்தான் தவறு செய்தவர்கள். அவர்கள் வாக்களிக்க வேண்டுமென்பதற்காக இந்த விதியைத் தளர்வு செய்திருக்கிறார்களே ஒழிய, அது இப்போது கொண்டு வந்தது அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற தேர்தலில் பாக்கி வைத்திருந்தவர்கள் அத்தனைபேரும் சிக்கன நாணயச் சங்கம், பண்டகசாலைகள் போன்ற அனைத்திலும் ஓட்டு போட்டார்கள். இப்போது ஏராளமான நல்லவர்கள், சரியானவர்கள் ஓட்டு போடுகிற வாய்ப்பை இழக்கிறார்கள் என்பது யதார்த்தம். போக்குவரத்திலே இருக்கிற சொசைட்டி மற்றும் வேறு சொசைட்டிகளைப் பற்றி எனக்குத் தெரியும். அப்படிப்பட்டவர்களுக்கு ஏதாவது செய்ய முடியுமா என்று பாருங்கள், இல்லாவிட்டால் நான் என்ன சொல்ல? நியாயமாக தேர்தல் நடக்கட்டும்.

[2013 *மார்ச்* 27

*பிற்பகல் 3–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் பணியாளர் சங்கங்கள் எல்லாம் சேராது. கடன் தவணையை அரசுத் துறையே வாங்கிவிடுகிறது. Corporate கம்பெனியே வாங்கிக் கொள்கிறது. அவர்கள் வாங்கி செலுத்தவில்லையென்றால், அது உறுப்பினரின் தவறு கிடையாது. அவர்களுடைய சம்பளத்திலிருந்து பிடித்துவிடுகிறார்கள். அதனால், அவர்களுக்கெல்லாம் ஓட்டுப் போட உரிமை உண்டு. கூட்டுறவு நிறுவனங்களில் உண்மையிலே கடன் வாங்கி, அதை செலுத்தாதவர்களுக்குத்தான் இந்த விதி பொருந்துமேயொழிய, போக்குவரத்துப் பணியாளர்கள், சிக்கன நாணயச் சங்கம், மற்றவற்றில் இருப்பவர்களுக்கெல்லாம் இந்த விதி பொருந்தாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. அடுத்து ஆதி திராவிடர், பழங்குடியினர் உட்கூறுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கூடிய பணம் என்பது அதிகத் தொகை, வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க தொகை. ஆனால், தொழிலாளர் நல வாரியத்தில் ஆதி திராவிடர், பழங்குடியினர் என பட்டியல் இன மக்களாக இருப்பவர்கள் எல்லோரும் பெறுகிற சலுகையைப் பெறுகிறபோது, பட்டியல் இன மக்களுடைய பட்டியலை மட்டும் தனியாக எடுத்து, அவர்களுக்கு ஆகின்ற பொதுச் செலவை உட்கூறு திட்டத்தில் கழித்துக் கொள்கிற ஒரு ஏற்பாட்டைச் செய்கிறார்கள் என்ற தகவல் அதிகாரிகளிடம் பேசும்போது எங்களுக்கு வருகிறது. உட்கூறு திட்டத்தில், எல்லோரும் அனுபவிக்கிற திட்டம் அல்லாத சிறப்புத் திட்டங்களுக்காக தொகை ஒதுக்கப்படுகிறது. தற்போது எல்லோருக்கும் சைக்கிள் கொடுக்கிறார்கள். ஆதி திராவிட மாணவ–மாணவியருக்குக் கொடுக்கக்கூடிய சைக்கிளை உட்கூறு திட்டத்திலே கழிக்கக்கூடாது. சைக்கிள் எப்பிரிவினராக இருந்தாலும் கிடைக்கும்.



2013 *மார்ச்* 27] [திரு. அ. சவுந்தரராசன்]

அதேபோல, சில நல வாரியங்களில் இருக்கின்ற விஷயங்களைச் சொல்கிறேன். எனக்கு கிடைக்கின்ற தகவல் சரியில்லை என்றால் நான் மகிழ்ச்சியடைவேன். அதைச் சரிபார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உட்கூறு திட்டத்தில் கிடைக்கிற அந்தத் தொகை, எல்லோருக்கும் கிடைக்கின்ற பொதுவான திட்டத்திலேயே பட்டியல் இன மக்களுக்குக் கிடைக்கிற அந்தச் சலுகையை, உட்கூறு திட்டத்தில் வரக்கூடிய தொகையிலிருந்து கழிக்கக்கூடாது. அப்படிக் கழிக்கும் நேர்வில், உட்கூறு திட்டத்தினால் ஏற்படக்கூடிய பலன் ஆதி திராவிடர், பட்டியல் இன மக்களுக்கு முழுமையாகக் கிடைக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிற்சங்களுக்கு அங்கீகாரச் சட்டம் இயற்ற வேண்டுமென்று இந்த அவையிலே பேசுகிறபோதெல்லாம் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அப்படி ஒரு சட்டம் இல்லை என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார். நான் புது சட்டம் வேண்டுமென்றுதான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். எப்படியாவது ஒரு புது சட்டத்தை இயற்றுவது தொழில் அமைதிக்கு மிக, மிக அவசியம். பல்வேறு சங்கங்கள் உருவாவதைத் தடுப்பதற்கும் இச்சட்டம் அவசியம் என்று நான் கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் சட்டத்தை மத்திய அரசு இயற்ற வேண்டும். மத்திய அரசு இயற்றியதை வைத்துதான் மாநில அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் துறை என்பது மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்த பொதுப் பட்டியலில் வருகிறது. இதே சட்டமன்றம், தமிழ்நாட்டிற்கு மட்டும் பொருந்துகிற பல சட்டங்களை, தொழிலாளர் சட்டங்களை இயற்றியிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தை இயற்றுவதற்கான எல்லா அதிகாரமும் மாநில அரசுக்கு

[திரு. அ. சவுந்தரராசன்] [2013 மார்ச் 27

இருக்கிறது. விரைவில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அரசை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

பன்னாட்டு நிறுவனங்கள் உட்பட தொழில் நிறுவனங்கள் வரி ஏய்ப்பு செய்தால், அரசு அதை விடுவதில்லை; மிகக் கண்டிப்பாக, கறாராக வரியை வசூலித்துவிடுகிறார்கள். ஆனால், கான்ட்ராக்ட் சட்டம், 8 மணி நேர வேலைச் சட்டம், பணி நிரந்தரச் சட்டம் போன்ற தொழிலாளர் சட்டங்களை மீறுகிறபோது, அதே கண்டிப்பை, வேகத்தை இவர்களிடம் காட்டுவதில்லை என்பது என்னுடைய அனுபவம். அந்த அனுபவத்தின் அடிப்படையில் நான் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். மேற்காணும் சட்டங்களை மீறுகிறவர்கள் மீதும், அதே வேகத்தை, கண்டிப்பை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய தொழிற்சாலை துவங்கும்போது போடப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், இத்தனை தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவோம் என்ற உத்தரவாதத்தினை வழங்குகின்றார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி, குறிப்பிட்ட காலத்திற்குள் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினைக் கொடுப்பார்கள். அவர்கள் குறிப்பிட்டபடி வேலைவாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்றால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தத் தொழிற்சாலை வேலைவாய்ப்பினை கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** ஏற்னெவே, ஏராளமான தொழில் தாவாக்கள் நிலுவையில் இருக்கின்றன; தங்களுக்கும் அதற்கான விவரத்தை நான் தருகின்றேன்.



2013 மார்ச் 27] [திரு. அ. சவுந்தரராசன்]

அடுத்து, உள்ளாட்சிக்கு 30 சதவீதம் நிதி வழங்கினால்தான், அவர்களுடைய வேலையை நிறைவேற்றிக்கொள்ள முடியும். அதற்கேற்ப நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குரூப்–1 தேர்வு எழுதுவதற்கான வயது வரம்பை 45 ஆக உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தேர்வாணையத்தில் தமிழ் பாடத் திட்டம் குறித்து நான் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது பதில் சொல்லியிருக்கின்றார்கள், நன்றி.

நான் முடிப்பதற்கு முன்பு முக்கியமான மூன்று விஷயங்களைப் பற்றி கூற விரும்புகிறேன். மதுவிலக்கு குறித்து பாட்டாளி மக்கள் கட்சியினுடைய உறுப்பினர்கள் இங்கே பேசியதையொட்டி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்றும், இன்றும் அதுபற்றி நிறைய விளக்கம் கொடுத்திருக்கின்றார்கள். மதுக்கடைகளை உடனே மூட வேண்டுமென்று நான் கோரவில்லை. எப்படி புகை பிடிப்பவர்கள் புகை பிடிப்பதைத் தடுப்பதற்காக, பொது இடங்களில், பேருந்தில், இரயில்களில் புகை பிடிக்கக் கூடாது என்றெல்லாம் நிபந்தனைகள் போடப்பட்டன என்பதை நாம் அறிவோம். இதனால், ஓரளவுக்கு புகை பிடிப்பதைக் கட்டுப்படுத்திவிட்டோம், குறைத்துவிட்டோம்; கண்ட இடங்களில் புகை பிடிப்பதெல்லாம் நடப்பதில்லை. மது விஷயத்தில், டாஸ்மாக் கடைகளுக்கு உள்ளேயே எல்லா வசதிகளையும் கொண்ட ஏ.சி. பார்களை அனுமதிப்பதுதான் இந்தக் குடிப் பழக்கம் மிக அதிகம் ஆவதற்கான ஒரு காரணமாக இருக்கிறது. வாங்கட்டும். வீட்டில் போய் குடிக்கட்டும் தைரியம் இருந்தால். குடித்துவிட்டு வீட்டிற்குப் போவதற்கு வழி இருக்கக்கூடாது. ஆகவே, இந்த பார்கள் பல பிரச்சினைகளை உண்டாக்கிக்கொண்டிருக்கின்றன. பலவிதமான சமூக விரோதிகள் இன்றைக்கு அதைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள், நீங்கள் சொன்ன அதே சமூக விரோதிகள். ஆகவே, பார்களையாவது குறைந்தபட்சம் நிறுத்த வேண்டும்; பொது இடத்தில் குடிக்கக்கூடாது என்பதை மிகக் கடுமையாக அமல்படுத்த வேண்டும். அப்படிச் செய்தாலே குடிப்பதில் பெருமளவிற்கு குறைவு வரும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, தாய்மார்கள் பெரும் அவதிக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள் என்கிற அந்த உண்மையையும் அரசு மறந்துவிடக் கூடாது.

[திரு. அ. சவுந்தரராசன்] [2013 மார்ச் 27

பிற்பகல் 3–45

அடுத்து, பட்டா பிரச்சினையிலே நாங்கள் இன்னும் கொடுக்க வேண்டியதைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். நீங்கள் இதுவரை கொடுத்ததைச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அதுதான் பிரச்சினை. 35 இலட்சம் பேருக்கு மேல் கிடைக்க வேண்டி இருக்கிறது என்பது நாங்கள் எடுத்த அரைகுறை சர்வேயிலே கிடைக்கிற தகவல். ஆகவே, கொஞ்சம் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்பதுதான் எங்கள் விண்ணப்பமே தவிர வேறல்ல. ஆனால், பட்டாவிற்கு நீங்கள் சில நிலங்களை வகை மாற்றம் செய்யாமல், பிரிட்டிஷ்காரன் காலத்திலிருந்த அதே வகையிலேதான் அந்த வகைகளும் விதிகளும் நீடிக்கும் என்றால், அதை நாம் நீடித்துக் கொண்டிருப்போம் என்றால், பட்டா தர முடியாது. ஆகவே, வகை மாற்றங்களை நாம் உறுதியாகச் செய்தாக வேண்டும். வீட்டு வசதி வாரியத்திலே, குடிசை மாற்று வாரியத்திலே வீடுகளுக்கு நாங்கள் விற்பனைப் பத்திரம் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பணம் கட்டியிருந்தால் கிடைக்கும் என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறார். என்னுடைய தொகுதியிலேயே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தில் விற்பனைப் பத்திரம் வாங்காததற்குக் காரணம் வாரிசு போட்டியின் மூலமாக வாங்காமல் விட்டுவிடுகிறார்கள். Due–வைக் கட்டிவிட்டு விற்பனைப் பத்திரம் பெற்றால், தண்ணீர் வரி, சேவை வரியைக் கட்ட வேண்டி வரும். அதனால் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும் விற்பனைப் பத்திரம் வாங்காமல் இருக்கிறார்கள். வகை மாற்றம் செய்ய வேண்டிய காரணத்தினாலும், விற்பனைப் பத்திரம் கொடுக்காமல் இருக்கிறது. ஆனால், அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த இந்த இரண்டு வருடத்தில் கிட்டத்தட்ட 2 ஆயிரம் குடும்பங்களுக்கு விற்பனைப் பத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.



2013 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு வகையான நிலங்களுக்கு வகை மாற்றம் செய்து பட்டா வழங்குவதிலே பல்வேறு இடர்ப்பாடுகள் இருப்பதாக இங்கே சுட்டிக்காட்டினார்கள். அந்த இடர்ப்பாடுகளைக் களைவதற்காகத்தான் கடந்த இரண்டு நாட்களாக சட்டப் பேரவை உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைக்கின்றபோது, பல்வேறு வகையான நிலங்களுக்கும் உடனடியாக பட்டா வழங்குவதற்கு ஒரு வரன்முறையை ஏற்படுத்தி பட்டா வழங்கக்கூடிய திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் கால நீட்டிப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆக, அந்த அடிப்படையிலே பல்வேறு புறம்போக்கு நிலங்களிலே குடியிருக்கக்கூடிய மக்களுக்குக்கூட விரைந்து பட்டா வழங்கக்கூடிய திட்டத்தை இந்த ஒருமுறை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்கக்கூடிய அந்தத் திட்டத்தின் மூலமாக விரைந்து பட்டாக்களை வழங்கக்கூடிய அடிப்படையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்குக் கால நீட்டிப்புத் தந்திருக்கிறார்கள். இந்த அடிப்படையிலே இன்னும் வேகமாக பட்டாக்களை வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** இதோ முடிக்கப்போகிறேன். மணியடிக்காதீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு மனித நேய மக்கள் கட்சியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களும், அதேபோல மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினர் தோழர் சவுந்தரராசன் அவர்களும் இருவரும் ஒரே கருத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள். அதனுடைய அவசியத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் கருதி ஏற்கெனவே நான் பொறுப்பேற்றதற்குப் பிறகு பள்ளிக் கல்வி அமைச்சகம் உரிய

முறையிலே அரசுத் தேர்வாணையத்தை அணுகி, அரசுத் தேர்வாணையத்தின்மூலம் வெளியிடப்படுகிற மொழித் தேர்வுகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்விற்கான புதிய பாடத் திட்டத்தினை வெளியிட்டது. இப்பாடத் திட்டத்தில் திறனறிவுத் தேர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இதன்மூலம் மொழிப் புலமைக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. ஆக, திறனறிவுத் தேர்வோடு மட்டுமல்லாமல், மொழித் திறமைக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்பதன் அவசியத்தை அறிந்து, தமிழ் மொழிக்கு உரிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது கடிதம் மூலமாக அரசு தேர்வாணையத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 3–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மொழிப் புலமைக்கு 50 மதிப்பெண்கள் இருந்தது. அந்த 50 மதிப்பெண்களை நாம் தொடரச் செய்தால் போதும்.

அடுத்து, மத்திய அரசாங்கத்தினுடைய மாநிலத்திற்கு எதிரான, கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான நடவடிக்கைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. காங்கிரஸ் ஆளும் மாநிலங்களிலேயே இது குறித்து முணுமுணுப்பும், குறைகளும், சில நேரங்களில் பகிரங்கமான விமர்சனங்களும் வந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லா மாநில முதல்வர்களுக்கும்—அதை சொல்லுகிற உரிமை எனக்கு இருக்கிறதா என்று தெரியவில்லை—எழுதி இந்த மாநிலங்களுடைய ஒரு உயர் மட்டக் கூட்டத்தை — ஒரு Conclave — கூட்டி மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கத்தினுடைய உரிமைகளை எப்படியெல்லாம் மிதிக்கிறது, எப்படியெல்லாம் நிதியைக் குறைத்துக் கொண்டேயிருக்கிறது, மாநிலங்களில் நாம் எப்படி சிரமங்களுக்கு ஆளாகிறோம் என்று விவாதிக்க வேண்டும். அனைவரையும் கொண்ட ஒரு கூட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் ஒரு முன்





முயற்சி எடுத்து நடத்தி, மத்திய அரசாங்கம் இன்னின்ன செய்ய வேண்டும் என்கிற ஒரு தீர்மானத்தை, ஒரு வழிமுறையை, ஒத்துவரக்கூடிய முதலமைச்சர்கள் மூலமாக எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக அந்த முயற்சி எடுத்தால், அது பலன் அளிக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே முன்னாள் மேற்கு வங்க முதல்வர் ஜோதி பாசு அவர்கள் இந்த முயற்சியை எடுத்துள்ளார்கள்.

கடைசியாக மின்சாரம். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் நேற்றுகூட மதுரையிலிருந்து சொல்கிறார்கள், 13 மணி நேரம் மின் வெட்டு என்று. ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை மின்சாரம் போய் விடுகிறது என்கிற குறையை அவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் இங்கிருந்து சமாதானம் சொல்கிறார். அந்தச் சமாதானத்தில் எங்களுக்கு ஒன்றும் மாற்றுக் கருத்தெல்லாம் கிடையாது. ஆனால், மக்கள் சமாதானம் அடைய மறுக்கிறார்கள். அவர்கள் துன்பம் அப்படி. அவர்களை சமாதானப்படுத்துவதற்கு உரிய விரைவான நடவடிக்கைகளையும் நாம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(28–3–2013)* வியாழக்கிழமை காலை *10–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 3–51 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*44.* தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பில் திருத்தங்கள் செய்தது குறித்து *27–5–2011* ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./SC/7–27–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *[2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*45. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*ஏதுமில்லை*

---